ப்பொழுது
uhavary.comஇலும்
படிக்கலாம்

முகவரி

MUHAVARY

மாதாந்த சஞ்சிகை | எண்: 4 பாதை: 1 | ஒக்டோபர் 2014

எங்கே செல்லும்
இந்தப் பாதை?



உள்ளூராட்சித் தேர்தல் 2014

அங்கலாய்க்கிறார்
ஜெயலலிதாவின் அண்ணா!



இவ்விதழின் அதிதி எழுத்தாளர்: தாம் சிவதாசன்



முகவரியில் குடிகொண்டவை....



18 கைதி எண் 7402



33 எங்கே செல்லும்...



மோடியின் நட்புக் கரம் 29




மங்கல்யான் 51



31 பரிதவிக்கிறது



அநாதைக் கிராமம் 37



ஒரே கூரையின் கீழ்
புதிய பொலிவுடன்
MJS
GOLD HOUSE
உங்கள் அனைத்து தங்க நகைகளையும்
நம்பிக்கை, உத்தரவாதத்துடன்,
நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
துரித பணமாற்று
சேவை
M.J.S. MONEY TRANSFER & FASHION
Fancy Sarees | Lehenga Suits | Ladies Suits | Artificial Jewelleries
Wedding Sarees | Punjabis | Men Suits | Shirts | Gift Items
உங்கள் அனைத்து கொண்டாட்டங்களுக்கும் உகந்த உயர்தர
பட்டுப் புடவைகள், மற்றும் நவ நாகரிக ஆடை தெரிவுகள் பல.....
5215 Finch Ave, East, Unit #113, Scarborough, ON M1S0C2
Tel : 416-299-1630 | Fax : 416-335-4200



GREENI
HEATING & COOLING
Sales - Service - Installation
GEORGE SUBRAMANIAM
TSSA - Certified Technician
PHONE: 416 986 9554
WWW.GREENI.CA

Contact

5215, Finch Avenue East, Unit 263,
GTA Square,
Toronto, Ontario.
M1S 0C2
Canada.

e-mail: info@muhavary.com

phone: (+1) 416 628 6214

fax: (+1) 416 619 0335

web: muhavary.com

நன்றி வரிகள்...

காலத்தில் செய்த உதவி

*"முகவரி"யின் வரவையிட்டு,
மகிழ்வுற்று அது நின்று நிலைக்க
ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய,
வழங்க முன்வந்த அனைத்து
வாசகர்கள், நண்பர்கள் மற்றும்
ஊடக நண்பர்கள் அனைவருக்கும்
எமது மனமார்ந்த நன்றிகள்.*

*'முகவரி' மாத இதழை
முகவரி அலுவலகத்திலும்
பெற்றுக்கொள்ளலாம்.*

முகவரி

"பேசிவிட்டுச் சாவதே மேல்!"

தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தில் எவ்விதம், எந்தவிதமான பாதையில் செல்லப்போகின்றது? கடந்த காலத்துக் குறைபாடுகளை எல்லாம் சரிவர மதிப்பீடு செய்து யார் செல்நெறிகளை வழிப்படுத்தப் போகின்றார்கள். தலைமைகள் விடுதலைக்கான பாதையைச் சரிவர முன்னெடுக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்தவர்களாக உள்ளனரா? என்ற வரிசையில் எண்ணற்ற கேள்விகள் மக்களின் மனங்களைக் குடைகின்றன!

தலைமைப் பண்புகளோடு வெளிப்பட்டுச் செயற்பட்டு மக்களின் விடிவுக்காகவும், சுதந்திரத்திற்காகவும் குரல் கொடுத்துச் செயற்பட்ட அத்தனை அமைப்புக்களும் தலைமைகளும் உளுத்துப்போய்ச் செயலிழந்து போயுள்ளன. இலங்கையின் தேசிய அரசியல் சேறும் சகதிகளும் நிரம்பிய நிலைமையிலே குழம்பிய குட்டையாகிப் போயுள்ளது.

ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகள், போர்க்காலக் குற்றவிசாரணைகள், சர்வதேச அரசியல் தலையீடுகள் எதையுமே சரிவரச் செய்ய முடியாத கையறு நிலைமை என எல்லாமே தொடர்வதால் வெறும் 'வாய்த்தம்பட்டங்களே' வரலாறாகிக் கொண்டிருக்கின்றது! தீர்க்க தரிசனமான அரசியில் திட்டம், செயல்நெறிகளை வகுத்தல், மூலோபாயங்களை, கபடமான பேரினவாத அரசியல் குளறுபடிகளின் மத்தியில் வகுத்தல் போன்ற காரியங்களே, இப்போது தமிழர் மத்தியில் வெளிப்பட்டுள்ளன. 'கதம்பக் கூட்டணித் தலைமைகளால்' மட்டும் சிலவற்றைச் சரிவர முன்னெடுத்துச் செல்லமுடியுமா?

கடந்த காலத்து வரலாற்றுத் தவறுகள் எங்கே எவ்விதம் நடைபெற்றன. அனைத்துலக அரசியல் சாணக்கியங்களின் மத்தியில், பல்வேறுமட்டங்களில் நீர் ஊற்றி வளர்க்கப்பட்ட தமிழ்த் தேசியம், தலைமைகள், சுதந்திரமான சுயநிர்ணய உரிமையைத் தேடிய குரல்கள் என எல்லாமே நீர்த்துப் போய்விட்டனவா? "போர்பரணி" பாடிய காலம் மழுங்கிப்போய், இப்பொழுது சீரழியும் அரசியல் பாதையில் தளர் நடைபோடுகின்றோமா? இவை எல்லாமே தமிழ் மக்களை மட்டுமல்ல, சமாதானம் தேடும் அனைவரையும் சிந்திக்க வைக்கின்றன.

இலங்கையில் ஜனநாயக அரசியல் 'முறிந்து' போய், சிங்கள பௌத்த பேரினவாத அரசியலே வேரூன்றிவிட்டது. எந்த அரசியல் தலைவரும் எதற்கும் பொறுப்புக் கூறமுடியாத நிலையில் ஜனாதிபதி உட்பட யாவரும் தடுமாறுவது வரலாறாகிவிட்டது. சிங்கள தேசம் பிரச்சினைகளைச் சரிவரப் புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாத நிலையில் 'மஹாவம்ச மாயையில்' சிக்கி யாவற்றையுமே இனவாத கண்கொண்டு பார்க்க முற்படுகின்றது.

மூன்று தசாப்தங்களின் முன்னர் வெளிப்பட்ட, வட்டுக்கோட்டைத் தீர்மானம் முதல் மேற்கொள்ள முற்பட்ட அத்தனை நகர்வுகளும் பின்னர் தந்திரோபாயங்களுடனான பேராட்டங்கள், திட்டங்கள் வெறுமனே நகர்வுகளின் மத்தியில் எல்லாமே அரசியல் வியாபாரமாக போய் முடிந்துவிட்டது.

தமிழ் தலைமைகள், நீண்டகாலமாக அரசியல் 'சுத்துமாத்துகளின் மத்தியில்' 'செத்துப்போன அரசியிலுக்கு' உயிர்கொடுக்க முற்படுகின்றமை, வெறுமனே உணர்வுகளுக்கு வடிகால் தேடும் அரற்றல்களாக வெளிப்படுகின்றன.

உலகநாடுகளில் எல்லாமே புலம் பெயர்ந்து தப்பிப் பிழைத்து வாழ முற்பட்ட செஞ்சங்கள், 'போர்ப்பரணி' பாடிய காலம்போய் சமாதான உலா கலம்பகம், ஆற்றுப்படை என உதிரியான சிற்றிலக்கிக் கூத்துக்கள் ஆடி உதிரியாக செயற்படுவதும் நசிந்துபோன அரசியலுக்குக் குரல்கொடுக்கும் செயற்கைத் தன்மைகளுமே சரமாரியாக புறப்படுகின்றன. தப்பிப்பிழைத்த வாழ்க்கையின் மத்தியில் களைத்துப்போய் தமிழ் தேசியத்திற்கு முண்டு கொடுப்பது இப்போது வரலாறாகிக் கொண்டிருக்கின்றது.

தமிழர்களின் அரசியல் மூச்சுமுட்டிய நிலையில் திக்குமுக்காடுகின்றது. ஐ. நாவும் சரி, மோடியும் சரி விழுங்கிக் கக்கும் நிலையில் இருக்கும்போது, தமிழ் தலைமைகள் "மௌனம் கலைந்து நிதானமாகச் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

'மொத்தத்தில் மௌனம் என்பது சாவுக்குச் சமம்" பேசினாலும் சாகப்போறீர்கள். போராடினாலும் சாகப்போகிறீர்கள். எனவே பேசிவிட்டுச் செத்துப்போங்கள்.'

இது யுத்த தருமம் அல்ல சமாதான தருமம்!

ஆசிரியர்.



ஏழையின் கண்ணீர் இங்கே... ராஜ பவனி அங்கே!

இம்மாதம் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நிகழும் நிலையில், இச் சிறப்புக் கட்டுரை எம் வாசகர்களுக்கு கனேடிய ஜனநாயக் கட்டமைப்பையும் அவ் ஜனநாயகத்தின்கீழ் அரச நிர்வாகத்தைச் செயற்படுத்துவதற்காக அமைந்திருக்கும் மூன்று படிநிலை அரசுகள் - அவற்றின் அதிகாரங்கள் பற்றியும் ஒரு சுருக்கமான விளக்கத்தை அளிக்குமுகமாக வழங்கப்படுகிறது.

மூன்று நிலை அரசுகளும் முரண்படாத அதிகாரங்களும்

14 அரசாங்கங்கள் கொண்ட கனேடிய ஜனநாயகத்தின் வடிவம்



ஜனநாயகத்திற்கு வயது 2500 வருடங்கள் என்கிறார்கள். ஆனால் இன்னும் புரியப்படாத மர்மங்களில் அதுவும் ஒன்று. புரியாத, வழக்கொழிந்த லத்தின் மொழியில் 'டெமோஸ்' (Demos) என்பது மக்களையும் 'கிராட்டோஸ்' (Cratos) என்பது ஆட்சியையும் குறிக்கிறதாம்.

எப்படியாயினும், ஜனநாயகம் என்பது ஒரு அரசியல் முறை (Political System).

இந்த சுய நிர்வாக அரசு மக்களின் பிரதிநிதிகளைக் கொண்டிருப்பதும் அப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கென ஒரு வழிமுறையைத் தேர்ந்தெடுப்பதும் மக்களை நிர்வகிக்கவென சட்டங்களை உருவாக்குவதும் வளங்களைப் பகிர்ந்து கொள்வதும் எனப் பல நடைமுறைகளை ஒருங்கிணைத்துச் செயற்படும் அரசியல் முறைக்கு கொடுக்கப்பட்ட பெயர் பாராளுமன்ற ஜனநாயகம். எப்படி ஆனாலென்ன, அந்த ஜனநாயகம் இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகளாக வாழ்கிறது.

கனடா அமெரிக்காவைப் போல் ஜனநாயக நாடாக இருந்தாலும் இன்னும் பிரித்தானிய மகாராணியின் (முடியின்) பதாங்கமாகச் செயற்படுவதால் அதை Constitutional Monarchy என வர்ணிப்பர். மகாராணியின் நேரடி பிரசன்னம் இல்லாத போது அவரின் பிரதிநிதியாக காலனித்துவ நாடுகளில் ஆட்சி செய்தவர்கள் ஆளுநர்கள் எனப்பட்டனர். உலக ஒழுங்குகளின் தொடர்ச்சியான பரிணாம மாற்றத்தின் வெளிப்பாடாக கனடாவும் தன் குடியாட்சியை ஒரு ஒழுங்குக்குள் கொண்டு வந்தது. அதற்கான முதல் நடவடிக்கையாக யாப்பு ஒன்றை உருவாக்கித் தம்மைத் தாமே ஆளுவதற்கான நடைமுறைகளை எழுத்தில் வரைந்தனர். இதுவே 1867 இல் வரையப்பட்ட கனடிய சாசனம். இதன் பின்னர் இவ்வாளுனரின் அதிகாரம் குறைக்கப்பட்டு வெறும் சம்பிரதாய ஆளுனராக மாற்றப்பட்டார்.

மக்கள் தொகை அதிகரித்து நிர்வாகம் சிக்கலாகியபோது அதிகாரங்களைப் பரவலாக்கி மக்கள் குழுமங்களை பிரதேச ரீதியாக வகுத்து இன்றைய மாகாணங்கள் அல்லது மாநிலங்கள் (Provinces), மற்றும் பிரதேசங்கள் (Territories) என நிர்வாக மாற்றங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநிலங்களின் அதிகாரப் பரவலாக்கத்தின் விளைவுகளே நகரசபைகள்.

இதே வேளை மத்திய மாநில அரசுகள் உருவாகுவதற்கு முன்பே வாழ்ந்த சமூகக் குழுமங்களை அதிக பலமுடைய இதர குழுமங்களும் ஆட்சிகளும் ஒன்றிணைத்து மேலும் பலமுடைய சபைகளாகவும் அரசுகளாகவும் மாற்றிக் கொண்டன. (இலங்கையில் தமிழ் அரசுகளையும் சிங்கள அரசுகளையும் இணைத்தது போல). பிரித்தானிய, பிரஞ்சு ஆதிக்கம் அதிகமிருந்த காலனிகள் பல கனடிய டொமினியனில் சேர்க்கபட்டு மாநிலங்களாக மாற்றமடைந்தன. நியூபவுண்லாந்து மாநிலமே இறுதியாகச் சேர்க்கப்பட்டது.

கனடாவைப் பொறுத்த வரையில் நிர்வாகப் பரவலாக்கத்தின் இன்றைய வடிவமே மூன்று நிலை அரசுகள்: நகர அல்லது மாநகர சபை - மாநில அரசு - மத்திய அரசு.

ஒரு ஜனநாயக அரசு திறமையாகச் செயற்படச் சில கட்டமைப்புகள் முக்கியம். அரச நிர்வாகத்திற்குட்படாத அரசைக் கேள்விக்குட்படுத்தப்படக் கூடிய நீதி பரிபாலனம் இதில் முக்கியமான ஒன்று. சீரான நிர்வாகத்துக்கான சட்டங்களை உருவாக்குவது அரசின் கடமை. ஆனால் அச் சட்டங்களை நிர்வகிக்கும் பொறுப்பு வெவ்வேறு திணைக்களங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. நிர்வாகம் பரவலாக்கம் பெறும்போது ஒவ்வொரு நிர்வாக அலகும் தத்தம் மக்கள் தேவைகளுக்கேற்ப சட்டங்களைத் தோற்றுவித்து நிர்வகிக்கவும் செய்கின்றன. இப்படியான நிர்வாக அலகுகளே மூன்று நிலை அரசுகள் என நான் இங்கு குறிப்பிடுவது.

மூன்று நிலை அரசுகள்

மத்திய அரசு

மாகாண அரசு

நகர அல்லது மாநகர அரசு

கனடாவில் பத்து மாநிலங்களும் மூன்று அதிகாரப் பிரதேசங்களும் இருக்கின்றன. இவற்றோடு சேர்த்து மத்திய அரசு பதினான்காவது அரசு ஆகிறது.

சட்டம் ஒழுங்கு

மத்திய அரசு இயற்றும் சட்டங்கள் அனைத்தும் இம் மாநிலங்கள் மற்றும் பிரதேசங்கள் அனைத்திலும் பிரயோகப்படும். அதே வேளை மாநிலங்களும் பிரதேசங்களும் தத்தம் தேவைகளுக்கேற்ப சட்டங்களை இயற்றலாம். இவற்றின் அதிகாரங்கள் எல்லைகளைத் தாண்ட முடியாது. ஆனால் நகர சபைகளின் அதிகாரங்களை மாநில அரசுகள் தேவையேற்படின் மேற்பார்வை செய்ய அதிகாரமுண்டு.

சமீபத்தில் டொரோண்டோ நகரபிதாவின் ஒழுக்காற்று நடவடிக்கையில் மாநகரசபை செயலாற்ற முடியாமல் போகலாம் என்ற நெருக்கடி எழுந்தபோது ஒன்டாரியோ முதலமைச்சர் தலையிட வேண்டுமென்ற குரல்கள் எழுந்தன. அதற்கான அதிகாரம் இருந்தபோதும் முதலமைச்சர் அதைப் பிரயோகிக்காமல் நகரசபையே தன் விடயங்களைப் பார்த்துக் கொள்ள வேண்டுமெனச் சொல்லி விட்டார்.

இதுதான் உண்மையான மக்களாட்சியின் வெளிப்பாடு.

தாம். சிவதாசன்

கல்வி, சுகாதாரம், இயற்கை வளங்கள் மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் என்பன மாநில, பிரதேச ஆளுமைக்குட்பட்டிருப்பினும் சில சந்தர்ப்பங்களில் இவை மத்திய அரசின் நிர்வாக எல்லைக்குள்ளும் இயங்கவேண்டி ஏற்படலாம். இரண்டு அரசுகளும் சம்பந்தப்படும் விவகாரங்களை "பொது விடயங்கள்" எனவும் மாநிலம் சம்பந்தப்படும் விவகாரங்கள் "உள்ளூர் விவகாரங்கள்" எனவும் சாசனம் பிரித்துக் காட்டுகிறது. இருப்பினும் மத்திய அரசு தனது "எச்ச அதிகாரங்களால்" (Residual powers) தேவை வரும்போது மாநிலங்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்க சாசனம் இடந்தருகிறது. (அமெரிக்காவில் மாநிலங்களே மத்திய அரசின் மீது எச்ச அதிகாரங்களைச் செலுத்துகின்றன!)

ஆதிக் குடிகள் விடயத்தில் இச்சமூகங்களை நிர்வகிக்கவென தனித்தனி கவுன்சில்கள் அமைக்கப்படுகின்றன. ஜனநாயக முறையில் தேர்வு செய்யப்படும் இக் கவுன்சில்களும் நகர சபைகளைப் போலவே இயங்குகின்றன.

மூன்று நிலை அரசுகளின் அதிகாரங்கள்

மத்திய அரசு

மத்திய அரசு மக்களாட்சி முறைமையில் தெரியப்பட்டிருந்தாலும் முடியின் (பிரித்தானிய அரசி) அதிகாரம் இன்னும் பெயரளவில் தொடர்கிறது. முடியின் பிரதிநிதியாக ஆளுநர் நியமிக்கப் படுவார். முடியினால் நியமிக்கப்பட்டு வந்த இந்த ஆளுநர் 1952 முதல் கனடிய பிரதமரால் நியமிக்கப்பட்டு வருகிறார். முடியின் விவகாரங்களை இங்கு கவனித்து வருவதும் பிரதமருக்கு பாராளுமன்ற விவகாரங்களில் ஆலோசனை கூறுவதும் மட்டுமே இவரது பணி.

மத்திய அரசின் அதிகாரங்கள்

தேசியப் பாதுகாப்பு, வெளியுறவு, வேலைக் காப்புறுதி, வங்கிகள், மத்திய வரியிறுப்பு, அஞ்சல், மீன்பிடி, தொலைபேசி, பொதிவண்டிகள், விறியோகக் குழாய்கள், ஆதிக் குடிகளின் உரிமைகள், நிலப் பகிர்வுகள், குற்றவியல்.

கனடாவின் வளப் பகிர்வும் குடிகளிடையே சமத்துவத்தைப் பேணுவதும் மத்திய அரசின் முக்கிய கடமைகள். ஒவ்வொரு மாநிலங்களிலுமுள்ள மக்களும் கனடிய குடிகளே என்ற வகையில் அவர்களிடையே சமத்துவத்தைப் பேணுவது மத்திய அரசின் சாசனக் கடமைகளில் ஒன்று. ஆனால் கனடிய மாநிலங்களில் ஒன்டாரியோ, அல்பேர்ட்டா போன்றன வருவாய் கூடியனவாகவும் நியூபவுண்லாந்து, நியூ பிரண்ஸ்விக் போன்றன வறுமை கொண்டனவாகவும் உள்ளன. இதைச் சமப்படுத்த மத்திய அரசு பணக்கார மாநிலங்களிடமிருந்து தீர்வைகளை அறவிட்டு ஏழை மாநிலங்களுக்குக் கொடுக்கிறது.

அதே வேளை கல்வி, மருத்துவ சேவைகள் போன்ற துறைகளிலும் ஏழை-பணக்கார மாகாணங்களில் சமத்துவத்தைப் பேணுவதில் மத்திய அரசு கவனம் செலுத்துகிறது. கனடிய சாசனச் சட்டங்கள் (1867, 1982) இதற்கான அதிகாரங்களை மத்திய அரசுக்கு வழங்குகின்றன.

நாட்டின் பாதுகாப்பு, வெளியுறவு, குடிவரவு, மீன்பிடி போன்ற விவகாரங்கள் மாநில எல்லைகளைத் தாண்டி அமுலாக்கம் பெறுவதனால் மத்திய அரசு அவற்றைத் தன் அதிகாரத்துக்கு உட்பட்டதாக வைத்துக் கொண்டுள்ளது.

மாநில அரசுகளின் அதிகாரங்கள்:

நேரடி வரியிறுப்பு, மருத்துவ சேவைகள், சிறைச்சாலைகள், கல்வி, திருமணம், நிலவுரிமை, குடியுரிமை.

மாநில அரசுகள் ஒரு வகையில் எமது பண்டைக்கால சிற்றரசுகள் போன்றே இயங்குகின்றன. தமது வரவு செலவுகளையும் தமது குடிகளின் நல்வாழ்வையும் முன்னிறுத்தி தமது கொள்கைகளையும் சட்டங்களையும் வரித்துக் கொள்கின்றன.

கனடாவில் கியூபெக் மாகாணத்திற்கும் ஏனைய மாகாணங்களிற்கும் முக்கிய வேறுபாடுண்டு. கியூபெக்கில் சிவில் சட்டமும் (Civil Law) ஏனைய மாகாணங்களில் பொதுச் சட்டமும் (Common Law) வழக்கத்தில் இருக்கின்றன. இது பற்றிய விளக்கங்களை பின்னர் பார்க்கலாம்.

மருத்துவ சேவைகள், கல்வி, நிலவுரிமை மற்றும் காணிப் பதிவுகள் போன்ற விடயங்களில் மக்களுக்கு உகந்த சட்டங்களை இயற்றி சீரான நிர்வாகத்தை மேற்கொள்ளுகின்றன. இதற்கு ஈடாக மக்களிடமிருந்து பல வழிகளிலும் வரிகளை அறவிட்டு மத்திய அரசைப் போலவே வரவு செலவு நிர்வாகங்களை மேற்கொள்ளுகின்றன.

இதே வேளை கனடியக் குடிமக்கள் கனடாவின் எந்தவொரு மாநிலத்திலும், பிரதேசத்திலும் இறைமை யுடன் வாழ்வதற்கான உரிமையை கனடிய சாசனப் பட்டயம் உறுதிசெய்கிறது. கியூபெக் மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களும், பிரதேசங்களும் தமது குடிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை அற்றவை. கனடிய குயுரிமை அல்லது வதிவுரிமை அல்லது தற்காலிக வாழிட உரிமைகளைக் கொண்ட எவரும் எந்த மாநிலங்களிலும் வாழ மத்திய அரசு அனுமதியளிக்கிறது. கியூபெக் மாகாணம் தனது பிரஞ்சு மொழி மற்றும் கலாச்சார விழுமியங்களைப் பேணுவதற்காக தாம் விரும்பிய வகையில் குடிவரவாளர்களைத் தெரிவு செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. ஆனால் அவ்வாறு குடியுரிமை பெற்றவர்கள் நாட்டின் எந்தப் பிரதேசங்களிலும் வாழ சாசனம் அனுமதி தருகிறது.

அனேகமாக எல்லா ஆட்சிப் பிரதேசங்களிலும் மக்களாட்சி நடைபெறுவதால் ஒரு நிலை ஆட்சி தனது அதிகாரங்களை இன்னுமொரு நிலை ஆட்சியின் மீது பிரயோகிக்கும் தேவை எழுவதில்லை. உதாரணமாக மாநில ஆட்சி எப்படி அமைய வேண்டும் யார் முதலமைச்சராக வரலாம் என்பது போன்ற விடயங்களில் மத்திய அரசு தலையிடுவதில்லை. ஆனால் ஆட்சியினதோ அல்லது சட்ட மன்ற உறுப்பினரினதோ கால எல்லைகளை விஸ்தரித்தல் போன்ற விடயங்களில் மத்திய அராசு அதிகாரம் செலுத்துகிறது.

மத்திய அரசிப் போலவே மாநில அரசுகளும் தமது சாசனத்தை உருவாக்கவும் திருத்தவும் அதிகாரமுண்டு. ஆனால் முடியின் பிரதிநிதியாகிய லெப்டினன்ட் கவர்னரை மாற்ற முடியாது.

நகரசபை

நகரசபைகளை உருவாக்குதல், இணைத்தல், பிரித்தல், ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் போன்ற பல அதிகாரங்களை அந்நகரசபைகளை உள்ளடக்கிய மாநகரசபைகள் கொண்டுள்ளன. இது தொடர்பான சட்டங்களை உருவாகும் அதிகாரத்தை 1867 சாசனச் சட்டம் வழங்குகிறது. கனடாவின் முதல் நகரசபை நியூ பிரண்ஸ்விக் மாகாணத்திலுள்ள செயின்ட் ஜோன் நகரம் (1875).

நகர சபைகளின் அதிகாரங்கள்:

மாகாணங்கள், பிரதேசங்கள் என்ற நிலப் பரப்புகளுக்கு உட்பட்ட இடங்களில் அதிகாரப் பரவலாக்கம் நகர, மாநகர, கிராமிய மட்டங்களில் மேற்கொள்ளப்படுகிறது. சிறிய மக்கள் குழுமங்கள் முதல் பாரிய குழுமங்கள் வரை வாழ்வதற்கேற்ப நகர் நிர்மாணம், வழங்கல் சேவைகள், பொழுது போக்கு வசதிகள், நகர் காவல் போன்ற விடயங்களை நிர்வகிக்கும் பொறுப்பு நகர சபைகளுக்கு மாநில அரசுகளால் வழங்கப்படுகிறது. இன் நிர்வாக நடவடிக்கைகளுக்கான நடைமுறைச் செலவுகளுக்காக இச் சபைகள் குடிமக்களிடமிருந்தும், வர்த்தக நிறுவனங்களிடமிருந்தும் வரிகளை (சோலை வரி) அறவிடுகிறது. உள்ளக நிர்மாண நடவடிக்கைகளுக்கான செலவுகளை மாநில, மத்திய அரசுகள் அவ்வப்போது வழங்குகின்றன. இச் சேவைகளை நிர்வகிப்பதற்குத் தேவையான உப-சட்டங்களை (by-laws) உருவாக்கும் அதிகாரம் நகரசபைகளுக்கு உண்டு. இவ் உப-சட்டங்களுடன் மாநில அரசுகள் உடன்படாத பட்சத்தில் அவற்றை மாற்றுவதற்கான அதிகாரம் மாநில அரசுகளுக்கு உண்டு. உதாரணமாக ஒன்டாரியோவில் சில கட்டிட வேலைகள் குறித்த விண்ணப்பங்களை உப-சட்ட விதிமுறைகளைக் காட்டி நகரசபை ஒன்று நிராகரிக்கும்போது ஒண்டாரியோ மாகாணத்தின் முனிசிப்பல் சபையிடம் விண்ணப்பதாரர் மேல்முறையீடு செய்யலாம்.

காவற்துறை, தீயணைப்பு போன்ற அதிகாரங்கள் மாநகர அந்தஸ்து உள்ள சபைகளுக்கு உண்டு. சிறிய சபைகளின் அதிகார எல்லைகளுக்குள் இப் பணிகளை மாநில அரசுகளும் பொறுபேற்பதுண்டு.

இதே போல மாநிலங்களை ஊடறுத்துச் செல்லும் பெருந்தெருக்களை நிர்வாகிக்கும் பொறுப்பு (ஒண்டாரியோ, கியூபெக் - 401 நெடுஞ்சாலை) மத்திய அரசிடமும் இதர தெருக்கள் நகரசபைகளின் நிர்வாகத்திலும் உள்ளன. ஒண்டாரியோ சுரங்க ரயில் டொரோண்டோ மாநகரசபையின் அதிகாரத்துள்ளும் "கோ" (GO - Goverment of Ontario) ரயில், பஸ் சேவைகள் ஒண்டாரியோ அரசின் நிர்வாகத்திலும் இயங்குகின்றன. சுரங்க ரயிலின் கட்டுமானப் பணிகளுக்கு மாநில அரசும் சில வேளைகளில் மத்திய அரசும் உதவுகின்றன.

எனவே பல வழிகளில் மூன்று நிலை அரசுகளினதும் ஒருங்கிணைந்த செயற்பாடுகள் சுமுகமான நிர்வாகத்துக்கு அவசியம்.

சுதேசிய சபைகள் (Band Councils)

கிராமிய மட்டங்களில் வதிபவர்கள் பெரும்பாலும் சுதேசிகளாகவோ, சுதேசியக் கலப்பினராகவோ இருப்பது வழக்கம். மத்திய அரசு இவர்களுக்குப் பல வழிகளிலும் உதவிகளைச் செய்துவந்தபோதிலும் அவர்களது வாழ்வில் அதிக தலையீடுகளைச் செய்வதில்லை. சுதேசிகள் தம்மை நிர்வகிப்பதற்கென சபைகளை உருவாக்கியுள்ளனர். அவர்களுக்கான நிதியுதவிகளை மத்திய அரசு செய்து வருகிறது.

இந்த மூன்று நிலை அரசுகளையும் ஒரு நிர்வாக அலகாக இணைக்கும் இழை ஜனநாயகமே. மக்கள் குழுமங்களாக மாற்றம் பெறும்போது இயல்பாகவே எழக்கூடிய முரண்பாடுகளைக் கழைந்து சமரசத்தைப் பேணும் பொருட்டு மக்களின் பிரதிநிதிகள் கூடிப் பேசும் மன்றங்களாக இந்த அரசுகளும் சபைகளும் இயங்குகின்றன. இப் பிரதிநிதிகளின் தேர்வுகள் கால வரையறைகளோடு அமைவதால் மக்களின் விருப்பு வெறுப்புகளை அனுசரித்துப் போகாத பிரதிநிதிகள் காலாவதியாக்கப்படுகிறார்கள். ●

கனடாவில் உள்ள பதினான்கு அரசாங்கங்கள் (மத்திய அரசு உட்பட்டு), பல பாராளுமன்றங்கள், சட்ட வரைமுறைகள், பொது சேவைகள் என்பனவற்றில் தத்தம் எல்லைகளுக்குள் நின்று செயற்படுகின்றன. இருப்பினும் சில அதிகாரங்களை நிர்வகிப்பதில் மத்திய மாநில அரசுகள் பங்காளிகளாகச் செயற்படுகின்றன.

நாட்டின் வளங்கள் அனைவருக்கும் பொதுவானவை. அவற்றின் பலன்களை ஒவ்வொரு மக்களும் பாகுபாடின்றி அனுபவிக்க வேண்டும் என்பதற்காக இந்த மூன்று நிலை அரசுகளும் பல உடன்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தது. அதிகாரங்கள் வரையறைப் படுத்தப்பட்டன. பகிரப்பட்டன. எழுத்தில் வார்க்கப்பட்டன. இந்த எழுத்துக் கோவைக்கு அரசியல் சாசனம் (Constitution) எனப் பெயரும் இடப்பட்டது.

கனடாவின் ஆதிக் குடிகள் பிறிதொரு ஆட்சி முறையை வரித்துக் கொண்டிருந்தாலும் அவர்களிடையேயும் ஜனநாயக மரபு பேணப்பட்டு வந்தது என வரலாற்றியலாளர் சொல்கிறார்கள். வந்தேறு குடிகள் தம்மைத் தாமே ஆள்வதற்கெனப் புதியதொரு முறையை உருவாக்காது ஏற்கெனவே வழக்கிலிருந்த பிரித்தானிய முறையைப் பின்பற்றினார்கள். இதற்கு வெஸ்ட்மினிஸ்டர் சிஸ்டம் (Westminster System) என்று பெயர். தாம் இன்னமும் முடிக்குரிய பரம்பரை என்பதை அவர்கள் இதனால் உறுதி செய்து கொண்டனர். கனடாவின் வளங்கள் அப்போது முடிக்குரியவையாகவே இருந்தன. எனவே அவற்றைப் பகிர்வதற்கென உருவாக்கும் சாசனமும் முடியின் ஒப்புதலின்றி நடைமுறைப்படுத்தப்பட முடியாது என்றொரு நிலை இருந்தது.


Pierre Trudeau

இச் சாசனத்தை உருவாக்குவதன் மூலம் 1867 இல் கனடாவை ஒரு தனி நாடாக முடி (பிரித்தானியா) அங்கீகரித்தது. பின்னர் 1982 இல் பியர் ட்ரூடோ (1968-1979 & 1980-1984) பிரதமராக இருந்தபோது சாசனம் திருத்தி எழுதப்பட்டது. எழுபதுகளுக்கு முன்னர் கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இனத்துவேஷம் மிகவும் கடூரமாக இருந்தது. வெள்ளை இன மக்களின் குடிவரவினை கனடா ஊக்கப் படுத்திய அதேவேளை வெள்ளையரல்லாதோரின் குடிவரவிற்கு தடங்கல் செய்து வந்தது. இதன் பின்னர் வந்த லிபரல் அரசுகள், குறிப்பாக கனடாவின் பதினான்காவது பிரதமராகவிருந்த லெஸ்டர் பியர்சன் (1963-1968) மற்றும் பியர் ட்ரூடோ போன்றவர்கள் குடிவரவுக் கொள்கைகளில் செய்த மாற்றங்களால் வெள்ளையரல்லாதவர்களின் குடிவரவு இலகுவாக்கப்பட்டது. ஈழத்தமிழர்களாகிய எமது இரண்டாவது தாயகமாக கனடாவை அமைத்துக்கொள்ள இவர்களே வழிசமைத்துத் தந்தவர்கள்.

பியர் ட்ரூடோ அரசினால் திருத்தி எழுதப்பட்ட சாசனத்தில் முக்கியமான அம்சம் சுதந்திரத்துக்கும் உரிமைகளுக்குமான பட்டயம் (Charter of Freedoms and Rights). இச் சாசனத்தின் உள்ளடக்கம் பற்றி எழுத இப்பக்கங்கள் போதாது. ஆனால், கனடிய மக்கள் அனைவரும் இன, மத, மொழி வேறுபாடுகளின்றி சமத்துவமாக வாழ்வதற்கும், அரசியலில் பங்கு கொள்வதற்கும், கருத்துக்களைச் சுதந்திரத்தோடு வெளிப்படுத்துவதற்கும் சகல உரிமைகளையும் இச் சாசனம் வழங்குகிறது. அத்தோடு கனடாவின் எந்தவொரு குடியும் அரசினாலோ (மூன்று நிலை அரசுகளாலுமோ) அல்லது தனிப்பட்ட நிறுவனங்களினாலோ பாதிக்கப்படும் பட்சத்தில் அக்குடிகள் நீதி கேட்டுப் போராடும் உரிமையை மக்களுக்கு இப்பட்டயம் வழங்குகிறது (Charter Challenge). அபிவிருத்தி அடைந்த நாடுகளில் கனடாவுக்கு ஒரு தார்மீக முகத்தை இது பெற்றுக் கொடுத்திருக்கிறது. - *தாம். சிவதாசன்*

Democracy = 'டெமோஸ்' (Demos) மக்கள் + 'கிராட்டோஸ்' (Cratos) ஆட்சி = மக்களாட்சி

தேர்தல் களம் 2014

மேயருக்கான மோதல் - கானகன்

தேர்தல் களம் சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. ரொரண்ரோ பெரும்பாகத்தில் உள்ள டொரன்டோ, மார்க்கம், மிசிசாக்கா, பிறம்பரன் உட்பட்ட நகரங்களில் மொத்தம் 28 தமிழர்கள் போட்டியிடுகின்றனர். இதைத் தவிர மூன்று வேட்பாளர்கள் இறுதி நேரத்தில் போட்டியிலிருந்து விலகிவிட்டனர். டொரன்டோ கத்தோலிக்க கல்விச்சபைக்கு போட்டியிடும் ரொனால்ட் செல்வத்துரை 80 வயதைத் தாண்டியவர். 70களில் கனடாவிற்கு புலம்பெயர்ந்தார். சில வட்டாரங்களில் ஒன்று மேற்பட்ட தமிழர்கள் போட்டியிடுகின்றனர். டொரன்டோ வட்டாரம் 42ல் நான்கு தமிழர்கள் போட்டியிடுகின்றனர். மார்க்கம் நகரில் வட்டாரம் 5ல் இருவரும் வட்டாரம் 7ல் மூவரும் போட்டியிடுகின்றனர்.

ஜோன் ஹவார்ட் டொரி



பிறப்பு: 1954 வைகாசி 28,

ரொரன்டோ - ஒன்ராரியோ

பெற்றோர்: ஜோன் ஏ ரொரி

துணைவி: பார்பரா ஹக்கட், நான்கு குழந்தைகள்

கல்வி: ரொரன்ரோ பல்கலைக் கழக கல்வித் திட்டத்தால் நிர்வகிக்கப்படும் பாடசாலையில் ஆரம்பக்கல்வி (University of Toronto Schools) பின்னர் ரொரன்டோ பல்கலைக் கழகத்தில் கலைப்பிரிவு பட்டதாரியானார். தொடர்ந்து யோர்க் பல்கலைக் கழகத்தில் பயின்று வழக்கறிஞரானார்.

அனுபவம்: றோஜர்ஸ் நிறுவனத்தின் தலைமை அதிகாரியாக (தலைவராக) கடமையாற்றியுள்ளார். பின்னர் அதே நிறுவனம் நடாத்தும் 1010 வானொலியில் ஒரு ஊடகவியலாளராகவும் பணிபுரிந்துள்ளார். பல நிறுவனங்களின் முகாமைத்துவத்தில் முகவராக பணிபுரிந்துள்ளார். கனடிய புட்போல் அமைப்பின் தலைவராக நான்கு வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.

அரசியல் அனுபவம்: முன்னால் ஒன்ராரியோ முதல்வர் பில் டேவிஸ் தலைமை அதிகாரியாக பணிபுரிந்துள்ளார். முன்னால் கனடிய பிரதமர் மல்றோனியின் தலைமைச் செயலராகவும் செயல்பட்டுள்ளார். 2003ல் ரொரன்டோ மாநகர முதல்வராக போட்டியிட்டு டேவிட் மில்லரிடம் ஐந்து வீத வாக்கு வித்தியாசத்தில் தோல்வி கண்டார். 2004ல் ஒன்ராரியோ கொன்சவேற்றிவ் கட்சித் தலைவரானார். 2005ல் ஒன்ராரியோ சட்டமன்ற உறுப்பினரானார். 2007, 2009 தேர்தல்களில் இவரது கட்சி லிபரல் கட்சியிடம் தோல்வி கண்டது. இவர் சட்ட மன்ற தொகுதியிலும் தோல்வி கண்டார். அதன் பின்னர் கட்சித் தலைமைப் பதவியை இராஜினாமாச் செய்தார்.

தேர்தல் களம்: ரொரன்டோ நகரின் மிக முக்கிய பிரச்சினையான போக்குவரத்து பிரச்சினையை தீர்ப்பதற்கு சாத்தியமாகக் கூடிய தீர்வுத் திட்டத்தை முன்வைத்துள்ளார். ஒன்ராரியோ அரச போக்குவரத்து நிறுவனத்துடன் இணைந்த திட்டமொன்றை இவர் முன்வைத்துள்ளார். ஸ்காபரோ எல்.ஆர்.ரி விரிவாக்கம், கார்டினர் விரைவு வீதி புனரமைத்தல், புதிய அரச வீடமைப்புத் திட்டங்கள அமைத்தல், பூங்காக்கள் விரிவாக்கம் போன்றவை இவரால் முன்வைக்கப்பட்டுள்ள முக்கிய திட்டங்கள்.

இக் கட்டுரை அச்சுக்கு போகும் வரை கருத்துக் கணிப்பில் இவர் முன்னிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

டக் போர்ட்



பிறப்பு: 1964 கார்த்திகை 20,

ரொரன்டோ - ஒன்டாரியோ

பெற்றோர்: றுத் டயன் கம்பல் - டக் போர்ட் சீனியர்

மனைவி : ஹார்லா. 4 பெண் குழந்தைகள்

கல்வி: ஹால்ற்றன் பல்கலைக் கழகம்

அனுபவம்: டெக்கோ லேபல் நிறுவனத்தின் பங்குதாரர்களில் ஒருவர். இது ஒரு குடும்ப நிறுவனம் (ரொப் போர்ட், டக் போர்ட் இவர்களின் தாயார் மற்றும் சகோதரர்கள் ஏனைய பங்குதாரர்கள்)

அரசியல் அனுபவம்: 2010 ரொரன்டோ மாநகரத் தேர்தலில் இரண்டாம் வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவரது தம்பி ரொப் போர்ட் மாநகர முதல்வராக தேர்வு செய்யப்பட்டார்.

சாதனைகள்: ரொரன்டோ பொலிஸ் தலைமை அதிகாரியைப் பற்றி உண்மைக்கு புறம்பான செய்தியைக் கூறியமைக்காக பகிங்கரமாக மன்னிப்புக் கேட்டார்.

டக் இருந்த வீட்டில் பணம் காணமல் போனமைக்காக குடும்ப உறுப்பினர்களை (மனைவி, பிள்ளைகள்) ஒரு தனியார் புலனாய்வு நிறுவனத்தின் மூலம் விசாரணைக்கு உற்படுத்தினார்.

விசேட குழந்தைகளின் செயற்பாடுகளை ஏளனம் செய்தவர், கனடாவின் பிரதான எழுத்தாளர் மார்க்கிரட் அற்வூட்டை யாரென்றே எனக்கு தெரியாது என ஏளனம் செய்தவர். தம்பி ரொப் போர்ட்டின் மனைவியார் போலாந்து நாட்டைச் சேர்ந்தவர். இவரைப் பற்றி 1010 வானொலியில் கேலி செய்தார்

முன் வைத்துள்ள திட்டங்கள்: தம்பி ரொப் போர்ட்டின் திட்டங்களையே இவர் தொடரப் போவதாக கூறியுள்ளார். தம்பியை விட மோசமானவராக இவரை ஊடகங்கள் வெளியிட்டபோதும் கருத்துக் கணிப்புக்களில் தம்பியை விட முன்நிலையில் உள்ளார்.

கனடாவின் கென்னடி சகோதரர்கள் என தங்களைத் தாங்களே புகழ்ந்து கொண்ட போதும் கவுண்டமணி-செந்தில் போலவே நடந்து கொள்கின்றார்கள்.

தேர்தல் களம்: தம்பியின் புற்று நோய் இவருக்கு கட்டுக் கட்டாய் வாக்குகளையளிக்கும். இரங்கல் வாக்குகள் இவருக்கு சாதகமாக இருக்கும் என்ற கணிப்பு உண்டு

ஒலிவா சோ



பிறப்பு: 1957 பங்குனி 24,

ஹொங்கோங், கனடா வருகை: 1970

பெற்றோர்: ஹோ சூ (பாடசாலை ஆசிரியர்), வில்சன் வோய் சன் சோ (பாடசாலை சுப்பிரிண்டன்ற்)

துணைவர்: முன்னால் என்.டி.பிக் கட்சித் தலைவர் அமரர் ஜக் லேய்ற்றன்.

கல்வி: யாவிஸ் கல்லூரி, ஒன்ராரியோ கலைக் கல்லூரி, ரொரண்ரோ பல்கலைக் கழகம். கல்ப் பல்கலைக் கழகம். இவர் ஒரு கலைப் பட்டதாரியும் ஓவியருமாவார்.

அனுபவம்: ஜோர்ஜ் புறவுன் கல்லூரியில் ஐந்து ஆண்டுகள் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் - குழந்தைகள் பிரிவில் விரிவுரையாளராக கடமையாற்றியுள்ளார். ஓவிய-சிற்பகூடமொன்றையும் பல ஆண்டுகள் நடாத்தியுள்ளார்.

அரசியல் அனுபவம்: 1985- பாடசாலை தர்மகத்தாவாக வெற்றி பெற்றார். 1991- ரிரினிரி-ஸ்படைனா வட்டாரத்தில் கவுன்சிலராக வெற்றி பெற்றார் 1997, 2004 தேர்தல்களில் ரிரினிரி-ஸ்படைனா தொகுதியில் போட்டியிட்டு தோல்வி கண்டார். ஆனாலும் 2005ம் ஆண்டு வரை கவுன்சிலராக கடமையாற்றினார். 2006, 2008, 2010 பாராளுமன்ற தேர்தல்களில் தொடர்ச்சியாக வெற்றி பெற்றார்.

சாதனைகள்: இவர் கவுன்சிலராகவும், பா.உ ஆகவும் இருந்த காலங்களில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கும், வீடற்றரோக்குமான சலுகைகளுக்காக அவர்களது அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்வதுக்குமாக போராடியுள்ளார். 2010 தேர்தலில் என்.டி.பிக் கட்சி பிரதான எதிர்க்கட்சியாக வெற்றி பெற்றபோது போக்குவரத்துதுறை நிழல் அமைச்சராகவும் செயற்பட்டார்.

தேர்தல் களம்: 200 கி.மீ துவிச்சக்கர வண்டிப் பாதைகள் அடுத்த நான்கு வருடங்களுக்குள் அமைத்தல். ஸ்காபரோ எல்.ஆர்.ரி விரிவாக்கம். கார்டினர் விரைவுப்பாதை புனரமைப்பு, சிறிய வணிகங்களுக்கான வரி 2.5 வீதத்தால் குறைக்கப்படும், புதிய அரச வீடமைப்புத்திட்டங்கள் நிர்மாணித்தல். ஒரு லட்சம் மரங்கள் நாட்டல் டவுன் ரவுன் விமான நிலைய விஸ்தரிப்பை நிராகரித்தல், ஜெட் விமானங்கள் தரையிரங்க அனுமதிக்கு எதிர்ப்புத் தெரிவித்தல்போன்றன இவர் முன்வைத்துள்ள முக்கிய திட்டங்கள்

மிசிசாகா

மிசிசாக்கா மாநகர மேயர் பதவிக்கு இம் முறை கடும் போட்டி நிலவுகின்றது. 36 வருடங்களாக மிசிசாக்கா நகர மேயராக பதவிவகித்து வருகின்றார் ஹேசல் மக்கலியன். உலகின் வயதில் மூத்த மேயர் இவராவார். இவருக்கு வயது 93. பிரித்தானியாவின் ஒரேன்ச் கவுன்ரி மேயர் ஜோன் லான்ட்ம் தனது 93 வயதுவரை சேவையாற்றினார். ரெக்சாஸ் மாநில றிச்மண்ட் நகர மேயராக் ஹில்மர் மூர் 63 ஆண்டுகள் அவர் இறக்கும் வரை (2012-மார்கழி) கடமையாற்றினார். இன்று போவார் நாளை போவார் என நான்கு வருடங்களை கடத்திய ரொப் போர்ட்டின் ரொரண்ரோவில் 1858ல் டேவிட் மிரேக்கன்றிட்ஞ் வெறும் 50 நாட்களே மேயராக கடமைபுரிந்தார். இவை கொசுறுச் செய்திகள். மிசிசாக்விற்கு வருவோம் இங்கு 16 பேர் மேயர் பதவிக்கு போட்டியிடுகின்றனர். ஸ்ரீவ் மகோனிக்கும், போனி குறோம்பிக்குமிடையில் கடும் போட்டி நிலவுகின்றது. கருத்துக் கணிப்புக்கள் இவர் இருவரும் 2வீதம் வித்தியாசத்தில் முண்ணனியிலிருப்பதாக தெரிவிக்கின்றன. மசூட் கான் கடந்த தேர்தலில் இரண்டாவது இடத்தை பிடித்தார். இவ் வருடம் இவர் கடும் போட்டியை எதிர்பார்க்கின்றார். மக்களிடம் நம்பிக்கையை அதிகம் பெற்றிருந்தாலும் இவரால் வெற்றி பெறுவது கடினம் என கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

மார்க்கம்

ரொரண்ரோவின் வடக்கில் இருக்கும் செல்வந்த நகரம் மார்க்கம். இங்கு மேயர் பதவிக்கு போட்டியே இல்லை எனலாம். ஐவர் போட்டியிட்டாலும் பிரான்க் ஸ்பார்ட்டி வெற்றி பெறுவது உறுதியாகவுள்ளது. இங்கு வட்டாரம் 7ல் தற்போதைய கவுன்சிலர் லோகன் கணபதிக்கும், காலிட் உஸ்மானுக்கும் கடும் போட்டி நிலவுகின்றது. வட்டாரத்து நிலவரங்கள் கடும் போட்டியையும் மீறி லோகன் வெற்றி பெற்று விடுவார் எனத் தெரிவிக்கின்றன.

பிரம்டன்

ரொரண்ரோவின் வட மேற்காக அமைந்துள்ளது பிரம்றன் நகரம். தற்போதைய முதல்வர் சூசன் பனல் பல சிக்கல்களை சந்தித்து வருகின்றார். இவரது ஊழியர்கள் செலவுக் கணக்குகாட்டுதலில் 260 தடவைகள் சட்டத்தை மீறியதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர். மொத்தத் தொகை 131 ஆயிரம் டொலர்கள். இவர் மீதான குற்றச்சாட்டுக்கள் இவரது வெற்றியை பாதிக்கும். புதியவர் ஒருவர் வெற்றி பெறலாம். தொடர்ந்து வரும் வாரங்களில் சூசனின் பதிலிம், பிரச்சார முறையிலும் மக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தினால் இவர் வெற்றி பெறலாம்.

ஏஜக்ஸ்

டொரன்டோவின் கிழக்காக அமைந்துள்ளது ஏஜக்ஸ் பட்டணம். இங்கு வரன் வைத்திலிங்கம் பேயர் பதவிக்குப் போட்டியிடுகின்றார்.

எங்கள் முன் உள்ள மிகப் பெரிய கேள்வி 28
தமிழர்களில் எத்தனை பேர் வெற்றி பெறுவார்கள்?
என்பதே. பதிலுக்கு தேர்தலன்று இரவு வரை
காத்திருப்போம்.

Councillor Logan Kanapathi

A RIGHT CHOICE FOR US

Councillor Kanapathi made headlines in November 2006 when he became the first Canadian Tamil to be elected to political office. As quoted by the Toronto Star, he was "a new face for a new era." As a proud Canadian, he has continued to work hard to give back to the community.

Since being elected, Councillor Kanapathi has been a strong advocate for increased open spaces for families and children. During his term in office he has opened several parks and a state of the art Cricket sports field in his own Ward 7. He also championed a $72 Million flag ship community centre, the South East Community Centre & Library and a number of community parks that are under design and construction for Ward 7. He serves on more than twenty five committees with the City of Markham, including the Budget Sub-Committee, Environmental Issues Committee, Green Print Steering Committee, Traffic Safety Committee to name a few. Beyond his commitments to Markham Council, he is also an Advisory Board Member of several Community organizations such as the South Asian Autism Awareness Centre and Cherish Integrated Services.



The City of Markham was the first municipality in North America to pass a resolution against Ethnic Cleansing and Genocide in Sri Lanka in April 2009. This resolution was initiated by Councillor Kanapathi and unanimously passed by Markham Council. Councillor Kanapathi has played a key role in setting another milestone in Canadian Tamil history by successfully persuading Markham Town Council to proclaim Jan 13, 14 and 15th as Tamil New Year/ Thai Pongal/ Tamil Heritage Days and City of Markham became the first municipality in the Western Hemisphere to celebrate Thai Pongal in 2012 and onwards. He is the Founding Chair of the large annual Markham South Asian Festival. He set another milestone in the history of Canadian Tamils by naming a prominent street in Markham with a significant Tamil name after the historic VANNI Region of the Tamil Home Land. Due to his hard work and perseverance "VANNI STREET" was successfully unveiled in the City of Markham on May 11, 2013. He was the only Tamil in Canada to be selected for US Government's prestigious International Visitor Leadership Program in 2012.

Councillor Kanapathi has also worked tirelessly to promote sustainability not only in Ward 7 but for the City of Markham as a whole though his involvement in the Green Print Steering Committee. He has also been a long standing member of the Rouge Park Alliance and Rouge Park Implementation Task Force which was instrumental in creating the Rouge National Urban Park, the largest urban National park in Canada.

As vice-chair of the Budget Committee, Councillor Kanapathi has played a key role in achieving a ZERO PERCENT (0%) property tax increase for three consecutive years in Markham. During 2012 and 2013, Markham only raised taxes minimally at 1.5% which is the lowest in the GTA. Councillor Kanapathi has been credited for his leadership on economic efficiencies during these recent difficult economic times, and is now focusing on expanding Markham's business relations internationally to promote further development and investment. His advocacy took the Markham-India Business Mission to Chennai, Tamil Nadu in Jan 2013, for the first time ever in Markham's history.

His hard work and perseverance championed the Widening of Steeles Ave East of Markham Rd which lead to the unanimous approval of a cost sharing and implementation agreement between the Regional Municipality of York and the City of Toronto in Jul 2014.

Under his patronage and efforts, Bharradhi Arts, a South Asian Youth Band organized a successful fundraising campaign under the banner, Help of Love 2012, a world record setting 48 hour non-stop musical marathon by South Asian Youth in support of the Markham Stouffville Hospital Expansion project.

உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர்!

ஒக்டோபர் 27ல் ஒன்டாரியோ மாநில உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. மொத்தமாக 28 தமிழ் வேட்பாளர்கள் வெவ்வேறு பதவிக்காக போட்டியிடுகின்றார்கள். புலம் பெயர்ந்த நாடுகளில் அதிகளவு தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடுவது இத் தேர்தலாகத்தான் இருக்கும். ஒன்ராரியோவில் பொது, கத்தோலிக்க, பிரெஞ்ச் என மூன்று கல்விச் சபைகள் உள்ளன. ரொரன்ரோ கத்தோலிக்கச் சபைக்கு போட்டியிடும் ரொனால்ட் செல்வத்துரைக்கு வயது 80. பிரெஞ்ச் மொழி கல்விச் சபைக்கும் ஒரு தமிழர் போட்டியிடுகின்றார். வட்டாரம் 42ல் நான்கு தமிழர்கள் போட்டியிடுகின்றனர். மார்க்கம் நகரின் வட்டாரம் ஐந்து ஏழு ஆகியவற்றில் முறையே இரண்டு, மூன்று தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

மக்களே இவர்கள் தமிழர்கள் என்பதற்கப்பால், இவர்கள் முன் வைக்கும் திட்டங்களால் நீங்கள் வாழும் பகுதி நன்மை பெறவேண்டும் என்பதற்காக வாக்களியுங்கள். அதிக தமிழ் வேட்பாளர்கள் போட்டியிடுவது ஆரோக்கியமான விடயமே. இவ் வேட்பாளர்கள் சுய நோக்கமற்று பொது நலத்துடன் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இது வரை நடைபெற்ற தேர்தல் பிரச்சாரங்களை பார்க்கும் பொழுது மிகுந்த போட்டிக்கு மத்தியிலேயே எம் வேட்பாளர்கள் வெற்றி வாய்ப்பைப் பெறவேண்டியிருப்பது புலப்படுகிறது. இதில் பல பகுதிகளில் தமிழ் வேட்பாளர்களுக்கிடையிலேயே போட்டிகள் நிலவுகின்றன. யாவருக்கும் தேர்தலில் போட்டியிடும் ஜனநாயகம் உண்டு என்பதையும் நாம் மறுப்பதற்கில்லை. ஆயினும் இது தமிழ்ப் பிரதிநிதிகளின் வெற்றிவாய்ப்பை ஒட்டுமொத்தமாகப் பாதிக்குமென்பது உண்மை. இவைகருதி தமிழ் வேட்பாளர்களிடையே போட்டி நிலவும் பகுதிகளில் பொது இணக்கம் காண முயற்சித்திருந்தால் பயனுள்ளதாக இருந்திருக்கும். எனினும் ஒருசில வேட்பாளர்கள் பிரதித்தைப் பெறுவார்களென்ற நம்பிக்கையளிக்கின்றார்கள். எத்தனே பேர் வெற்றி பெறுகின்றார்கள் என்பதல்ல கேள்வி. எத்தனை சுய நோக்கமற்ற பொது நல வேட்பாளர்களை தெரிவு செய்துள்ளோம் என்பது தான்!

காமராசரிடமிருந்து கற்றுக்கொள்வோம்...



முதலமைச்சர் காமராசரும் பிரதமர் நேருவும் கூட்டமொன்றில் பங்கேற்க மதுரையைத் தாண்டி மகிழுந்தில் சென்று கொண்டிருக்கிறார் கள். உரையாடலின் நடுவே நினைவு கூர்ந்தவரான நேரு 'மிஸ்டர் காமராஜ்... உங்க சொந்த ஊர் இந்தப் பக்கம்தானே...?' என்று கேட்கிறார்.

'ஆமாங்க. இங்ஙன தான். இன்னும் கொஞ்ச தூரத்தில் வரப்போகிறது' என்று கூறுகிறார் காமராசர்.

'அப்படியானால் உங்கள் வீட்டுக்குப்போய் உங்கள் தாயாரைப் பார்த்து நலம் விசாரித்துவிட்டுச் செல்லவேண்டும் அல்லவா...' என்று நேரு கேட்க 'அது எதுக்குன்னேன். இப்பவே கூட்டத்துக்கு நேரமாயிட்டு...' என்று காமராசர் மறுக்கிறார்.

'நோ நோ... இவ்வளவு தூரம் வந்துவிட்டு உங்கள் தாயாரைப் பார்க்காமல் சென்றால் நன்றாக இருக்காது. நீங்கள் பார்க்க நினைக்காவிட்டாலும் பரவாயில்லை. நான் அவர்களைப் பார்த்தேயாக வேண்டும். என்னை அவர்களிடம் கூட்டிச் செல்லுங்கள்' என்று அன்புக் கட்டளையிடுகிறார் நேரு.

'விடமாட்டேன்னு நீங்களே...' என்ற காமராசர் ஓட்டுநரிடம் 'ஏப்பா. வண்டிய இப்படி ஓரங்கட்டு...' என்று நிறுத்தச் சொல்கிறார். அது வீடுகளே இல்லாத பகுதி. சாலையின் இருமருங்கிலும் விவசாய நிலங்கள். அந்நிலங்களில் அப்பகுதிப் பெண்கள் களை பறித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தாயாரைப் பார்க்க வீட்டுக்கு அழைத்துச் செல்லச் சொன்னால் இப்படி அத்துவான வெயிலில் வண்டியை நிறுத்தியிருக்கிறாரே என்ற வினாவுடன் வண்டியை விட்டிறங்குகிறார் நேரு.

காமராசர் களைபறிக்கும் பெண்டிர் கூட்டத்திலிருந்து வயதான பெண்மணி ஒருவரை அழைக்கிறார் 'ஆத்தா.. நான்தான் உன் மகன் காமராசு வந்திருக்கேன். உன்னப் பார்க்க நேரு வந்திருக்காரு..' என்று கூவியிருக்கிறார்.

காட்டுப் புழுதியுடன் உழைத்து வியர்த்த முகத்துடன் 'ஏ காமராசு... வந்திட்டியாப்பா... நல்லாருக்கியா...' என்று தன் மகனைக் கண்ட மகிழ்ச்சியில் உள்ளம் நெகிழ அருகில் வருகிறார் காமராசரின் தாயார். தாயும் மகனும் அளவளாவிக் கொள்கிறார்கள். நேருவைக் காட்டி அறிமுகப்படுத்துகிறார். நேருவால் தன் முன்னால் நடந்துகொண்டிருப்பதை நம்ப முடியவில்லை. சிலையாகி நிற்கிறார்! அவர்தான் காமராசர்.



பெயர்: Logan Kanapathi

வட்டாரம்: 7 Markham

விஞ்ஞாபனம்: Opened several parks and a state of the art Cricket sports field championed a $72 Million flag ship community centre, the South East Community Centre & Library

Initiated a resolution against Ethnic Cleansing and Genocide in Sri Lanka in April 2009.

Persuaded Markham Town Council to proclaim Jan 13, 14 and 15th as Tamil New Year/ Thai Pongal/ Tamil Heritage Days

Worked for naming a street "VANNI STREET" in the City of Markham

Played key role in achieving ZERO PERCENT (0%) property tax increase in the last 3 years

Initiated the Markham-India Business Mission to Chennai, Championed the Widening of Steeles Ave East of Markham Rd

Strong advocator for increased open spaces for families and children.



பெயர்:

லாரன்ஸ் மாணிக்கம்

வட்டாரம்: 2&6 Brampton

விஞ்ஞாபனம்:

கட்டுப்படுத்தப்பட்ட சொத்து வரி

பொது பிரயாண வசதிகள்

புதிய மருத்துவமனை

மக்கள் பாதுகாப்பு

எமது வேண்டுகோளை ஏற்று
உங்கள் விபரங்களை எம்
வாக்காளர்களுக்காக
அனுப்பிவைத்த வேட்பாளர்
அனைவருக்கும்
எம் நன்றிகள்.



பெயர்: Rukshan Para

வட்டாரம்: 4&5 Markham

விஞ்ஞாபனம்: To advocate on behalf of students to support them in the educational challenges they face.
To connect the parents with the right support networks regarding specific issues with their children.
To identify and fill the communication gaps between the educational system and the community.
To utilize our community's own knowledge appropriately in the classroom.
To attend to the special needs and introduce independent learning plans which are critical for some children.
To ensure that our children get the very best education possible.
For Better Schools.



பெயர்: சிவா சிவஞானம்

வட்டாரம்: 5 Markham

விஞ்ஞாபனம்: சாம்பியன் சமூகம் சார்ந்த திட்டங்கள்.

மருத்துவ மனை வசதிகள்

புதிய கார்னெல் சமூக மையம் அமைத்தல்

புதிய சூப்பர் மசூதி அமைத்தல்

பொது பாதுகாப்புத் திட்டங்கள்

வாகன பார்க்கிங் வசதிகள்

குறைந்த காப்பீட்டுச் செலவு.

விண்ரர் பனி நீக்கப் பிரச்சினைகளைத் தீர்த்தல்

முதியோர் மற்றும் சிறுவர்கள் பாதுகாப்பு வசதிகள்,

பனிக்கால விபத்து தவிர்ப்பு நடவடிக்கைகள்

பூங்காக்கள்

சமூக நிலையங்கள்

மக்களின் அன்றாடத் தேவைகள், கல்வி, வேலைவாய்ப்பு, தொழிற்துறை அபிவிருத்தி, சுற்றுப்புற சுகாதாரம், மருத்துவ சேவை, வரிவிதிப்பு சலுகைகள், போக்குவரத்து, பொழுதுபோக்கு, கலாசார முன்னேற்ற நடவடிக்கைகள்

ஆகியவற்றை முதன்மைப்படுத்தி செயலாற்றுவதே நோக்கம்.



பெயர்: Joseph (Mohan) Remisiar

வட்டாரம்: 8 Markham

விஞ்ஞாபனம்: மார்க்கம் நகரின் தேவைகள் குறைபாடுகளை அறிந்தவன்.

பல்லின மக்கள் அடங்கிய சமூக அமைப்புக்களை தலைமை வகித்து பல வேலைத்திட்டங்கள் நிறைவேற்றிய அனுபவம்

நாம் வாழும் சமூகத்தின் வளர்ச்சியில் நாமும் பங்கேற்பது தார்மீகக் கடமை

மேம்படுத்தல்



பெயர்: ஜீவித்தா டெபோரா லீபமான்

வட்டாரம்: ருஜ்ரிவர் வாட் 21

விஞ்ஞாபனம்: பாடசாலை சபை அறங்காவலர் நிதி துஷ்ப்பிரயோகம், நிதிக்குறைவு, பாடசாலை பஸ் வசதிக்குறைவு, பாடசாலைகள் மூடப்படுதல், கட்டிட திருத்தங்களில் தாமதம் என்பன ரொரன்ரோ பாடசாலை சபையின் குறைபாடுகளாயுள்ளன.

மேலும் ஸ்காபரோ ரூஜ்ரிவர் பகுதியில் நிதிப்பொறுப்பேற்றல், சபையின் கடன், பாடசாலை-பெற்றார் தொடர்பாடலில் உள்ள இடைவெளி என்பன மாணவரை நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கின்றன.

நிதிபொறுப்பேற்றலை உறுதிப்படுத்தல், பாடசாலை விழுமியங்களை மதித்தல், எமது சமூகத்திற்காகவும் பாடசாலைகளுக்காகவும் பரிந்துரைத்தல். பெற்றாரிடையிலும், பொதுமக்களிடையேயும் பாடசாலை சபையின் கொள்கைகள், பெற்றார் உரிமைகள், பாடசாலைத் திட்டத்தின் செயலாக்கம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுத்தல். தொழில்சார் கல்வி, தொழில்நுட்ப அனுபவம் தரும் கல்வித் திட்டத்தை உள்ளடக்கல் என்பன என் நோக்கங்கள்.



பெயர்: கிறிசாந்தி சரோஜ்குமாரன்

வட்டாரம்: ருஜ்ரிவர் வாட் 21

விஞ்ஞாபனம்:

அறங்காவல் சபையில் வரிப்பண ஒழுங்கீனங்களையும் சட்டமீறல்களையும் தடுத்து, வெளிப்படைத்தன்மை, கணக்குக்காட்டும் பொறுப்புக்கு உட்படுத்தல். மாதாந்த செலவுகளை மக்களறிய வைத்தல்.

பின்தங்கிய மாணவர்களுக்கான திட்டங்கள். வேறுபட்ட கற்கை வழிகளும் மாணவர்களுக்கான மேலதிக வளங்களும் வன்முறையற்ற பாதுகாப்பான கல்விச் சூழல்.

பெற்றோர்களுக்கு கொள்கை மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்கள் கிட்டவைத்து, பிள்ளைகளின் கல்வியில் பங்கெடுக்க வாய்ப்பளித்தல். பெற்றோர் சபைகளுடன் ஒத்துழைத்து மாணவர் கல்வியில் அவர்கள் பங்களிப்புடன்கூடிய கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்தல்.



பெயர்:

வரன் வைத்திலிங்கம்

வட்டாரம்: ஏஜாக்ஸ், நகர முதல்வர்.

விஞ்ஞாபனம்: சமூகத்துக்கான வேலைவாய்ப்பு

இளையோக்கான வேலைவாய்ப்பு

சுத்தமான, சுகாதாரமான உணவு உற்பத்தி,

போக்குவரத்து நெரிசனை நீக்குதல்,

விழாக்களை ஊக்குவித்தல்,

பொழுது போக்குக்கானதிட்டங்கள்,

சரித்திரத்தை மதித்தல்



PYRAMIDGROUP.COM
$497,500
Brampton - Sandalwood/Vankirk
4 Rooms, 4 Washrooms
$499,900
Brampton - Chingousy/Drinkwater
4+2 Rooms, 4 Washrooms
Basement finished & Sep Entrance
509,900
Brampton - Dixie/Sandalwood
4+1 Rooms, 4 Washrooms
Basement finished
$534,900
Brampton - Wanless/Van Kirk
3 Rooms, 3 Washrooms
$539,900
Brampton - Chinguacousy/Queen
4+1 Rooms, 4 Washrooms
$599,900
Brampton - Father Tobin/Mountainash
3+2 Rooms, 5 Washrooms
$599,900
Brampton - Bovaird /Ashby Field
4+2 Rooms, 4 Washrooms
Basement finished & Sep Entrance
$880,000
Markham - Markham / Bur Oak
4 Rooms, 4 Washrooms
Basement finished
$938,888
Markham - 16th/Mingay/Mccowan
4+2 Rooms, 6 Washrooms
$1,249,000
Stouffville - Vivian / Mccowan
3 Rooms, 2 Washrooms
$1,295,000
Markham - 9th Line/14th Avenue
4 Rooms, 5 Washrooms
$309,900
Oshawa - Harmony/Olive
3 Rooms, 3 Washrooms
Basement finished
$339,900
Ajax - Westney/Ravenscroft
2+1 Rooms, 2 Washrooms
Basement finished
$464,900
Whitby - Rossland/Thickson
4 Rooms, 3 Washrooms
$478,800
Oshawa - Wilson/Coldstream
4 Rooms, 4 Washrooms
$529,900
Oshawa - Greenhill And Quail Run Dr
4+1 Rooms, 5 Washrooms
HomeLife/Future Realty Inc., Brokerage
#205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
Bus : 905 201 9977 / Fax: 905 201 9229
Independently Owned and Operated, REALTOR * Sales Representative
HOMELIFE
HIGHER STANDARDS
Uthayan Sivarajah
416 301 5555
Sugan Sivarajah
905 201 0066
Raj Sivarajah
416 843 3333
SivaKumar Sivarajah
416 453 7777



பெயர்: Juanita Nathan

வட்டாரம்: 7&8 Brampton

விஞ்ஞாபனம்: Youth Addiction Counselor

Community Outreach Worker

Domestic Abuse Counselor

Senior Support Worker

Parenting Worker



பெயர்: Subbiah Nanickan

வட்டாரம்: 7&8 Brampton

விஞ்ஞாபனம்: Fair representation for all communities in city services. Bringing down property taxes. Attracting more skilled and knowledge based companies by ways of special subsidies and reduced taxes. Building our own Brampton University. Reducing commuting time by planning two parallel subway or LRT service through Hurontario and Queen Street. Bringing in more day care and Early years centers to each neighborhood.



பெயர்: Subramaniam Raj

வட்டாரம்: 5 Markham

விஞ்ஞாபனம்: வரி அதிகரிப்பு இல்லை

பொதுப் போக்குவரத்து சேவையையும் அதற்கான உள்ளக கட்டமைப்பையும் மேம்படுத்தல்

உள்ளூர் வேலைவாய்ப்பை அதிகரித்தல்

ஆட்சியில் வெளிப்படைத்தன்மையும் கணக்குப் பொறுப்புநிற்றலையும் உறுதிப்படுத்தல்

பசுமை வெளிகளைப் கலாசரப் பிரதேசங்ளையும் பாதுகாத்தல்

பூங்காக்கள், பொழுதுபோக்கு நிலையங்களை அமைத்துப் பேணல்

குடியிருப்பாளர்களுக்கான இன்டர்நெட் நிகழ்ச்சித் திட்டங்கள்

ஒவ்வொரு டாலரும் பயனுற செலவாதலை உத்தரவாதப்படுத்தல்

கச்சிதமான பட்ஜட் திட்டமிடலை உறுதிப்படுத்தல்

வெளிப்டைத் தன்மை கணக்குப் பொறுப்பு நிற்றலை உறுதிப்படுத்தல்

மார்க்கம் விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு பொதுசன நிலையங்களில் இடமொதுக்கல்.



பெயர்: Susie Nadarajah

வட்டாரம்: 6 Whitchurch-Stouffville

விஞ்ஞாபனம்: சமூகத்தில் வசிப்போரது குறைகளை நிவர்த்தி செய்வதும் அவர்களுக்காக குரல் கொடுப்பதும்

சமூகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

சிறிய, நடுத்தர, உள்ளூர் மக்களால் நடத்தப்படும் வியாபாரங்களின் வளர்ச்சிக்கு ஆதரவளித்தல்

ஒவ்வொரு டாலர் வரிப்பணமும் புத்திபூர்வமாக செலவளிக்கப்படுவதை உறுதிப்படுத்தல்

பட்ஜட்டை கவனமாக திட்டமிட பங்களித்தல்

கலைகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு



பெயர்: David Thomas

வட்டாரம்: 38 Scarborough Centre

விஞ்ஞாபனம்: வெளிநாட்டுக் கல்வித்தகமைகளை அங்கீகரிக்க வைத்தல்

வேலைவாய்பில் பாகுபாடுக்கெதிரான புதிய சட்டங்களை வலியுறுத்தல்

புரிந்துணர்வை வளர்த்தலும் இனவெறி, இஸ்லாமியஎதிர்ப்பு ஆகியவற்றைஒழிக்கப் பாடுபடுதல்.

புதிய குடிவரவாளர்களுக்கான வேலைவாய்ப்பை அதிகரித்தல்

இளம் தலைமுறையினருக்கான வேலைவாய்ப்பை பெருக்கல்

சிறுவர்கள் இளைஞர்கள் புதிய குடியுரிமையாளர்களுக்கான அதிகரித்த சேவைகள்

சமூக சேவைகள், நடவடிக்கைகள்

மாகாணசபையுடன் செயற்பட்டு அடிப்படைச் சம்பள மட்டத்தை 14டலராக உயர்த்தல்

நகரசபை கென்ராக்ட்டுகளை தகுதியானவர்களுக்கு கிடைக்கவைத்தல்

வதிவிட வாடகைக் கட்டுப்பாட்டை அமுல்ப்படுத்தல்

குடியிருப்பாளர்களின் வீட்டு வசதிகளை மேம்படுத்தல்

மார்க்கம் நகரசபை - 5ம் வட்டாரத்தில்
Councillor ஆகப் போட்டியிடும்
முதற் தமிழ் வேட்பாளர்

சிவா சிவஞானம்

கடந்த 25 வருட காலமாக மார்க்கம் நகரில்
பல்லின மக்களோடு சமூகசேவை செய்துவரும்
சிவா சிவஞானம் ஆகிய என்னை
வாக்களித்து தெரிவு செய்யுங்கள்










Your Choice for Ward 5

Siva Sivagnanam

Candidate for Councillor
Ward 5 - City of Markham

MARKHAM



905-350-1274 | info@sivasivagnanam.com | www.sivasivagnanam.com


[Paid Ad]

ஐ.நா.வில் ஒலித்த தமிழனின் குரல்

05.10.1978

இலண்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் வைகுந்தவாசன் ஐக்கிய நாடுகள் சபையில் தமிழ் ஈழத்தின் விடுதலை குறித்து பேசி உலகறியச் செய்த நாள். உலக நாடுகளின் தலைவர்கள் அந்தந்த நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகள் நிறைந்திருந்த இச்சபையில் அதிரடியாக நுழைந்து மேடை ஏறிய யாழ்ப்பாணத் தமிழரான கிருட்டிணன் வைகுந்தவாசன் துணிச்சலுடன் இலங்கைத்தமிழர் பிரச்சினை பற்றி பேசி எல்லோரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தி அதிர்ச்சியடையச் செய்தார். 1946ல் ஐ.நா.சபை அமைந்தது முதல் ஒரு நாட்டின் பிரதிநிதி அல்லாத ஒருவர் இப்படி பங்கேற்றுப் பேசியது இதுதான் முதல் தடவை. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நிகழ்வு இலங்கை தமிழர்களையும் உலகத் தமிழர்களையும் மகிழ்ச்சியின் உச்சத்திற்கே கொண்டு சென்றது. இதன் மூலம் இலங்கைத் தமிழ் பிரச்சினையை உலகறியச் செய்தார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ள ஐ.நா. சபை பல அடுக்கு மாடிகள் கொண்டதும் சுமார் 3000 ஊழியர்கள் வேலை பார்க்கும் பிரமாண்டமான கட்டிடமாக வான் நோக்கி உயர்ந்து நின்றது. இதன் அசெம்பிளி கூட்டம் நடைபெறும் நாட்களில் 125 நாடுகளை சேர்ந்த 2000 பிரதிநிதிகளும், 500க்கு மேற்பட்ட பத்திரிக்கை நிருபர்களும் கலந்து கொள்வது வழக்கம். ஐ.நா.சபைக்குள் யாரும் எளிதில் செல்ல முடியாது. உலகின் காவல் அரண் மிகுந்த பகுதிகளில் இதுவும் ஒன்றாகும். பார்வையாளர்களாக செல்பவர்கள் கூட கடுமையான விசாரணைக்கு பின்பே விசிட்டர் காலரியில் அமர அனுமதிக்கப்படுவார்கள். ஐ.நா சபைக்குள் அமைந்துள்ள ரெபரன்ஸ் லைபெரரி (Reference Library) மிகவும் பெரியது. அங்கு வெளியார் செல்வதற்கு எளிதில் அனுமதி பெற முடியாது. அனுமதி கிடைத்தால் அது ஐ.நா. சபை கூட்டம் நடைபெறும் அசெம்பிளி மண்டபத்திற்குள் செல்வதற்கும் அனுமதி கிடைத்த மாதிரிதான். அதை தனக்கு சாதகமாக பயன்படுத்திய வைகுந்தவாசன் ஒரு நாள் விசிட்டர் காலரிக்கு அனுமதிப் பெற்றுச் சென்றார். அங்கு எல்லாவற்றையும் கண்காணித்தார். இதைத் தாண்டி அசெம்பிளி மண்டபத்திற்குள் போக முடியாது என்பதையும் உணர்ந்தார். பின்பு அதற்கும் வழி கண்டுபிடித்தார்.



என்.ஆர்.சோமு

பார் அற் லா (BAR AT LAW) பட்டம் – சாம்பியா நாட்டின் முன்னாள் நீதிபதி அந்தஸ்த்து - உலகம் முழுவதும் சுற்றிய அத்தாட்சி பத்திரம் போன்று தனது விபரங்களை ஆதாரத்துடன் எழுதிக் கொடுத்து, இலங்கைத் தமிழர் பிரச்சனை பற்றி ஆராய்ச்சி செய்வதற்காக ரெபரன்ஸ் லைபெரரிக்கு மட்டும் சென்று வர ஒரு மாதத்திற்கு அனுமதி பெற்றார். ஒவ்வொரு நாளும் ஐ.நா.சபை லைபெரரிக்கு சென்று வரத் தொடங்கினார். ஒரு சில நாட்களில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் பழக்கப்பட்ட ஒராளாக தன்னை அறிமுகம் ஆக்கிக் கொண்டார். வெளிநாட்டுப் பிரதிநிகளிடம் சரளமாகப் பேசி சந்தேகப்படமுடியாத அளவுக்கு நெருக்கத்தை ஏற்படுத்தினார். இலங்கை அமைச்சர் எந்த நாளில் எந்த நேரத்தில் பேசுகிறார் என்பதையும் அறிந்து கொண்டார். அவர் எதிர்பார்த்த அந்த நாளும் வந்தது.

ஐக்கிய நாடுகள் சபை அசெம்பிளி கூட்டத்தொடரில், முதலில் சைபிரஸ் நாட்டு அதிபர், அடுத்து சூரினாம் நாட்டு பிரதமர் பேசி முடித்தபின் அடுத்து இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் அழைக்கப்படுகிறார். ஒரு பிரதிநிதி பேசிமுடித்தவுடன் அவருடன் உலகப் பிரமுகர்கள் கைகுலுக்கி மகிழ்ச்சி தெரிவிப்பது வழக்கம். அந்த இடைவெளியில் கிடைத்த நேரத்தைப் பயன்படுத்தி, மின்னல் வேகத்தில் பேசும் இடத்திற்கு சென்று ஐ.நா. சபைத்தலைவர் வால்ட் கைமிற்கு மரியாதை செலுத்தி, தான் முன்பே டைப் செய்து வைத்திருந்த பேப்பரை எடுத்துப் பேசுகிறார். இந்தியாவின் தென் கிழக்கே, சிறிலங்காவின் வடகிழக்கே இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துள்ள தமிழீழ நாட்டின் பிரதிநிதியாக பேசுகிறேன் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவர் இலங்கை தமிழர் பிரச்சினையை விளக்கினார். அந்த சபையில் அமர்ந்திருந்த வெளிநாட்டமைச்சர் சாகுல் கமீதுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவருடன் வந்த பிரதிநிதிகள் அனைவரும் அதிர்ச்சியடைந்து 'திக்பிரமை' பிடித்தவர்கள் போல் ஆகிவிட்டார்கள். பேசுபவர் இலங்கை வெளிநாட்டு அமைச்சர் அல்ல என்று அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிகளிடம் சொன்னதன்பின், ஐ.நா.சபைத் தலைவரிடம் அறிவிக்கப்பட்டு ஒலிபெருக்கி நிறுத்தப்படுகிறது. பேசுவதை நிறுத்துங்கள் என்று பாதுகாப்பு அதிகாரிகள் ஓடிவருகிறார்கள். அவர்கள் வருவதற்குமுன்பாகவே, ஒலிபெருக்கி இல்லாமலேயே மீதியையும் பேசிவிட்டு - தமிழ் ஈழம் வாழ்க (LONG LIVE TAMIL EELAM) என்று பேசிமுடித்து, அனுமதியில்லாமல் பேசியதற்கு வருத்தமும் தெரிவித்தார்.

ஐ.நா. சபையில் தூங்கி வழிந்த வெளிநாட்டமைச்சர் சாகுல் கமீது ராஜினாமா செய்யவேண்டும் என்று இலங்கை எதிர்க்கட்சியினரும், புத்த பிச்சுகளும் போர்க்குரல் எழுப்பினர். ஆனால் அது செவிடன் காதில் ஊதின சங்காகவே போனது. வெளிநாட்டமைச்சர் சாகுல் கமீது ராஜினாமா செய்ய மறுத்துவிட்டார் என்பது வேறு கதை.

தனிமனிதனாக நின்று இவ்வளவு பெரிய சாதனையை செய்துமுடித்த வைகுந்தவாசன் இன்று உயிருடன் இல்லாவிட்டாலும், அவரது நினைவுகள் போற்றப்படக் கூடியன. 05.10.1978 அன்று ஐக்கிய நாடுகள் சபையின் கதவுகளைத் தட்டிய அந்தக் கைகளுக்குப் பின்னால் ஆயிரம் ஆயிரம் கைகள் இன்றும் தொடர்ந்து தட்டிக் கொண்டிருக்கின்றன. காலங்கள்தான் வெறுமனே ஓடிக்கொண்டிருக்கின்றன. 1978ம் ஆண்டுக்கும் 2014-ற்கும் இடையில் 36 ஆண்டுகள் ஓடிவிட்டன. ஆனால் தமிழினத்தின் விடுதலை கானல் நீராகவே மாறிவிட்டது. ஐக்கிய நாடுகள் சபைக் கதவுகளை மட்டுமல்ல, பிரித்தானிய நாடாளுமன்றக் கதவுகளையும் இலங்கைத் தமிழர்கள் தட்டவேண்டும். சர்வதேச சமூகத்துடன் சேர்ந்து தட்டவேண்டும். ஏனென்றால் இலங்கைத் தமிழர்களின் இன்றைய நிலைக்கு அன்று இலங்கையை ஆண்ட பிரித்தானியர்தான் காரணம். இதை அவர்கள் மறுக்கவும் முடியாது. தட்டிக் கழிக்கவும் முடியாது.

'ஜெ' வழக்கின் சூத்திரதாரியின் சூளுரை

இந்த வழக்கின் ஆரம்ப காலத்திலேயே தகுந்த உண்மையான ஆதாரங்களை முன்வைத்து தான் மனு தாக்கல் செய்திருந்தேன். வழக்கில் நிச்சயமாக வெற்றி பெறுவேன் என்று ஆரம்பத்திலேயே தெரியும். தீர்ப்பு சரியானபடியே வந்துள்ளது. இது நான் எதிர்பார்த்த தீர்ப்புதான். ஆனால் கொஞ்சம் தாமதமாக வந்துள்ளது. இனி உடல்நலத்தை காரணம் காட்டி அவர்கள் மேல்முறையீடு செய்யலாம். இதன்பேரில் 'அவர் சிறையில் இருக்கக்கூடாது. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டும்' என்றுகூட தீர்ப்புகள் வரலாம். ஆனால், மேல்முறையீட்டில் அவர்களுக்கு சாதகமான தீர்ப்பு சாதாரணமாக கிடைத்துவிடக் கூடாது.

இந்த வழக்கைப் பொறுத்தவரை ஆதாரங்களை திரட்டுவதுதான் எனக்கு மிகப்பெரிய போராட்டமாக இருந்தது. தமிழகத்தின் முக்கியமான அரசியல் தலைவர் என்பதால் இதை நீதிமன்றத்துக்கு எடுத்துச் சென்றதே மிகப்பெரிய போராட்டம் என்று சொல்லலாம். நிறைய பிரஷர்கள், சமரச முயற்சிகள் எல்லாம் நடந்தன. ஆனாலும், வழக்கை வாபஸ் பெறுவது என்ற நிலைக்கு செல்லவே இல்லை.

இந்தியா ஜனநாயக நாடு. தற்போது நாட்டில் ஊழலுக்கு எதிராக மிகப்பெரிய எழுச்சி ஏற்பட்டுள்ள நிலையில் இந்தத் தீர்ப்பு வந்துள்ளது. ஆரம்பத்தில் நான்கூட, இந்த விஷயத்தில் ஜெயலலிதாவுக்கு மோடி ஏதாவது உதவி செய்வாரோ என்று நினைத்தேன். ஆனால், 'வழக்கில் நான் தலையிட மாட்டேன். எல்லாம் சட்டப்படி நடக்கட்டும்' என்று அவரே என்னிடம் கூறினார். இனி ஊழல் செய்பவர்கள் யாரும் தப்பிக்க முடியாது.

தமிழகத்தின் சில இடங்களில் சமூக விரோதிகள் வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டனர். வன்முறையில் ஈடுபடுபவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்கிடம் தொலைபேசியில் பேசினேன். தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சியை அமல்படுத்த வேண்டும் என்று கூறினேன். அரசியலமைப்புச் சட்டத்தின் 256-வது ஷரத்தின்கீழ் தமிழக ஆளுநருக்கு உள்துறை அமைச்சர் சில ஆலோசனைகளை அனுப்பியுள்ளார். அதன் அடிப் படையில் சட்டம் - ஒழுங்கை நிலைநிறுத்த ஆளுநர் உத்தர விட்டுள்ளார். இப்போது தமிழகத்தில் அமைதியான சூழல் உருவாகியுள்ளது.

ஜெயலலிதா வழக்கு தீர்ப்பைப் போலவே 2ஜி வழக்கிலும் ராசா, கனிமொழி உட்பட வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள அனைவரும் தண்டனை பெறுவது நிச்சயம். இந்த வழக்கில் ப.சிதம்பரத்தையும் சேர்க்க வேண்டும் என்று கூறியிருந்தேன். ஆனால், என்னிடம் போதுமான ஆதாரம் இல்லை என்று கூறி நீதிமன்றம் அவரை சேர்க்க மறுத்தது. வலுவான ஆதாரத்தை திரட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறேன். இந்த வழக்கில் இருந்து ப.சிதம்பரம் தப்ப முடியாது.

சோனியா, ராகுல் மீதான 'நேஷனல் ஹெரால்டு' வழக்குக் குறித்த என்னுடைய வாதம் டெல்லி உயர் நீதிமன்றத்தில் வரும் 1-ம் தேதி நடக்கவுள்ளது. அப்போது தகுந்த ஆதாரங்களை எடுத்து வைப்பேன். தீபாவளி முடிந்து டிசம்பரில் இந்த வழக்கு சிறப்பு நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வரும்.

இவ்வாறு சுப்பிரமணியன் சுவாமி கூறினார்.





கே: நீங்கள் அமைத்த போர் நல்லிணக்க படிப்பினை குழு இதுவரை சாதித்தது என்ன?

ப: அந்தக் குழுவின் பரிந்துரைகளில் 35ஐ நிறைவேற்றி விட்டோம் இன்னும் பல எஞ்சி நிற்கின்றன. நிலம் தொடர்பான பரிந்துரையை ஒரே நாளில் நிறைவேற்றிவிட முடியாது.

நிர்வாகத்தில் நீங்கள் தலையிடுவதையும் அவரிடம் பட்டியலிட்டிருக்கிறார்களே?

ப: தலையீடே கிடையாது. முக்கியமான அதிகாரிகள் என்னால் நியமிக்கப் பட்டுள்ளனர். அவர்களை மாற்றும்படி என்னிடம் கேட்கின்றனர். மாற்றினால் அந்த அதிகாரிகள் நீதிமன்றத்தை நாடுகின்றனர், நான் என்ன செய்ய முடியும்?

கே: நீதிமன்றத்தை நாடிய தலைமைச் செயலாளர் குறித்து நீங்கள் பேசுகிறீர்கள், தேர்தலை நடத்தியுள்ள நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்தளித்திருக்க வேண்டுமல்லவா?

ப: 2009 ல் போர் முடிந்ததிலிருந்து 90 சதவீத ராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப் பட்டுவிட்டது. அவர்களை பிரபகுதிகளுக்குக் கொண்டு செல்ல விரும்புகிறேன்.இன்னும் எவ்வளவு தூ ரம் அவர்களை நகர்த்தமுடியும்? எண்கள் நாட்டு ராணுவத்துக்கு இலங்கைக்குள்ளே தான் நாங்கள் இடம் பார்த்தேயாகவேண்டும். அவர்களை இந்தியாவுக்கோ வேறு நாட்டுக்கோ அனுப்ப முடியுமா?

கே: தமிழர் பகுதிகளில் தமிழர் அல்லாதோரைக் கொண்டுவந்து குடியமர்த்துகிறீர்கள் என்பதுதான் இந்தியாவில் உள்ளவர்களை உணர்ச்சிவசப்பட வைக்கிறது?

இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் சர்ச்சைக்குரிய பல விடயங்கள் பற்றி நேரடியாகவே கேள்வி கேட்கும் தி இந்து நிருபர் சுகாசினி ஹைதர், ராஜபக்ஷ வைப் பல விடயங்கள் குறித்துப் பேசவைக்கிறார். இந்தப் பேட்டி வாசகர்களுக்கு பயனுள்ளதாக இருக்குமென்று கருதி இங்கே தருகிறோம்.

தமிழ்ப்பகுதியில் வேற்றினத்தோரைக் குடியேற்றுகிறீர்களாமே?

இந்து நிருபர் சுகாசினி கேள்வி

கே: போர் நடந்த ஆண்டுகளில் ஆயிரக்கணக்கோர் காணாமல் போயிருப்பதை உங்களுடைய ஐ. நா. தூதர், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தில் ஒப்புக்கொண்டிருக்கிறாரே?

ப: இலங்கையில் காணாமல் போனவர்கள் பற்றி விசாரிக்க நாங்கள் ஏற்கனவே குழுவொன்றை அமைத்திருக்கிறோம். சுமார் 20000 முறையீடுகள் பெறப்பட்டுள்ளன. இலங்கையில் வடக்கிலிருந்தும் ராணுவத்தில் பணிபுரிந்தவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்தும் இந்தப் புகார்கள் வந்துள்ளன. அறிக்கை இன்னும் வரவில்லை.ஆனால் நான் அறிந்தவரையில் பெரும்பாலானவர்கள் காணாமல் போக விடுதலைப் புலிகள் இயக்கம்தான் காரணம்.


கே: போரில் ராஜபக்சே வெற்றி பெற்றிருக்கலாம், அமைதியை ஏற்படுத்துவதில் இன்னும் வெறி பெறவில்லை என்று 5 ஆண்டுகளுக்குப் பிறகு குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளதே?

ப: இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்குச் சென்றால் நீங்கள் உண்மையை உணர்வீர்கள். பழைய தலை முறை அரசியல்வாதிகளின் மனப்போக்கை விடுதலைப் புலிகளுடன் ஒருகாலத்தில் தொடர்பு வைத்திருந்தவர்கள்- அவ்வளவு எளிதாக மாற்றிவிட முடியாது. இளைய தலைமுறை வேறுமாதிரி உணர்கின்றனர். தோற்போம் என்று தெரிந்துதான் வடக்கில் மாகாணக் கவுன்சில் தேர்தலைக் கடந்த ஆண்டு நடத்தினோம்.

போருக்கு பிறகு மக்களுக்கு புதிய சுதந்திரம் கிடைத்திருக்கிறது. நாட்டின் வடக்கிலிருந்து தெற்கே செல்கிறார்கள். தெற்கில் இருப்பவர்கள் சௌகரியமாக வடக்கே பயணிக்கிறார்கள்.

கே: தமிழ்த்தேசியக் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் சமீபத்தில் டெல்லியில் பிரதமர் மோடியைச் சந்தித்தார்கள். உங்களுடைய அரசு அதிகாரத்தைப் பகிரந்தளிக்கத் தவறியதையும். வடக்கிலும் கிழக்கிலும் ராணுவம் இருப்பதையும். சிவில்

ப: தலைமைச் செயலாளர் என்பவர் அதிகாரி. அந்தப் பெண்மணி தனித்துச் செயல்பட விரும்புகிறவர். 13



கேள்வி: மோடியை ரீ.என்.ஏ. சந்தித்ததில் வருத்தமா?

பதில்: நிச்சயமாக இல்லை. அவர்கள் யாரை வேண்டுமானாலும் சந்திக்கலாம்.



வது சட்டத்திருத்தத்திற்கு வருவோம் காவல்துறை அதிகாரங்கள் தவிர, எல்லா அதிகாரங்களும் அவர்களுக்கு இருக்கின்றன. அவைபற்றி என்னால் அவர்களோடு விவாதிக்க முடியும்.

கே: நீங்கள் சொல்வது சரியான தகவல் இல்லை. முதலமைச்சரால் தனது அதிகாரிகளை தேர்வு செய்ய முடியவில்லை, அதிகாரிகள் முதல்வருக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் இல்லை என்ற நிலையே உள்ளது.

ப: ஆம், அதுபற்றி தமிழ்த் தேசியக் கூட்டணியினருடன் விவாதிக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் அவர்கள் என்னுடன் பேச மறுக்கிறார்கள்.பேச்சுவார்த்தைக்கு வராமல் ,அதிகாரப் பகிர்வு பற்றியோ வேறு விஷயம் குறித்தோ எவ்வாறு பேச முடியும்.

கே: இந்தியப் பிரதமர் மோடியை தமிழ்த் தேசியக் கூட்டணியினர் சந்தித்ததில் உங்களுக்கு வருத்தமா?

ப: நிச்சயமாக இல்லை,அவர்கள் யாரை வேண்டுமானாலும் சந்திக்கலாம், இது ஜனநாயகம்.

கே: இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் ஏராளமான எண்ணிக்கையில் ராணுவவீரர்கள் இன்னமும் இருப்பது என்? அவர்களுடைய எண்ணிக்கை மட்டுமல்ல, அவர்கள் ஆக்கிரமித்துள்ள நிலப்பரப்பு குறித்தும் சந்தேகங்கள் எழுகின்றனவே?

ப: இதை நான் திட்டவட்டமாக மறுக்கிறேன். தமிழர்களுடைய நினைவுச் சின்னங்கள் எதுவும் இடித்துத் தள்ளப் படவுமில்லை. தமிழர் பகுதிகளில் மற்றவர்களை குடியேற்றவுமில்லை. இலங்கையில் யார் வேண்டுமானாலும் அவர் தமிழராக இருந்தாலும், சிங்களவராக இருந்தாலும், முஸ்லிமாக இருந்தாலும் எங்கு வேண்டுமானாலும் குடியேறலாம்.

கே: தமிழ் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளுடன் குறிப்பாக முதல்வர் ஜெயலலிதாவுடன் உங்களுக்கு சுமுக உறவு இல்லாததால், இந்திய அரசால் உங்களுடன் உறவை வலுப்படுத்திக்கொள்ள முடியாமல் இருக்கிறதே?

ப: நான் என்ன செய்வது? நான் பேசத்தான் முயற்சி செய்கிறேன்.. (புன்னகை) வெள்ளைக் கோடியை எப்போதும் உயர்த்திப் பிடித்துக் கொண்டேயிருக்கிறேன்.

கே: உங்களுடைய ராணுவ அமைச்சக இணையத் தளம் முதல்வர் ஜெயலலிதாவைப் பற்றி அவர் புகழுக்குக் களங்கம் ஏற்படுத்தும் விதத்தில் கட்டுரை வெளியிட்டிருந்ததே?

ப: அது மிகப் பெரிய தவறு,அதனால் அதுபற்றித் தெரிந்தவுடனேயே பாதுகாப்புத் துறைச் செயலர் என்னிடம் தெரிவித்தார் அதை உடனே அகற்றிவிட்டு மன்னிப்புக் கோரினோம்.அதற்குப் பிறகு நானும் கூட மன்னிப்புக் கோரினேன்.

கே: தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்வது நீண்டகாலமாகத் தொடர்கிறதே?

ப: மீன்களுக்குக் கடலில் எல்லை கிடையாது, மீனவர்கள் அதைத் தேடிச்சென்றுதான் பிடிக்கவேண்டும். ஆனால் இந்திய மீனவர்கள் கடற் தரையையே பெருக்கும் அளவுக்கு இரட்டைமடி வலைகளை பயன்படுத்தி மீன் பிடிப்பதால் இலங்கையில் மீன் வளம் கடுமையாகப் பாதிப்படைந்துள்ளது.

தமிழர்கள் அதிகம் வசிக்கும் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள்தான் இதனால் அதிகம் பாதிக்கப் படுகிறார்கள் இந்திய மீனவர்களை

விடுதலை செய்யும்போது அவர்களுடைய படகுகளையும் விடுவிப்பதை நிச்சயமாக இப்போதைக்குப் பரிசீலிக்க மாட்டோம்.

படகுகளை விடுவித்தால் அவர்கள் மீண்டும் அதே படகுகளில் வந்து, அதையே மீண்டும் செய்வார்கள். விடுவிக்கப் பட்டவர்கள் அன்றாடக் கூலிக்கு வேலைபார்க்கும் அப்பாவி மீனவர்கள் என்பதும் தெரியும்.. அவர்களின் விசைப் படகுகள் கடலுக்குள்ளிருக்கும் இயற்கைச் சூழலை பயங்கரமாக நாசம் செய்கின்றன. அதை எங்களால் சகித்துக் கொண்டிருக்க முடியாது. கடல் தரை வரை, வலைவிரித்து மீன் பிடிப்பதை இந்தியாவிலேயே தடை செய்திருக்கிறார்கள்.

கே: நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச் சபைக் கூட்டத்தில் மோடியைச் சந்திப்பீர்களா? உங்களுக்கிடையே இப்போது உறவு எப்படி இருக்கிறது?

ப: அவரால் சந்திக்க முடியும் என்றால் நாங்கள் அதற்கேற்ப நேரம் ஒதுக்கமுடியும். அவரைச் சந்திக்க விருப்பமாக இருக்கிறேன். இந்த உறவு எப்படி இருக்கும் என்று இப்போதே கூறிவிட முடியாது. டெல்லி சென்றபோது சில நிமிடங்கள்தான் அவருடன் பேசினேன். இணக்கமாகவே இருந்ததாக உணர்ந்தேன். பெரும்பான்மை பலத்துடன் வெற்றிப்பெற்றுள்ள வலிமையான தலைவர் மோடி. அவருடன் சேர்ந்து நன்கு செயல்பட முடியும் என்று நம்புகிறேன்.

கே: இந்திய - இலங்கை உறவு இந்த ஆண்டு மாறியிருக்கிறதா? ஐ.நா. மனித உரிமை கவுன்சில் நியமித்த போர்க்குற்ற விசாரணைக் குழுவை அனுமதிப்பதில்லை என்ற உங்களுடைய முடிவை இந்திய அரசு ஆதரிக்கிறதே?

ப: தேர்தலுக்கு முன்பே அந்த மாற்றம் வந்துவிட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கவுன்சில் கூட்டத்தில் சர்வதேச விசாரணை தேவை என்ற தீர்மானத்தை ஆதரிப்பதில்லை என்று இந்தியா தீர்மானித்தபோதே அந்த மாற்றம் வந்துவிட்டது.

கே: ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கைத் தூதர் 19,471 பேரைக் காணவில்லை என்று புகார்கள் வந்திருப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார் அவர்களைக் கண்டுபிடிக்க உதவ ஐ.நா.வை அனுமதிக்கலாம் அல்லவா?

ப: காணாமல் போனவர்களுக்கு என்ன ஆயிற்று என்று முதலில் உள்நாட்டில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகிறோம். போரின்போது சிவிலியன்களும் ராணுவ வீரர்களும் காணாமல் போயிருக்கிறார்கள்.

இந்த ஐ.நா. மனித உரிமை (முன்னாள்) ஆணையரின் (நவநீதம் பிள்ளை) அறிக்கைகள் ஒருதலைப்பட்சமாகவே இருந்தன. அவரை இங்கே வருமாறு அழைத்தோம். எங்களிடம் ஒரு மாதிரியும் வெளியே வேறுமாதிரியும் பேசினார். நாங்கள் மறைப்பதற்கு ஏதுமில்லை. புதிய ஆணையர் வர விரும்பினால் அவருடைய கோரிக்கையை ஏற்பது குறித்துப் பரிசீலிப்போம்.

கே: மூதூர் படுகொலைகள், சேனல் - 4 வெளியிட்ட போர்க்குற்றங்கள் பற்றி விசாரித்து வருகிறோம் என்று உங்களுடைய அரசே கூறியிருக்கிறதே, நீங்கள் தடுத்தாலும் விசாரணைகள் தொடரும் என்று நவநீதம்பிள்ளை கூறியிருக்கிறாரே?

ப: நாங்கள் உள்ளூர் விசாரணைகள் குறித்துதான் பேசுகிறோம், இதை சர்வதேச விசாரணையாக்குவதை அனுமதிக்கமாட்டோம். காஷ்மீரில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிக்க வேண்டும் என்று நாளை கேட்டால், எங்களுடைய நிலை என்னவாக இருக்கும்? நாங்கள் ஆதரிப்போமோ - நிச்சயமாக மாட்டோம். இந்தியாவானாலும் இலங்கையானாலும் வெளிநாட்டவர்கள் விசாரிப்பதை ஒருநாளும் ஏற்கமாட்டோம். இதெல்லாம் அரசியல்.

கே: 2012, 2013 - ம் ஆண்டுகளில் நவநீதம் பிள்ளை பரிந்துரைத்த தீர்மானங்களை இந்தியா, ஆதரித்தது. அது உங்களை வருத்தப்பட வைத்ததா?

ப: இல்லை. அப்போது தேர்தல் நடக்கவிருந்ததால், வாக்களர்களை மனதில் வைத்து இந்தியா செயல்பட்டது. இந்தியாவுக்கும், இலங்கைக்குமான உறவு எப்போதும் வலுவானதாகவே இருக்கும். விடுதலைப் புலிகளை வீழ்த்திய விஷயத்தில் இந்தியா அளித்த ஆதரவையும், உதவியையும் நாங்கள் எப்போதும் மறக்க மாட்டோம்.

கே: விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் சுட்டுக்கொல்லப்பட்ட புகைப்படங்கள் வெளியிடப்பட்டு அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இலங்கைக்கு எதிராக மனித உரிமை கவுன்சிலில் இந்தியா முன்பு வாக்களிக்க அந்த புகைப்படங்களும் காரணமாக அமைந்ததாக கூறப்படுகிறது. பாலச்சந்திரனின் மரணம் தொடர்பாக உங்களுடைய விசாரணையில் தெரியவந்தது என்ன?

ப: இன்னமும் விசாரித்துக் கொண்டிருக்கிறோம். அதை ராணுவம் செய்ததாக நான் நினைக்கவில்லை. அது உண்மையாக இருந்தால், எனக்குத் தெரிந்திருக்கும். போரில் இரண்டு தரப்பும் துப்பாக்கிச் சண்டையில் ஈடுபடும்போது யார் சுட்டதில் இது நடந்திருக்கும் என்று எப்படி கூற முடியும்?

கே: இலங்கைக்கு மோடி வருவார் என்ற நம்பிக்கை இருக்கிறதா?

ப: ஆம், எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அவரை முதல்முறையாகச் சந்தித்தபோதே அழைப்பு விடுத்திருக்கிறேன். ஐ.நா. கூட்டத்தில் சந்தித்தாலும் இந்த ஆண்டின் பின்பகுதியில் சார்க் கூட்டத்தின்போது அவரைச் சந்தித்தாலும் நிச்சயம் அழைப்பு விடுப்பேன்.


கே: திரிகோணமலையில் உள்ள இலங்கை விமானப்படை தளத்தைப் பராமரிக்கும் பொறுப்பை "கேடிக்" என்ற சீன அமைப்பிடம் கொடுத்திருப்பது இந்தியாவுக்கு சற்றே கவலையாக இருக்கிறதே?

ப: இது ஒரு பிரச்சனையா என்ன? சீன நிறுவனங்கள் இந்தியாவில் இல்லவே இல்லையா? தென்னிந்தியாவில் இல்லையா? இலங்கையில் சீனா இருப்பது குறித்து இந்தியா கவலைப்படவே வேண்டாம் - அதுவும் நான் அதிபராக இருக்கும்வரை.

கே. இலங்கை நாடாளுமன்ற பொதுத் தேர்தலை விரைவில் நடத்திட நீங்கள் உத்தேசித்திருப்பதாகச் செய்திகள் வருகின்றன. அதுவும் 2015 ஜனவரியில்?

ப: நடத்தப்படலாம், நான் மறுக்கவில்லை.

யாழ் தேவி வந்தபோது...



ஸ்ரீதரன்

யாழ்தேவி பரீட்சார்த்தமாக யாழ் வந்தபோது புகையிரத - நீராவி யந்திரத்தை கண்டு பிடித்த - ஜோர்ஜ் ஸ்ரீபன்சனுக்கு ஏற்பட்ட அனுபவம் இங்கும் கிட்டத்தட்ட 3 நூற்றாண்டுகளுக்குப் பின்னர் ஏற்பட்டது. ரயிலில் எதேச்சையாக மாடு ஒன்று அடிபட்டிறந்தது. ரயிலை வேடிக்கை பார்க்க தந்தையுடன் வந்த சிறுவனைப் பாம்பு தீண்டியது. இந்த சம்பவங்கள் துரதிஸ்டமானவை. ஆனால் இவையெல்லாம் நாசமாய்ப்போன சைத்தான் ரயிலால் வந்த வினை என்றும் சில யாழ்ப்பாணத்து ஊடகங்கள் பிரச்சாரம் செய்தன. அறிவைப்பாருங்கள்!

இடம்பெயர்ந்த பெண்ணொருவர் கடந்த கால் நூற்றாண்டுகளாக சொந்த ஊர்திரும்பமுடியவில்லை. அதற்குள் ரயில் வேறயா என்று ரயிலைச் சபிக்குமாப் போல் பேட்டி வேறு. இருவேறு விடயங்களுக்கிடையே முடிச்சு. இந்தப் பத்திரிகை உரிமையாளர்களில் ஒருவர் அமெரிக்கா கனடா லண்டன் என பறந்து திரிபவர். தமது வியாபார விடயமாக அரசின் அமைச்சர்கள் அதிகாரிகளை சந்திக்கத் தவறுவதில்லை. ஆனால் பாழாய்ப்போன சனத்தின்ர தேவைக்கு ரயில் வரக் கூடாது. அது வரும்போது எரிச்சல் வருகிறது.

எப்போதும் சமூகத்திற்கு 'மூளி அலங்காரப்பந்தல்' கட்டுவதிலேயே இந்தப் பேர்வழிகள் குறியாக இருக்கிறார்கள். இங்கு மக்கள் பாமரராய் வாழவேண்டும். துன்பத்துடன் வாழவேண்டும். தவறியும் முன்னேறி விடக்கூடாது. வாழ்க்கை கொஞ்சமும் இலகுவாகிவிடக்கூடாது பாருங்கள்.

ஸ்ரீபன்சன் -புகையிரத நீராவி யந்திரத்தை கண்டு பிடித்து இயக்கியபோது சைத்தான் ஒன்றை மந்திரித்து விட்டிருப்பதாக அறிவிலிகளால் வதந்தி பரப்பப்பட்டது.

சமூகத்தை உருப்படவிடாத குட்டிச்சுவராக்கும் இந்த அரசியலை என்னவென்பது? பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள், நோயாளிகளுக்கு ரயில் ஒரு வரப்பிரசாதம். தூரப்பிரயாணங்களில் மலசல கூடம் செல்ல முடியாமல் சுகாதாரமான உணவை உட்கொள்ளமுடியாமல் அன்றாடம் படும் அவலம் யாருக்கும் தெரியாததா? காலாற நடக்கலாம். சற்று எழுந்து நிற்கலாம்.

தண்டவாளம் - ரயில் - 50 ஆயிரம் வீடு என முழுமூச்சாக எமது அண்டை நாடு இந்தியா உதவிகளைப்புரிய முனைந்தாலும் எமது ஆட்களின் நையாண்டிகளும் - நக்கலும் - புரளிகளும் சகிக்கமுடியாதவையாக இருக்கின்றன.

எமது பரோபகாரத்தை நினைத்துப்பாருங்கள். அண்டைக்கிராமத்திற்கு குடிநீர் கொடுப்பதையே அரசியலாக்கியிருக்கிறோம். இந்த லட்சணத்தில் வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமை, பாரம்பரிய பிரதேசம், ஈழம் பற்றிய ஆலாபரணம் வேறு. எந்த நல்லகாரியத்திற்கு தான் நாம் உடன்பட்டோம்? அரசியல் தீர்வாயினும் சரி மக்களின் அன்றாட ஜீவாதார நலன்களாயினும் சரி...


WHO WANTS TO BE AN INSURANCE AGENT?
Become an Insurance Advisor
We provide you with Exceptional Service
• Life Licensing Qualification program
• Free Seminars and workshops for career development
• Free product and sales training
• Providing best advice and knowledge in the field of financial industry
• Competitive compensation packages
• Ongoing training and support
• Mentoring and motivational support by professionals
உயர் கல்வியே உங்கள் குழந்தைகளுக்கு நீங்கள் வழங்கும் அதிஉன்னத கொடை
RESP
• கனடிய அரசினால் வழங்கப்படும் மானியம் 20% - 40%
• காப்புறுதி நிறுவனம் வழங்கும் விசேட சலுகை 15%
• கனடிய கல்வி மானியமாக வருடம் 500 டொலர்
• இவை அனைத்தையும் பெறுவதற்கு
RESP திட்டத்தை இன்றே ஆரம்பியுங்கள்
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND
IF VISA DENIED
கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி
நோய் ஏற்படாதுவிட்டால் கட்டிய பணம் முழுவதையும் மீளப்பெறுங்கள்.
வயோதிபர்களுக்கான காப்புறுதி
• மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை • உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
• வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால்
இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்
- digi Media -
Life100
INSURANCE & INVESTMENTS INC.
சிறீதரன் துரைராஜா
CLU, CHS
LIFE INSURANCE • CRITICAL ILLNESS
GROUP INSURANCE • HEALTH & DENTAL
MORTGAGE INSURANCE • RRSP • RESP
MDRT
Member of Million Dollar Round Table
Direct: 416.918.9771
Business: 416.321.2500
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca
Are you getting Million Dollar advice?

இப்பொழுது நடந்தேறுவது ஒருவகையிலே

கலிகால அரசியல்தான்!

இலங்கையில் தேசிய இனங்கள் ஐக்கியமாகச் சுயநிர்ணய உரிமையுடன் வாழ்வதற்கு ஏற்றஅரசியல் முறைமை ஒன்றை உருவாக்குவது அவ்வளவு இலேசான ஒரு காரியமல்ல. இதனை இன்றைய ஐ.நா. யுத்த விசாரணை முனைப்புகள், சர்வதேச அரசியல் சக்திகளின் கருத்துப் பரிவர்த்தனைகள், இலங்கை அரசாங்கத்தின் இன்றைய "ஆட்டஓட்டங்களின் மத்திலான இனவாத மதவாத முனைப்புகளின் மத்தியில் எல்லாம் எந்த வகையிலுமே உடன்பாடுகளைக் காணமுடியாது என்ற உணர்வுதான் சகலமட்டங்களிலும் தொனிக்கின்றது. மொத்தத்தில் இலங்கையிலே இனவாதமதவாத உணர்வுகள் முத்திப்போய்விட்டது.!

கடந்த முப்பது ஆண்டுகாலக் கோரயுத்ததங்கள், இன ஒழிப்பையே மிச்சசொச்சமாக விட்ட அழிவுகள் எல்லாம் ஆயுதப்போராட்டத்திற்கு முற்றுப்புள்ளி வைத்த பின்னர் கூட இலங்கையில் தேசிய அரசியலில் என்ன நடக்கிறது?

மீண்டும் பழையபாணியில் கட்சியரசியல், தலைமைச் சக்திகளின் முரண்பாடுகள், உரிமைகள், உடமைகள், உணர்வுகள் என்ற வரிசையில் சகலதையும் இழந்த மக்களின் ஏக்கங்கள், ஒற்றுமைக்கே இடமளிக்காத உட்கட்சிப்பூசல்கள் ஆகியனதான் இப்பொழுது மிச்சசொச்சமாகியுள்ளது.

தேசிய அரசியலில் அராஜகப்போக்குகளும் ஒடுக்குமுறைகளும் சகல மட்டங்களிலிலும் பல்வேறு வடிவங்களில் வேரூன்றிவிட்டது. தென்னிலங்கை அரசியலில் மட்டுமல்ல மூன்று தசாப்தகால யுத்தம் ஆட்ட ஓட்டங்களின் பின்னர் கூட இன்று தெளிவில்லாத நிலையில் அரசியல் தலைமைகள் பழைய பாணியில் தலைமைகள் என்ற பெயரோடுதான் தோன்றித்தனமாக மூக்கை நுழைக்கும் போக்குகள் தான் தென்படுகின்றன.

விடுதலைப் போராட்டம் இப்பொழுது சகல கோணங்களிலும் தூர்ந்துபோயுள்ளது. கொள்கைகளில், இலட்சியங்கள், நடைமுறைகள் எல்லாம் "தமிழ்கூறும் நல்லுலகத்தின் எதிர்பார்ப்புகள்" யாவற்றையும் சிதைந்து போகவிட்டது மட்டுமல்ல, சலக மட்டங்களிலும் ஏமாற்றங்களையே மிஞ்சவைத்துள்ளது.

உறுதியோடு தலைமைச் சக்தியாக நிமிர்ந்து நின்று பேசும் ஆற்றலில்லாத தலைவர்கள் தலைமை என்ற தலைப்பாகையோடு சொல்வதையும், செய்தையும் பார்த்து அதையெல்லாம் சீரணிக்க வேண்டியது கையறு நிலைக்குத் தமிழினம் தள்ளப்பட்டுள்ளது.

மனிதநேயம் கொண்ட அனைவருக்கும் "கொலை" என்பது வேதனைதரும் விடயம். நடைபெற்று முடிந்த, இனப்படுகொலைகள், கற்பனை செய்துபார்க்க முடியாத ஒரு "சுனாமி" யிலும் மோசமானது என்பதை சிங்கள அரசியல் தலைமைகள் சிந்திக்க முற்படுவதாகத் தெரியவில்லை.

இனப்பிரச்சினை பேச்சுவார்த்தைகள், சகல இன மக்களுக்கும் சமபிரதிநிதித்துவம், என்ற கதைகள் எல்லாம் தேசிய அரசியலில் மட்டுமல்ல சர்வதேச அரசியலிலும் இல்லாமல் போய்விட்டது.

எல்லாமே சந்தர்ப்பவாத அரசியலாகிக் கொண்டிருக்கின்றது. என்ன செய்வது தேசிய அரசியல் குடும்ப அரசியலாகிவிட்டது. இலங்கையில் அடுத்த தேர்தலுக்கான காங்கணங்களும், வாக்குவங்கியைத் தக்கவைப்பது எப்படி என்ற அலசல்களும் நடைபெறுகின்றன. இலங்கை அரசியலில் ஜனநாயகம் செத்துப்போய் சகல மூலை முடுக்குகளிலும் இராணுவம் குடிகுத்திவிட்டது. இராணுவ முனைப்புகள் முடிந்த வகையிலும் நாட்டு மக்களைச் சுதந்திரமாக மூச்சுவிட முடியாத கட்டத்திற்குத் தள்ளிவிட்டது.

அடுத்துவரும் காலங்களில் ஐக்கிய தேசியக் கட்சி உருவாக்கிய ஜனாதிபதியின் வரம்பு மீறிய அதிகாரத்துடனான சர்வாதிகார ஆட்சி, இராணுவ ஆட்சியாகப் போய் முடியப்போகின்றதா என்ற உணர்வு மக்கள் மட்டத்தில் மட்டும் அல்ல அரசியல் தலைமைகளையே அங்காலாய்க்க வைக்கிறது.

மாதொருபாகன்

இலங்கைத் தேசியத்தையே அழிக்கும் வகையில் பௌத்த சிங்கள நாடாகப் பிரகடனப்படுத்தி, மக்களின் குரல்களையே வேரோடு சாய்த்த அரசியல் தலைமைகள் இப்பொழுது குடும்ப அரசியலின் மத்தியில் அங்கலாய்ப்புகளுடன் காலம் தள்ளுகின்றன. சகலகாரியங்களிலும் ஊழல்களே மலிந்துவிட்டன!

ஜனாதிபதி பதவியில் இருந்து 'ஜே.ஆர்' விட்டகுறை தொட்டகுறைகளை எல்லாம் தொடர்ந்து அதிகார மமதையோடு செயற்பட்ட ஜனாதிபதிசந்திரிகா, சமாதானத்தை உருவாக்குவதற்கு கிடைத்த வாய்ப்புக்களையெல்லாம் இனவாதக் கூட்டங்களின் மத்தியில் குடிமுழுகிப் போகவிட்டுச் சகலதையும் இழந்தமை வரலாறாகிவிட்டது.

"போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என்று குரல் எழுப்பிய ஜே.ஆரின் ஜனாதிபதி ஆட்சிமுறையை மாற்றுவேன் என்று குரல் எழுப்பிய ஜனாதிபதி சந்திரிகா அதிகாரவலுவின் ருசியைக் கண்டபின் ஆடாத ஆட்டம் எல்லாம் ஆடி தனது குடும்ப அரசியலையே போட்டுடைத்தார்.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மகிந்தாவும் குடும்ப அரசியலுடனும் அதிகார மமதையுடனும் இனவாத வேகங்களுடன் கிடைத்த வாய்ப்புகளை சரிவரப் பயன்படுத்தாமல் வீழ்ச்சிப்பாதையில் நாட்டாண்மைத் தனங்களுடன் சஞ்சாரம் செய்கின்றார்.

இப்பொழுது பொதுபலசேனா பௌத்த மகாநாடு ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது,அரசாங்கத்திற் குதமிழ் முஸ்லிம் மக்களிடமிருந்து ஒருபோதும் வாக்குகளைப் பெறமுடியாது! செல்வாக்குகள் சகல கோணங்கிலும் சரிந்துபோகின்றது என்பதை உணர்ந்தநிலையில் சிங்கள மக்களின் வாக்குகளை ஒரு சேரப் பெறுவதற்கான முயற்சிகள் தான் இவை.

ஞனசாரதேரர் முதல் பலரும் சிங்கள இனத்தின் எழுச்சி என்ற குரலை எழுப்பி விடுகின்றனர். யுத்தத்தின் வெற்றி என்ற குரலோடு சிங்கள மக்களை வென்றெடுக்க முடியாது! எனவே இன மத பேதங்களைத் தட்டிவிட்டு ஆட்சியைத் தக்கவைக்கலாம் என்ற எண்ணக் கருவோடுதான் அரசாங்கத்தின் நடவடிக்கைகளைத் தொடருகின்றது.

இன மத வெறிகளைத தட்டிவிட்டபடி ராஜபக்ஷ நவீன ஹிட்லராக மூச்சுவிட முற்படுகின்றமை எதிர்காலத்திலும் இலங்கை தேசிய அரசியலில் சர்வ நாசங்களையே எதிர்நோக்கப் போகின்றது. உண்மைகளை வெளிக் கொண்டுவரமுடியாத வகையில் சகலகோணங்களிலும் அரசியல் தலைவர்கள் சுயநலங்களுடன் செயற்படுகின்றனர். இலங்கையில் ஜனநாயகமும் இல்லை. சுதந்திரமான நீதித்துறையும் இல்லை. அளவுக்கு அதிகமான இராணுவக் குவிப்பின் காரணமாக வடகிழக்குப் பிரதேச மக்கள் நிரந்தர அமைதியீனத்துடன் காலத்தைக் கடத்துகின்றார்கள். நாடே மொத்தத்தில் அபிவிருத்தி என்ற அங்கலாய்ப்புகளின் மத்தியில் பணவீக்கம், விலைவாசி அதிகரிப்புகள் எனஎல்லாமே இலங்கை அரசியலை ஆட வைக்கின்றது.

இலங்கையில் பயங்கரவாதம் என்ற கோஷங்களின் மத்தியில் தனிநபர் பயங்கரவாதம் சகல கோணங்களிலும் மேலோங்கியுள்ளது. எந்தவகையிலும் சமரசங்களை உருவாக்க முடியாது. அரசியல் தலைமைகள் எல்லாம் தேசத்தின் ஒற்றுமை கருதிச் செயற்பட முடியாத கட்டத்திற்கு வந்துள்ளமை துரதிஷ்ட வசமானது. சிங்கள அரசியல் தலைமைகள் குழம்பிய கோணத்திலும் தமிழ் முஸ்லிம் தலைமைகள் எந்தநிலையிலும் அடிப்படை ஒற்றுமைகாண முடியாதும் தேர்தல் களங்களை எதிர்நோக்கி அல்லாடுவதுதான் இன்றைய அரசியல் யாதார்த்தம்.

இந்திய அரசியலில் திடீரென தமிழக முதல்வர் ஜெயலலிதா கடந்தகால அரசியல் நடத்தைகளின் பின்னணியில் பதவி விலக்கப்பட்டமை தண்டனை பெற்றமை எல்லாம் இந்திய அரசியல் களத்தில் பல்வேறு நெருக்கடிகளின் மத்தியில் ஊழல், அராஜகம், ஜனநாயக அடிப்படையில் நீதித்துறையின் சுதந்திர செயற்பாடு எனஎல்லாமே மக்கள் மனங்களை அங்கலாய்க்க வைக்கின்றது.

தமிழகத்தில் முதலமைச்சருக்கு எதிராக நீதித்துறை செயற்பட்டுள்ளது என்பதை மட்டும் கொண்டு சுதந்திர நீதிஎல்லாம் நிரம்பிய ஜனநாயகம் இந்தியாவில் நிமிர்ந்து நடக்கின்றது என அங்கலாய்க்க முடியாது. இலங்கையுடன் ஒப்பிடும்போது பரவாயில்லை என்று சலனப்படலாம்.

இன்று உலக அரசியலே போராட்டங்களின் மத்தியில் வெறுமனே கோட்பாடு நடைமுறைகள் என்ற அட்டகாசங்களோடு பரியநாடகங்களைச் செய்கின்றது. எந்தவகையில் பார்தாலும் மோடியின் அரசியலிலும் அதே கதைகள் தான். இதற்கு ஒருபடி மேலாக சோனியா வரிசை அரசியல் பின்னணிகளிலும் அப்படி எத்தனையோ விடயங்கள் மக்கள் மனங்களில் முணுமுணுப்புகளை ஏற்படுத்துகின்றன.

சர்வதேச அரங்கையும் அருகேயுள்ள இந்திய அரசியலையும் அவதானித்தபடி இலங்கையில் நடந்தேறும் இனவாதமதவாத கூத்துக்கள், ஊழல்கள், அரசியல் நாடகங்களை எல்லாம் அலசிப்பார்த்தால் எல்லாமே குத்தாட்டங்கள் தான் என்ற படிமாறாட்டங்களின் மத்தியில் சீவிப்பதுதான் மிச்சசொச்சமாகின்றது. மனிதாபிமானம், மனித உரிமைகள் என்ற வரிசையில் எல்லாமே தவறாக நடக்க ஆரம்பித்துள்ள நிலைமையில் இது ஒரு கலிகால அரசியல் என்று அமையடைவதுதான் செய்யக்கூடியது.

ஒரு நாட்டின் வரலாறு கூட அதன் எழுச்சி வளர்ச்சி வீழ்ச்சி எல்லாம் மகத்தான எதிர்காலங்கள் பற்றிய பிரச்சினைதான்.

எதிர்காலத்தின் தலைவிதி யார் கையில் என்பதை நினைத்துப் பார்க்க முடியாத நிலையில் மக்கள் வாழ்க்கை ஓடிக்கொண்டிருக்கின்றது! கீழதுமேலாகவும் மேலதுகீழாகவும் நடைபெறும் போராட்டங்களும், மாறாட்டங்களும் தான் அரசியலைமட்டும் அல்ல எதிர்காலத்தையே நிர்ணயிக்கின்றது.

அடுத்து எங்கே போகின்றோம் என்பது யாருக்குமே தெரியாது.

கைதி எண்

ஜெயலலிதா சொத்துக் குவிப்பு வழக்கைப்பற்றி தமிழகத்தின் ஊடகங்கள் பல்வேறு கோணங்களில் செய்திகளை வெளியிட்டுவிட்டன. நம் பார்வை 1990களின் தொடக்கத்தில் பீஷ்ம நாராயண் சிங் என்பவர் தமிழக ஆளுநராக இருந்தபோதிருந்து தொடங்குகிறது. இந்தியப் பிரதமராக நரசிம்மராவ் இருந்த காலத்தில் அவரால் தமிழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டவர் என்றபோதிலும், மாநில அரசின் செல்லப் பிள்ளையாகவே இருந்தார் என்பது ஊரறிந்த ரகசியமாக இருந்தது. அவரிடம் போய் ஜெயலலிதாமீது ஊழல் வழக்குத் தொடுக்க அனுமதி கேட்டது தி.மு.க! கொடுப்பாரா?



அந்த நேரத்தில்தான் இப்போது நடந்துமுடிந்து ஜெயலலிதாவை சிறைக்கு அனுப்பியிருக்கும் வழக்குக்கான "ஊழ்வினை"யின் தொடக்கம் ஜெயலலிதாவின் வாயிலிருந்தே தொடங்குகிறது.

காங்கிரசோடு மோதல்போக்கை கடைப்பிடித்த அவர், தான் ஒரு முதலமைச்சர் என்பதையும் மறந்து, "தமிழகத்தில் நடக்கும் நெடுஞ்சாலைக் கொள்ளைகளுக்கு பிரதமர்தான் காரணம். அவர்தாம் கொள்ளையர்களை தமிழ்நாட்டுக்கு அனுப்பிவைத்து கொள்ளையடிக்க வைத்து என் ஆட்சிக்குக் கெட்டபெயர் ஏற்படுத்துகிறார். பிடிபட்ட எல்லாக் கொள்ளையர்களும் தெலுகு பேசுகிறார்கள்" என்று நாப் பிறழாமல் சட்டசபையிலேயே கூறிய போது சனீஸ்வரன் சிரிக்கத் தொடங்கினான்.



கோபமுற்ற நரசிம்மராவ் ஆளுநர் பீஷ்ம நாராயண் சிங்கை திரும்ப அழைத்துக் கொண்டு, சென்னா ரெட்டியை தமிழக ஆளுனராக்கினார். இது 1993 மே 31ல்! சென்னாரெட்டிக்கும் ஜெயலலிதாவுக்கும் தொடர்மோதல்கள் நிகழ்ந்தன. "என்னிடம் ஆளுநர் தகாத முறையில் நடந்துகொண்டார்" என்றது முதல்வரின் நா. இப்போது சனீஸ்வரனின் சிரிப்பு எதிரொலிக்கத் தொடங்கியது. சென்னாரெட்டியின் புகைப்படம் போட்ட அரசு நாட்குறிப்புகள் குப்பையில் வீசப்பட்ட சம்பவம் சென்னாரெட்டிக்கு இனித்திருக்குமா என்ன? எரிவாயு வெடித்த இடத்தை பெட்ரோல் ஊற்றி அணைக்க முற்பட்ட கதையாகிவிட்டது.

சென்னையிலிருந்து
சதாசிவம் தாண்டவன்

இப்போது காட்சிக்குள் வருகிறது விதி! சுப்ரமணிய சுவாமி வடிவில்! அவருடன் ஜனதாக் கட்சியின் செயலாளராக கை கோர்க்கிறார் 1992இல் ஸ்பிக் பங்கு பேர ஊழலுக்கு துணை நிற்காததால் ஆசிட் வீச்சுக்கு ஆளான ஐஏஎஸ் அதிகாரி சந்திரலேகா. ஜெயலலிதாவுக்கு எதிராக தன்னை எதிர்க்க நினைக்கும் சுப்ரமணியசாமியை ஊர் ஊராக விரட்டியடித்தார் ஜெயலலிதா. காவல்துறை அவரைக் கைது செய்ய அலைய, கட்சித் தொண்டர்கள் அவரைத் தாக்க முற்பட்டனர். சென்னை பாண்டிபஜாரில் சுவாமி பேசிய ஜனதாக் கட்சிப் பொதுக்கூட்டத்துக்கு வந்த அதிமுக மகளிர் அணியினர் அவருக்கு புடைவையைத் தூக்கிக் காட்டினர். இப்போது சனியனே இறங்கி வந்து போயஸ் தோட்டத்து வாசலில் உட்கார்ந்தான். அந்த நேரத்தில் ஜெயலலிதாமீது ஊழல் வழக்கு பதிய சென்னாரெட்டியிடம் போய் நின்றார் சுப்பிரமணியசுவாமி.



1995, ஏப்ரல் 1ஆம் தேதி. சுவாமிக்கு வழக்குத் தொடுக்க அனுமதி அளித்து கையெழுத்திடுகிறார் ரெட்டி. "முட்டாள்கள் தினத்தில் முட்டாள்களின் முயற்சி" என்று ஜெயலலிதா நினைத்திருக்கக்கூடும். ஆனால் சகுனியின் சதியா அல்லது சாணக்கியனின் தந்திரமா என்று இனம்பிரிக்கமுடியாத "திரைமறைவு" அரசியல்வாதியாக இருந்த சுவாமி கங்கணம் கட்டிக் கொண்டு களத்தில் இறங்கினார். தேடித் தேடி ஆதாரம் சேர்த்தார்.

ஜூன் 14, 1996. சுப்ரமணியன் சுவாமி ஜெயலலிதா மீது சொத்துக் குவிப்பு வழக்கைத் தொடர்கிறார். தமிழக முதல்வர் ஜெயலலிதா 1991-1996 காலகட்டத்தில் அவரது வருமானத்துக்கு மீறி, சுமார் 66.65 கோடி மதிப்புள்ள சொத்துகளைக் குவித்தார் என்று குற்றம் முன்வைக்கப்பட்டது. அவரது தோழி சசிகலாவும், சசிகலாவின் உறவினர்கள் இளவரசி மற்றும் சுதாகரனும் குற்றச்சாட்டுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

செப்டம்பர் 18இல் விசாரணை அதிகாரி நல்லமநாயுடு முதல் தகவல் அறிக்கையைப் பதிவுசெய்தார்.

ஆனால் சளைக்கவில்லை ஜெயலலிதா. பணமும் அதிகாரமும் இருந்தால் எதையும் செய்துவிடலாமென்று அவருக்கு ஆலோசனை வழங்கியவர் யாரென்று அவருக்கே வெளிச்சம். அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்று நல்லபுத்தி சொல்கிறவர்களை அவர் பொருட்படுத்தவேயில்லை. ஊழிற்பெருவலி யாவுள சொல்லுங்கள்? நீதித் துறையை அலைக்கழிக்க ஆரம்பித்தார் அம்மையார்.

குற்றம் சாட்டப்பட்டவரே தமிழக முதலமைச்சராக இருப்பதால் நீதி வழுவக்கூடும் என்று திமுக பொதுச் செயலாளர் அன்பழகன் பெயரில் ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. நீதிமன்றத்தை வேறு மாநிலத்துக்கு மாற்றவேண்டும் என்பது கோரிக்கை. அது ஏற்கப்பட்டு கர்நாடக மாநிலம் பெங்களூருவுக்கு வழக்கு 2003ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது. அது காங்கிரஸ் ஆளும் மாநிலம்.

ஆண்டுகள் பறந்தன. ஒன்றல்ல இரண்டல்ல...18 ஆண்டுகள்! வாய்தா வாய்தா வாய்தா என்று வழக்கறிஞர்களையும் நீதிபதிகளையும் வாய்விட்டுக் கதற வைப்பதன்மூலம்

ஜெயலலிதா பற்றிய

- இயற்பெயர் கோமளவல்லி. செல்லப்பெயர் அம்மு.
- தமிழ் திரைப்படங்களில் முதன்முதல் குட்டைப் பாவாடை (Skirt) அணிந்து நடித்த நடிகை
- 1948ல் மைசூரில் பிராமணக் குடும்பத்தில் தந்தையின் இரண்டாம் தாரத்தின் பிள்ளையாகப் பிறந்தார். அவரின் 2 வயதிலேயே தந்தையைப் பறிகொடுத்தார்.
- முன்னாள் இந்திய ஜனாதிபதி Dr. V.V. கிரியின் மகள் சங்கர் கிரி தயாரித்த Epistle என்ற ஆங்கிலப் படத்தில் 1961ம் ஆண்டு நடித்தார்
- முதல் தமிழ்ப்படம் வெண்ணிற ஆடை - 1965
- எம்.ஜி.ஆர். உடன் நடித்த படங்கள் 28
- சிவாஜியுடன் நடித்த பட்டிக்காடா பட்டணமா 1973ல் தேசிய விருது பெற்றது.
- இறுதியாக நடித்த படம் நதியைத் தேடிவந்த கடல் 1980
- 1982ல் அஇஅதிமுக வில் இணைந்த ஜெயா 1984ல் எம்ஜிஆர் இற்கு பாரிசவாதம் ஏற்பட்டபோது முதலமைச்சர் பதவியை தனதாக்க முயற்சித்ததாகவும் அதனால் எம்ஜிஆர் ஆத்திரமுற்றதாகவும் சொல்லப்படுகிறது.
- தமிழ் நாட்டில் 1989 இல் முதலாவது பெண் எதிர்க்கட்சித் தலைவியானார்.

வில்லங்க

கடைசியா அம்மாவைப் பார்ப்பன
அக்கிரகாரத்திலேயே கொண்டுபோய்க்
குடியிருத்திப் போட்டாங்கள்! எண்டாலும்
பின்னால பிலாப்பழத்தோட நிற்கிற
கலைஞர் குடும்பத்தை நினைச்சு
அம்மா இந்த அன்னாசிப் பழத்தைக்கூட
சிரிச்சுக்கொண்டே முழுசா விழுங்கியிருப்பா
கண்டியளோ!

: 7402

சுவாரசியமான உண்மைகள்

- இப்போது அவருக்கு சிறைத்தண்டனை வழங்கிய இந்த வழக்கு ஆரம்பித்தபோது இனித் தான் நகைகள் எதையும் அணியப்போவதில்லை என்று கங்கல்பம் பூண்டார். எனினும் 2011ல் மீண்டும் பதவிக்கு வந்ததும் திரும்பவும் அணிய ஆரம்பித்தார்.

- இவ் வழக்கில் ஜெயலலிதா வீட்டில் நடத்திய தேடுதலில் கைப்பற்றப்பட்ட பொருட்கள்: 750 காலணிகள், 800 கிலோ வெள்ளி, 28 கிலோ தங்கம், 10,500 சேலைகள், 91 கைக்கடிகாரங்கள், 44 ஏசிக்கள்


- ஜெயலலிதாவுக்கும் தோழி சசிகலாவுக்குமான 30 வருட உறவு இதுவரை புதிரானது. எனினும் இது இறுதியில் கசந்தது.

- ஜெயாவுக்கு சோபன் பாபு என்ற நடிகருடன் இருந்த உறவு காரணமாகப் பெண் குழந்தையொன்று பிறந்ததாகச் சொல்லப்படுகிறது.

- தற்போது ஜெயாவுடன் சேர்த்து தண்டனை வழங்கப்பட்டிருக்கும் சுதாகரனுக்கு தனது தத்துப்பிள்ளை என்ற பெயரில் ஜெயா நடத்திவைத்த திருமண நிகழ்வே கின்னஸ் புத்தகத்தில் இன்றுவரை உலகின் மிகப்பெரும் திருமண நிகழ்வாகும்

- 1992ல் மகாமாங்கம் உற்சவத்தில் குளிக்கச் சென்ற ஜெயாவைப் பார்க்க முண்டியடித்த மக்கள் கூட்டத்தில் 50பேர் கொல்லப்பட்டனர்.

லிங்கத்தார்..



நீதியை தாமதப்படுத்தும் தடைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. இந்திய நீதிமன்ற வரலாற்றில் யாருமே இந்த அளவுக்கு வாய்தா வாங்கியதில்லை என்று கூறும் அளவுக்கு தன் மீதான சொத்துக் குவிப்பு வழக்கில் 150க்கும் மேற்பட்ட வாய்தாக்களை வாங்கிக் குவித்தார் முதல்வர் ஜெயலிதா. (இதில் நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் பட்டபாடு தனிக்கதையாக நீளும்!)

அக்டோபர் 2013. வழக்கின் திசை மாறுகிறது. ஜான் மைக்கேல் குன்ஹா சிறப்பு நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்படுகிறார். ஆனால் பத்தோடு பதினொன்றாக இந்த நிகழ்வையும் அணுக நினைக்கிறார் ஜெயலலிதா.

ஆனால் தாம் பதவியேற்ற ஓராண்டு நிறைவுக்குள் ...இதோ....செப்டம்பர் 27இல் ஜெயலலிதா குற்றவாளி என்று அறிவிக்கிறார் குன்ஹா!

இதற்குமுன் பிறந்தநாள் பரிசு வழக்குக் டான்சி வழக்குக் வண்ணத்தொலைக்காட்சிப்பெட்டி ஊழல் வழக்குக் கொடைக்கானல் பிளசன்ட் ஸ்டே ஹோட்டல் வழக்குக் நிலக்கரி ஊழல் வழக்குக் ஸ்பிக் ஊழல் திராட்சைத் தோட்ட வழக்குக் தெற்காசிய விளையாட்டுப்போட்டி ஊழல் சொத்துவரி வழக்குக் வருமானவரி வழக்குக் லண்டன் ஹோட்டல் வழக்கு என்று தன்மீதான 12 வழக்குகளையும் தாண்டிக் குதித்துவந்த அசுரபலம் பொருந்திய ஆனைக்கு அன்று அடிசறுக்கியது......

முழுத்தீர்ப்பு அறிவிக்கப்படும்முன்பே ஜெயலலிதாவின் காரிலிருந்த இந்திய தேசியக்கொடி நீக்கப்படுகிறது. இனி அவர் முதல் அமைச்சர் அல்ல என்று இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. பிறகு வாசிக்கப்பட்ட தீர்ப்பில், குற்றவாளியாக முடிவுசெய்யப்பட்டுள்ள ஜெயலலிதாவுக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 100கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்படுகிறது. மற்ற குற்றவாளிகளான சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு தலா 4 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், தலா 10 கோடி ரூபாய் அபராதமும் விதிக்கப்படுகிறது. "இவர்கள் நான்கு பேரையும் கர்நாடக காவல்துறை கைது செய்து சிறையில் அடைக்கவேண்டும்" என உத்தரவிடுகிறார் நீதிபதி.



இதற்கிடையே ஜெயலலிதா இருமுறை மயங்கி விழுந்ததாகச் சொல்லப்பட்டது. தனக்கு உடல்நிலை சரியில்லை என்று தனியார் மருத்துவமனைக்குச் செல்ல அனுமதி கேட்க, ஆனால் அவரை பரிசோதித்த சிறை மருத்துவர் "எந்த உடல்நலக் குறையுமில்லை. தேவைப்பட்டால் சிறை மருத்துவமனையில் பார்த்துக் கொள்ளலாம்" என்று மறுத்துவிட்ட செய்தியும் வெளியில் கசிந்தன.

தன் உடன்பிறவா தோழி என்று கும்பகோணம் மகாமகக் குளத்தில் ஒன்றாகக் குளித்து மகிழ்ந்து - பிறகு அவருக்கும் எனக்கும் துளியும் சம்பந்தமில்லை என்று வீட்டைவிட்டு ஜெயலலிதாவால் அனுப்பப்பட்ட சசிகலாவும் தன் வளர்ப்பு மகன் என்று நாடே திகைக்குமளவுக்கு ஆடம்பரத் திருமணம் நடத்தி அழகு பார்த்து - பிறகு கஞ்சா வைத்திருந்ததாகச் சொல்லி ஜெயலலிதாவால் சிறையில் பூட்டப்பட்ட சுதாகரனும் அவர்களின் உறவினர் என்பதைத் தவிர பெரிய அளவில் வெளியே தெரியாத இளவரசியும் ஒன்று சேர கர்நாடக பரப்பன அக்ரகாரச் சிறைச்சாலைக்கு கூட்டிச் செல்லப்பட்டார் ஜெயலலிதா. அங்கு அவருக்கு



கைதிக்கான 7402 என்கிற எண் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது!

இந்தியாவை ஆட்சி செய்த காங்கிரசையும் அதன் தலைவர் சோனியாவையும் ஜெயலலிதா மோசமாக விமர்சிக்கத் தொடங்கிய காலங்களாக இது அமைந்ததையும், பிறகு ஆட்சிக்கு வந்த பாரதிய ஜனதாக் கட்சியையும் அவர் கோபமூட்டி விலகச் செய்த தருணங்களையும் என்னென்று சொல்ல? கூடவே அணைத்துச் சென்று கம்யூனிஸ்ட்டுகளின் உறவுக்கான குரல்வளையை நெறித்ததை யாரும் இன்னும் மறந்துவிடவில்லை.

இப்போது ஜெயலலிதாவுக்கு ஆதரவாக சரத்குமாரின் குரல் மட்டுமே ஈனஸ்வரத்தில் கேட்கிறது. ராதிகாவைத் தவிர வேறு ஒரு வாக்குக்கூட கிடைக்க வாய்ப்பு இல்லாத அந்த பம்மல் குரலால் அம்மையாருக்கு ஆவதென்ன?!!

நேற்று தனது டிவிட்டரில் "துது அதாவது துயுஜடு குமுசு துயுலுயுடுயுடுஜவுடயு" என்று களிக் கூத்தாடியிருக்கிறார் சுப்பிரமணியன் சுவாமி. மேலும் அவர் குறிப்பிடுகையில், "கடந்த 1996ம் ஆண்டில் ஜெயலலிதாவுக்கு எதிராக கிரிமினல் வழக்கு பதிவு செய்தேன். கருணாநிதி முதல்வராக இருந்தபோது அதை அரசு சார்பில் நடத்த அனுமதி கேட்டார். நானும் அனுமதியளித்தேன். இப்போது வழக்கு தீர்ப்பால் கிடைக்கும் பெயரை கருணாநிதி பெற முயலுவார். 2ஜி வழக்கில் எனது வழக்கு வெற்றி பெற்றால் அப்போது ஜெயலலிதா மகிழ்ச்சியடைவார். அதேபோல் சொத்துக்குவிப்பு வழக்கில் நான் வென்றுள்ளதையும் பார்த்து ஜெயலலிதா மகிழ்ச்சியடைய வேண்டும்" என்று கேலிச்சுவையுடன் எழுதியிருக்கிறார்.

ஊழல் வழக்கில் தண்டனை பெற்று பதவியை இழந்து சிறை செல்லும் இந்தியாவின் "முதல்" முதலமைச்சர் என்ற பெயரையும், ஊழல் வழக்கில் சிக்கி பதவியிழந்த தமிழ்நாட்டின் "இரண்டாவது" அரசியல்வாதி என்ற தகுதியையும் வைத்துக் கொண்டு இனி என்ன செய்யப் போகிறார் ஜெயலலிதா?

காத்திருப்போம்..

இதயம் திறக்குமா இந்தியா?

சென்னையிலிருந்து என்.ஆர். சோமு

இலங்கைத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை 23.08.2014 அன்று டெல்லியில் சந்தித்து பேசியிருக்கிறார்கள். இது ஒரு நல்ல ஆரம்பமாகவே கருதப்படுகிறது. பிரதமர் தனது பதவியேற்பு விழாவிற்கு இலங்கை அதிபர் ராஜபக்சேவுக்கு அழைப்புவிடுத்து கௌரவித்ததுபோல் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த எம்.பி.க்களை அழைத்து பேச்சு வார்த்தை நடத்தி கௌரவித்திருக்கிறார். இது இலங்கை தமிழர் பிரச்சனையில் பாரதிய ஜனதா கட்சியும் பிரதமர் நரேந்திர மோடியும் அக்கறையுடன் இருப்பதற்கான நம்பிக்கையை உலக தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தி இருக்கிறது. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமையில் வந்த இக்குழுவில் சுரேஸ் பிரேமச்சந்திரன், சேனாதிராஜா, சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

பிரதமர் மோடியை பார்ப்பதற்குமுன் 22.08.2014 அன்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜை சந்தித்துப் பேசியிருந்தார்கள். பிரதமரை சந்தித்த பின் முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்தித்து அவர் ஆட்சிக்காலத்தில் இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுத்து வடக்கு மாகாண சபை தேர்தலை நடத்தியதற்காக நன்றி தெரிவித்திருந்தனர். தமிழர் தேசியக் கூட்டமைப்பு (TNA) அந்தத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று வெற்றி பெற்றதன்மூலம் ராஜபக்சே அரசுக்கு தமிழ் மக்கள் தமது எதிர்ப்பை காட்டி சர்வதேச சமூகத்திற்கும் அதன் நாடுகளுக்கும் தமது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்தபோது ராஜீவ்காந்தி பிரதமராக இருந்த போது 29.07.1987 அன்று அப்போதைய ஜெயவர்த்தன அரசுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை அரசியல் சட்டத்தில் 13வது திருத்தம் கொண்டுவரப்பட்டது என்பதை சுட்டிக்காட்டியதோடு இலங்கை தமிழர்களுக்கு அதிகார பகிர்வுக்கு வகைசெய்யும் இலங்கை அரசியல் சட்டத்தின் 13வது திருத்தத்தை அமுல்படுத்துவதில் இலங்கையின் அலட்சியம் குறித்து இந்தியா கவனத்தில் கொண்டு அமுல்படுத்துவதற்கு இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். மேலும், வட - கிழக்கு மாகாண பிரச்சனைகள், இந்தியாவில் அகதிகளாக இருக்கும் தமிழர்களின் மறுகுடியமர்வு, இராணுவத்தின் முறையற்ற தலையீடு ஆகிய எல்லாவற்றிற்கும் நிரந்தர தீர்வுகாணவேண்டும் என்றும் வேண்டுகோள்விடுத்தனர்.

மாறி -மாறி ஆட்சிக்கு வந்த சிங்கள ஆட்சியாளர்கள் கடந்த 27 வருடங்களாக 13வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தாமல் இருப்பதிலேயே குறியாயிருந்தார்கள். அதை எந்த அளவுக்கு நீர்த்துப்போகச் செய்யமுடியுமோ அந்தளவுக்கு சிங்கள ஆட்சியாளர்கள் நீர்த்துப்போகச் செய்திருக்கிறார்கள். மாகாணசபைக்கு கொடுக்க வேண்டிய அதிகாரங்களை, அதிகாரம் கொண்ட ஜனாதிபதி தடுத்து வைத்து வேடிக்கை பார்க்கிறார். 13வது திருத்தச் சட்டத்திலுள்ள முக்கிய விடயங்களான காணி - போக்குவரத்து - போலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைக்கு கொடுக்க முடியாதென்று அடம்பிடித்து தன்னகத்தே வைத்திருக்கிறார். வட கிழக்கு முழுவதும் ஒன்றரை லட்சம் சிங்கள இராணுவம் தமிழ் மக்களை அச்சுறுத்தும் வகையில் நிறுத்தப்பட்டிருப்பது போதாதென்று போலிஸ்அதிகாரத்தை மாகாணஅரசுக்கு கொடுக்க மறுக்கிறார். இதையெல்லாம் இந்திய அரசு வேடிக்கை பார்த்து தனக்கும் இந்திய இலங்கை ஒப்பந்தத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என முகத்தை திருப்பிக் கொள்வது சரியா என்பதை இந்தியாதான் முடிவு செய்ய வேண்டிய நிலையுள்ளது.

இதுகாலவரை இலங்கை மீதான வெளியுறவுக் கொள்கையில் ஏற்பட்ட தடுமாற்றம் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய அரசுக்கு இருக்கக்கூடாதென்பதுதான் இலங்கை தமிழரின் விருப்பம். நீண்டகாலம் தீர்வு எட்டப்படாமல் இருக்கும் இப்பிரச்சனை, மீண்டும் கண்டு கொள்ளப்படாது தொடருமானால் தமிழ் மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது. அந்த அளவுக்கு சக்தி இழந்த நிலைக்கு சென்றுவிட்டார்கள். ஏனென்றால் தமிழர் பிரச்சனை தீர்வுக்காக போடப்பட்ட ஒப்பந்தங்களான பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம், இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஆகியன செயலிழந்து போனதை வரிசைப்படுத்தி சொல்லலாம். அதுமட்டுமல்லாது திம்பு பேச்சுவார்த்தையிலிருந்து இன்றுவரை தொடரும் பேச்சு வார்த்தைகளை அடுக்கி கொண்டே போகலாம்.

பிரதமர் நரேந்திர மோடியுடனான முதல் பேச்சுவார்த்தை ஒரு நல்ல தொடக்கமாக அமைந்து இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் நிலையை எட்ட வேண்டும் என்பதே அனைத்து தரப்பினரதும் அவாவாகும். இன்றுவரை,இலங்கை தமிழர் விவகாரத்தில் ஒரு துரும்பு கூட அசையாமல் நீண்டகாலம் இழுபறி நிலை தொடர்வதாலேயே இந்த நிலை எழுகிறது.

உலக வரலாற்றில் சுதந்திரத்திற்காகப் போராடிய மக்களின் படுகொலைக்கு பின் எத்தனையோ நாடுகள் விடுதலை பெற்று மலர்ந்திருக்கின்றன. ஆனால், இலங்கை தமிழர் போராட்டத்தில் லட்சக்கணக்கில் தமிழ் மக்கள் சிங்கள இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டும் தமிழர்களுக்கென்று ஒரு நாடும் பிறக்கவில்லை, தீர்வும் கிடைக்கவில்லை. தமிழர்களின் படுகொலையை உலக நாடுகளால் தடுத்து நிறுத்தவும் முடியவில்லை. வேடிக்கை பார்த்ததைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை. 2009ம் ஆண்டு வன்னியில் அகோர யுத்தம் நடந்துகொண்டிருந்த போது, ஐக்கிய நாடுகள் சபை அமைதி காத்து தனது கடமையை முடித்துக் கொண்டது. பக்கத்து நாடான இந்தியாவும் மௌனம் காத்து சிங்கள இராணுவத்தின் படுகொலைகளுக்கு துணைபோனது. தமிழர்கள் இரத்த சாட்சிகளாக மடிந்து போனார்கள் என்பதுதான் வேதனையான செய்தி.

இன்று சிங்கள இராணுவத்தின் கொலை வெறித் தாக்குதலுக்கு பயந்து வெளிநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்த தமிழர்கள் இன உணர்வுடன் ஒன்றுகூடி சிங்கள அரசுக்கு நெருக்கடி கொடுப்பது, உலகத் தமிழர்களை ஒன்றிணைப்பது என்று தமிழர்களின் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறார்கள். சிங்கள அரசுக்கு எதிராக உலகநாடுகளை அணி திரட்டுவதில் குறிப்பிட்டத்தக்க வெற்றியையும் பெற்றிருக்கிறார்கள்.

யுத்தக் குற்றங்கள் தொடர்பான ஆதாரங்களை திரட்டுவதிலும், ஜெனிவாவில் தமிழர்களுக்கு ஆதரவான போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதிலும், வட - கிழக்கு தாயகத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டுபவர்களாகவும் இருக்கிறார்கள். வெளிநாடுகளில் வாழும் 10 லட்சம் தமிழர்களை ஓர் அணியில் ஒன்றிணைப்பதற்கு இணைப்புப் பாலமாகவும் அவர்கள் விளங்குகிறார்கள்.

இலங்கை தமிழர் போராட்டத்திற்கு இத்தகைய புறச்சூழல் சாதகமாக இருந்தாலும் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது இந்தியாவின் அனுசரணையுடன் இலங்கை மீதான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் இலங்கைத் தமிழர்களுக்கு சாதகமான மாற்றத்தைக் கொண்டுவருவது எப்படி என்பதையே.

இந்தியத் தமிழ் மக்களுக்கும் இலங்கை தமிழர்களுக்கும் உள்ள உறவு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பண்டைய காலத்திலிருந்து பேணப்பட்டு வந்திருக்கிறது. அது இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இலங்கைத் தமிழர்கள் இந்தியாவை எந்தளவுக்கு நேசிக்கிறார்கள் என்பதற்கு பல உதாரணங்களைக் காட்ட முடியும். இந்தியா - சீனா, இந்தியா - பாகிஸ்தான் யுத்தத்தின் போதும் அவர்கள் இந்தியாவுக்கே ஆதரவாய் நின்றார்கள். ஏன் இந்தியா - இலங்கைக்கிடையிலான கிரிகெட் போட்டியின் போதும், சொந்த நாடான இலங்கைக்கன்றி இந்தியாவுக்கே ஆதரவு தெரிவித்திருக்கிறார்கள். இந்தியாவின் தேசத் தலைவர்களான மகாத்மா காந்தி, நேரு ஆகியோர் யாழ்பாணம் சென்றபோது தமது சொந்தங்களைப் போல் வரவேற்று ஆதரவு தெரிவித்தார்கள். இந்த அளவுக்கு இந்தியாவை நேசித்த அந்த மக்கள் இன்று பெரும் துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த 50 வருடங்களாக நடந்துவரும் இலங்கைத் தமிழர் போராட்டம் இந்தியாவின் தலையீடு இருந்தும் சிங்கள ஆட்சியாளர்களால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவை ஒரு பொருட்டாகவே இலங்கை அரசு மதிக்கவில்லை. இலங்கை தனது நேச நாடென்று இந்தியா சொல்கிறதே தவிர இலங்கை அரசு சொல்லவில்லை. இலங்கையின் வட - கிழக்கு வாழும் தமிழ் மக்கள் தான் இந்தியாவின் நேச சக்திகள். அவர்களைப் பாதுகாத்தால் இந்திய தேசத்தின் பாதுகாப்புக்கு உறுதுணையாக இருப்பார்கள். வரலாற்று ரீதியாக உலகின் மூத்த குடிகளில் ஒன்றான தமிழினத்தை சிங்கள ஆட்சியாளர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டிய கடமைப்பாட்டில் இந்தியா இருக்கிறது. ஏனென்றால் இலங்கையின் வடக்கே வாழும் தமிழர்கள் இந்தியாவின் நேச சக்திகளாக இருப்பதால் இந்தியாவின் தென்பகுதியின் பாதுகாப்பு அரணாக அவர்கள் இருப்பார்கள். ◆





மோடி அடித்த செஞ்சுரி....

அனிதா காயத்ரி (சென்னை)

இந்தியாவில் நரேந்திரமோடி ஆட்சிப் பொறுப்பேற்று 100 நாட்களை நிறைவு செய்துவிட்ட கையோடு பல்வேறு தரப்புகளிருந்தும் பாராட்டுகளும், விமர்சனங்களும் அள்ளி வீசப்படுகின்றன. காங்கிரஸ் கட்சியின் 10 ஆண்டுகால ஆட்சியைத் தூக்கி எறிந்துவிட்டு அறுதிப் பெரும்பான்மையுடன் பா.ஜ.க வை ஆட்சிக் கட்டிலில் ஏற்றி அழகு பார்த்திருக்கிறார்கள் இந்திய மக்கள். தம்மை ஆட்சியில் அமரவைத்த மக்களுக்கு மோடி அரசு 100 நாட்களில் செய்து காட்டிய சாதக பாதகங்களை "வளர்ச்சிப்பாதையில் இந்தியா செல்கிறது" என்றும் "சாமான்ய மக்களுக்காக எதுவும் நடந்துவிடவில்லை" என்றும் இருவேறுபட்ட நிலைகளில் நின்று கருத்துகளை தெரிவிக்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

"வளர்ச்சிப் பாதையில் இந்தியா செல்லத் தொடங்கியிருக்கிறது" என்று தற்போதைய தமிழக பா.ஜ.க வின் மாநிலத் தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் உறுதிபடக் கூறுவதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். பா.ஜ.க ஆட்சிக்கு வரப்போகிறது என்பதில் தொடங்கி - ஆட்சியில் அமர்ந்தது முதல், ஒரு வகையான சுறுசுறுப்பு அனைத்துத் தரப்பிலும் ஏற்பட்டிருக்கிறது. அமைச்சர்கள் அதிகாரிகள் கட்சித் தொண்டர்கள் ஆகியோரின் உற்சாகத்துக்கு அப்பால் வாக்களித்த பொதுமக்கள் மத்தியிலும் ஒருவகை நம்பிக்கையுடன் கூடிய எதிர்பார்ப்பு கூடிக்கொண்டேதான் இருக்கிறது.மோடியின் சுறுசுறுப்பு சுற்றுப்புறத்தையும் சுற்றிக்கொண்டிருப்பதை மறுக்க முடியவில்லை.

வர்த்தகநிறுவனங்கள் உற்சாகத்துடன் காணப்படுகின்றன. பங்குச் சந்தையின் குறியீட்டு எண் உயர்வே இதற்கு காரணமெனப்படுகிறது. பணவீக்கமானது 9 சதவிகிதத்திலிருந்து 7.4 சதவிகிதமாகக் குறைந்துள்ளது என்பதும் கூடுதல் செய்தியாக இருக்கிறது. காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் வார்த்தை ஜாலங்களாக இருந்த "பணவீக்கத்தைக் குறைப்போம்" என்ற கோசமானது அவர்களது வாக்கு வங்கியைக் குறைப்பதற்கே பயன்பட்டிருக்கிறது என்றும் மூன்றே மாதங்களில் பணவீக்கத்தைக் குறைத்துக் காட்டிவிட்டோம் நாம் என்கின்றனர் பா.ஜ.க வினர்.

அதேபோல மொத்த உள்நாட்டு உற்பத்தியான ஜி டி பி யில் 10 சதவிகித வளர்ச்சி என்பது எதோ அடைய முடியாத இலக்கு எனக் கூறிக்கொண்டிருக்கும் இந்தநேரத்தில் மோடி அரசு மூன்றே மாதத்தில் ஜி டி பி யை 4.6 சதவிகிதத்திலிருந்து 5.7 சதவிகிதமாக மாற்றிக் காட்டியமை 10 சதவிகிதத்தை எட்டுவதில் சிரமம் இல்லை எனும் நிலையை நிறுவியுள்ளதையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

சாதாரண மக்களின் வசதிகளைக் கருத்தில் கொள்ளாது தனியே முதலாளிகளுக்கும் ,தொழில் செய்வோருக்கும் மட்டுமே சாதகமாக இந்த அரசு செயல்படுகிறது என்கிற விமர்சனமும் எழாமல் இல்லை. "அது உண்மையல்ல ஒரேமாதத்தில் இரண்டு தடவைகள் பெட்ரோல், டீசல் விலைகளைக் குறைத்திருக்கிறோம் வெறுமனே எண்ணெய் விலை நிர்ணயக்கொள்கை தவறு எனக் குற்றம் சாட்டிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது விலை குறைக்கப்பட்டது குறித்தும் பேசவேண்டும். கியாஸ் சிலிண்டர் விடையத்தில் ஒருவருடத்தில் 12 சிலிண்டர்கள் மாதம் ஒன்று வீதம் பெற்றுக்கொள்ள முடியும் என்ற குழப்பமான நிலையை போக்கி, ஆண்டொன்றில் எப்போ வேண்டுமானாலும் 12 சிலிண்டர்களைப் பெற்றுக் கொள்ளலாம் என மோடி அரசு தெளிவாக அறிவித்துள்ளதையும் மறந்து விட்டுப் பேசக்கூடாது. இதுபோன்ற சிறிய விடையங்களில் கூட சாமான்ய மக்களின் நலன் கருதியே மோடி அரசு செயல்படுகிறது என்கிறார்கள் அதன் ஆதரவாளர்கள்.

இதையும் விட மோடி தனது கபினட் அமைச்சரவையை சிறுப்பித்ததன் மூலம் மாதத்தில் வீணாகும் 125 கோடி ரூபாய் மீதப்படுத்தபட்டுள்ளது. கடந்தகால அரசால் உருவாக்கப்பட்ட காலாவதியான திட்டக்கமிஷன் என்கிற அமைப்பை துணிச்சலாக இல்லாமல் செய்ததன் மூலம் அரசுக்கு பலகோடி ரூபாய் மிச்சமாகும் என சொல்கிறார்கள். ஆனால், இந்த நடவடிக்கை எதிர்கட்சிகளின் கடும் விமர்சனக்களுக்கு உள்ளாக்கப்பட்டு விவாதிக்கப்படுகிறது.

அரசுக்கு வரும் வருமானத்தை சமூக நலனைக் கருத்தில் கொண்டு எப்படிச் சமச்சீராக செலவிடுவது என்பதை திட்டமிடுவதுதான் திட்டக்கமிஷன். நவீன தாராளமயக் கொள்கையின் வருகையினால் திட்டக் கமிஷன் அதன் நோக்கத்துக்கு நேர்மாறாகிவிட்டது என்பதும் உண்மைதான். எனினும் அதை சீர்மைப்படுத்த முயலாது அழித்தொழிக்கும் நடவடிக்கையை எப்படி அதிகரிக்கமுடியும். "திட்டக்கமிஷனை" தன்னிச்சையாக அழிக்க எடுத்த முடிவு என்பது சாமான்ய மக்களுக்கான சமூக நலத் திட்டங்களையும் மானியங்களையும் ஒழிப்பதற்கான முதல் படியாகவே இதைப் பார்க்க வேண்டும் என்கிறார்கள் எதிர்கட்சியினர்.

மோடியின் சுதந்திர உரையும், அதற்கான ஏற்பாடுகளும் ஒரு வித்தியாசமான நடை முறையாகவே வியந்து பார்க்கப்பட்டது. குண்டு துளைக்காத மேடையில் நின்று கொண்டும் வாக்குறுதிகளை வழங்கும் பேச்சாக அது அமையாமல் மக்களைக் கவர்ந்திழுக்கும், நாட்டுப்பற்றுக் கொண்டவர்களை புல்லரிக்கவைக்கும் உரையாகவே அமைந்திருக்கிறது. அது இந்த நாட்டு மக்களின் மீது அவர் கொண்ட நேசத்தின் சாயல் என்கிறார்கள் மோடியின் ரசிகர்கள்.

எல்லாவற்றுக்கும் மேலாக "இந்தியா" என்ற ஒரு நாட்டின் மீதான உலக அரங்கின் நம்பிக்கை பெருகியுள்ளது. இந்தியாவை நோக்கி முதலீடுகள் குவிகின்றன. கடந்த மூன்று மாதங்களில் இந்தியச் சந்தையில் வந்திருக்கும் புதிய முதலீடுகளே இதற்குச் சான்று என அடுக்குகிறார் தமிழிசை.

"இந்த முதலீடுகள் எல்லாம் நாங்கள் போட்டதிட்டங்களினால் தான் வந்துள்ளன" என்ற ப.சிதம்பரத்தின் கூற்றையும் தனக்கு சாதகமாக்கி அவ்வாறெனில் அவர் முதலீடுகள் வருவதையும், இந்தியப் பொருளாதாரம் மேலே எழுச்சி பெறுவதையும் ஒப்புக் கொள்கிறார் அல்லவா என்கிறார்.

நாட்டைவளப்படுத்திசாமான்யமக்களின்வாழ்க்கைநிலையைமேம்படுத்துவதுதான் இனி வரும் ஆண்டுகளின் மோடி அரசின் இலக்கு, அதற்கு இந்த 3 மாத முடிவின் தொடக்கமே சாட்சியம் என்கிறார்கள் மோடியின் ஆதரவாளர்கள்.

இதற்கிடையில் முற்போக்காளர்களின் விமர்சனங்களும் மோடி அரசின் மீது கடுமையாக வந்து விழுகிறது.

"ஆட்சிக்கு வந்த 100 நாட்களிலேயே கல்வி மற்றும் பண்பாட்டுத்துறைகளை "காவி" மயப்படுத்துவதில் வரிந்து கட்டிச் செயல்படுகிறது மோடி அரசு' என்கிறார்கள். பாடப்புத்தகங்களில் மூட நம்பிக்கைகளையும் மதம் சார்ந்த கட்டுக் கதைகளை அறிவியல் உண்மைகளைப் போல் அந்தப் புத்தகங்கள் போதிக்கின்றன. மகாபாரதக் காலத்திலேயே "ஸ்டெம் செல்" கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது என்றும் அதன் அடிப்படையில்தான் கௌரவர்கள் தோன்றினார்கள் என்றும் வேதகாலத்திலேயே கார், விமானம் போன்றவை இருந்தன என்று "புஷ்பக விமான" ஆதாரங்களும் முன்வைக்கப்படுகின்றன.

பார்வையற்ற திருதராஷ்டிரனுக்கு பாரதப்போரை அரண்மனையில் அமர்ந்து கொண்டே காட்சியாக விவரிக்கும் சஞ்சயனின் ஞான திருஷ்டியை இன்றைய டி.வி நேரடி ஒளிபரப்புக்கு ஒப்பிடப்படுகிறது மாணவர்களின் மனங்களில் பொய்கள் விதைக்கப்படுகின்றன. குழந்தை இல்லாதவர்கள் பசுக்களை பார்த்தாலே குழந்தை பிறக்கும் என்றும் கூட பாடப்புத்தகத்தில் இருக்கிறது. எதிர்காலச் சந்ததியை சொந்தப்புத்தியற்ற மதவாதிகளாக, அறிவிலிகளாக மாற்றும் இந்த புத்தகங்களுக்கு மோடி வியந்து பாராட்டி முன்னுரை எழுதியிருப்பதுதான் வேடிக்கை. இப்படி பண்பாடு, வரலாறு தொடர்பில் கற்காலத்தில் சிந்திக்கும் இவர்கள் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு "ரெட் கார்ப்பெட்" விரிப்பதில் மட்டும் நவீன சிந்தனையுடன் செயல்படுகிறார்கள். மோடியின் அரசின் ஒரு கண் மதவாதம் என்றால் மறுகண் கார்ப்பரேட் நலன். உதாரணமாக மோடி பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்ட 2013ம் ஆண்டு செப்டம்பரில் இருந்து இந்த ஆண்டு ஆகஸ்ட் 22 வரை பெரு நிறுவனங்களின் சந்தை மதிப்பு எந்த அளவுக்கு உயர்ந்துள்ளது என்பதை பார்த்தாலே இந்த மர்மம் புரியும். முகேஷ் அம்பானி குழுமம் 520%, அடானி 181%, டாடா 599%, ஆதித்யா பிர்லா 753% பார்தி டெலிகொம் 1.026%, சன் ஃபர்மா 1.195% அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளன. இத்தகைய அசுரவளர்ச்சிக்கு காரணம் அவர்களின் திறமையல்ல, மோடி அரசின் சலுகைகளே என்று சாடுவதுடன் இதே காலத்தில் சாமன்ய மக்களிற்கான தக்காளியின் விலை விண்ணைத்தொடுகிறது. வெங்காயம், எண்ணெய் முதலான சமையல் பொருட்களின் விலை உச்சம் தொட்டிருக்கின்றதையும், 45 ஆயிரம் கோடி மதிப்புள்ள பொதுத்துறை நிறுவனப் பங்குகளை தனியாருக்கு விற்கும் மோடி அரசின் முடிவையும் கடுமையாக விமர்சிக்கிறார்கள்.



மொத்தத்தில் எந்தக் கொள்கைகளுக்காக, எந்த மக்கள் விரோத நடவடிக்கைகளுக்காக காங்கிரஸ் மீது மக்களுக்கு கோபம் வந்ததோ அதே கொள்கையிலே மேலும் பன்மடங்கு வேகத்தில் மோடி அரசு செயல்பட்டு வருகிறது என்கிறார்கள் முற்போக்காளர்கள்.

இந்த எதிரும் புதிருமான, அரசியல் சூழலில் இந்தியா தன் வளர்ச்சிப்பாதையை நோக்கி முன்னேற வேண்டும் என்ற முனைப்போடு பயணித்துக் கொண்டுதான் இருக்கிறது என நம்புவோம். ❄

மோடியின் நட்புக்கரத்தை சீனா பற்றுமா?

டெல்லி ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் நரேந்திர மோடியும், சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது கடந்த மாதத்தில் நிகழ்ந்த ஒரு முக்கியமான அரசியல் நிகழ்வாகும்.

இந்தியா - சீனா உறவின் முழு பலனையும் பெற வேண்டும் என்றால், எல்லையில் அமைதி நிலவ வேண்டும் என்றும், எல்லையில் சுமுக நிலை நிலவ இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்திருந்தார். அதுபோல் "இந்தியா - சீனா இடையேடான எல்லையை வரையறுக்க வேண்டும். அதுவே எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காண உதவும். இரு நாடுகளும் பரஸ்பரம் அந்தந்த நாட்டின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். எல்லைப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமெனவே சீனா விரும்புகிறது" என சீன அதிபரும் தெரிவித்தார்.



இந்தச் சந்திப்பில் எல்லைத் தீர்வுபற்றி இருவரும் விருப்பம் தெரிவித்து விடைபெற்றுச் சென்ற அடுத்த சில நாட்களிலேயே இந்திய எல்லைக்குள் சீனப்படைகள் ஆக்கிரமித்த ஆத்திரமூட்டும் நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளதுதான் இந்திய உணர்வலைகளைச் சீண்டிவிட்ட விடயமாகும். அப்போ பேச்சுப் பேச்சென்றால் அது காத்தோடு போயிடவா என்ற கேள்வியாய் அது ஆகிப்போனது.

ஆனால் இந்தச் சந்திப்பின் முக்கியத்துவம் பல வாக்குறுதிகள் தந்த நம்பிக்கையில் இருந்தது. மோடியின் அண்டை நாடுகளுடன் சுமுக உறவை ஏற்படுத்தி உள்நாட்டுப் பொருளாதாரத்தில் கவனத்தைச் செலுத்தும் திட்டத்தின் பிறப்பாக ஏற்பட்ட இந்த நம்பிக்கைகள் எல்லாம் எல்லையில் சிதறிவிடுமோ என்ற சந்தேகம் எழுந்திருக்கிறது.

இச் சந்திப்பில் இரண்டு நாட்களாக பொருளாதாரம், அரசியல், பாதுகாப்பு தொடர்பான அனைத்து விவகாரங்கள் குறித்தும் ஆலோசிக்கப்பட்டன. அதன் அடிப்படையில் பல்வேறு துறைகளில் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப் பட்டன. வர்த்தக ரீதியாக நிலவும் கெடுபிடிகளை சீன அதிபரிடம் எடுத்துரைக்கப்பட்டது. இந்திய நிறுவனங்கள் சீனாவில் முதலீடு செய்ய ஏதுவாக விதிமுறைகளை தளர்த்த வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்தியாவில், அடுத்த 5 ஆண்டுகளில் 20 பில்லியன் டாலர் அளவில் பல்வேறு துறைகளில் முதலீடு செய்ய சீனா உறுதி அளித்துள்ளது. இந்தியாவுடன், சமூக பயன்பாட்டிற்கான அணுசக்தி ஒப்பந்தம் மேற்கொள்வது குறித்த பேச்சுவார்த்தையை துவக்க சீனா முன்வந்தது. "மோடி சீனா வருகை தர வேண்டும். 2015-ம் ஆண்டு சீனாவில், "விசிட் இந்தியா" ஆண்டாக கடைபிடிக்கப்படும்" என்று சீன அதிபர் ஜி மோடிக்கு அழைப்புக்கூட விடுத்தார். மோடி - ஜி முன்னிலையில் இரு நாடுகளுக்கும் இடையே ரயில்வே, விண்வெளி உள்ளிட்ட 12 துறைகளில் முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இந்தளவு இரு நாடுகளுக்கிடையிலான நல்லுறவின் முன்னேற்றங்களையும் எல்லைத் தகறாறிலிருந்து காப்பாற்றுவதில்தான் இப் பேச்சுவார்த்தையின் பலன் தங்கியிருக்கிறது. இத்தகைய உறவு உறுதியாகுமானால், அது மேற்குலகின் அரசியல் பொருளாதர வியூகத்திற்கு ஒரு புதிய சவாலுக்கான சமிக்ஞையாக அமையும்.

—ஆத்மன்—



Endless Confidence.......
Rinnai
TANKLESS
WATER HEATERS
ENERGY STAR
உங்கள் இடத்தையும் பணத்தையும் சேமிக்க
Free Estimation 416 986 9554

“பாலஸ்தீன்” என்றால், இஸ்ரேலுக்குப் பக்கத்தில் இருக்கிற ஒரு சுதந்திரதேசம் என்று இன்றுவரை தவறாகவே நினைத்துக் கொண்டிருப்போருக்கும், இஸ்ரேல் பாலஸ்தீன் விவகாரங்கள் எது ஒன்றுமே தெரியாமல், தினசரி அங்கிருந்து வரும் குண்டுவெடிப்புச் செய்திகளை மட்டும் வாசித்துக்கொண்டிருப்போருக்கும், பிரிட்டனின் காலனிகளாக இருந்து, இரண்டாம் உலகப்போருக்குப்பின் வரிசையாக ஒவ்வொரு நாடாகச் சுதந்திரமடைந்துவிட்ட நிலையில், இருபத்தொன்றாம் நூற்றாண்டு பிறந்தபிறகும் அடிமை வாழ்வைத்தொடரும் பாலஸ்தீனில் அப்படி என்னதான் பிரச்னை என்று அறிய விரும்புவோருக்கும் இது ஒரு சந்தர்ப்பம்.

பெரும்பாலான மேற்கத்திய நாடுகள் பாலஸ்தீனை இன்னும் அங்கீகரிக்கவில்லை. புரியும்படி சொல் வதென்றால், உலக வரைபடத்தில் இன்று பாலஸ்தீன் என்றொரு சுதந்திர தேசத்தைப் பார்க்க முடியாது. லெபனான், சிரியா, ஜோர்டன், சவுதி அரேபியா, எகிப்து ஆகிய தேசங்கள் சுற்றி நின்று கும்மியடிக்க, நடுவே ஒரு சிறு எலும்புத்துண்டு மாதிரி இருக்கும் பிரதேசத்தில் புள்ளிவைத்து, எழுதக்கூட இடமில்லாமல் சற்றுத்தள்ளி இஸ்ரேல் என்று குறித்திருப்பார்கள். அந்தச் சிறிய புள்ளியை உற்றுப்பார்த்தால் அதற்குள் இன்னும் இரண்டு சிறிய புள்ளிகள் தெரியும். ஒன்றில் ஜெருசலேம் (Jerusalem) என்றும் இன்னொன்றில் காஸா (Gaza) என்றும் எறும்பு எழுத்தில் எழுதியிருக்கும்.




கனவுக் குழந்தையாகவே இருந்துவிடுமோ என்கிற அச்சம் இன்று உலகநாடுகள் அனைத்துக்கும் எழுந்திருக்கிறது. யாசர் அராஃபத் மறைவுக்கு இரங்கல் தெரிவித்த முன்னாள் அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ், “இனி அங்கே அமைதிக்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்” என்று பேசியதன் உள்ளர்த்தம் புரிந்த அனைவருமே நிலைகுலைந்து போனார்கள்.



காலம் இரக்கமற்றது. ஒரு சரியான தலைவன் இல்லாத காரணத்தினாலேயே சொந்தநாட்டில் அகதிகளாக லட்சக்கணக்கான பாலஸ்தீனியர்களை அது ஐம்பதாண்டுகளுக்கு மேலாக வறுத்தெடுத்துவிட்டது. பிறகு, அராஃபாத் என்றொரு தலைவனைக் கொடுத்தது. இன்னொரு ஐம்பதாண்டு காலத்துக்கு, அவர் இடைவிடாத போராட்டங்களை நடத்திவந்தார். முதலில் ஆயுதப்போராட்டம், பிறகு அமைதிப்போராட்டம். சுதந்திரச் சூரியவெளிச்சம் அம்மக்களின் மீது இன்னும் விழவில்லை. அராஃபாத்தால் சிறு மெழுகுவர்த்திகளை மட்டுமே ஏற்றிவைக்க முடிந்தது. இப்போது அவரது அத்தியாயமும் முடிந்துவிட்டது. மீண்டும் பாலஸ்தீனின் கழுத்துக்கு மேலே கேள்விக்குறியாக அந்தப் பழைய கத்தி தொங்கத் தொடங்கிவிட்டது. நூற்றாண்டுகாலக் கத்தி, இன்னும் கூர்மழுங்காத கத்தி.

அதன் கூர்மை மழுங்கிவிடக் கூடாது என்பதில் இஸ்ரேலுக்கு கவனம் அதிகம். இஸ்ரேல் அந்த விஷயத்தில் கவனமாக இருப்பதைக் கண்காணிப்பதில் அமெரிக்காவுக்கு ஆர்வம் அதிகம். அமெரிக்காவின் அந்த ஆர்வத்துக்கு உடன்படுவதில் பிரிட்டனுக்கு விருப்பம் அதிகம். இஸ்ரேலும் அமெரிக்காவும் பிரிட்டனும் எடுக்கும் நிலைப்பாட்டை, இந்த ஒரு விஷயத்தில் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிப்பதில் பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் ஈடுபாடு அதிகம்.



எண்ணெய்வளம் கொழிக்கும் அரபு மண்ணில், எண்ணெயே இல்லாத ஒருபகுதி உண்டென்றால் அது பாலஸ்தீன்தான். அங்கே எண்ணெய் இல்லாதது இன்று ஒரு பொருட்டே இல்லை. முதலில், பாலஸ்தீனே இப்போது இல்லை என்பதுதான் விடயம்.

பாலஸ்தீன் என்றொரு பிரதேசத்தை இந்தியா போன்ற சில நாடுகள் இன்று அங்கீகரித்து, தூதரக உறவுகள் வைத்துக்கொண்டிருந்தாலும்

பாலஸ்தீன் எங்கே? அதுதான் கேள்வி. அதுதான் பிரச்சினை. உண்மையில் “பாலஸ்தீன்” என்பது இன்றுவரையிலும் ஒரு கோரிக்கை மட்டுமே. ஒரு தனிநாட்டுக்கான கோரிக்கை. என்னதான் 1988இலேயே அராஃபாத், சுதந்திர பாலஸ்தீன் பிரகடனத்தை அறிவித்துவிட்டாலும், 1993ல் இஸ்ரேலுடனான அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகியிருந்தாலும், அமைதிக்கான நோபல் பரிசை இஸ்ரேலியப் பிரதமர் யிட்ஸாக் ராபினுடன் (Yitzhak Rabin) அவர் பகிர்ந்துகொண்டிருந்தாலும், 1996ல் அங்கே ஒரு பொதுத்தேர்தலே நடந்து, அராஃபாத் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பாலஸ்தீனிய அதிபராகப் பொறுப்பேற்றுக்கொண்டாலும், ஒரு குட்டி நாடாளுமன்றம் அங்கே செயல்பட்டாலும் பாலஸ்தீன் ஒரு சுதந்திரதேசம் இல்லை. இன்றுவரையிலும் இல்லை. இல்லாவிட்டால் எப்படி அவரை இஸ்ரேல் அரசு வீட்டுச் சிறையில் மாதக்கணக்கில் வைத்திருந்திருக்க முடியும்? ஒரு சுதந்திர தேசத்தின் அதிபரை, அவரது சொந்த மண்ணில், சொந்த வீட்டில் இன்னொரு தேசம் சிறைவைப்பது என்பதைக் கதைகளில் கூடப் படிக்க முடியாதல்லவா? திரைப்படங்களில்கூடப் பார்க்க முடியாதல்லவா?

இருபதாம் நூற்றாண்டின் மிகப்பெரிய சரித்திர மோசடி என்றால் அது இஸ்ரேல், பாலஸ்தீனுக்கு இழைத்ததுதான். இதில் சந்தேகமே இல்லை. கற்பனைக்கு அப்பாற்பட்ட தீவிரவாதச் செயல்கள் அங்கே நடந்தன. கொத்துக்கொத்தாகக் கொன்று குவித்தார்கள். இடித்த கட்டடங்கள், உடைத்த சாலைகள், அடைத்த கதவுகளுக்கு அளவே இல்லை. குழந்தைகள், ஆண்கள், பெண்கள் பாகுபாடே கிடையாது. “கொல், கொல், கொல்” என்னும் சொல் மட்டுமே தாரக மந்திரமாக இருந்தது.

அங்கே பொருளாதாரம் உயரவில்லை. போராட்டங்கள் மிகுந்தன. கல்வி வளரவில்லை. கலவரங்கள் மிகுந்தன. அடியில் குண்டுவைத்துவிட்டே அமைதி குறித்துப் பேசினார்கள். அரபு மண்ணின் அவலைக் குழந்தையான பாலஸ்தீன் என்பது இறுதிவரை ஒரு

அராஃபாத் இல்லாத பாலஸ்தீனியர்களின் வாழ்வில் அமைதி என்பது இல்லை என்பது, சற்றே விவரமறிந்தவர்களுக்குத் தெரியும். ஏனென்றால், கடந்த நூறு வருடங்களில் பாலஸ்தீன் கண்ட ஒரே தலைவர் அராஃபாத்தான். இன்னொரு பெயரை யோசித்துச் சொல்ல முடியுமா யாராலாவது? இப்போது இடைக்கால அதிபராகப் பொறுப்பேற்றிருக்கும் ராவி ஃபட்டோவின் (Rawhi Fattouh) பெயரையோ, பிரதமர் அகமது கரியின் (Ahmed Qurie) பெயரையோ இதற்கு முன்னால் கேள்விப்பட்டிருக்கிறோமா நாம்?

அதுதான் பிரச்சினை. பாலஸ்தீன் ஒரு தலைவனற்ற தேசமாகப் பிறந்து, வளர்ந்து, நடுவில் ஒரு தலைவரைப் பெற்று, இப்போது மீண்டும் தலைவனற்ற தேசமாகியிருக்கிறது. மீண்டும் அங்கே கோரத்தாண்டவமாட நாள் பார்த்துக்கொண்டிருக்கிறது இஸ்ரேல்.

யோசித்துப்பார்த்தால் கொஞ்சம் வியப்பாகத்தான் இருக்கும். 1948ம் வருடம்வரை இஸ்ரேல் என்றொரு தேசம் கிடையாது. அது, யூதர்களின் மனத்தில்தான் அதுநாள்வரை கருவாக வளர்ந்துகொண்டிருந்தது. திடீரென்று ஒருநாள் பிரிட்டிஷ்காரர்கள் பாலஸ்தீனைக் கூறுபோட்டார்கள். அவர்கள்தாம் அப்போது அந்தப் பகுதியை ஆண்டுகொண்டிருந்தவர்கள். ஒரு கூறுக்கு இஸ்ரேல் என்று பெயரிட்டார்கள். அது யூதர்களின் தேசமானது. இன்னொரு கூறு பாலஸ்தீனிய அரேபியர்களின் இடமாகவே தொடர்ந்து இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால் நடந்தது வேறு.


இஸ்ரேலை யூதர்கள் ஸ்தாபித்ததை விரும்பாத சில அரேபிய தேசங்கள் (எகிப்து, ஜோர்டன், சிரியா, லெபனான், ஈராக்) தலைவர்களற்ற பாலஸ்தீனியப் போராளிகளுடன் இணைந்து இஸ்ரேலை எதிர்த்தன. 1948-ம் ஆண்டு நடைபெற்ற இந்த முதல் யுத்தத்தின் இறுதியில் இஸ்ரேல் ஒவ்வொரு நாட்டுடனும் ஓர் அமைதி ஒப்பந்தம் செய்துகொண்டு, போரை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்தது. அந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் ஜோர்டன் படை முன்னேறி வந்த மேற்குக்கரை (West Bank)யின் பெரும்பகுதி

அந்நாட்டுக்கே சொந்தம் என்றானது. எகிப்துப் படைகள் நிலைகொண்ட காஸா பகுதி, எகிப்தின் சொந்தமானது. கூறுபோட்ட பிரிட்டன், தன்வேலை அதோடு முடிந்ததாகச் சொல்லி விலகிக்கொண்டது. பாலஸ்தீனிய அராபியர்கள் வேறுவழியின்றித் தனியே போராட்டத்தில் குதித்தார்கள். ஐம்பதாண்டு காலத்துக்கு மேலாகத் தொடர்ந்துகொண்டிருக்கும் அந்தப் போராட்டத்தில் அவர்கள் எத்தனையோ வீழ்ச்சிகளைப் பார்த்திருக்கிறார்கள். ஆனால், அராஃபாத்தின் மறைவைக் காட்டிலும் ஒரு பெரிய வீழ்ச்சி அங்கே இதுகாறும் ஏற்பட்டதில்லை.

இஸ்ரேல்-பாலஸ்தீன் பிரச்னையின் சுருக்கத்தை நான்கு வரியில் சொல்லுவதென்றால், அது மேலே உள்ளதுதான். ஆனால் இது நான்கு வரிகளில் முடிகிற விஷயம் இல்லை. நாலாயிரம் வருட சரித்திரச் சிக்கல்களை உள்ளடக்கியது.

எத்தனையோ நூற்றாண்டுகளாக உயிரைக் கையிற் பிடித்துக்கொண்டு ஊரூராகத் தப்பியோடிக்கொண்டிருந்த வர்கள் யூதர்கள். இதிகாச காலங்களில் அவர்கள் ஓடிக் கொண்டிருந்தார்கள். புராண காலங்களில் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்தார்கள். சரித்திரகாலம் வந்தபோதும் வாழ வழியில்லாமல்தான் ஓடிக்கொண்டிருந்தார்கள். பின்னால் நவீன உலகம் உருவான பிறகும் அவர்களது ஓட்டம் ஓயவில்லை. சொந்தமாக ஒரு துண்டு நிலம் இல்லாமல், எல்லாத் தேசங்களிலிருந்தும் அடித்துத் துரத்தப்பட்டவர்கள் அவர்கள். ஜெர்மனியில் ஹிட்லரால் யூதகுலத்துக்கு நேர்ந்த கொடுமைகள் விவரிப்புகளுக்கு அப்பாற்பட்டவை. ரத்தக்கறை படிந்த அந்தச் சரித்திரமெல்லாம் இன்னமும்கூட உலராமல் அதே ஈரத்துடன்தான் இருக்கிறது. காலம் காலமாக வதைபட்டே மடிந்தவர்கள், 1948ல் தான் இஸ்ரேல் என்றொரு தேசத்தைத் தமக்காக உருவாக்கிக்கொண்டு அதில் வந்து வாழ ஆரம்பித்தார்கள். வாழ்வதற்கு ஒரு துண்டு நிலமில்லாது போவதன் முழு வலியும் அறிந்தவர்கள், எப்படி பாலஸ்தீனிய அராபியர்களை அதே அவதிக்கு உள்ளாக்கினார்கள்? பழிவாங்குவதென்றாலும் விரட்டியவர்களையல்லவா பழிவாங்கவேண்டும்? விரட்டியவர்களுடனேயே சேர்ந்து, வாழ இடம்கொடுத்தவர்களையா பழிவாங்குவார்கள்? இஸ்ரேல் ஏன் இப்படியொரு காரியம் செய்யவேண்டும்?

தொட்டாலல்ல, முகர்ந்து பார்த்தாலேகூடப் பற்றிக் கொள்ளக்கூடிய மிகத்தீவிரமான பிரச்னையின் மையப் புள்ளி இது. ஏனெனில், இதில் அரசியல் மட்டுமல்ல மதமும் கலந்திருக்கிறது. மதமும் அரசியலும் இரண்டறக் கலந்த இடத்தில் பற்றிக்கொள்ள பெட்ரோல் இருந்துதான் ஆக வேண்டுமென்று அவசியமா என்ன? இருபத்தோராம் நூற்றாண்டில் மிகப்பெரிய சிக்கல்களை உலுக்குத் தரப்போகிற இஸ்ரேல்-பாலஸ்தீன் பிரச்னையின் வேர்களை முதலில் ஆராயலாம். விழுதுகளிலும் கிளைகளிலும் பரவியிருக்கும் விஷத்தின் வீரியம் அப்போதுதான் புரியும்.



றம்ஸீன் நிஷாம் (முகநூல் பரிர்வு)

எங்கே செல்லும் இந்தப் பாதை...

தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் இந்திய விஜயமும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடனான சந்திப்பும் இலங்கையின் கொழும்பு வட்டாரத்தில் கொந்தளிப்பை உருவாக்கியுள்ளதாக கூறப்படுகிறது. அதே வேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பினை பற்றி அரசு சார் தமிழ் அமைப்பின் தலைவரான டக்ளஸ் தேவானந்தாவின் கிண்டல் ஒருபுறம். "தமிழ் தேசியக் கூட்டமைப்பினரிடம் தேநீர் வேண்டுமா? எனக் கேட்டோமானால் கோப்பி வேண்டும் என்பார்கள். கோப்பியை கொடுத்தால் இது போதாது விஸ்கி கொடுங்கள் என்பார்கள். இவர்களை திருப்திப்படுத்தவே முடியாது".

இது போன்ற கிண்டல் கேலிகளோடும் கடும் விவாதங்களோடும் எதிர் கொள்ளப்பட்டது நரேந்திர மோடி - கூட்டமைப்பு சந்திப்பு. வெளியுறவுத்துறை அதிகாரிகள் அமைச்சர்கள், சந்திப்பு என ஒரு மணி நேர நீட்சி கூட்டமைப்பினருக்கு கொடுத்த கௌரவமாகவே பார்க்கப்படுகிறது. இதன் மூலம் ராஜபக்சேவுக்கு ஏதோ ஒரு செய்தியை மோடி கொடுத்திருக்கிறார் என்றும் அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். "இந்தியப் பிரதமர் மோடி தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மூலம் ராஜபக்சேவுக்கு "ஐஸ் பெக்கெட் சவால் விடுகிறார். நிச்சயம் இது சவாலான விடயந்தான்" என்கிறார் சிங்கள ஆய்வாளரான தாயான் ஜெயதிலகா.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறுகையில் "டெல்லிக்கு வந்து பிரதமர் மோடியை சந்தித்ததால் ராஜபக்சேவுக்கு ஆத்திரம் வந்துள்ளது. நாங்கள் இலங்கை இறையாண்மைக்கு எதிராக செயல்படுவதாக கூறுகிறார்கள். நாங்கள் ஒன்றுபட்ட இலங்கைக்குள்தான் தீர்வைக் கோருகிறோம். ஆனால் எதிர் மறையாக சித்தரித்து மிரட்டப்பார்க்கிறது" என்கிறார்.

2004ல் பதவிக்கு வந்த ராஜபக்ஷே 10 ஆண்டுகால தனது ஆட்சியினை நிறைவு செய்துள்ள இவ்வேளையில் தன்னை நிரந்தர ஜனாதிபதியாக்கிக் கொள்ள எடுத்து வரும் நடவடிக்கைகளோடு தனது ஆட்சிக்காலத்தை மேலும் தொடரவே விரும்புகிறார். இன்னும் இரண்டு வருட காலம் சமாளித்துவிட்டாரெனில் போர் குற்ற விசாரணை சர்வதேச விசாரணை என எதிலும் தான் சமாளித்து உலக நாடுகளின் கண்களில் மண்ணைத் தூவிவிட முடியும் என நம்புகிறார். தன்னால் முடியாத பட்சத்தில் தனது மகன் நமல் ராஜபக்சேவை அதிபராக்கும் திட்டமும் உள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபடுகிறது.

இலங்கை அரசியலில் பொருத்தமான பலமான எதிர்க்கட்சி ஒன்று இன்று இல்லை என்பதுதான் பெரும் சோகம். இது ராஜபக்சேவுக்கு தீனி போடும் ஒரு விடையமாகவே உள்ளது. இன்று அவரது ஒரே எதிரி தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் மட்டுமே என நம்புகிறார். பலப்பல மிரட்டல்கள், உருட்டல்கள், கொஞ்சல்கள் என தமிழ் தேசியக் கூட்டமைப்பை தன் கைக்குள் போட்டுக் கொள்ளவும் அவர் பிரயத்தனங்களை மேற்கொண்டார் - மேற்கொண்டும் வருகிறார் என்பதும் உண்மையே.



குகன், சென்னை.

ஆனால் கூட்டமைப்பினருக்குத் தெரியும் ராஜபக்சவோடு இணைந்து போனால் வடபகுதி, - குறிப்பாக தமிழர் பகுதியில், தமது செல்வாக்கினை பெருவாரியாக இழக்க நேரிடுமென்று. தமிழ் மக்கள் ஒரு விதமான மனோநிலை கொண்டவர்கள். எத்தனை அபிவிருத்திகளை காட்டினாலும் உரிமை எனும் விடயத்தில் சமரசம் செய்து கொள்ளமாட்டார்கள். இதை "யாழ்பாண மனோபாவம்" என வேடிக்கையாக சொல்வதுண்டு. உதவி பெறும் வரை உன்னோடென்பர். பெற்றுக் கொண்டபின் உரிமை எங்கே என்பர். என்று கடந்தகால அரசுசார் போராளியொருவர் கூறிச் சிரிக்கிறார்.

இது ஒரு புறமிருக்க வடபகுதியில் இராணுவ ஆக்கிரமிப்புகளும் சிங்களக் குடியேற்றங்களும் நாளடைவில் தமிழ் மக்களின் பெரும்பான்மை வாக்குகளை குறைத்துவிடும் அபாயத்தை மறந்துவிடுவதற்கில்லை. ராஜபக்ஷ தலைமையிலான தனிப் பெரும்பான்மை பெற்ற நிர்வாக முறை மீண்டும் தோன்றினால் அல்லது இன்னும் 10 ஆண்டுகளுக்கு நீடித்தால் தமிழர்கள் வடக்கில் இல்லாமலேயே போய்விடுவார்கள் என்கிறார் கொழும்புத் தமிழர் ஒருவர்.

கிளிநொச்சியில் 10000 இராணுவக் குடியிருப்புகள் இராணுவத்தினரை நிரந்தரமாகக் குடியேற்றுவதற்காக அமைக்கப்படுகிறது. இது தொடர்ந்தால் அடுத்த ஐந்து ஆண்டுகளில் தமிழர் வாழ்ந்த சுவடுகள் அழிந்து போய் சிங்கள மயமாகிவிடும். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல பிரச்சினைகள் இருந்தாலும் உடனடியாக மேற் கொள்ள வேண்டிய பணி சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்துவதுதான். இந்திய பிரதமர் மோடியிடம் இந்தக் குடியேற்றங்கள் தொடர்பில் விரிவாக விளக்கியுள்ளோம். இந்தியாவின் பாதுகாப்பு வடக்கின் எல்லையிலும் விரிந்திருக்கிறது என்பதை இந்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.

இந்திய பிரதமர் மோடி எமது பிரச்சினையில் கரிசனம் கொண்டுள்ளார். விரைவில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்வார் அதற்கான உறுதிகளை அளித்துள்ளார் என தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் பிரதமர் சந்திப்பின் பின்னான நம்பிக்கை தரும் அல்லது சம்பிரதாய பூர்வமான அறிக்கை வெளியான போது காங்கிரஸ் வட்டாரத்தில் நமட்டுச் சிரிப்பு எழுந்திருக்க வாய்ப்பும் இல்லாமல் இல்லை. எதுவாயினும் இன்று கூட்டமைப்புக்கு இந்தியாவைவிட்டால் அரசியல் செய்வதற்கு வேறு வழியில்லை என்பதை ஒத்துக்கொண்டே ஆகவேண்டும்.

இலங்கை அரசு சீனாவையும் ஜப்பானையும் பாகிஸ்தானையும் ஏன் இந்தியாவையும் நண்பர்களாகவே பிரஸ்தாபிக்கிறது. ஆயினும் இலங்கையெனும் மாயமான் வீசிய வலையில் சிக்கிக் கொள்ளாமல் இந்தியா தன் பக்கமுள்ள காய்களை நகர்த்தி தன்னில் இருந்து பிரிக்க முடியாத தமிழ் நாட்டு தமிழர்களின் விருப்பத்தையும் இலங்கைத் தமிழரின் உரிமைகளையும் தனது பாதுகாப்பையும் எவ்வாறு உறுதிப்படுத்தப் போகிறது என்பதுதான் கேள்வி. ☼

இராணுவம் குடிகொண்டதால்

இடம்பெயரும் கேப்பாப்பிலவு

செல்வரட்ணம் சிறிதரன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குள் வற்றாப்பளை அம்மன் கோவில் பிரதேசத்தில் அமைந்திருக்கிறது கேப்பாப்பிலவு கிராமம்.

இறுதி யுத்தத்தின்போது இந்தக் கிராமத்தை இராணுவத்தினர் கைப்பற்றியிருந்தனர். இந்தக் கிராமத்தில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த மக்கள் யுத்தம் காரணமாக அங்கிருந்து வெளியேறி அகதி முகாம்களில் வாழ்ந்தார்கள்.

கேப்பாப்பிலவு கிராமத்தை உள்ளடக்கியதாகப் பரந்த ஒரு பிரதேசத்தில் முல்லைத்தீவு மாவட்டத்திற்கான பாதுகாப்புப் படைகளின் தலைமையக முகாம் அமைக்கப்பட்டிருந்தது.

இதனால், யுத்தம் முடிவுக்கு வந்து மீள்குடியேற்றம் ஆரம்பமாகியபோதிலும், கேப்பாப்பிலவு கிராமத்தைவிட்டு இராணுவத்தினர் வெளியேறவில்லை. தமது சொந்தக் கிராமத்திலேயே தங்களை மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் என்று அந்தக் கிராமத்து மக்கள் போராடினார்கள். அவர்களை வேறிடத்தில் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டபோது, அவர்கள் அதனை முழுமையாக எதிர்த்தார்கள். வேறிடத்தில் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததனால், அவர்கள் மனிக்பாம் இடைத்தங்கல் முகாமில் இருந்து வெளியேற மாட்டோம் என்று அடம்பிடித்துப் போராடினார்கள். ஆயினும் அந்தப் போராட்டம் வெற்றியளிக்கவில்லை.

கேப்பாப்பிலவு கிராமத்திற்கு வெளியில் அமைந்துள்ள சீனியாமோட்டை என்ற இடத்தில் கேப்பாப்பிலவு மாதிரி கிராமம் என்ற குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டு, இந்த மக்கள் குடியேற்றப்பட்டார்கள். இங்கு குடியேற்றப்படுவதற்காக மனிக்பாம் முகாமில் இருந்து இந்தக் குடும்பங்களை இராணுவத்தினர் ஏற்றிச் சென்று காட்டுப்பகுதியில் இறக்கிவிட்டு, அவர்கள் பார்த்திருக்க அவர்களுக்கான கொட்டில்கள் அமைப்பதற்கு வசதியாகக் காடுகளை அழிக்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தனர்.

கேப்பாப்பிலவு கிராமத்து மக்களின் இந்த மீள்குடியேற்ற நடவடிக்கை குறித்து உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன. வேறிடத்தில் குடியேறப் போவதில்லை, சொந்த கிராமத்திற்குச் செல்வதற்குத் தங்களை அனுமதிக்க வேண்டும் என்று அந்த மக்கள் எவ்வளவோ போராடினார்கள். ஆனால் பலன் கிட்டவில்லை.

கேப்பாப்பிலவு கிராமத்தில் பூர்வீகமாகக் குடியிருந்த குடும்பங்கள், பல்கிப்பெருகுவதனால் 150ற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு அங்கு காணிகள் இல்லாமலிருந்தது. இடம்பெயர்வின்போது இந்தக் குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு, முதலில், சீனியாமோட்டையில் புதிதாக வீடுகள் அமைக்கப்பட்டு குடியேற்றப்பட்டன.

தொடர்ந்து படிப்படியாக ஏனைய குடும்பங்களும் தற்காலிக கொட்டில்களில் இங்கு குடியேற்றப்பட்டன. பின்னர் அந்தக் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் இராணுவத்தினரால் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், இரண்டாவது கட்டமாக அங்கு நிர்மாணிக்கப்பட்டுள்ள 101 நிரந்தர வீடுகளைக் கையளிக்கும் வைபவத்திலேயே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கலந்து கொண்டிருந்தார்.

கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்தில் இன்னும் 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்காலிகக் கொட்டில்களில் வசித்து வருகின்றன. இந்தக் குடும்பங்களுக்கென நிரந்தர வீடுகளை அமைக்கும் மூன்றாம் நான்காம் கட்டங்களிலான திட்டங்களில் மூன்றாம் கட்ட வீடுகளை நிர்மாணிப்பதற்கான அடிக்கல்லையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நாட்டியுள்ளார்.

இங்கு உரையாற்றிய அவர் இடம்பெயர்ந்த மக்களில் 98 வீதமானவர்கள் அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஆனால், வலிகாமம் வடக்கு உட்பட பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இன்னும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லமுடியாத வகையில் இராணுவத்தினர் பொதுமக்களின் காணிகளில் நிலைகொண்டிருக்கின்றார்கள். கேப்பாப்பிலவு கிராமத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்த குடும்பங்கள்கூட, இன்னும் அவர்களுடைய சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

ஆனால், கேப்பாப்பிலவு கிராமத்தின் வயற்காணிகள் சுமார் 200 ஏக்கர் அளவில் இரண்டு கட்டங்களாக அந்தக் கிராமத்து மக்களிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டாம் கட்டமாக 105 ஏக்கர் காணிகளை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உரியவர்களிடம் கையளித்துள்ளார். அதேநேரம் இன்னும் 165 ஏக்கர் வயற்காணிகள் இன்னும் விமானப்படையினர் வசம் இருப்பதாகவும், அவற்றையும் திருப்பித்தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த ஊர் மக்கள் அவரிடம் மகஜர் கையளித்து கோரியிருக்கின்றார்கள்.

சுற்றி வளைப்புகளும் பாதுகாப்புச் செயற்பாடுகளும்

இராணுவம் நிலைகொண்டிருப்பதனால், இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்தக்கிராமங்களுக்குத் திரும்பிச் செல்வதில் பெரும் சிக்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இது குறித்து அரசு கவனம் செலுத்த மறுத்து வருகின்றது. தேசிய பாதுகாப்புக்கும்,இராணுவத்திற்கும் முன்னுரிமை என்ற கொள்கை அடிப்படையில் இடம்பெயர்ந்த மக்கள் சொந்தக் கிராமங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டும் என்ற நியதி காற்றில் பறந்திருக்கின்றது. அத்துடன், வட்டக்கச்சி அரச பண்ணை உட்பட பெரும் வயல் மற்றும் மேட்டு நிலக்காணிகளில் இராணுவத்தினர் விவசாயம் செய்வதனால், மீள்குடியேறிய மக்களின் வாழ்வா தாரமும், குடும்பப் பொருளாதாரமும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

அரசாங்கம் வழங்குகின்ற சம்பளத்தைப் பெறுகின்ற இராணுவச் சிப்பாய்கள் தோட்டச்செய்கைகளிலும், நெற்செய்கைகளிலும் ஈடுபடுவதனால், இராணுவம் தனது விவசாய உற்பத்தியை குறைந்த விலைக்கு வெளிச் சந்தையில் சந்தைப்படுத்துகின்றது. இதனால், பரம்பரையாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள குடும்பங்கள், பெரும் பணச்செலவிலான தமது விவசாய உற்பத்திகளுக்கு உரிய சந்தை விலையைப் பெறமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. மல்லாவி, துணுக்காய், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பல இடங்களில் இந்த நிலைமை தொடர்ந்து நிலவுகின்றது. இந்தச் சூழ்நிலையில் பொதுமக்களின் காணிகளிலும் வயற்காணிகளிலும் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருடன் ஒத்து வாழ்வதன் மூலம் பொருளாதாரம் எவ்வாறு வளர்ச்சியுறும் என்பது தெரியவில்லை.

சிவில் வாழ்க்கையில் இராணுவத்தைப் புகுத்தி வருகின்ற அரசாங்கம், நாட்டில் சிவில் நிர்வாகத்துடன் இணைந்த சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதிலும் இராணுவத்தையும் இணைத்திருக்கின்றது. பாதுகாப்பு அமைச்சின் கீழ் பொலிஸ் படையின் பல பிரிவுகளையும் உள்ளடக்கியுள்ள அரசாங்கம், ஜனநாயக நாடுகளில் பொலிசார் மேற்கொள்கிற சட்டம் ஒழுங்கை நிலைநிறுத்தும் நடவடிக்கைகளிலும், இராணுவத்தையும் இணைத்துள்ளது.

அரசுக்கு எதிரான நடவடிக்கைகள், போராட்டங்கள் நடக்கும் போது ஜனநாயக நாடுகளில் பொலிசாரையே அரசாங்கங்கள் முழுமையாக ஈடுபடுத்துவது வழக்கம். பொலிசாரின் தடியடி ,துப்பாக்கிப் பிரயோகத்தையும் மீறி நிலைமைகள் கட்டுக்கடங்காத சந்தர்ப்பத்தில் பெரும் குழப்பங்கள் நிகழ்கின்றபோது, பொலிசாரினால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாத நிலையிலேயே இராணுவத்தினரை உதவிக்கு அழைப்பதும் வழக்கம். ஆனால் இங்கு,குடிநீருக்கான வெலிவேரியா போன்ற சாதாரண போராட்டங்களுக்குக் கூட இராணுவத்தினரை அனுப்பி அளவுக்கு மிஞ்சிய சக்தியைப் பயன்படுத்தி போராட்டங்களை அடக்கி ஒடுக்குகின்ற போக்கு இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுகின்ற போக்கின் வழியிலேயே யுத்தமோதல்கள் ஓய்ந்து, அமைதி நிலவுகின்ற வேளையில், இறுதி யுத்தத்தில் இல்லாமல் செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் மீண்டும் தலையெடுக்கப் பார்க்கின்றார்கள்,

ஒன்றிணைந்து மீண்டும் யுத்தத்தைக் கொண்டு வரப்பார்க்கின்றார்கள் என காரணம் காட்டி, சுற்றி வளைப்புக்களையும் தேடுதல் நடவடிக்கைகளையும் அரசு முடுக்கிவிட்டிருக்கின்றது.

நாட்டில் யுத்தம் இல்லை. அவசரகாலச் சட்டமும் நீக்கப்பட்டுவிட்டது. இருந்தும்,அவசரகாலச் சட்டத்துடன் கூடிய யுத்த நிலைமையைப் போன்று வடக்கில் யுத்த மோதல்கள் இடம்பெற்ற பகுதிகளில் இராணுவத்தினரும் பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினரும் இணைந்து சுற்றி வளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

முக்கிய போக்குவரத்து மையங்களிலும் இராணுவத்தினர் கடமையில் நிறுத்தப்பட்டு ஆயுதங்களுடன் கண்காணிப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றார்கள். ஓமந்தை சோதனைச்சாவடியிலும் அடையாள அட்டைகளைப் பரிசீலனை செய்து கண்காணிக்கும் நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றது.

யுத்தம் முடிவடைந்து ஐந்து வருடங்களாகப் போகின்றது. இந்த நிலையிலும், நாட்டில் பிரச்சினைகளைத் தீர்த்து, உண்மையான நல்லிணக்கத்தையும் மக்கள் மத்தியில் ஐக்கியத்தையும் நிலைநாட்டுவதற்குப் பதிலாக, யுத்தமோதல்கள் இடம்பெற்ற பகுதிகளை நிரந்தரமாக இராணுவ மயப்படுத்துவதற்கு அரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் நிச்சயமாக சிறுபான்மை இன மக்களை மட்டுமல்ல பெரும்பான்மை இன மக்களையும் சினம் கொள்ளவே செய்யும். அத்துடன் அரசாங்கத்தின் மீது அதிருப்தியடைந்து வெறுப்புக் கொள்ளவே வழி சமைக்கும் என்பதில் சந்தேகமில்லை. ☼

புல்லுமலை

அனாதைக் கிராமம்

மட்டக்களப்பு நகரத்தின் மேற்கே 30 கிலோ மீற்றருக்கு அப்பால் செங்கலடி பதுளை பிரதான வீதியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு எல்லைக் கிராமமாக 'புல்லுமலை' எனும் அழகிய கிராமம் அமைந்துள்ளது.

அதிகளவிலான தேக்குமரங்களைக் கொண்டதும், விவசாய வள நிலத்தைக் கொண்டதுமான இக்கிராமம் 150 வருடங்களுக்கு முன்பு ஒரு சிறிய கிராமாகும். ஏறத்தாள பத்தாயிரம் ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட இக்கிராமம் பெரும்பான்மை தமிழர்களைக் கொண்ட நிலமாகும்.

1960களில் அண்ணளவாக 300 குடும்பங்களைக் கொண்டிருந்த இக்கிராமத்தில் கோவில்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள், தமிழர்களின் வியாபார தலங்கள் என்பன நிறைந்த நகராக இருந்தது.

1980களின் தொடக்கம் வரையில் வசதிகள் படைத்ததும் வளங்கள் நிறையப்பெற்றதுமான இக்கிராமத்தில் பொருட்கள் கொள்வனவுக்காக பெரும்பான்மையினத்தவர்கள் வந்து போகும் வணிக நகராக புல்லுமலை விளங்கியது.

படிப்படியாக அதிகளவிலான குடும்பங்கள் குடியேறத் தொடங்கி சுமார் 800 வரையிலான தமிழ்க்குடும்பங்கள் குடியிருந்த இக்கிராமம் விவசாயத்தையே தன் ஆதாரமாகக் கொண்டிருந்தது.

1978ல் நிகழ்ந்த புயல் இயற்கை அனர்த்தத்தினால் இக்கிராமத்தின் இயல்பு வாழ்வு பாதித்தது. 10பேர் புயல் அனர்த்தத்தில் பலியானார்கள். மக்களின் சொத்துக்களும் உடமைகளும் இப்புயல் அனர்த்தத்தில் பறிபோனது. மீண்டும் எழுந்து வாழ்வாதாரத்தில் முன்னேறிய மக்களின் வாழ்வு மீள் எழுச்சி கொண்டது.

1980களின் தொடக்கத்தில் புல்லுமலையும் அதனையண்டிய கிராமங்களும் சுயமுன்னேற்றம் கண்ட போது பாடசாலைகளும் விருத்தியடைந்தன. தொழில் வளர்ச்சி , கல்வி முன்னேற்றம், சுயபொருளாதார உயர்வுகள் வளர்ச்சியின் மாற்றம் புல்லுமலைக்கிராமம் தன்னிறைவு கொண்ட கிராமமாக பரிணமித்தது.

1983, 84களில் ஏற்பட்ட இனக்கலவரத்தின் பாதிப்பில் இடம்பெயர்ந்து அகதிகளாக பதுளை போன்ற மலையகப் பகுதிகளிலிருந்து வந்த மக்களையும் அரவணைத்தது புல்லுமலை.

காலத்துக்குக் காலம் யுத்தத்தின் பாதிப்பு இக்கிராமத்தையும் அதிகளவில் காவு கொண்டது. யுத்தத்தினால் ஊர்களை விட்டு மக்கள் வெளியேறிவிட ஒரு கட்டத்தில் புல்லுமலை மனிதர்கள் இல்லாத ஊராக இருந்ததும் ஒருகாலம்.

காலத்துக்கு காலம் சிங்களப் பேரினவாத அரசினால் திட்டமிட்டு நடாத்தப்பட்ட இனச்சுத்திகரிப்பின் கொடுமையான தாக்கத்துக்கு உள்ளாகி தனது பொருளாதார வளத்தை மக்களின் நிம்மதியை இழந்து போகத் தொடங்கிய போது புல்லுமலைக் கிராமமமானது மனிதர்களை இழந்த நகராகியது.

1983 தொடக்கம் 1990 வரையில் 5தடவைக்கு மேல் சிங்களப்படைகளால் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு பொதுமக்கள் வெட்டியும் சுட்டும் படுகொலைகள் செய்யப்பட்ட கறைகளையும் கண்ணீரையும் சுமக்கும் இந்த மண்ணின் கதைகள் ஆயிரம்.

1983ல் இக்கிராமத்தில் புகுந்து படைகளினால் 45 வரையான வீடுகள் கொழுத்தப்பட்டதோடு மக்களின் சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டு உயிர்களும் பலியெடுக்கப்பட்டன.

நெஞ்சில் நெருப்பெரியும் கதைகள் பல இருந்தாலும் இன்றும் வயோதிப மனங்களால் நினைவு கொள்ளப்படும் கதையாக புல்லுமலை வாசியான செல்லத்தம்பி பேரின்பராசாவும் அவரது மனைவியும் கொல்லப்பட்ட கதையானது மிகவும் கொடுமையான கதையாகும்.

83ல் நடைபெற்ற இப்படுகொலையில் செல்லத்தம்பி பேரின்பராசாவின் மனைவி கற்பிணியாக இருந்தார். கணவன் முன்னால் கற்பிணியான அவரை சிங்களப்படைகள் பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தியதோடு நின்றுவிடாமல் கத்தியால் பேரின்பராசாவின் மனைவியின் வயிற்றைக் கிழித்து அவரது குழந்தையை காலால் மிதித்துக் கொன்றார்கள். கைகளும் கால்களும் கட்டப்பட்ட நிலமையில் இருந்த பேரின்பராசாவுக்கு காதுக்குள் வெடிவைத்து கொன்று போட்டார்கள். அதே ஆண்டு மேற்கொள்ளப்பட்ட படுகொலையின் உச்சம் 300 வீடுகள் தீயிட்டுக் கொழுத்தி அழிக்கப்பட்டது.



கிராம நுளைவாயிலிலுள்ள படுகொலைகளின் நினைவுச் சின்னம்

ஆனந்தி

84ம் ஆண்டு புலுலுமலை பிள்ளையார் கோவிலில் திருவெம்பாவை பூசை நிகழ்ந்த நேரம் பூசையில் நின்ற மக்களில் 9 ஆண்களை கோவிலுள் புகுந்து இராணுவத்தினர் சுட்டுக் கொன்றார்கள். அதே ஆண்டு கோவிற்பூசகர் சுற்றுவட்டாரத்து வியாபாரிகள் கடத்தப்பட்டார்கள். இன்றுவரை அவர்களது நிலமை வெளியில் வரவேயில்லை.

1985 தைத்திங்கள் நாலாம் நாள் மூன்றாவது முறையாக புல்லுமலையில் புகுந்த படைகளால் மேற்கொள்ளப்பட்ட அழிப்பில் நிலஅளவையாளர் உட்பட ஏழுபேரைச் சுட்டுக்கொன்றதோடு மீண்டும் பல வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டு உடமைகள் சொத்துகள் கொள்ளையிடப்பட்டது. அதேமாதம் 10ம் நாள் கோவிற்பூசகர் மற்றும் ஒன்பது பேர் கொல்லப்பட்டார்கள்.

1985ல் இந்துமதகுருக்கள் கடத்தப்பட்டு காணாமற் போனார்கள். 1986ல் ஏற்பட்ட கொடூரமான இனக்கலவரத்தில் இன அழிப்பில் 4 குடும்பங்கள் தலைமுறைகளே இல்லாமல் அழிக்கப்பட்டதோடு 40ற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள்.

1986ல் இங்கு இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. முகாம் அமைக்கப்பட்ட பின்னர் இக்கிராமத்தின் ஆண்கள் காடுகளில் தான் வாழத்தொடங்கினார்கள். திடீரெனப்புகும் இராணுவத்தினரால் ஆண்கள் வகைப்பிரிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுவார்கள். கொண்டு செல்லப்படுவோர் வீடு திரும்பிய வரலாறில்லை. நள்ளிரவுகளில் வீடுகளைத் தட்டும் படையினரால் பெண்கள் தனியாக அழைத்துச் செல்லப்பட்டு பாலியல் வதைக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்ட பலரின் விவரங்களோ எண்ணிக்கையோ இதுவரையில் மறைந்து போன கதைகள்.







ROSY Heating & Cooling

உங்களுக்கு அடிக்கடி தொல்லை கொடுக்கிறதா?

Excellent Service
- 24/7 on Duty
- Just a Call Away
- Residential & Commercial
- Emergency Response
- Extra labour warranty

New Installation
- Air Conditioners & Humidifiers
- High Efficiency Furnaces
- Programmable Thermostats
- Water Heaters
- BBQs & Stove Gas lines

Maintenance
- Cleaning and Safety Inspection
- Precision Tune-Up
- Regular Yearly Maintenance

A/C or Heating Problems?

BIG 10% SEASONAL DISCOUNT GURANTEED

Save energy !!

Highly Trained & Licensed Gas Technicians

$ave money

Call: Sarath (Shelton)
(647) 831- ROSY (7679)
Email: rosyhvac@yahoo.ca

TASTY LAND RESTAURANT


தாயகத்தின் சுவை குன்றாத தரமான சைவ அசைவ உணவுவகைள்,
தென்னாசிய உணவுகள்
கனேடிய உணவுகள்
அனைத்தும் நீங்கள் காத்திருக்கும் போது சமைத்துத்தரப்படும்





Wondeland
இல் ஒரு அதிசயம்

Fresh foods
Asian and Canadian
We Specialy for Sri Lankan Fresh food



9699 Jane street, Vaughan,Ont.,L6A 0A5
Tel: 905 553 9400

1986ல் கைது செய்யப்பட்ட ஆண்கள் ஏழுபேர் சுடப்பட்ட பின்னர் கோவில் வளாகத்தில் ரயரிட்டுக் கொழுத்தப்பட்டார்கள். 400ற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு நிகழ்ந்த அநீதியை கேட்கவோ, பார்க்கவோ, கவனிக்கவோ எந்த மனிதவுரிமைவாதிகளுமில்லை.

1986ல் மிகவும் மோசமான படுகொலையென நினைவு கொள்ளப்படும் கொலையானது 1986 கார்த்திகைத் திங்கள் 10ம் நாள் நடைபெற்ற போது கொலை கொள்ளை தீவைப்பு உட்பட பெண்கள் மிகவும் மிலேச்சத்தனமாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார்கள். இக்கொலையில் 103 தமிழர்கள் வெட்டியும் சுட்டும் படுகொலை செய்யப்பட்டார்கள்.

தொடர்ந்த இராணுவ அச்சுறுத்தலும் படுகொலைகளும் வாழ முடியாத அவலமும் புல்லுமலை மக்களை 1990ம் ஆண்டு ஆடித்திங்கள் 9ம் நாள் படுகொலை நிகழ்வோடு நிரந்தரமாக கிராமத்தைவிட்டே வெளியேறச் செய்தது. 09.06.1990 அன்று நிகழ்ந்த படுகொலையில் 40இற்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டார்கள். இறந்தவர்கள் போக தப்பியவர்கள் அன்றோடு தாங்கள் காலம் காலமாக வாழ்ந்த புல்லுமலையை விட்டு இடம்பெயர்ந்து நிரந்தரமாக வெளியேறினார்கள்.

நீர்வளம் குன்றாத வெளிக்காகண்டிக்குளம், புல்லுமலைக் குளம், பனிச்சையடிக்குளம், கல்பொத்தானைக்குளம், தும்பலாஞ்சேனைக்குளம், 40ஏக்கர் குளம் என இங்கு அமைந்த அழகான புல்லுமலைக்கிராமம் தனது மனிதர்களை இழந்து தனியனாகியது.

அழகான கட்டடங்கள், பாடசாலைகள், கோவில்கள் யாவும் இடிக்கப்பட்டு கட்டங்களற்ற நகராக புல்லுமலை தனது வசந்தத்தை இழந்து போனது. 2000 ஆண்டளவில் புல்லுமலையை அண்டிய இடங்களில் சிறியளவு மக்கள் குடியேறிய போதும் புல்லுமலைக்கு யாரும் திரும்பவில்லை. காலம்காலமாக சேமித்த சொத்துக்கள் உழைப்பால் உயர்ந்த வீடுகள் தொழில் நிலையங்கள் யாவையும் இழந்த காடாகவே காட்சி கொடுத்தது புல்லுமலை.

பின்னர் இயேசு சபை அகதிப்பணி வீட்டுத்திட்டத்தினை அறிமுகப்படுத்தி சிலருக்கான வீடுகளைக் கட்டிக்கொடுத்தது. குறைந்தளவு மக்கள் புல்லுமலையில் மீளவும் குடியேறினார்கள். குடியேறிவர்கள் வியசாயத்தை மேற்கொள்ளத் தொடங்கினர். எனினும் மக்கள் இல்லாது போன காலத்தில் குடிமனைகள் இருந்த இடங்களில் யானைகள் வரவு அதிகமாகியது. பயிர்களை யானைகள் அழிக்கத் தொடங்கியது அத்தோடு உயிர்களும் யானைகளுக்குப் பலியாகத் தொடங்கியது. எனினும் தங்களது விடா முயற்சியில் மீண்டும் தங்கள் சொந்த மண்ணில் வாழும் கனவோடு வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பத் தொடங்கிய மக்களை 2007 யுத்த இடப்பெயர்வு மீண்டும் சொந்த மண்ணிலிருந்து பிடுங்கியெறிந்து மீண்டும் அகதியானார்கள்.

புல்லுமலையை விட்டு மக்கள் வெளியேறி அழகான புல்லுமலைக்கிராமம் ஆட்களற்றுப் போக சிறுகச்சிறுகச் சேர்த்த மக்களின் சொத்துக்கள் மீண்டும் கொள்ளையிடப்பட்டு கட்டடங்கள் இடிக்கப்பட்டு புல்லுமலையின் அழகு சுடுகாடாகியது.

யுத்தத்தின் முடிவின் பின்னர் யானைகளின் ஆதிக்கம் நிறைந்த கிராமமாக புல்லுமலைக்கிராமம் மனிதர்கள் வாழ அச்சப்படும் கிராமமாகி தனது சந்ததியைத் தேடும் ஏழைக்கிராமமாக இருக்கிறது.

மீள்குடியேற்றத்தின் போது 148 குடும்பங்கள் குடியேறியிருந்தார்கள். அடிப்படை வசதிகள் ஏதுமற்று தங்கள் இயல்பு வாழ்வை தங்கள் பூர்வீக நிலத்தில் தேடும் மக்களாக திரும்பிய போதும் அவர்களுக்கான வசதிகள் மறுக்கப்பட்டு மிகுந்த ஏழ்மையில் வாழ்வைத் தொடங்கியிருந்தார்கள். எனினும் புல்லுமலையின் வறுமையாலும் வசதிகள் இல்லாமையாலும் தற்போது 136 குடும்பங்களே மிஞ்சியிருக்கிறார்கள். ஆண்கள் 234 பேரும் பெண்கள் 193 பேரும் வாழும் இக்கிராமத்தில் வாக்களிக்கும் தகுதி பெற்ற 274 பேரைக் கொண்டு ஏதோ வாழ்கிறது.

ஒருகாலம் 800 பிள்ளைகள் கல்விகற்ற புல்லுமலை தமிழ்க்கலவன் பாடசாலையானது முதலாம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரையான வகுப்புக்களைக் கொண்டிருந்தது. யுத்த முடிவின் பின் தற்போது குடியேறிய குடும்பங்களிலிருந்து 90 பிள்ளைகள் மட்டுமே பாடசாலைக்குச் செல்கின்றனர்.

இங்கு போதியளவு அசிரியர்கள் இல்லை. கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர் இல்லாது இப்பாடங்களைக் கற்க முடியாத நிலமையில் பிள்ளைகள் அவதிப்படுகின்றனர்.

மீளவும் உயிர்த்துள்ள தமிழ்க்கலவன் பாடசாலை மாணவர்களின் கல்வி நிலையும் அடிப்படை வசதிகளும் மிகவும் பின்தங்கியே காணப்படுகிறன. போக்குவரத்து முதல் பிள்ளைகளுக்கான கற்கை உபகரணங்கள் வரையிலும் உதவிகளை எதிர்பார்த்தே கனவுகளோடு மாணவர்கள் தொலைதூரத்திலிருந்தும் நடந்து சென்று படிக்கின்றனர்.

யுத்தத்தின் பாதிப்பு இந்தக் கிராமத்துக் குழந்தைகளையும் குடும்பங்களையும் மிகவும் பாதித்துள்ளது. உளவள ஆற்றுப்படுத்தல் முதலான சமூக மேம்பாடு வரை இக்கிராமத்துக்குச் செய்ய வேண்டிய மாற்றங்கள் நிறையவே இருக்கிறது.

யுத்தத்தினால் பெற்றோரை இழந்த பிள்ளைகள், விதவைகள், குடும்ப வறுமையைப் போக்க அரபு நாடுகளுக்குச் சென்று துன்புறும் பெண்களின் குழந்தைகள் வரை இக்கிராமத்தின் கண்ணீர்க் கதைகள் பல. யுத்தத்தினாலும் தொடர் இனச்சுத்திகரிப்புகளாலும் அழிவுற்ற புல்லுமலை மண்ணின் மீள் எழுகைக்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் மறுவாழ்வை வழங்க வேண்டும். தொலைந்து போன புல்லுமலையின் வாழ்வை மீளவும் கொடுத்து அவர்களைத் தூக்கி நிமிர்த்தும் தூண்களாக ஒவ்வொரு தமிழரும் தங்கள் கடமையைச் செய்தலே அழிந்து போன புல்லுமலையின் எழுகைக்கான மாற்றீடாகும்.







வாசிப்போமா... நாம் (சு)வாசிப்போமா...

வாசிப்பில் வசப்படும் வார்த்தைகள்

-கவிஞர் சக்தி ஜோதி

சிறுவயதிலிருந்தே புத்தக வாசிப்பில் தன்னைக் கரைத்துக் கொண்ட தலைமுறையைச் சேர்ந்தவள் நான். வாசிப்பு என்பது ஒரு பழக்கமாக இருந்து பின்பு அது ஒரு தேடலாக மாறிவிட்டது. "தேடல்" என்பது மிகச் சாதாரணமாகக் கடந்துவிடக் கூடிய சொல்லே அல்ல. அது மிகப்பெரிய தத்துவம். இதனை அறிந்துகொள்ள புத்தக வாசிப்பே உதவியது.

வாசிப்பதில் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்ட ஒருவருக்கு புத்தகம் என்பது ஒரு குழந்தை போல, இறக்கி வைக்கவும் தோணும், இறக்கிவிடவும் முடியாது. சதாபொழுதும் வாசிப்பதிலும் வாசிக்காத சமயத்தில் வாசித்ததைப் பற்றி சிந்திப்பதுமாகத்தான் இருக்க முடியும்.

வாசிப்பில் வார்த்தைகள் சிநேகமாகும். சிலசமயம் முரண்டு பிடிக்கும். இந்த இரண்டுமே வாசிப்பில் மோகத்தை வளர்த்தெடுக்கும். வாசிப்பது தனிமையைப் போக்கிக்கொள்ளும் வேட்கை. அக்கணத்தில் வார்த்தைகளை உருவி எடுத்து அர்த்தங்களை உயிர்ப்பித்துக் கொண்டிருப்பது என்பது ஒரு காதலான செயல். இவ்வாறு வாசிப்பில் புத்தகங்களை வெற்றி கொள்ளும் மனம் அந்தச் சொற்களுக்குள் புழுங்கி புதிய இன்னொரு புத்தகத்துக்கு ஏங்கித் தவிக்கும். கணக்கு வழக்கில்லாமல் புத்தகங்களைத் தேடித்தேடி வாசிக்கிற வழக்கத்தில் நூலகத்தைப் பயன்படுத்திய ஒரு தலைமுறையிலிருந்து விஞ்ஞானம், சரித்திரம், நிலவியல், மொழி, சமயம், தத்துவம், சமையல், கவிதை, வைத்தியம், பயணம் என கணக்கற்ற புத்தகங்களை புத்தகச்சந்தையில் கண்டடைகிற அடுத்த தலை முறையைக் காண்கிறேன். படைப்பாளர்களும் அதிகரித்துள்ளனர். இந்நிலையில் தெளிவான தேர்வில் புத்தக வாசிப்பில் நம்மை புதுப்பித்துக் கொண்டேயிருக்கவேண்டும்.

எப்போதும் மகிழ்ச்சி

-இறையன்பு ஐ.ஏ.எஸ்.

மகத்தான வரலாறுகளை அறியவும், உன்னதமான மனிதர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும், மானுடத்தின் போராட்டம் குறித்துப் புரிந்து கொள்ளவும் வாசிப்பது அவசியம். ஒரு நல்ல புத்தகம் அறிவுரை சொல்வதில் ஆசானாகவும், பாதுகாப்பளிப்பதில் பெற்றோராகவும், தோள் மீது கைபோட்டுக் கவலையைப் பகிர்ந்து கொள்வதில் தோழனாகவும் இருந்து நம்மை ஆற்றுப்படுத்தும்.

அறிவின் எல்லை தொடலாம்

-கவிஞர் தமிழச்சி தங்கபாண்டியன்

புத்தகங்கள் நமக்கு இன்னொரு உலகத்தை திறந்து விடுகின்றன. மனதை, அறிவை, புரிதலை, அனுபவங்களை விசாலமாக்குகின்றன.

புத்தகங்களில் சங்க காலம் குறித்தும் அறிந்து கொள்வோம். எச்.டி.வெல்ஸ் எழுதிய எதிர்காலம் குறித்தும் அறிந்து கொள்ளலாம். அனுபவ வாயிலாக புலன்களுக்கு சாத்தியமில்லாத விஷயங்களை புத்தகங்களின் மூலம், புரிந்து கொள்ள, தெரிந்து கொள்ள முடியாத உலகிற்கு நம்மை இட்டுச் செல்லும். மனித அறிவினால் தொட முடியாத எல்லைகளை, மனித வாழ் நாளுக்குள் தொடமுடியாத அறிவின் எல்லைகளை, கையளவு புத்தகங்கள், நம் உள்ளங்களில் எளிமையாகச் சேர்த்துவிடும். பெண்கள், புத்தகங்களைப் படிப்பதற்கு நேரமில்லை என்று சொல்வதே தவறு. எத்தனையோ விஷயங்களில் கவனம் செலுத்தும் போது, புத்தக வாசிப்பில் மட்டும் நேரமில்லை என்று சொல்லக்கூடாது. மனிதர்களைப் புரிந்துகொள்வதற்கும், நேசிப்பதற்கும் புத்தகங்கள் உதவுகின்றன.

வாசிக்கிறவர்கள் வாழ்கிறார்கள்

-எழுத்தாளர் ஆத்மார்த்தி

ஆண்டுதோறும் புதிய புத்தகங்களின் வருகை அதிகரிக்கிறது. ஆனாலும் இன்றைய தலைமுறையினரிடம் புத்தகம் வாசிக்கிற பழக்கம் குறைந்தே காணப்படுகிறது. இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று முரணான சேதிகள் என்றாலும் இரண்டுமே உண்மைதான். ஒருபக்கம் புத்தகங்களை வாங்குவதில் இருக்கின்ற ஆர்வம் புத்தகங்களை வாசிப்பதில் இருக்கிறதா என்பதே வினா. புத்தக வாசிப்பைப் பொழுதுபோக்கு என்றே பெற்றோர் நம்புகிறார்கள். மேலும் புத்தகங்களுக்காகச் செலவிடுவதை வீண் செலவு என்று நம்புவதும் அதனால் என்ன பெரிதாக நன்மை விளைந்துவிடப் போகிறது என்று வினவுவதும் புத்தக வாசிப்பைப் பின்னுக்குத் தள்ளுகின்றன. போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகிற சிலரைத் தவிர மற்றவர்களுக்குப் பெரும்பாலும் புத்தகங்கள் என்றாலே நினைவுக்கு வருவதே பாடங்கள் மட்டுந்தான் என்பது கவலைக்குரியது.

வாசிப்பில்லாத உலகம் கற்பனை செய்யவியலாத அழிவைச் சந்திக்க நேரும். ஒவ்வொரு வீடும் ஒரு சின்ன நூலகமாவது கொண்டிருந்தால் தான் உலகம் உன்னதமாகும். பல வருடங்களுக்கு முன்னால் தொழில் முறை சந்திப்பாக ஒருவரை சந்திக்கச் சென்றிருந்த போது அவரது வரவேற்பறையில் பல புத்தகங்கள் இருந்தன. அங்கே எழுதப்பட்டிருந்த வாசகம் என்னால் மறக்க இயலாதது. "யாரும் யாருக்காகவும் காத்திருக்கத் தேவையில்லை. புத்தகங்கள் இருக்கின்றன". உண்மைதானே..? சுவாசிக்கிற எல்லோரும் வாழ்வதாகப் பொருளில்லை. வாசிக்கிறவர்கள் வாழ்கிறார்கள்.

ஏன் படிக்க வேண்டும்?

-எழுத்தாளர் இந்திரா சவுந்தரராஜன்

வள்ளுவர் சொல்வதைக் கேட்போமா?

"கண்ணுடையர் என்பவர் கற்றோர், முகத்துஇரண்டு புண்ணுடையர் கல்லா தவர்" என்கிறார். நாம் படிக்கத் தெரிந்தும் படிக்காமல் வாழ்ந்தால் நமக்கு கண்கள் இருந்தும் பயனில்லை. அந்த கண்ணிரண்டும் புண்ணிற்கு சமமாம்!

பலர் படிப்பை, பள்ளிப்படிப்பு, கல்லூரிப்படிப்பு என்றே எண்ணுகிறார்கள். படிப்பது அதை எல்லாம் கடந்தது. எல்லாவற்றையும் படிக்க வேண்டும். இலக்கியம், சரித்திரம், விஞ்ஞானம், பூகோளம் என்று ஒன்றைக்கூட விடக்கூடாது. இதில் பிடித்ததை அதிகம் படிக்கலாம் தவறேயில்லை. அதிகமாய் ஒரு சரக்கை வண்டியில் ஏற்றினால் அச்சு முறிந்து விடும். அதிகமாய் சாப்பிட்டால் வாந்தி எடுக்க நேரிடும். ஆனால் அதிகமாக படித்தால் எதுவுமே ஆகாது. மாறாக சிந்தனைப் பொலிவு கூடும். வாழ்வில் தெளிவான முடிவுகளை எடுக்க முடியும்.

மண்டேலா! இவர் "புத்தகம் படிக்க அனுமதித்தால் போதும்... எத்தனை ஆண்டுகளானாலும் பரவாயில்லை, சிறையில் இருக்கிறேன்" என்றாராம். ஆனாலும் அரசாங்கம் அவர் படிப்பதற்கு அனுமதிதர யோசித்தது. ஏன் தெரியுமா? ஒரு புத்தகம் நூறு நண்பர்களுக்கு ஈடானது. ஒரு புத்தகம் சஞ்சீவி மூலிகையை விட மேலானது. புத்தகம் ஒருவர் அருகில் இருந்தால் அவரிடம் வாள், துப்பாக்கி, பீரங்கி என்று வலிமையான ஆயுதங்கள் பல இருப்பதை விட அது வலிமையானது. இதனால்தான் ஒரு நாட்டை அடிமைப்படுத்த எண்ணும் எதிரிகள் அந்த நாட்டின் நூலக த்திற்குத்தான் முதலில் தீயிடுவார்கள். புத்தகங்கள் எதிரிகளைத் திக்குமுக்காடவைப்பவை. நம்மிடம் புத்தகங்கள் இருந்தால் நம் எதிரிகளும் நம்மிடம் திக்குமுக்காடுவர்.

புத்தகம் வேறு, கடவுளின் அருள் வேறில்லை.

வாசிக்க வா தமிழா!

கவிப்பேரரசு வைரமுத்து

உயிரின் சுவாசமல்லவா புத்தகம்?
உனக்குள் ஒரு சூரியனல்லவா புத்தகம்?
அட்டையிட்ட அமுதமல்லவா புத்தகம்?
உனக்கு வரம்வர
யாரோ இருந்த தவமல்லவா புத்தகம்?

ஒரு நல்ல புத்தகம் திறந்து கொண்டால்
நரகத்தின் வாசல் மூடப்படும்

புத்தகம் என்பது எத்தனை சௌகரியம்?
இதோ செவ்வாய் கிரகம் பத்து ரூபாய்
இதோ கிளியோபாட்ரா என் பக்கத்தில்

அதோ என் மேஜைமேல் நிலா
என் பரண்மீது பசிபிக் கடல்
கால்மாட்டில் அண்டார்டிகா கட்டிலின் கீழே
ராஜராஜசோழன்

அடடா புத்தகம் என்பது எத்தனை சௌகரியம்?
புத்தகத்தின் புனிதம் எத்தனைபேர் அறிவார்?

மாணவர்க்கு -அது கட்டாயத்தாலி
காதலர்க்கு - தபால்பெட்டி
விருந்தாளிக்கு - தலையணை
சிலருக்கு - சேமிப்புவங்கி
நூலகர்க்கு ஓர் எண்ணிக்கை

புத்தகத்தின் புனிதம் எத்தனைபேர் அறிவார்?
புத்தகம் நாகரிகத்தின் உச்சம்

மணல் - கல் - தோல் - உலோகம்
பனைஓலை - காகிதம்
ஒலியிழை - ஒளியிழை
கணிப்பொறி

புத்தகத்தின் அவதாரம் காலந்தோறும் மாறும்
வாகனம் வேறு வேறு இலக்கு ஒன்றுதான்
மானுடம்
மானுடம்



மனைவி: *(அமைதியாக)*
"செருப்பு இருக்குதுங்க, ஆனாப் புத்திக்கு எங்கே போவீங்க?

பார் அதி போற்றும் பாரதி!

'சுப்பையா' என்று இளம் வயதில் அழைக்கப்பட்ட தமிழ் கவிதையுலகின் சூரியன் பாரதியின் இன்னுயிர் 1921 செப்டம்பர் 11ம் திகதி இவ்வுலகை விட்டுப் பிரிந்து சென்றாலும் அவர் மக்களின் மனப் பொந்திடை வைத்துச் சென்ற அக்கினிக் குஞ்சுகள் காட்டுத் தீயாய்ப் பற்றிக்கொண்டதை எந்த விதியாலும் தடுத்து விட முடியவில்லை. அவரின் ஞாபக தினத்தையொட்டி அவர் குறித்துப் பதிந்த எண்ணங்களின் பதிவு இது.



பூ.கொ.சரவணன்

தமிழ் நிலத்தில் ஈரம் பாய்ச்சி வீரம் விதைத்த சொல் உழவன். மண்ணுள்ள காலம் வரை மறக்க முடியாத கவிஞன். மக்கள் மனங்களில் வாழும் ஒருவன். அழகிய தமிழ் மகன் இவன்!. இளம் வயதில் அம்மாவின் பாசம் என்னவென்று தெரியாமல் அப்பாவின் வளர்ப்பில் வளர்ந்த அவருக்கு அப்பொழுது கணக்கு என்றால் பிணக்கு. இது வெகு காலத்துக்கு கல்வி முறையின் மீது வெறுப்பாகவே மாறியது. ஒரு சிறுவன் இளமையில் கல் என்று ஓயாமல் மனனம் செய்து சொல்லிக்கொண்டு இருந்த பொழுது 'முதுமையில் மண்' என்று சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தார் இவர்.

அற்புதமான கவிதை யாற்றல் பாரதி எனும் கலைவாணியை குறிக்கும் பட்டத்தை தந்தது. பாரதி சின்னப்பயல் என்று கவிதை பாட சொல்ல பார் அதி சின்னப்பயல் என எள்ளல் குறையாமல் பாடியது பாரதி தான்.

தமிழ் எழுத்துலகில் கார்ட்டூன் என்பதை அறிமுகப்படுத்தியது பாரதியாரே. அதை முழுதாக சித்திர பாரதி என்கிற நூலில் பார்க்கலாம். இளம் வயதில் பாரதிக்கு ஒரு காதல் இருந்தது. அந்த பெண்ணை சாகுந்தலை என்று அடையாளமிட்டு குறிக்கிறார். தன் மகளுக்கு அதே பெயரை வைத்தார் அவர்.

மதுரை தமிழ் சங்கம் நடத்திய போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது அவரின் கவிதை. அந்தக்கவிதை தான், 'செந்தமிழ் நாடெனும் போதினிலே'. பண்டிதர்கள் கடத்திக்கொண்டு போன பைந்தமிழ் குழந்தையை கண்டுபிடித்துக் கொடுத்த காவல் நிலையமான பாரதியின் எளிய நடை அக்காலத்தில் பெரும் விமர்சனத்துக்கு உள்ளானது. அதை பண்டிதர்கள் எதிர்த்தார்கள். பாரதி, "கவியரசன் தமிழுக்கு இல்லை என்ற வசை என்னால் கழிந்தது!" என்று மட்டும் சொன்னார்.

எக்கச்சக்க வறுமையிலும் குருவிக்கு தானியங்களை கொடுத்துவிட்டு சிரித்த நேசிப்பாளன். வாட்டிய பசியிலும், "எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா!" என்று பாடிய பெருங்கவிஞன் அவன். எல்லா உயிரிலும் இறைவன் இருக்கிறான் என்று நம்பிய அவர் புதுச்சேரியில் புயலில் பறவைகள் இறந்த பொழுது கனிவோடு அவற்றை அடக்கம் செய்தார்.

நாட்டை தட்டி எழுப்ப கவிதை எழுதிய அந்த சிந்துக்கு தந்தை எப்பொழுதும் தாலாட்டு மட்டும் பாடியதே இல்லை. நாடு உறங்க இது தருணமன்று என்கிற எண்ணமே காரணம். பாரதியும் பாரதிதாசனும் சேர்ந்து ஒருநாள் அடுப்பு பற்ற வைத்தார்கள். அடுப்பு பற்றவே இல்லையாம். சமையல் செய்யப் பெண்கள் எவ்வளவு துன்புறுகிறார்கள் என்பதை உணர்ந்து "பெண்கள் வாழ்கவென்று கூத் திடுவோமடா" என்ற பாட்டை அன்று தான் எழுதினார் பாரதி. கழுதைக் குட்டியை தூக்கி போட்டுகொண்டு மனைவியோடு கம்பீரமாக நடந்த பாரதியை, "பைத்தியங்கள் உலவப் போகின்றன!" என்று ஊரார் சொன்ன பொழுது எழுப்பியது தான் 'நிமிர்ந்த நன்னடை' பாடல்.

"என் பெண் தாழ்ந்த சாதிப் பையனுடன் ரங்கூனுக்கு ஓட வேண்டும். அவரைத்தான் திருமணம் செய்யப்போவதாக கடிதம் எழுதவேண்டும். அதைக்கேட்டு நான் பூரிக்க வேண்டும்' என்று பாரதி எழுதினார்.

'கடமை அறியோம் தொழில் அறியோம்!" என்று பறவையின் மனப் பான்மையிலும், "தீக்குள் விரலை வைத்தால் நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா" என்றும் பாரதியால் தான் பாட முடியும்.

வறுமையில் வாடிப்போன அவர் "பராசக்தி! இந்த உலகின் ஆன்மா நீ. உனக்கு அறிவில்லையா? உனக்குக் காது கேட்காதா? நாள்தோறும் உன்மீது பாட்டுப் பாடுகிறேன். நான் கேட்கும் வரங்களையெல்லாம் கொடுத்துவிடக் கூடாதா?

கடன்காரன் தொல்லை தாங்க முடியவில்லையே. குழந்தைக்கு ஜுரம் வந்தது. வைத்தியனுக்குக் கொடுக்கப் பணம் இல்லை. குழப்பம், குழப்பம் தீராத குழப்பம்! எத்தனை நாட்கள்! எத்தனை மாதங்கள்! எத்தனை வருஷங்கள்! தாயே! என்னைக் கடன்காரர் ஓயாமல் தொல்லைப்படுத்திக் கொண்டிருந்தால், நான் அரிசிக்கும் உப்புக்கும் யோசனை செய்து கொண்டிருந்தால், உன்னை எப்படிப் பாடுவேன்?" என்று புலம்பினார்

பாரதி, காந்திக்கு கடிதம் வரைகிற பொழுது அவர் சென்னையில் ஆங்கிலத்தில் பேசியதை விடுத்து ஏதேனும் இந்திய மொழியில் பேசி இருக்கலாமே என்று கேட்ட பொழுது அவர் அவ்வாறே செய்கிறேன் என்றார். ஆனால், கடிதத்தை ஏன் ஆங்கிலத்தில் எழுதினீர்கள் என்று கேட்ட பொழுது, 'பிறரை புண்படுத்தும் பொழுது அன்னை மொழியை பயன்படுத்தி பழக்கமில்லை.' என்று தெறித்து வந்தது பதில். சென்னை கிருஷ்ணாம் பேட்டையில் பாரதி உறங்கிக்கொண்டிருக்கிறான். அவனின் கீதங்கள் அக்கினி குஞ்சுகளை ஈந்துக்கொண்டே இருக்கின்றன. 'வேடிக்கை மனிதரைப்போல வீழாத' அந்த 'என்றும் இளைஞன்' இறக்கிற பொழுதும் வெள்ளையனை தலை முடியில் கூட அண்ட விடமால் நல்லதொரு வீணையாக நாட்டை மீட்டி மறைந்தான். அவனின் இறுதி அஞ்சலிக்கு வந்தது இருபதுக்கும் குறைவானோர்.

A1 Studio at GTA Square

@ GTA Square

103 - 5215 Finch Ave E (Middle Field / Finch) , M1S 0C2



HomeLife/GTA Realty Inc., Brokerage

GTA Square
5215 Finch Ave. E # 203
Toronto, ON M1S 0C2
Bus: 416.321.6969
Fax: 416.321.6963

Call Rudy Ruthran

416-587-5583

HomeLife Higher Standards



Passport Pictures ready in 5 minutes
Custom Framing Available
Video, Audio Duplications onsite

CTCC Platinum Award for 2011

Over 20 Years in Bussiness

JAI SAI FLORIST

@ GTA Square

Available for Wedding, Pooja and other Occasions

JASMINE 7 DAYS AVAILABLE

Wedding Flower, Wedding Bouquet, Funeral Wreaths
Casket Adornment, Casket Spray, Standing Sprays



416-396-9888 / 416-505-1252 / 647-707-0369

5215 Finch Ave East. #123 GTA Square, Scarborough, ON

www.jaisaiflorist.com

மறைக்கப்பட்ட ஒரு காலனிய வரலாறு

தமிழ் அடிமைகள்



கொடுமை என்னவென்றால்; காலனிய காலத்தில் தமிழர்கள் அடிமைகளாக இருந்த வரலாறு; இன்றைய தலைமுறையைச் சேர்ந்த யாருக்கும் தெரியாது. வரலாற்றுப் பாட நூல்களில் அதைப் பற்றி சிறு குறிப்புக்கூட கிடையாது.

ஐரோப்பிய காலனிய எஜமானர்கள், எமது நாடுகளில் கட்டிவிட்டுச் சென்ற பிரமாண்டமான கோட்டை களைக் கண்டு வியக்கிறோம். பாலங்கள், நெடுஞ்சாலைகள், ரயில் பாதைகள், வெள்ளையரின் பெருமையை கூறுவதாகப் போற்றுகின்றோம். ஆனால், அதற்குப் பின்னால் இருந்த பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்களின் உழைப்பு யாருடைய மனக்கண்ணிலும் தோன்றுவதில்லை.

இன்றைக்கும் அழியாத பிரமாண்டமான கோட்டைகள், தமிழடிமைகளின் உழைப்பில் உருவானவை என்ற உணர்வு யாருக்கும் இல்லை. இன்னும் கொடுமை என்னவென்றால், காலனியக் காலத்தில் தமிழர்கள் அடிமைகளாக இருந்த வரலாறு, இன்றைய தலைமுறையைச் சேர்ந்த யாருக்கும் தெரியாது. பாடசாலைகளில் கற்பிக்கப்படும், வரலாற்றுப் பாடநூல்களில் அதைப்பற்றி சிறு குறிப்புக்கூடக் கிடையாது. ஏன் இந்த இருட்டடிப்பு?

தஞ்சையை ஆண்ட சோழர்கள், இலங்கை, இந்தோனேசியா மீது படையெடுத்து ஆக்கிரமித்த வரலாறு பலருக்குத் தெரிந்திருக்கிறது. ஆனால், அதே தஞ்சையில் இருந்து, அதே இலங்கை, இந்தோனேசியாவுக்கு, தமிழர்கள் அடிமைகளாகக் கொண்டுசெல்லப்பட்ட வரலாறு தெரிந்தவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம்.

எந்தவொரு அரசியல்வாதியும் அதைப்பற்றிப் பேசுவதில்லை. எந்தவொரு இலக்கியவாதியும் அதுபற்றி எழுதுவதில்லை. தமிழடிமைகள் பற்றி அறிந்தவர்கள்கூட, தெரியாத மாதிரி வாயை மூடிக்கொண்டிருக்கலாம். ஏனென்றால், தமிழ் மக்களை மேற்கத்திய ஏகாதிபத்திய விசுவாசிகளாக மாற்றி வைத்திருக்க விரும்புவோர், உண்மைகளைப் பேசப்போவதில்லை.

ஆபிரிக்காவிலிருந்து, கறுப்பின மக்களை அடிமைகளாகப் பிடித்துக்கொண்டு சென்றதுபோல, தமிழ் நாட்டில் நடந்துள்ளது. தமிழகத்தில் அடிமைகளாகப் பிடிக்கப்பட்ட தமிழர்கள், பெரும்பாலும் சிறுவர்கள் என்பது மிகவும் கொடுமையானது. தமிழர்கள் மத்தியில், "பிள்ளைபிடிகாரர்கள்" என்ற சொல் புழக்கத்தில் இருந்தது. அனேகமாக, அழும் குழந்தைகளை பயமுறுத்துவதற்காக அதைக் கூறுவதுண்டு. உண்மையிலேயே, பிள்ளைபிடிகாரர்கள் காலனிய காலகட்டத்தில் இருந்துள்ளனர்.

தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும், காலனிய எஜமானர்களின் கீழ் வேலை செய்யும் பிள்ளைபிடிகாரர்கள் உலாவித் திரிந்தனர். சிறு நகரங்கள், கிராமங்கள் தோறும், சந்தைகள் கூடுமிடங்களில் காணப்பட்டனர். சந்தைக்கு வரும் சிறுவர்களைப் பிடித்துச் சென்றனர். இதனால், ஒரு காலத்தில் தமிழ்ச் சிறுவர்கள் சந்தை போன்ற பொது இடங்களுக்கு செல்ல அஞ்சினார்கள். டச்சு கிழக்கிந்தியக் கம்பனி, தமிழ் அடிமைகளை விலை கொடுத்து வாங்கி வந்தது. தமிழகத்தில் பஞ்சம் நிலவிய காலத்தில், அடிமைகளின் விலை மிகவும் குறைவாக இருந்தது.

தமிழர்கள் அடிமைகளான வரலாற்றுப் பின்னணியை அறிந்துகொள்வதற்கு, நாம் கிழக்கிந்தியக் கம்பனி தோன்றிய கால கட்டத்திற்கு செல்லவேண்டும். இன்று உலகம் முழுவதும் வியாபித்திருக்கும், ஐரோப்பிய மாதிரி முதலாளித்துவப் பொருளாதாரம், கிழக்கிந்தியக் கம்பனியுடன் ஆரம்பமாகியது என்றால் அது மிகையாகாது. ஆம்ஸ்டர்டாம் நகரில் உள்ள பழைய பங்குச் சந்தை கட்டிடம் தான், ஐரோப்பாக் கண்டத்தில் முதன்முதலாக உருவான பங்குச் சந்தையாகும் (1602 ல் உருவாக்கப்பட்டது).

ஐரோப்பிய காலனியாதிக்கவாதிகள், குறிப்பாக டச்சுக்காரர்கள் தான், தமிழகத்தில் அடிமை வாணிபத்தில் ஈடுபட்டனர். அதற்காக, சென்னை நகரத்திற்கு வடக்கே, பழவேற்காடு எனுமிடத்தில் கிழக்கிந்தியக் கம்பனியின் அலுவலகம் இயங்கி வந்தது. கிழக்கிந்தியக் கம்பனி என்பது, உலகின் முதலாவது பன்னாட்டு நிறுவனம் ஆகும். அதன் பங்குதாரர்களாக, நெதர்லாந்து நிலப்பிரபுக்கள் இருந்துள்ளனர். கம்பனி என்ன தொழில் செய்தாலும், பங்குகளின் ஈவுத் (டிவிடன்ட்) தொகையை ஒழுங்காகச் செலுத்திவந்தால் போதும். இதனால், கிழக்கிந்தியக் கம்பனி அதிக இலாபம் தரும் வியாபாரங்களில் ஈடுபட்டது. அடிமை வாணிபம் அதில் ஒன்று.

பழவேற்காட்டில் தளம் அமைத்த கிழக்கிந்தியக் கம்பனி, ஆரம்பத்தில் தமிழ்நாட்டுப் பருத்தி ஆடைகளை வாங்கி ஏற்றுமதி செய்துவந்தது. அந்தக் காலத்திலேயே, தமிழகத்தில் ஆடைத் தொழிற்துறை சிறப்பாக வளர்ச்சி அடைந்திருந்தது. தமிழகத்துப் பருத்தி ஆடைகள் உலகம் முழுவதும் தரமானதாக கருதப்பட்டன. டச்சுக்காரர்கள், இந்தோனேசியா, இலங்கையை தமது காலனிகளாக்கிக் கொண்ட பின்னர் தான், அடிமைகளை வாங்கத் தொடங்கினார்கள்.

இந்தோனேசியாவின் ஜாவா தீவு, ஒரு காலத்தில் "பதாவியா" (Batavia) என்று அழைக்கப்பட்டது. அங்கே தான், ஆசியாவில் முதலாவது டச்சு காலனிய ஆட்சி நிலைநாட்டப்பட்டது. அமெரிக்கக் கண்டங்களில் காலனிகளை உருவாக்கிய ஐரோப்பியர்கள், அங்கு வேலை செய்வதற்கு, ஆபிரிக்காவிலிருந்து அடிமைகளைக் கொண்டு சென்று குவித்த வரலாறு அனைவருக்கும் தெரிந்ததே. அதே மாதிரி, பதாவியா காலனியில் (இந்தோனேசியா) வேலை செய்வதற்குத், தமிழ்நாட்டு அடிமைகளைக் கொண்டு சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் டச்சு காலனிய படையினர் வந்திறங்கிய காட்சி



ஐரோப்பியர்கள், ஆசிய காலனிகளில் காணப்பட்ட வளங்களை ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்யும் வர்த்தகத்தில் ஈடுபட்டதை சரித்திர நூல்கள் எழுதி வைத்துள்ளன. ஆனால், ஐரோப்பியர்கள் ஆசிய நாடுகளுக்கிடையில் வணிகம் செய்தமை பற்றி, மிகக் குறைந்தளவு சரித்திரக் குறிப்புகள் மட்டுமே உள்ளன.

ஐரோப்பியர்கள், குறிப்பாக போர்த்துக்கேயர்கள் வருவதற்கு முன்னர், ஆசிய நாடுகளுக்கிடை யிலான வர்த்தகம், சீன மற்றும் அரேபிய வணிகர்களின் கைகளில் இருந்தது. ஆரம்பத்தில் அவர்களுடன் கூட்டுச்சேர்ந்து வர்த்தகம் செய்த போர்த்துக்கேய வணிகர்கள், சில வருடங்களு க்குப் பின்னர், சில இடங்களில் தங்கி விட்டார்கள்.

காலப்போக்கில், போர்த்துக்கேயர்கள் அவற்றை தமது காலனிகளாக்கி, கோட்டைகளைக் கட்டி இராணுவ ரீதியிற் பலப்படுத்தினர். அந்தக் காலத்தில், போர்த்துகேய கப்பல்களில் கடமையில் இருந்த டச்சுக் கடலோடிகள், பிற்காலத்தில் தனியான காலனிய சக்தியாக மாறினார்கள். குருவுக்கு மிஞ்சிய சிஷ்யனாக, பல இடங்களில் போர்த்துக்கேயர்களை விரட்டிவிட்டு, தமது காலனிகளை உருவாக்கினார்கள்.

இலங்கையிலும் அது தான் நடந்தது. இலங்கையின் வடபகுதியும், தென்மேற்குப் பகுதியும் மட்டுமே போர்த்துக்கேயர்கள் ஆட்சியின்கீழ் இருந்தன. மத்திய பகுதியும், கிழக்குப் பகுதியும் கண்டி மன்னனின் ஆளுகையின் கீழ் இருந்தன. போர்த்துக்கேயர்களை விரட்டுவதற்காக, டச்சுக் காரர்கள் கண்டி மன்னனுடன் கூட்டுச் சேர்ந்தனர். இரு தரப்பு ஒப்பந்தப்படி, போர்த்துக்கேயர்கள் விரட்டப்பட்ட பின்னர், அந்தப் பகுதிகளை கண்டி மன்னனிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். ஆனால், அது நடக்கவில்லை. ஒப்பந்தங்களை முறிப்பது காலனிய வெள்ளையர்களுக்கு கைவந்த கலை.

யாழ்ப்பாணம், காலியில் இன்றைக்கும் உள்ள டச்சுக் கோட்டைகள், தமிழ் அடிமைகளின் உழைப்பினால் கட்டப்பட்டவைதான்





யாழ் குடாநாடு, மன்னார், திருகோணமலை, கொழும்பு, காலி ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றிய டச்சுக்காரர்கள், அவற்றை கண்டி மன்னனிடம் ஒப்படைக்காமல் தாமே ஆட்சி செய்யத் தொடங்கினார்கள். அது மட்டுமல்ல, போர்ச் செலவு என்று கூறி, பெரியதொரு தொகையை கண்டி மன்னன் தமக்குச் செலுத்த வேண்டும் என்று பொய்க் கணக்குக் காட்டினார்கள். அந்தளவு பெருந்தொகையைக் கண்டி மன்னனால் கட்ட முடியாது என்பது அவர்களுக்கும் தெரியும். அதே நேரம், ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறியது குறித்து எந்தக் குற்றவுணர்ச்சியும் அவர்கள் மனதில் இருக்கவில்லை.

இலங்கைத் தீவு, கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருந்தது. இயற்கைத் துறைமுகமான திருகோணமலை மட்டுமல்லாது, காலியும் முக்கியமான துறைமுகமாகக் கருதப்பட்டது. குறிப்பாக தென்னாபிரிக்காவில் நன்னம்பிக்கை முனையில் இருந்து கிளம்பும் கப்பல்கள், பொருட்களை ஏற்றிக்கொண்டு காலித் துறைமுகத்திற்கு வரும். பின்னர் அங்கிருந்து வேறு கப்பல்கள், அந்தப் பொருட்களை ஏற்றிக்கொண்டு இந்தோனேசியாவுக்குச் செல்லும். ஐரோப்பா முதல் இந்தோனேசியா வரையிலான கடற் போக்குவரத்துக்கு, இலங்கை கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருந்தது.



ஆம்ஸ்டர்டாம் நகரில் உள்ள பழைய பங்குச் சந்தை கட்டிடம் (1612)

இலங்கையில், யானைகள், கறுவாப்பட்டைகள், முத்துக்கள் என்பன டச்சுக் காலனி யாதிக்கவாதிகளுக்கு முக்கிய வருமானம் ஈட்டித்தந்த ஏற்றுமதிப் பொருளாதாரமாக இருந்தது. கொழும்பில் இருந்த டச்சுக் காலனிய நிர்வாக எல்லைக்குள், தென்னிந்தியப் பகுதிகளும் அடங்கி இருந்தன. அதனால், தூத்துக்குடி முத்துக்களும் கிழக்கிந்தியக் கம்பனி ஊடாகவே ஏற்றுமதி செய்யப்பட்டன. நாகபட்டினம், யாழ்ப்பாண நிர்வாகத்தின் கீழ் அடங்கியிருந்தது.

யாழ் குடாநாட்டில் இருந்து, நாகபட்டினம் துறைமுகத்திற்கு, யானைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன. (யாழ் குடாநாட்டை இணைக்கும் பகுதி யானையிறவு என்று அழைக்கப்பட்டதும் அதனால்தான்.) இந்தியாவுடனான வர்த்தகத்தைப் பாதுகாக்கும் நோக்குடன், யாழ்ப்பாணக் கோட்டையும், காரைநகர் ஹம்மன் ஹீல் கோட்டையும் கட்டப்பட்டிருந்தன.

தென்னிலங்கையில், கொழும்புக்கு அருகில் உள்ள பகுதிகளில், உலகிற் சிறந்த கறுவாப்பட்டைகள் கிடைத்து வந்தன. ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் கறுவா வணிகம் முழுவதும் டச்சுக்காரர்கள் கைகளில் வந்திருந்தது. பெருமளவு வருமானத்தை ஈட்டித்தந்த, வளங்கொழிக்கும் இலங்கைத் தீவைப் பகைவர்களிடமிருந்து பாதுகாக்க வேண்டுமென்றால் தென்னிந்தியாவில் இராணுவத் தளம் அமைக்கப்பட வேண்டும் என்று கிழக்கிந்தியக் கம்பனி நினைத்தது.

இருநூறு போர்வீரர்களைக் கொண்ட டச்சுக் காலனியப் படை, யாழ்ப்பாணக் கோட்டையில் இருந்து நாகப்பட்டினத்திற்குப் படையெடுத்துச் சென்றது. அங்கிருந்து தரை வழியாக கொச்சினுக்குச் சென்றது. கேரளாவில் உள்ள கொச்சின், அன்று போர்த்துக்கேயர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. டச்சுப் படைகள் போர்த்துகேயர்களை விரட்டிவிட்டு, அங்கே ஒரு முகாம் அமைத்துக் கொண்டன. போன காரியத்தை நிறைவேற்றிவிட்டு, கிழக்கிந்தியக் கம்பனியின் போர்க் கப்பல்கள், யாழ்ப்பாணத்திற்குத் திரும்பி வந்தன. அங்கே அவர்களுக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது.

டச்சு காலனிய சிறப்பு படையினர் இல்லாத சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, யாழ்ப்பாணத்தில் ஒரு சதிப்புரட்சி நடக்க இருந்தது. எப்படியோ அது கண்டுபிடிக்கப்பட்டது. டச்சு காலனியப் படைகளில் இருந்தவர்கள்தான், யாழ்ப்பாண அதிகாரத்தைக் கைப்பற்ற சதி செய்தனர். அனேகமாக, அன்றைய காலனியப் படையில் பெருமளவு உள்நாட்டு வீரர்களும் இருந்திருக்கலாம்.

சதிப்புரட்சியில் ஈடுபட்ட அத்தனை பேரும் கண்டுபிடிக்கப்பட்டு, சிரச்சேதம் செய்யப்பட்டனர். இனிமேல் சதிப்புரட்சிசெய்ய நினைப்பவர்களுக்கு எச்சரிக்கை செய்வதற்காக, கொடூரமான காட்சிகள் அரங்கேறின. மரங்களில் இறந்த உடல்கள் கட்டித் தொங்கவிடப்பட்டன. வெட்டப்பட்ட தலைகளை ஈட்டிகளில் குத்தி, பொதுச் சந்தைகளில் காட்சிக்கு வைத்திருந்தனர்.

டச்சுக்காரர்கள், ஆயிரக்கணக்கான தமிழ்நாட்டு அடிமைகளைக் கொண்டுவந்து இலங்கையில் குடியேற்றினார்கள். அவர்கள் இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் வாழ்ந்தனர். வடக்கில் குடியேறியோர் தமிழ் மொழியும், தெற்கில் குடியேறியோர் சிங்கள மொழியும் பேசத் தொடங்கினார்கள்.

அதே மாதிரி, இந்தோனேசியாவில் குடியமர்த்தப்பட்ட தமிழகத்து அடிமைகள், இன்று இந்தோனேசிய மொழியை பேசுகின்றனர். சுருக்கமாக, ஐரோப்பியரால் கொண்டு செல்லப் பட்ட தமிழ் அடிமைகள், உள்ளூர் மக்களுடன் இனக்கலப்பு செய்துவிட்டனர். அதனால், அவர்களது பூர்வீகத்தை கண்டுபிடிப்பது இயலாத காரியம்.

தென்னிலங்கையில், கறுவாத் தோட்டங்களில் வேலை செய்த உள்ளூர்வாசிகள் (சிங்களத் தொழிலாளர்கள்), கடுமையான உழைப்புச் சுரண்டல் காரணமாக வேலை நிறுத்தம் செய்தனர். நெதர்லாந்தில் இருந்து வந்திருந்த மேலதிக படையினர், கறுவாத் தொழிலாளர்களின் கலகத்தை அடக்குவதற்கு பயன்பட்டனர். அதற்குப் பின்னர், கறுவாப் பட்டைகளை உரிக்கும் தொழிலுக்கு, தமிழ் அடிமைகளை பயன்படுத்தினார்கள். பிற்காலத்தில், அந்த தமிழர்கள் அனைவரும் சிங்களவர்களாக மாறிவிட்டனர்.

இலங்கையில், தமிழ் அடிமைகள் பல்வேறு கட்டுமான பணிகளிலும் ஈடுபடுத்தப்பட்டனர். கரையோரப் பகுதிகளை பாதுகாப்பதற்காக, கோட்டைகளைக் கட்டியதிலும், பாதைகள் செப்பனிட்டதிலும், தமிழ் அடிமைகளுக்குப் பங்குண்டு. யாழ்ப்பாணம், காலியில் இன்றைக்கும் உள்ள டச்சுக் கோட்டைகள், தமிழ் அடிமைகளின் உழைப்பினால் கட்டப்பட்டவைதான். நாடு முழுவதும் இருந்த நெல் வயல்களிலும் நிறையத் தமிழ் அடிமைகள் வேலை செய்தனர்.

புத்தளத்தை அண்டிய கடற்பகுதியில் முத்துக் குளிப்பதற்காகவும், தமிழ் அடிமைகள் கொண்டு வரப் பட்டிருக்கலாம். 1666 ஆம் ஆண்டு, கிழக்கிந்தியக் கம்பனியின் படையில் மேஜர் தரத்தில் இருந்த யான் வான் டெர் லான் (Jan van der Laan), 400 படகுகளில் முத்துக் குளிப்போரைக் கொண்டு வந்தார். கிட்டத்தட்ட இரண்டாயிரம் பேரளவில் முத்துக்கள் எடுப்பதற்காக கடலில் குதித்தனர். அனேகமாக, அவர்கள் எல்லோரும் தமிழகத்து அடிமைகளாக இருக்க வேண்டும்.

புத்தளம் கடலில் முத்துக் குளிப்பது ஆயிரக் கணக்கான வருடங்களாக நடந்து வந்தாலும், பெருந் தொகையானோர் ஒரே நேரத்தில் கடலுக்குள் இறங்குவதில்லை. ஆனால், ஐரோப்பிய காலனியாதிக்கவாதிகள் எப்போதும் பெரியளவில்தான் சிந்திப்பார்கள். அதாவது அதிக இலாபம் சம்பாதிப்பதே அவர்களது குறிக்கோள். விளைவு? அன்றைய முத்துக்குளிப்பினால் கடல் நீர் நஞ்சாகியது. அதனால் சுமார் 1500 பேரளவில் அந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர்.

இன்றைக்கு எங்காவது ஒரு தொழிற்துறையில் நடக்கும் விபத்தில், 1500 தொழிலாளர்கள் கொல்லப்பட்டால், அது படுகொலையாகக் கருதப்பட்டு உலகின் மனச் சாட்சியை உலுக்கி இருக்கும். முதலாளித்துவத்தின் இலாப வெறிக்கு பலியானவர்கள் என்று உலகம் உணர்ந்திருக்கும். ஆனால், அன்று இறந்தவர்கள், (தமிழ்) அடிமைகள் என்பதால், உலகில் யாருக்கும் அக்கறை இருக்கவில்லை.

அதே வருடம் (1666), வட இலங்கையில் இருந்து யானைகள் ஏற்றுமதி செய்ததன் மூலம், வருடாந்த நிகர இலாபம் கூடியது. அதனால், அந்த வருடத்து அடிமைகளின் இழப்பை விட, கிடைத்த மொத்த இலாபம் அதிகம் என்று, கிழக்கிந்தியக் கம்பனி திருப்தி அடைந்தது. இந்தக் கணக்கு, வழக்குகள் கிழக்கிந்தியக் கம்பனியால் கவனமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. நெதர்லாந்து ஆவணக் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ள, கிழக்கிந்தியக் கம்பனியின் ஆவணங்களை, நீங்கள் இன்றைக்கும் பார்வையிடலாம்.

உசாத்துணை: 1.Het VOC-bedrijf op Ceylon, Albert van den Belt
2. Zwartboek van Nederland overzee, Ewald van Vugt (முகநூல் பகிர்வு)

1991 வரை நாம் வாழும் உலகம் சோசலிச முகாம், முதலாளித்துவ முகாம் என இரு முகாங்களாக தன்னை அடையாளப்படுத்தியிருந்தது. இந்தக் காலகட்டத்தில் பல இனங்களை, தேசிய இனங்களை, நாடுகளை இணைத்து ஒரு தேசமாக உருவாகியிருந்தது சோவியத் யூனியன். லெனின் தலைமையில் நடைபெற்ற தொளிலாளர் புரட்சியுடன் தனது பயணத்தை தொடங்கிய சோவியத் யூனியன், சாதாராண மக்களுக்கு கிடைக்கும் பண்டங்களில் சர்வதேச நவீனமயப்படுத்திலின் வீச்சுக்கு ஏற்ப தன்னை இணைப்பதில் தாமதித்து வந்தது. இதனால் மேற்கத்திய பண்டங்கள் சோவியத் மக்களுக்கு ஈர்ப்பை ஏற்படுத்தன. இது சோவியத்

உக்ரேன் இல்லாததுபோல் தொடரும் பனிப்போர்

யூனியனில் இணைந்திருந்த தேசங்களுக்கு தாம் பிரிந்து செல்வது தம்மை நவீன பண்டங்களை நுகரும் மனிதர்களாக மாற்றிக் கொள்ள உதவும் என்று சபலப்பட வைத்தது. இதனால் தேசிய இனங்களும் தேசங்களும் தாம் விரும்பினால் பிரிந்து செல்லலாமென்ற சுய நிர்ணய உரிமையைப் பயன்படுத்தி அவை பிரிந்தன.

இதன் விளைவாக டிசம்பர் 30, 1922 இல் உருவாக்கப்பட்ட சோவியத் யூனியன் என்றிருந்த பலமான தேசம் டிசம்பர் 26. 1991 இல பலநாடுகளாக பிரிந்து தனித்தனியாக 15 நாடுகளாக உருவெடுத்தது. இதில் நிலப்பரப்பிலும், வழங்களிலும் மிகப்பெரிய ரஷ்யா மட்டும் தொடர்ந்தும் நிமிர்ந்து நின்றது. இதனைத் தொடர்ந்து சுயநிர்ணய உரிமையுடன்



பிரிந்து செல்லல் என்ற நிகழ்வுகள் யூகொசிலாவிக்கியா போன்ற நாடுகளிலும், ஏனைய சோலிச நாடுகளிலும் தொடர்ந்த காலங்களில் ஏற்பட்டன.

இதில் சீனா கவனமாக செயற்பட்டு சர்வதேச நவீனமயப்படுத்தில் தானும் போட்டி போட்டு இன்று பொருளாதார வல்லரசாகவும், மேற்குலகிற்கு பொருட்களையும் ஏற்றுமதி செய்வது மட்டும் அல்லாமல் கடன் கொடுக்கும் அளவிற்கும் வளர்ந்துவிட்டது.

சோவியத் யூனியனின் உடைவுடன் கூடவே இருந்து வந்த பனிப்போரும் முற்றுக்கு வந்தது என்று அமெரிக்காவும், அதன் நேச நாடுகளும் கூறிக்கொண்டாலும் ஆயுத வியாபாரிகளால் யுத்தமின்றி தமது வியாபாரங்களை செய்யமுடியாது என்ற நிலையில் பிரகடனப்படுத்தப்படாத ஒரு பனிப்போரைத் தொடர்ந்தே வந்தன, என்பதுவே 1991 இலிருந்து இன்று வரையிலானான வரலாற்று உண்மை ஆகும்.

சிவா ஈஸ்வரமூர்த்தி

இந்த ஆயுத வியாபாரிகளினதும், மசகு எண்ணை ஆதிக்கக்காரர்களுமே அமெரிக்க நலன்களை முன்னிறுத்தி உலகத்தில் அமெரிக்க சார்ப்பு ஆட்சியை செய்பவர்கள் என்பது யாவரும் அறிந்ததே. இதன் வெளிப்பாடாக தம்முடன் நிபந்தனை அற்ற சமரசத்திற்கு வர மறுக்கும் சீனாவுடனும், ரஷ்யாவுடனும் மல்லுக்கு நிற்கும் நிலையே இன்றுவரை நலவி வருகின்றது. இதில் தென் அமெரிக்க நாடுகளின் அமெரிக்க ஏகாதிபத்திய எதிப்புகள் விடாப்பிடியாக தொர்வதும் இதனைத் தோற்றகடிக்கமுடியாமல் அமெரிக்கா தவிப்பதுவும் வரலாறு.

சோவியத் யூனியனில் இருந்து பிரிந்து தனியாக தமது ராஜ்யங்களை அமைத்த ஒவ்வொரு நாடுகளையும் என்.ஜி.ஓ. கள், மனித உரிமைகளுக்கான அமைப்புகள், பல்கலைகழகங்களில் உள்ள புத்திஜீவிகள் போன்றவிற்கு நேரடி, மறைமுக நிதி உதவிகளை வழங்கி அவ்வவ் நாடுகளில் ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஆட்சிகளை தூக்கியெறிந்து தமக்கு சார்பான பொம்மை அரசுகளை நிறுவுவது என்பது அமெரிக்க உளவு அமைப்பின் முக்கிய வேலைத்திட்டங்களில் ஒன்று. இந்த கபடமான அணுகு முறை பல தடவைகள் பல்வேறு அமைப்புகள், ஊடகங்கள் ஏன் முன்னாள் சிஐஏ அதிகாரிகளினால் தோலுரித்துக் காட்டப்பட்டும் இருக்கிறன. ஆனாலும் இது இன்னமும் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது.

இவ்வாறான அணுகு முறை என்பவற்றிற்கூடாக தமக்கு பொம்மை அரசுகளை ஏற்படுத்துவதில் அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் இதில் தற்காலிக வெற்றிகளையும் கண்டன. இதில் முன்னாள் சோவியத்து நாடுகளில் பலவற்றில் அமெரிக்க அல்லது ஐரோப்பிய யூனியன் என்ற நேச அணிக்கு சார்பான பொம்மை அரசுகள் தற்போது ஆட்சியில் உள்ளன. இவ் அரசுகள் அமெரிகாவின் டாலர்களைப் பெற்றுப் கொண்டு அமெரிக்க இராணுவத் தளங்களை தமது நாடுகளில் அமைக்க இடங்களை ஒதுக்கியும் உள்ளன. இங்கு எல்லாம் அமெரிக்காவும், நேட்டோ நாடுகளும் ரஷ்யாவிற்கு இலக்கு வைத்து இராணுவத் தளங்களை ரஷ்ய தேசத்தை சுற்றிவளைத்து நிற்கின்றன என்பது பனிப்போர் இன்னமும் முடியவில்லை - அது முடிவடைவதை அமெரிக்காவும் அதன் நேசநாடுகளும் விரும்பவில்லை என்பதையே எடுத்துக்காட்டுகின்றது.

இதில் கடைசியாக அமெரிக்க, நேட்டோ கூட்டமைப்பின் வலைக்குள் கொண்டு வர முயற்சிக்கும் நாடு உக்ரேன் ஆகும். கடந்த மாசி மாதம் வரைக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட உக்ரேன் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்த அரச எதிர்ப்பு கிளர்ச்சியாளர்களுக்கு நிதி உதவிகளை கொடுத்து அரசு எதிர்ப்பு கிளர்ச்சிகளை ஏற்படுத்தி வந்தது இதே அமெரிக்க கூட்டமைப்பு தான். இதன் மூலம் மக்களால் தெரிவு செயற்பட்ட உக்ரேன் அரசை தூக்கி எறிந்து தனது விருப்பை நிறைவேற்றியது மட்டும் அல்லாமல் தனது பொம்மை அரசு ஒன்றை அங்கு நிறுவியது. இவ் அரசுக்கு 4 பில்லியன் அமெரிக்க டாலர்களை அமெரிக்கா வழங்கியது இங்கு கவனிக்கதக்கது.

ரஷ்யாவிற்கும் தனது வழங்களையும், பொருளாதாரத்தையும் தனது நாட்டின் பாதுகாப்பையும் காப்பாற்றும் தேவை இருக்கின்றது. இதன் தொடர்சியாகத்தான் குரேமியாவை உக்ரேனில் இருந்து தனி நாடாக பிரிந்ததும், கிழக்கு உக்ரேனில் நடைபெற்று வரும் தனிநாட்டிற்கான கிளர்ச்சிகளும் ஆகும். இதில் ரஷ்யாவின் ஆதரவுக்கரம் இல்லை என்று சொல்ல முடியாது. இதனை ரஷ்யாவே பலமுறை ஒத்துக்கொண்டும் உள்ளது. கிழக்கு உக்ரேனில் நடைபெற்று வரும் கிளர்சியில் ஈடுபடும் போராளிகளுக்கு கெட்ட பெயர் ஏற்படுத்துவதும் இதன் மூலம் ரஷ்யாவிற்கு நெருக்கடி ஏற்படுத்தும் என்று ஒரு கல்லில் இருமாங்காய் என மலேசிய பயணிகள் விமானத்தை கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் சுட்டுவீழ்த்தியதில் அமெரிக்க நலன்கள் இல்லாமல் இல்லை. இதனை சுட்டு வீழ்த்தும் வல்லமை கிளர்சியாளர்களிடம் இல்லை என்பதாலும், வேறு பல தகவல்களாலும் அமெரிக்காவின் பொம்மை உக்ரேன் அரசு மலேசியா விமானம் சுட்டு வீழ்த்தலில் அம்பலப்பட்டிருப்பதினால் இவ்விடயத்தை தற்போது அமெரிக்க அணிகள் அமத்தியே வாசிக்கின்றன, அல்லது இவ்விடயம் மௌனம் ஆக்கப்பட்டிருக்கின்றது.

இதுவரையில் அமெரிக்காவும், அதன் கூட்டமைப்பு

நாடுகளும், ஐரோப்பிய யூனியனும் 3 கட்டமாக ரஷ்யா மீது பொருளாதார தடைகளை ஏற்படுத்தியிருக்கின்றன. மார்ச் 2014 இல் முதல்கட்டத் தடையாக ரஷ்ய அரசியல் தலைவர்கள் தமது நாடுகளுக்கு பயணம் செய்வதை தடைசெய்தன. தொடர்ந்து சில குறிப்பிட்ட முன்னணி வர்த்தகப் பிரமுகர்களுக்கும் இத்தடையை நீடித்தன. இரண்டாம் கட்டத் தடையாக ஏப்ரல் இல் 2014 இல் ரஷ்யாவின் சில குறிப்பட்ட வியாபார கம்பனிகளுடன் தொழில் உறவுகளை மேற்கொள்ளக் கூடாது என்று தமது நாட்டு மக்களுக்கு தடை விதித்தனர். கூடவே மேலும் சில ரஷ்ய பிரமுகர்கள் தமது நாட்டிற்குள் வருவதற்கும் தடையை விரிவுபடுத்தின. மூன்றாம் கட்டத் தடையாக ஜ/லை 2014 இல் ரஷய அரசின் மிகப் பெரிய சக்தி வழங்களை கையாளும் நிறுவனங்களுக்கும், ஆயுத உற்பத்தி நிறுவனங்களுக்கும், அரச வங்கிகளுக்கும் தமது நாட்டுகளுடன் தொழில் உறவுகளில் ஈடபட முடியாதவாறு தடைகளைப் போட்டன. ரஷ்யாவும் தமது நாட்டிற்கான உணவுப் பொருட்களை இந்நாடுகள் ஏற்றுமதி செய்ய முடியாது என்று பதிலுக்கு தடை உத்தரவு போட்டுள்ளது.

ஆனாலும் ரஷ்யா மீதான பொருளாதாரத் தடை என்ற அஸ்திரத்தை அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியனும், அதன் நேட்டோ கூட்டாளிகளும் தற்போது எடுத்திருக்கும் நிலையில் இதிலிருந்து ரஷ்யா மீண்டு வருமா? என்பதே தற்போதைய கேள்வி. இதே மாதிரியான பொருளாதாரத் தடைகள் கடந்த காலங்களில் கியூபா. வெனிசுலா, ஈராக், ஈரான், சிரியா போன்ற நாடுகளுக்கு எதிராக விதிக்கப்பட்டாலும் அவை தாழ்ந்து விடவில்லை என்பதே வரலாறு. மாறாக எழுந்தே வந்திருக்கின்றன, வருகின்றன என்பதுவும் வரலாறு ஆகும். பொருளாதாரத் தடையினூடாக வளர்ந்து வரும் ரஷ்யாவின் பொருளாதாரத்தை பலவீனப்படுத்தி அதன் முதுகெலும்பை உடைக்கலாம் என்று கனவு காணும் அமெரிக்காவும், அதன் கூட்டாளிகளும் வழமைபோல் நீண்ட காலப் பயணத்திற்கு பின்பு தோற்றுப் போவார்கள் என்பதே வரலாறாக அமையப் போகின்றது. ஒரு நாட்டின் மீது போடப்படும் பொருளாதாரத் தடைகள் அந்தந்த நாட்டு சமான்ய மக்களையே அதிகம் பாதிக்கின்றது என்பதை மனித நேயம் மிக்க யாவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ரஷ்யாவின் ஐரோப்பிய நாடுகளுக்கான இயற்கை வாயுவை வழங்கும் வழங்கள் பல உக்ரேன் நாட்டின் நிலப்பரப்பிலும் இருக்கின்றன. இவற்றை தடைசெய்வதன் மூலம் ரஷ்யாவின் பொருளாதாரத்தை நலிவடையச் செய்வதுவே அமெரிக்காவின் முக்கிய நோக்கம். மசகு எண்ணையின் மாற்றீடான இயற்கைவாயு பயன்பாட்டை பலவீனபடுத்தும் ஒரு கபட நோக்கமும் இதில் ஆதிக்கம் செலுத்துகின்றது. மசகு எண்ணை வியாபாரத்தின் மீதான ஏகபோகத்தை நிறுவுவதற்காகவே ஈராக்கில் ஆரம்பித்து வெனிசுலா போன்ற தென் அமெரிக்க நாடுகள் ஈறாக. மேற்கு ஆபிரிக்க நாடுகள் வரையும் அமெரிக்காவும், அதன் கூட்டாளிகளும் போர் தொடுப்பதற்கான காரணங்கள் ஆகும்.

Global Research இல் Joachim Hagopian என்பவர் மார்ச் 08, 2014 இல் எழுதிய ஆய்வுக்கட்டுரை நான் கூறிய எல்லாவற்றையும் நிறுவி நிற்கின்றது. இதன் ஒரு பகுதியை இங்கே தருகின்றேன்

. ....The intended US foreign policy in Eurasia is to cut off Russia from the rest of Europe and all its Central Asian neighbors, thereby weakening Russia's geopolitical influence and economic power in the region. Once the US has Ukraine in its back pocket which of course this recent coup effectively secures, the gas pipelines that drive Europe's dependency on Russia to supply 90% of its natural gas will quickly be eliminated and instead the oil and gas rich Ukraine can then be "groomed" as Europe's new main supplier. So all that protesting since November in Ukraine calling for closer democratic ties to the West was a mere propagandist ploy designed to appear as though it was actually another impromptu, so called populist movement uprising (not unlike the other fake Arab spring neo-con job) ostensibly demanding more democratic freedom and civil liberties, sadly the very same rapidly disappearing freedom and liberties since 9/11 that have been usurped by US government tyranny and oppression in the militarized police state that has now come to firmly roost here in America....

பழைய மோட்டார் கார் கண்காட்சி

ஒன்ராரியோ பல நகரங்களிலும் கோடை காலங்களில் பழைய மோட்டார் காரின் கண்காட்சி இடம் பெறும். 1930களில் இருந்து பாவனையில் உள்ள கார்களை இங்கு காணலாம். இவ்வாறான கார்களின் விலை புதிய கார்களை விட அதிகமாகவே இருக்கும். இதற்கென ஒரு இரசிகர் கூட்டமே உண்டு. இங்குள்ள படங்கள் மார்க்கம் நகரின் பிரதான வீதியில் செப்ரம்பர் 7ந்திகதி நடைபெற்ற கண்காட்சியில் எடுக்கப்பட்டவை.







மறந்துவிட்ட ஒரு தந்தை


- லீவிஸ்டன் லார்னெட்

பிள்ளைகளைக் கண்டிப்பதற்குப் பதிலாக, அவர்களைப் பற்றி நாம் புரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும். அவர்கள் செய்யும் காரியங்களை அவர்கள் ஏன் செய்கிறர்கள் என்று அவர்கள் மனநிலையிலிருந்து ஆராயாமல் எமது விருப்பத்துக்கும் மனோநிலைக்கும் ஏற்ப அவர்கள் இருக்கவேண்டுமென்று நிர்ப்பந்திப்பது அவர்களை எப்படிப் புண்படுத்துகிறது, பாதிக்கிறது என்பதை நாம் புரிந்துகொள்வதில்லை. இது அதனைத் தாமதமாவேனும் புரிந்துகொண்ட ஒரு தந்தையின் கடிதம். எமக்கும் சில புரிதல்களைத் தரக்கூடும்.

கவனமாகக்கேள் மகனே,

நான் உன்னிடம் இப்போது பேசிக்கொண்டிருக்கையில், உன் பிஞ்சுக் கைகள் உன் கன்னங்களுக்கு அடியில் மடங்கிக் கிடக்கிறது. உன் தலையிலுள்ள தங்க முடிச்சுருள்கள் உன் ஈரமான நெற்றியில் ஒட்டிக் கிடக்கின்றன.

நான் உன் அறைக்குள் தனியாக வந்துள்ளேன். ஒரு சில நிமிடங்களுக்கு முன், நான் வரவேற்பறையில் அமர்ந்து படித்துக்கொண்டிருந்தேன். அப்போது வருத்தம் என்னை ஆட்கொண்டது. மனக்கலக்கம் என்னை விழுங்கியது. ஒரு குற்றவுணர்வுடன் நான் உன் படுக்கையருகே வந்தேன்.



சில விஷயங்களை நான் சிந்தித்துக்கொண்டிருந்தேன். மகனே, நான் உன்னிடம் கோபத்துடன் நடந்து கொண்டிருக்கிறேன். நீ பள்ளிக்குத் தயாராகிக்கொண்டிருக்கும் போது, முகத்தைக் கழுவாமல் வெறும் ஈரத்துணியால் துடைத்தாய் என்ற காரணத்திற்காக நான் உன்னைத் திட்டியிருக்கிறேன். நீ உன் காலணிகளைப் பளிங்கூட்டாத காரணத்திற்காக நான் உன்னைத் திட்டியிருக்கிறேன். உன்னுடைய சில பொருட்களை நீ தரையில் வீசியயெறிந்தபோது நான் உன்னிடம் கோபமாக நடந்துகொண்டிருக்கிறேன்.

காலை உணவின்போதும் நான் உன்னிடம் குறைகண்டேன். நீ சாப்பிடும்போது உணவைச் சிந்தியதற்காக, உன் உணவை அப்படியே விழுங்கியதற்காக, உன் முழங்கையை மேசைமீது வைத்ததற்காக, உன் ரொட்டித்துண்டில் அதிக வெண்ணெய் சேர்த்ததற்காக...

நீ விளையாடத்துவங்கியதும், நான் என் இரயிலைப் பிடிக்கப் புறப்பட்டபோது நீ என்னை நோக்கித் திரும்பிக் கையசைத்து ''போய்வாருங்கள், அப்பா!'' என்றுகத்தினாய். நான்என் முகத்தைச் சுளித்தவாறே ''உன் தோள்களைத் தொங்கப்போடாதே'' என்று உன்னைக் கடிந்துகொண்டேன். நண்பகலில் இது மீண்டும் விட்ட இடத்திலிருந்து துவங்கியது. நான் வீட்டை நோக்கி வந்தபோது நீ என்ன செய்துகொண்டிருந்தாய் என்று வேவு பார்த்தேன். நீ மண்டியிட்டு அமர்ந்து கோலிகளோடு விளையாடிக்கொண்டிருந்தாய். உன்காலுறைகளில் ஓட்டைகள் இருந்தன. அதைக் கண்டவுடன், உன் நண்பர்களுக்கு மத்தியில்வைத்து வீட்டிற்குப் போகுமாறு கூறி நான் உன்னை அவமானப்படுத்தினேன். காலுறைகள் மிகவும் விலையுயர்ந்தவை. நீ அவற்றை விலைகொடுத்து வாங்கியிருந்தால் இன்னும் அதிகக்கவனத்துடன் இருப்பாய்! இவ்வார்த்தைகள் உன் தந்தையிடமிருந்து வருகின்றன என்பதை நினைத்துப்பார்!

மாலையில் நான் என் அறையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தபோது, உன் மனத்தில் ஏற்பட்டக் காயம் உன் கண்களில் தெரிய, பயத்துடன் நீ என்னை நோக்கி நடந்து வந்தது எனக்கு நினைவிருக்கிறது. எனக்கு ஏற்பட்ட இடையூறால் பொறுமையிழந்து ஏறிட்டுப் பார்க்கையில் கதவருகில் நீ தயக்கத்துடன் நின்றாய். ''என்ன வேண்டும் உனக்கு''? என்று நான் வெடுக்கென்று கேட்டேன்.

நீ எதுவும் கூறவில்லை. ஆனால் வேகமாக ஓடிவந்து, என் கழுத்தில் உன் கைகளைச் சுற்றிக்கொண்டு என்னை முத்தமிட்டு, என் புறக்கணிப்புகளால் வாடாத, கடவுள் உன் இதயத்தில் மலரச்செய்துள்ள பாசத்துடன் உன் சிறிய கைகளால் என்னை இறுக அணைத்துக்கொண்டாய். பின் உன் அறைக்குச் சென்றுவிட்டாய்.

அதற்குச் சற்று நேரத்திற்குப் பின் என் கைகளில் இருந்த செய்தித்தாள் விழுந்தது, வயிற்றைப் புரட்டும் ஒரு பயங்கர பயம் என்னை ஆட்கொண்டது. நான் என்னவாக ஆகிக்கொண்டிருக்கிறேன்? உன்னிடம் குறைகண்டுபிடிப்பதும், கடிந்துரைப்பதும்தான் நீ என் அன்புக் குழந்தையாக இருப்பதற்கு நான் உனக்கு அளிக்கும் கைமாறா? நான் உன்னை நேசிக்காமல் இல்லை. மாறாக இளம் பிஞ்சான உன்னிடமிருந்து நான் அளவுக்கதிகமாக எதிர்பார்த்தேன் என்பதுதான் உண்மை. நான் என் வாழ்க்கையைக் கொண்டு உன்னை அளவிட்டுக் கொண்டிருந்தேன்.

உன்னிடத்தில் குடிகொண்டிருக்கும் நல்லவற்றையும், அருமையானவற்றையும், உண்மையானவற்றையும் கணக்கிட முடியாது. உன் சிறிய இதயம், பரந்த குன்றுகளை ஒளியூட்டும் விடியற்காலை போல மிகவும் பெரிதாக உள்ளது. இரவில் படுக்கப் போகுமுன் என்னைக் கட்டியணைத்து முத்தமிடுவதாக என்னிடம் நீயாகவே ஓடிவந்தது அதை நிரூபிக்கிறது. இன்றிரவு எனக்கு வேறெதைப் பற்றியும் கவலையில்லை. இருளில் நான் உன் படுக்கையறைக்கு அருகே வந்து கூனிக்குறுகி மண்டியிட்டு அமர்ந்திருக்கிறேன்.

இது ஒரு கோழைத்தனமான பரிகாரம்தான். ஆனால் நீ விழித்திருக்கும் நேரத்தில் நான் உன்னிடம் இவ்விஷயங்களைக் கூறினால் அவை உனக்குப் புரியாது. ஆனால் நாளைக்கு நான் ஓர் உண்மையான தகப்பனாக இருப்பேன். நான் உன்னிடம் ஒரு நண்பனைப் போல் நடந்துகொள்வேன். நீ வருந்தும்போது நானும் வருத்தப்படுவேன். நீ சிரிக்கும்போது நானும் சிரிப்பேன். பொறுமையற்ற வார்த்தைகள் என் வாயிலிருந்து வரும்போது, என் நாக்கைக் கடித்துக்கொள்வேன். ஒரு மந்திரம்போல் நான் தொடரந்து கூறிக்கொண்டே இருப்பேன் ''அவன் ஒரு சின்னஞ்சிறிய குழந்தை!''


நான் உன்னை வளர்ந்த மனிதானாகக் கருதிவிட்டேன். ஆனால் உன் கட்டிலில் சோர்வாக நீ சுருண்டு கிடப்பதை நான் பார்க்கும் இவ்வேளையில், நீ இன்னும் ஒரு சிறு குழந்தைதான் என்பதை உணர்கிறேன். நேற்று நீ உன் தாயின் தோள்களில் தலைசாய்த்து அவளது கரங்களில் துவண்ட மழலையாய் இருந்தாய். நான் தான் உன்னிடம் மிக அதிகமாக எதிர்பார்த்துவிட்டேன்.

- அப்பா

அங்கலாய்க்கிறார் ஜெயலலிதாவின் அண்ணா!

மைசூர். ஜெயலலிதா பிறந்த இடம். மைசூரிலிருந்து நாற்பது கிலோமீற்றர் உள்ளே ஸ்ரீ ரங்கராஜபுரம் என்று ஒரு குக்கிராமம் நோக்கி டீஜென் குரோனிக்கல் நிருபர்கள் சகிதம்

ஒரு வாகனம் விரைந்துசெல்கிறது. அவ் வாகனம் போய் நின்ற அந்த ஏழ்மை படிந்த வீட்டிலே 78 வயதுடைய ஒரு முதியவர், தளர்ந்துபோன உடலோடு, கவலை படிந்த முகத்தோடு, நெஞ்சித்துப் படபடப்பை தாங்கிப் பிடித்தவாறு தொலைகாட்சியில் ஜெயலலிதாவின்மீதான தீர்ப்பைப் பார்த்தவண்ணம் பிரார்த்தித்தபடி நிற்கிறார்- அவர்தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக உலகறிந்த பெண்மணி ஜெயலலிதாவின் அறியப்படாத அண்ணா! - என். ஜே. வாசுதேவன்.



“அவளுக்கு இந்தத் தண்டணை கூடாது. அவள் இதற்குப் பாத்திரவாளியாகலாகாது. ஒரு அண்ணண் தங்கைக்கான அன்பான உறவு எமக்கிடையே நிலவவில்லையென்பது வேறு. ஆனால் அவள் தமிழ் நாட்டிற்குச் செய்த நல்ல காரியங்களையும் அதானல் “அம்மா” என்று பெயர் பெற்றதையுமிட்டு நான் மகிழ்ச்சியடைந்திருந்தேன். ஆனால் நீதிமன்றத் தீர்ப்பை எல்லோரும் மதிக்க வேண்டும். சட்டத்தின் நீதி எல்லோருக்கும் சமமானது. நிட்சயமாக இது அவளது அரசியல் வாழ்வில் ஒரு பின்னடைவுதான்!” என்றார் அந்த வயது முதிர்ந்த அண்ணா.

இந்த வாசுதேவன் என்ற ஜெயலலிதாவின் அண்ணாவை நீங்கள் அறிந்திருக்க முடியாது. அவர் முதலமைச்சரிடமிருந்து மிகத் தூரத்தில் ஒதுங்கி, சாதாரண குடிமகனாய் ஏழ்மையுடன் போராடியபடி வெறும் 400 ரூபாய் கர்நாடக அரசாங்கப் பென்ஷனில் வாழ்க்கை நடத்தி வருகிறார் - அந்தக் கோடானு கோடி சொத்து - அரசியலின் உச்ச அதிகாரங்கள் சௌபாக்கியங்கள் எவற்றினதும் நிழல்கூடப் படாதபடி. அவரது ஒரு மகனும் விபத்தில் இழந்துவிட்டார். மனைவியும் சில வருடங்களின் முன் காலமாகிவிட்டா. தன்னந்தனியே அந்த வீட்டில் கிராமத்தவர் உதவியோடு வாழ்க்கை நடத்தி வருகிறார்.

தானாடாவிட்டாலும் தசையாடும்

வாசுதேவன் ஜெயலலிதாவின் சகோதரன் என்பது எவ்வாறென்றால், ஜெயலலிதாவின் தந்தைக்கு இரு மமைவிமார். மூத்த மனைவி ஜெயம்மாவின் பிள்ளைதான் வாசுதேவன். இரண்டாம் மனைவி சந்தியாவின் பிள்ளைகள்தான் ஜெயலலிதாவும் அவருடன் கூடப்பிறந்த ஷைலஜா மற்றும் ஜெயக்குமார் ஆகிய இருவரும். ஷைலஜா பெங்களுரில் வசிக்கறார் ஆனால் ஜெயக்குமாரின் வாழ்விடம்பற்றி தகவல்கள் இல்லை. இவ் ஜெயலலிதா மற்றும் சகோதரர்களின் பாட்டா என். ரங்கச்சாரி மைசூர் மாளிகையில் மைசூர் அரசர் நான்காம் கிருஷ்ணராஜருக்கு வைத்தியராக பணியாற்றியவர்.

அண்ணன் வாசுதேவனும் சகோதரி ஷைலஜாவும் ஜெயலலிதாவுடன் சகோதர உறவைப் பேணுவதை ஜெயலலிதா விரும்பியிருக்கவில்லை - அவர்கள் வாழ்க்கைக்கு அல்லாடுவது தெரிந்தும்கூட. மாறாக, அவர்கள் தன் சகோதரர்கள் என்று மீடியாவுக்கு சொல்ல நேர்ந்ததற்கு எதிராக மெட்ராஸ் கோர்ட்டில் மான நஷ்ட்ட வழக்குப் போட்டார்.

“நான் ஒருதடவை மீடியாவில் பேசும்போது அவள் எனது சகோதரி என்று சொல்லிவிட்டதற்காக என்மீது அவதூறு வழக்குத் தொடுத்திருந்தாள். ஆனாலும் அவள் என் சகோதரி. அவள் சிறை செல்வது எனக்கு மிகுந்த வேதனை தருகிறது. அவள் இதுபோல் பத்துப் பன்னிரெண்டு வழக்குகளை முகம் கொடுத்தவள். எல்லாவற்றிலிருந்தும் அவள் மீண்டு வந்திருக்கிறாள். ஆனால் இதில் சிக்கிவிட்டாள்” என்கிறார் வாசுதேவன் மனவருத்தத்தோடு.

ஜெயலலிதாவின் சொத்துக் குவிப்பு வழக்கில் அவரது வீட்டிலிருந்து மீட்கப்பட்ட பெருந்தொகை நகைகள் பற்றி செய்தி வந்திருந்ததல்லவா? அதில் ஒரு பகுதி அவ் அரசன் நன்கொடையாக வழங்கிய நகைகளே என்று சொல்கிறார் தங்கைக்காக வருந்தும் இந்தத் தமயன். தானாடாவிட்டாலும் தசைசயாடும் என்பார்களே, அது இதுதானோ?

பிரபஞ்சத்தையே அழிக்கவல்ல 'கடவுள் துகள்!'

LDT பெரும் விஞ்ஞான ஆராய்ச்சியின் மூலம் அடையாளம் காணப்பட்டு வரும் “கடவுள் துகள்” எனப்படும் “ஹிக்ஸ் போஸன்” இந்த பிரபஞ்சத்தையே அழிக்கும் பயங்கர ஆற்றல் கொண்டது என்று பிரிட்டனைச் சேர்ந்த இயற்பியல் விஞ்ஞானி ஸ்டீஃபன் ஹாக்கிங் எச்சரித்துள்ளார்.

பிரபஞ்சத்தில் உள்ள அனைத்திற்கும் வடிவமும் அளவும் கொடுத்த “கடவுள் துகள்” நிலையற்றத் தன்மைக்குச் செல்லலாம் என்கிறார் அவர். இதன் விளைவாக “பேரழிவு வெற்றிட சீர்கேடு” (Catastrophic vacuum decay) ஏற்பட்டு காலம், வெளி குலைந்து போகும் அபாய வாய்ப்புகள் உள்ளது என்று அவர் கூறியுள்ளார். இவரது எச்சரிக்கைக்குப் போகுமுன் கடவுள் துகள் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்ளலாம்.

வெயிட்டான விடயம்தான்

ஒரு அணு என்பது புரோட்டான், நியூட்ரான், எலெக்ட்ரான் ஆகிய துகள்களைக் கொண்டது. இதில் ஒரு புரோட்டான் என்பது குவார்க், பெர்மியான், குளுயான்ஸ் ஆகிய துணை அணுத் துகள்களால் (சப்-அடாமிக் பார்ட்டிகிள்கள்) ஆனது. ஒரு புரோட்டானின் நிறை என்பது இந்தத் துணை அணுத் துகள்களின் நிறை தான். ஆனால், உண்மையில் புரோட்டானின் நிறை, இந்த துணை அணுத் துகள்களின் நிறையை விட மிக மிக அதிகமாகவே உள்ளது. இதனால், புரோட்டானில் இன்னும் ஏதோ ஒரு “வெயிட்டான” சமாச்சாரமும் உள்ளது என்பது விஞ்ஞானிகளின் கருத்து.

ஹிக்ஸ் போஸன்

அது என்னவாக இருக்கும் என்ற ஆராய்ச்சியில் உதித்த விடயம் தான் “ஹிக்ஸ் போஸன்”. இதுவரை உறுதிப்படுத்தப்படாத இந்த “ஹிக்ஸ் போஸன்” தான், உண்மையிலேயே பிரபஞ்சத்தின் அடிப்படையாக இருக்க முடியும் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

கடவுளின் துகள்

பிரபஞ்சத்தின் அடிப்படை என்பது கடவுள் மாதிரி என்பதால் அதற்கு “கடவுளின் துகள்” (God's particle) என்று பெயரிடப்பட்டது. இதையடுத்து இந்தத் துகளைத் தேடி பயணத்தை ஆரம்பித்தனர்.

கடவுளைத் தேடிய பயணம்

டிரில்லியன் கணக்கிலான புரோட்டான்களை ஒளியின் வேகத்தில் எதிரெதிரே மோதவிட்டு உடைத்து சிதறடித்தால் குவார்க், பெர்மியான், குளுயான்ஸ், மின் காந்த கதிர்வீச்சு, வெப்பம் என்று அது சிதறும். கூடவே, “ஹிக்ஸ் போஸன்” துகளும் புரோட்டானிலிருந்து வெளியே வரும் என்ற நம்பிக்கையில் தான் ஜெனீவா அருகே பூமிக்கு அடியில், Large Hadron Collider என்ற அதிநவீன கருவியை பெரும் செலவில் அமைத்தனர்.


கடவுள் துகள் கண்டுபிடிப்பு

இங்கு அட்லஸ், சிஎம்எஸ் ஆகிய குழுக்கள் நடத்திய தனித்தனி சோதனைகளில் “ஹிக்ஸ் போஸன்” என்ற ஒரு விடயம் இருப்பது உண்மை தான் என்று தெரியவந்துள்ளது. நேரடியாக இந்தத் துகள் வெளிப்படாவிட்டாலும், அது இருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இதன் எடை 126 பில்லியன் எலெக்ட்ரான் வோல்ட்ஸ் (electron volts) என்றும், இது புரோட்டானை விட 250,000 மடங்கு அதிக எடை கொண்டது என்றும் தெரியவந்துள்ளது. அதாவது பிரபஞ்சத்தின் பெரும் பாரம் “ஹிக்ஸ் போஸன்” தான்.

பேரழிவு எப்போதும் நிகழலாம்

ஹிக்ஸ் போஸன் என்று அழைக்கப்படும் கடவுள் துகளில் கவலைக்குரிய அம்சம் ஒன்று உள்ளது. அதாவது 100 பில்லியன் கிகா-எலக்ட்ரான் - வோல்ட்டிற்கும் அதிகமான ஆற்றலில் அது அதி நிலைத்தன்மை பெறலாம் என்கிறார் விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங்.

இதன் பொருள் என்னவெனில் பிரபஞ்சம் வெற்றிட சீர்கேடு என்ற பேரழிவுக்கு ஆட்பட நேரிடலாம், காரணம் உண்மையான வெற்றிடக் குமிழ் ஒளியின் வேகத்தில் விரிவாக்கம் பெறும். இத்தகைய நிகழ்வு எப்போது வேண்டுமானாலும் நிகழலாம், அது வருவதை நம்மால் பார்க்க முடியாது. இந்த அபாயம் அவ்வளவு எளிதாக நாம் மறந்து விடவோ, அலட்சியம் காட்டவோ முடியாத விடயம் என்று ஸ்டார்மஸ் என்ற புதிய புத்தகத்திற்கு அவர் அளித்துள்ள முன்னுரையில் தெரிவித்துள்ளார். அடக் கடவு(ள்துக)ளே!




Canadian College of Science
IELTS ஆங்கில வகுப்புக்கள்
Student Visa , Work Visa
ஆகியவற்றிற்கான ஆங்கில
மொழிப்பயிற்சி மற்றும்
தொடர்ந்து விசா உதவியும் பெறலாம்
தொடர்புகளுக்கு
கனடா: Ganga (416) 986 - 9554
இலங்கை: Mukunthan 0773-867-458 / 021-205-2262
கனேடிய அறிவியல் கல்லூரி
40 ஆடிய பாதம் வீதி திருநெல்வேலி
யாழ்ப்பாணம் இலங்கை

சிகரம் தொட்ட மங்கள்யான்

'மங்கள்யான் விண்கலம் செவ்வாய் கிரகத்தின் சுற்றுவட்ட பாதையில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது' இது ஒரு செய்தி மட்டுமல்ல.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் செவ்வாய் கிரகத்தை ஆராய 'மங்கள்யான்' விண்கலம் உருவாக்கப்பட்டு கடந்த ஆண்டு நவம்பர் 5 ஆம் தேதி ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து விண்ணில் ஏவப்பட்டது. ரூ.460 கோடி செலவில் உருவாக்கப்பட்ட இந்த விண்கலம் 300 நாட்களுக்கும் அதிகமாக விண்ணில் பயணம் செய்து திட்டமிட்டப்படி சென்ற மாத இறுதியில் குறிக்கப்பட்ட நாள் தப்பாமல் செவ்வாய்க் கிரக சுற்றுவட்டப் பாதையை அடைந்துவிட்டது.

அப்போது அதில் உள்ள லாம் என்ஜின் மற்றும் அதனுடன் பொருத்தப்பட்டுள்ள 8 சிறிய என்ஜின்கள் 24 நிமிடங்கள் எரியூட்டப்பட்டு அதன் வேகத்தை குறைத்து செவ்வாய் கிரக சுற்று வட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டது. இந்த அரிய நிகழ்வை பெங்களூர் பீனியாவில் உள்ள இஸ்ரோ தரைக்கட்டுப்பாட்டு மையத்தில் இருந்து பிரதமர் நரேந்திரமோடி நேரில் பார்வையிட்டார்.

இத் திட்டத்தின் வெற்றி மூலம், முதல் முயற்சியிலேயே செவ்வாய்க் கிரகத்திற்கு விண்கலம் அனுப்பி வெற்றி பெற்ற முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெறுகிறது.

இஸ்ரோ விஞ்ஞானிகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்து உரை நிகழ்த்தியபோது, "மங்கள்யான் வெற்றியடையும் என முழு நம்பிக்கை இருந்தது. விண்வெளியில் இந்திய விஞ்ஞானிகள் வரலாற்று சாதனை படைத்துள்ளனர். சாதிக்க முடியாததை இந்தியாவின் இஸ்ரோ விஞ்ஞானிகள் சாதித்துள்ளனர். அனைத்து இந்தியர்களும் பெருமைப்பட வேண்டிய தருணம் இது.

கோடிக்கணக்கான கிலோ மீட்டர் தூரத்தை கடந்து மங்கள்யான் சாதனை படைத்துள்ளது. முதல் முயற்சியிலேயே வெற்றி எட்டப்பட்டிருக்கிறது. முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்ற முதல் நாடு இந்தியா. முன்னோர்களுக்கு மரியாதை செலுத்தி இருக்கிறார்கள் இஸ்ரோ விஞ்ஞானிகள். விண்வெளித் திட்ட சாதனைகளுக்கு இது ஒரு அடையாளம்.

வருங்கால சந்ததியினருக்கும் இஸ்ரோ விஞ்ஞானிகள் வழிகாட்டியிருக்கிறார்கள். தெரியாத ஒன்றை ஆய்வு செய்ய நம் விஞ்ஞானிகளைவிட வேறு யாருக்கும் ஆர்வம் இல்லை" என்று பாராட்டினார்.

இன்று செவ்வாய்க் கிரகத்தை நெருங்கி சாதனை படைத்த மங்கள்யான் விண்கலம் விண்ணில் ஏவப்பட்டதிலிருந்து இன்று வரை பயணித்த பயணம் ஒரு பார்வை..

கிராவிட்டி படத்திற்கு ஆன செலவைவிட குறைந்த செலவில் ஒரு விண்கலத்தை செவ்வாய்க் கிரகத்திற்கே செலுத்தி அதில் வெற்றியும் கண்டு அப்ளாஸ் அள்ளியுள்ளனர் நம் இஸ்ரோ விஞ்ஞானிகள். அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் மட்டுமே கொண்டிருந்த பெருமைகளை முறியடித்து முதல் முயற்சியில் சாதித்த நாடு என்ற புதிய சாதைனையை இந்தியா படைத்திருக்கிறது.

செவ்வாய்க் கிரகத்திற்கு விண் கலங்களை உலக நாடுகள் அனுப்ப முயற்சிப்பது ஒன்றும் புதிய விஷயம் அல்ல. 1960ல் இருந்து சுமார் 40 முயற்சிகள் நடைபெற்று அதில் பாதிக்கும் மேற்பட்டவை தோல்வியிலேயே முடிந்துள்ளன. இதற்கு முன் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற 20 நாடுகளை உள்ளடக்கிய 'ஒன்றிணைந்த ஐரோப்பா விண்வெளிக்கழகம்' அனுப்பிய 'மார்ஸ் எக்ஸ்பிரஸ்' விண்கலம் மட்டுமே முதல் முயற்சியில் வெற்றி கண்டது.

ஆசிய பெருந்தலைகளான இந்தியாவும், சீனாவும் விண்வெளி ஆராய்ச்சியை தங்கள் கௌரவப்பிரச்னையாகவே கருதுகின்றனர். ஆயுதங்கள் ஆராய்ச்சியில் சீனா பல மடங்கு முன்னேறி இருந்தாலும் விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியா சரிக்கு சமமாகவே பதிலடி தந்து வருகிறது. 2011ல் ரஷ்யா உதவியுடன் செவ்வாய்க் கிரகத்திற்கு சீனா அனுப்பிய விண்கலம் தோல்வியில் முடிந்தது. ஜப்பானும் இதேபோல் 1998 ஆம் ஆண்டு முயற்சித்து தோல்வி கண்டது.

இதனிடையே சந்திரயான் விண்கலம் கொடுத்த வெற்றி மங்கள்யான் பணிகளுக்கு புதிய உத்வேகத்தைக் கொடுத்தது. மங்கள்யான் குறித்த அறிவிப்பை அப்போதைய பிரதமர் மன்மோகன் சிங் செங்கோட்டையில் தனது சுதந்திர தின உரையில் வெளியிட்டார். அதில் இருந்து சுமார் 15 மாத இடைவேளையில் முழு விண்கலத்தையும் உருவாக்கி கடந்த ஆண்டு நவம்பர் 5ஆம் தேதி அப்போதைய ஆந்திரப்பிரதேசத்தில் இருந்த ஸ்ரீ ஹரிகோட்டாவில் பி.எஸ்.எல்.வி ராக்கெட் உதவியுடன் மங்கள்யான் ஏவப்பட்டது.

மங்கள்யான் திட்டத்தின் தலைமை அதிகாரி சுப்பையா அருணன் "சுமார் 15 மாதங்கள் விடுமுறை எடுக்காமல் பணியாற்றியுள்ளேன். ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் மட்டுமே வீட்டில் நேரத்தை செலவிட்டேன். என்னை போல நிறையப் பேர் மங்கள்யான் வெற்றிக்காக அயாராது உழைத்துள்ளோம்" என்று கூறியுள்ளார்.

எப்படி பயணித்தது மங்கள்யான்

கவுண்ட்டவுன் ஆரம்பிக்கும் நொடியில் இருந்தே விண்கலம் எந்த நிமிடத்தில் எங்கு இருக்கும் எந்த நாள் இலக்கைச் சென்றடையும் என அனைத்திற்கும் நாள் குறிக்கப்படும். ராக்கெட் விண்ணில் பாயத்துவங்கியதும் ஸ்ரீ ஹரிகோட்டா, அந்தமானில் உள்ள போர்ட் ப்ளேர், ப்ருனே, பியாக் போன்ற ஊர்களில் உள்ள நான்கு மையங்களில் இருந்து கண்காணிப்பார்கள். அந்தமான் தாண்டி ராக்கெட் செல்லத் துவங்கியதும் 10 நிமிடங்களுக்கு எந்த மையத்துடனும் தொடர்பில் இருக்காது. பின்னர் மேற்கு பசிபிக் பெருங்கடலின் மேல் பாயும்பொழுது அங்கு இதற்கென பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட இரு கப்பல்கள் ராக்கெட்டுடன் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ளும்.


ஒரு கட்டத்தில் ராக்கெட்டில் உள்ள அனைத்து பகுதிகளும் பிரிந்துசெல்ல மங்கள்யான் தனது சோலார் பேனல்களை வெளியே கொண்டு வரும். பூமியை சுமார் 6 முறை சுற்றியபின் பூமியின் பாதையை விட்டு விலகி செவ்வாயை நோக்கி சீறிப்பாயத் துவங்கியது. இதற்காக விண்கலத்தில் உள்ள ஏ.எல்.எம் மோட்டார் இயக்கப்பட்டது. விண்கலம் வேகம் எடுத்தவுடன் இந்த மோட்டார் நிறுத்தப்படும்.


சுமார் 10 மாத காலம் ஒரு நொடிக்கு 22.1 கிலோமிட்டர் என்ற வேகத்தில் பயணித்து செவ்வாய்க் கிரகத்தின் அருகில் சென்றடைந்தது. செவ்வாய் கிரகத்தின் ஈயிர்ப்பு விசைக்குள் நுழையும் பொழுது இதன் வேகம் குறைக்கப்பட வேண்டும். இதைக் குறைக்க முதலில் 10 மாதங்கள் இயங்காமல் இருந்த அந்த ஏ.எல்.எம். மோட்டார் இயங்குகிறதா என்று சோதனை நடைபெற்றது. இந்த திக்திக் சோதனை சுமார் 4 வினாடிகள் நீடித்தது. மோட்டார் சரியாக இயங்கத் துவங்கியதும் இஸ்ரோவிற்கு நாலாபுறமும் வாழ்த்துக்கள் குவியத்தொடங்கின. சோதனை நடத்திய அதே வேளையில் நாசாவின் (அமெரிக்கா) மேவன் விண்கலம் வெற்றிகரமாக செவ்வாய் கிரகத்தின் ஈர்ப்பு விசைக்குள் நிறுத்தப்பட்டு அதன் ஆராய்ச்சிப் பணிகளை துவங்கியது. ஆனால் அவர்களை விட இந்தியா குறைந்த செலவில் மங்கள்யானை அனுப்பி புதிய சாதனையை படைத்துள்ளது.

என்ன செய்யப்போகிறது மங்கள்யான்?

மங்கள்யான், செவ்வாய் கிரகத்தில் மீத்தேன் வாயு உள்ளதா என தொடர்ந்து கண்காணிக்கும். அப்படி மீத்தேன் வாயு இருக்கும் பட்சத்தில் அது உயிர்கள் வாழ்ந்ததால் உருவானதா அல்லது இயற்கை பேரழிவுகளின் விளைவால் உருவானதா என்று ஆராயும். அது மட்டுமின்றி அதனுள்ளே பொருத்தப்பட்டுள்ள கலர் கேமரா தொடர்ந்து படங்களை எடுத்து அனுப்பிகொண்டிருக்கும். இது வருங்காலத்தில் மனிதர்களை செவ்வாய் கிரகத்தில் குடியேற்ற நடைபெறும் ஆய்வுகளுக்கு பெரும் உதவியாக இருக்கும். இதன் தொடர்ச்சியாக அடுத்து செவ்வாய் கிரகத்தில் வேறு ஒரு விண்கலத்தை இறக்கி ஆய்வுகள் நடத்தப்படும். இறுதியாக சுமார் 2030 ஆம் ஆண்டின் வாக்கில் மனிதர்கள் அனுப்பப்படுவார்கள்.

சரியாக கழிவறை வசதி கூட இல்லாத நாட்டிற்கு இந்த ஆராய்ச்சி எல்லாம் தேவையா என எதிர்ப்புக்குரல்கள் ஒருபுறம் ஒலிக்க, அமைதியாக 450 கோடி செலவில் புதிய சாதனை படைத்துவிட்டனர் விஞ்ஞானிகள். நிலவில் தண்ணீர் இருப்பதை உலகிற்கே எடுத்துக்காட்டிய இந்தியா, செவ்வாயின் ஆச்சர்யங்களை கூடிய விரைவில் கண்டெடுத்து உலகின் முன் காட்டும் என்பதில் ஐயமில்லை.







சிறு தகவல்கள்

- பூமியிலிருந்து அனுப்பும் செய்தி மங்கள்யானை சென்றடைய 20 நிமிடங்கள் ஆகும். பின்னர் அது அனுப்பும் செய்திகள் மற்றும் படங்கள் அடுத்த 20 நிமிடங்கள் கழித்தே நமக்கு வந்தடையும். ஆக 40 நிமிடங்கள் கழித்தே நமக்குப் பதில் கிடைக்கும்.

- ஆந்திராவைச் சேர்ந்த ஒரு தனியார் நிறுவனம் மங்கள்யான் விண்கலம் பற்றி "SMARTUR MANGALYAAN" என்ற அன்ரொயிட் அப்பை வடிவமைத்துள்ளது. இதன் மூலம் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எளிமையான 3டி முறையில் மங்கள்யான் செயல்பாடுகள் குறித்து தெரிந்துகொள்ளலாம்.


The BRICK கனடாவின் முன்னணி தளபாட விற்பனைநிலையம்
உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து வித தளபாடங்களுக்கும், ஆடம்பர வரவேற்பறை,
படுக்கைஅறைக்குத் தேவையான தளபாடங்களுக்கும்
தமிழில் உரையாடி உங்கள் தேவைகளைப் பூர்த்திசெய்யலாம்.
BRICK
Furniture
Appliances
Electronics
Home Theatre
To book an appointment for the best deal in town
Certified sleep expert
Furniture Sales Consultant:
Anata Francis
647 962 5609



வால்வெள்ளிதேடி அலைகிறாள் ரொசேட்டா

இந்த ஆண்டு நவம்பர் மாதக் கடைசியிலே

"பைங்குவளைக் கார்மலரால்
செங்கமலப் பைம்போதால் அங்கம்
குருகினத்தால்.."

என்று பூமியில் நாங்கள் திருவெம்பாவை பாடும் நேரத்திலே... விண்வெளியில் ஒரு அதிசயம் நடக்கப்போகுது!

பில்லியன் மைல்கள் விண்வெளியில் இருந்து, இருள் வெளிகள் தாண்டி வரும் அந்த மில்லியன் வருடங்கள் பழமையான செய்தி, இற்றைவரை நாங்கள் நம்பும் இந்த உலகத்தில் முதல் உயிர் எங்கிருந்து வந்தது என்ற பல அறிவியல்ப் புத்தகங்கள் சொல்லும் உண்மைகளைப் புரட்டிப் போடலாம், சமயப் புத்தகங்களின் நம்பிக்கைகளுக்கு ஆப்பு வைக்கலாம், எங்களின் சித்தப்பு, பெரியப்பு பிரபஞ்சத்தில் வேற ஒரு கிரகத்தில் இருக்கலாமோ என்ற நம்பிக்கைக்கும் விடைதரலாம். இதுஎதுவும் நடக்காமல் புஸ்வானம் போலவும் போகலாம், அது என்ன?

பத்து வருடத்துக்குமுன், அஸ்டர் பெல்ட் என்ற சனிக்கிரகத்தைச் சுற்றி அமைந்திருக்கும் பாறைத் தொகுதியின் இடியப்பத் தட்டு போன்ற வட்ட வளைவுகளின் விளிம்பில் இருந்து "இனிக் கூட்டுக் குடும்பம் சரி வராது, நான் தனிக் குடித்தனம் போறேன்" என்று புறப்பட்ட வால்வெள்ளித் துண்டொன்று, எங்கள் சூரியக் குடும்பத்துக்கு உள்ளே குறுக்க மறுக்காகப் பாய்ந்தது. அதற்கு Comet 67p/ Churyumov–Gerasimenko என்ற பெயர். (தமிழில் எழுதினால் 67பி - சூரியமோவ்-கிரிகிச்மெங்கோ வால்வெள்ளி என்ற பெயர். இந்தப் பெயர் வந்ததன் கதையை பின்னே வரும். நாக்குச் சுழுக்காமலிருக்க இதை இப்போதைக்குச் சுருக்கமாக சூகி வால்வெள்ளி என்று சொல்லிக் கொள்வோமா?) இந்தச் சூகி வால்வெள்ளியின் அழகிய கூந்தலைக் குறிவைத்துத் தேட ஐரோப்பியன் ஸ்பேஸ் ஏஜென்சி அனுப்பிய நூறு கிலோ அழகு தேவதையான விண்கலத்தின் பெயர் ரொசேட்டா (Rosetta). பில்லியன் மைல்கள் அலைந்து, இடையில சில வருடம் தொடர்பு இழந்து, மறுபடியும் சென்ற மாதம் இவ் வால்வெள்ளியைக் கண்டுபிடித்துக் கண்ணடித்து, அதன் கமரா கிளிக் செய்த படங்களை அனுப்பிவைத்து எங்கள் நெஞ்சில பாலை வார்த்தாள் அந்த ராசாத்தி ரொசேட்டா!

எங்களின் சூரியத் தொகுதிக்கு கொஞ்சம் வெளியே, அதன் விளிம்பில் சூரியனின் ஈர்ப்பு சக்தி கையை விடும் தூரத்தில் என்ன இருக்கு, என்ன நடக்குது என்று யாருக்கும் தெரியாது. அங்கெல்லாம் சட்டலைட் அனுப்பி ஆராய்ச்சி செய்யும் அளவுக்கு இன்னும் எங்களிடம் தொழில்நுட்பம் இல்லை. ஒரே வழி அந்த பிரபஞ்ச வெளியில் இருந்து எங்கள் எல்லைக்குள் வரும் ஒரே ஒரு நல்ல தகவல் காவியான வால்வெள்ளிகளை மட்டும் வளைச்சுப் பிடிச்சு விசாரிக்கலாம். அதுதான் பத்து ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பியன் ஸ்பேஸ் ஏஜென்சி அனுப்பிய (மில்லியன் டாலர் விழுங்கிய) இந்த சூகி வால்வெள்ளியைப் பிடிக்கும் வெண்வெளித் திட்டம். அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள்தான் இதை முதலில் செய்ய இருந்தார்கள். அமெரிக்கப் பொருளாதாரம் சரிந்து விழ, காங்கிரஸ் "நாயைப்பிடி வால்வெள்ளி வேண்டாம்" என்று அந்த திட்டத்தைக் கைவிட, அவ் வால்வெள்ளி எங்கள் சூரியத் தொகுதியை அண்மிக்கும் இந்த சந்தர்பத்தை இழக்க விரும்பாத ஐரோப்பிய விஞ்ஞானிகள் துணிந்து இதில் இறங்கினார்கள், நம்பினால் நம்புங்க, இதில மிகப் பெரிய ஆச்சரியம் இந்த வைர மூக்குத்தியில் ஒரு விண்கலத்தை இறக்கி அம்மி மிதித்து அருந்ததி பார்க்கும் நிகழ்வை நடத்தப்போகும் விஞ்ஞானிகள் குழுவில் முக்கால் வாசிப்பேர் பெண்கள்.

இந்த வால்வெள்ளியை 1969ல் கண்டு பிடித்தவர்கள் சோவியத் யூனியன் ஒன்றாக இருந்த கால விஞ்ஞானிகள் இருவர், அதனால் அவர்கள் இருவரின் பெயரைச் சேர்த்து அவ் வால்வெள்ளிக்கு Churyumov–Gerasimenko என்று பேர்சூட்டியுள்ளார்கள். ஒருவர் Churyumov - இன்றைக்கு உள்நாட்டு சண்டையில் சாப்பிடவும் வழியில்லாமல் அகதிகள் அலையும் உக்ரேன் நாட்டவர். மற்றய பெண் விஞ்ஞானி Gerasimenko - கசாகிஸ்தான் நாட்டவர். அவர்களின் கணிப்பில் இந்த வால்வெள்ளி ஒரு நாள் எங்களின் எல்லைக்குள் வரும் என்று எழுதி வைத்துவிட்டு மேலே போய்ச் சேர்ந்து விட்டார்கள். அவர்களால் அப்போது செய்ய முடிந்தது அவ்வளவுதான்.


உண்மையில் இந்த வால்வெள்ளி எங்கள் சூரியத் தொகுதிக்குள் வந்த கொஞ்ச வருடங்களில், எங்கள் கிரகத் தொகுதியில் உள்ள மிகப் பெரிய கோளான, (பூமிபோல ஆயிரம் மடங்கு ஈர்ப்பு விசை உள்ள) வியாழன் என்ற ஜூப்பிடர் கிரகம் - வியாழ தோஷம் பிடிச்சோ அல்லது வேற என்ன கோபமோ தெரியாது - இந்த வால்வெள்ளியைப் பலமுறை தாறுமாறாக இழுத்து எறிந்தது. அதன் பாதை பல சிரமங்களுக்கு மத்தியில் பில்லியன் மையில்கள் அலைய, அதைத் துரத்தித் துரத்தித் தேடிய எங்கள் சின்னப் பெண் ரொசேட்டா, தானும் தொலைந்து பின் திரும்பிவந்து இந்த ஓகஸ்டில்தான் இதைத் தேடிப் பிடித்தா.

நாங்கள் வசிக்கும் இந்த பூமிக்கு ஒரு நாள் ஆபத்து விண்வெளியில் இருந்துதான் வரும், அதோடு எல்லாரும் கோவிந்தாதான். முக்கியமாய் வால்வெள்ளிகள் ஆபத்தானவை. எண்பதுகளில் வியாழக் கிரகத்துடன் மோதிய சூமேகர் லேவி என்ற வால்வெள்ளி அந்த கிரகத்தில் மோதி ஏற்படுத்திய பள்ளத்துக்குள் எங்கள் பூமியைக் கொண்டுபோய் வைக்கலாம். அவ்வளவு அகோர அடி! அப்படி ஒரு நிலைமை எங்களுக்கு வரும்போது எல்லா வீராதி வீரன்களும் ஓடிபோய் கெஞ்சப் போவது அஸ்ட்ரோ-பிசிக்ஸ் விஞ்ஞானிகளிடம் தான். அவர்கள்தான் விழிப்பாக விண்வெளியை பார்த்து கொண்டு இருப்பவர்கள்.

உயிர் கொடுத்து உயிர் தேடிய ரோசேட்டா சட்டலைட், பல சந்தர்பங்களில் விண்கற்கள், வேறு பல சோலர் கதிர்கள், காமாக் கதிர்கள் போன்ற பல குழப்பங்களில் இருந்து இந்த பத்து வருடங்களில் உயிரைக் கையில் பிடிச்சுக் கொண்டு பிராயணம் செய்த பில்லியன் மைல்களில் பலமுறை மயிரிழையில் உயிர்தப்பியிருக்கு. மணிக்கு முப்பத்தி ஐயாயிரம் கிலோ மீட்டார் வேகத்தில் ஒரு நீள் வட்டப் பாதையில் பறக்கும் சூகி வால்வெள்ளியை வண்ணாத்திப்பூச்சியைப் பிடிக்க முடியாமல் பிடிப்பது போல கடைசியில் ரொசேட்டா துரத்திப் பிடித்ததே ஒரு அதிசயம்! இப்படி இத் திட்டம் முடிவில் வெற்றி அளித்தது என்கிறார்கள் விஞ்ஞானிகள்...

ஜெர்மனியில் உள்ள பிரான்க் போர்ட் அருகிலுள்ள டாரம்ஸ்டேட் நகரிலுள்ள ஐரோப்பியன் ஸ்பேஸ் ஏஜென்சி சென்டரில் (ESA) இருந்து ரோசேட்டாவை இயக்கிய விஞ்ஞானிகள் சளைக்காமல், செவ்வாய் கிரகம், வியாழக் கிரகம் ஆகியவற்றின் மையநீக்க சுழற்சி இழுவிசையையும் கணித்து, ரோசெத்தாவில் பொருத்தியுள்ள சோலார் சக்தி எஞ்சின்கள் மற்றும் சின்ன ஹிபர்ஜோனிக் ரொக்கெட்களின் உதவியுடன் மண்டையைப் பிச்சு அதன் பாதையைக் கணித்து இயக்கி, அதைத் இடைவிடாமல் தேடவைத்தும்கூட சில வருடம் எங்களை எல்லாம் அந்தரிக்க வைத்துப் போட்டு ரொசேட்டா பில்லியன் மைல்கள் விலகிப் போனதால் பூமியுடன் தொடர்பை இழந்து போய் இருந்தது. அதன் பாதையில் இப்படி ஒரு விடயம் நடக்கும் எண்டு கணித்து இருந்தார்கள், கணித்தபடியே இந்த வருட ஆரம்பத்தில் ரொசேட்டா தொடர்பை ஏற்படுத்தியது. மீளத் தொடர்பு ஏற்படுத்திய சில வாரங்களிலேயே அது சூகி வால்வெள்ளியைக் கண்டு பிடித்து அதன் அருகில் போய் அழகழகாய்ப் படம் எடுத்தும் அனுப்பியது. அது அனுப்பிய தெளிவான படங்கள்தான் இன்றைவரை மனித வரலாற்றில் முதல் முதல் ஒரு வால் வெள்ளியின் பயோ டேட்டா!- அது இப்ப எங்க சட்டைப்பைக்குள் வந்தாயிட்டுது.

பூமியில் உள்ள தண்ணீர் முழுவதையும் கொண்டு வந்தது வால்வெள்ளிகள்தான், முதல் முதல் உயிரை விண்வெளியில் இருந்து கொண்டு வந்ததும் வால் வெள்ளிகள்தான் என்று வால்வெள்ளிகள் பற்றிய பல விஞ்ஞான தியரிகள் இருக்கு. இதை உறுதி செய்யும் நிகழ்வாக, இப்போது ரோசேட்டாவிடம் விஞ்ஞானிகள் நம்பிக்கையோடு எதிர் பார்க்கும் ஒரே ஒரு கடைசி நிகழ்வு, அந்த நாலு கிலோ மீட்டார் நீள, ஆறு கிலோ மீட்டார் அகல மிதமான ஈர்ப்பு விசை உள்ள, கொஞ்சம் உருளைக்கிளங்கு போல இருக்கும் இந்தச் சூகி வால்வெள்ளியின் நிலப்பரப்பில் பைலே என்ற சிறிய சட்டலைட் பரிசோதனை ஆய்வு கூடக் கலத்தை இறக்கி, அதில் தண்ணீர், காபன், வேறு உயிர் 'உருவாகத் தேவையான ஆரம்பக் கட்டுமான கனிப்பொருள்கள், அல்லது இதுவரை நாங்கள் பூமியில் அறியாத இரசாயனக் கலவைகளின் ஆதார கனிப்பொருள்கள் இருக்கா என்று அறியும் பரிசோதனை நிகழ்வு நடக்கப் போகுது. ரொசேட்டா தான் காவிக்கொண்டு பில்லியன் மைல்கள் அலைந்த பைலேயை இறக்கிப் போட்டு, அதில இருந்து தகவல்கள் அனுப்பியபின் மறுபடியும் அதைக் காவிக்கொண்டு திரும்பி வரப்போகுது...





67-சூரியமோவ் கிரிகிச்மெங்கோ வால்வெள்ளி (ஒருதடவையாவது அதன் முழுப்பெயரை நாத்தடக்காமல் சொல்லவேண்டிய தர்மத்துக்காகச் சொல்லிவிட்டு) அது தரப்போகும் தகவல் வெளியே உள்ள பிரபஞ்சத்தை நாங்கள் உள்ளே இருந்து ஆராயக் கிடைத்த ஒரு மிகப்பெரிய சந்தர்ப்பம் என்றுகூறி அந்த நாளுக்காகக் காத்திருப்போம். தாங்யூ ரொசேட்டா!

கொந்தளித்து ஓய்ந்ததா ஸ்கொட்லாந்து!

சிவா ஈஸ்வரமூர்த்தி

ஒரு காலத்தில் எமது இராஜ்யத்தில் சூரியன் மறைவதில்லை என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்ட ஐக்கிய இராஜ்யம். இந்த இராஜயத்திலிருந்து ஸ்கொட்லாந்து என்ற நாடு தனியாக பிரிந்து செல்லல் என்ற வெள்ளையின மக்களே முடிவெடுத்து நடைபெற்ற விருப்பு வாக்கெடுப்புதான் அண்மையில் நடைபெற்று முடிந்த ஸ்கொட்லாந்து வாக்கெடுப்பாகும். இதில் தாம் தொடர்ந்தும் பிரித்தானியாவுடன் இணைந்து இருப்பதா? அல்லது இணைந்திருக்காமல் பிரிந்து செல்வதா? என்ற பிரதான கோரிக்கைகளுடன் ஸ்கொட்லாந்து மக்களிடையே அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெற்றது.

தேர்தல் முடிவுகள் வருவதற்கு முன்பான கருத்துக் கணிப்புகள் பிரிந்து செல்வதற்கும், பிரிந்து செல்லாமல் இருப்பதற்கான ஆதரவுகள் சம பலமாக உள்ளதாக எடுத்தியம்பி நின்றன. ஆனால் தேர்தல் முடிவுகளின் படி பிரித்தானியாவிடம் இருந்து ஸ்கொட்லாந்து பிரிந்து செல்வதில்லை என்பதற்கு ஆதரவாக கிட்டத்தட்ட 55.3 வீத வாக்குகள் விழுந்தன என்று செய்திகள் கூறுகின்றன. இதன் மூலம் பிரித்தானியாவிலிருந்து ஸ்கொட்லாந்து பிரிந்து செல்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. ஆனால் 44.7 வீத மக்கள் பிரிந்து செல்வதை ஆதரித்தே வாக்கழித்துள்ளனர் என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். வாக்களிகப்பட்ட 84.6 விகித வாக்குகள் போக மீதி 15.4 விகிதம் வாக்களிக்கப்படவில்லை. இவர்களும் வாக்களிந்து இருந்தால் நிலமை சிலவேளைகளில் பிரந்து செல்லல் என்ற நிலமைகளையே ஏற்படுத்தியிருக்கலாம் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

தேர்தலை நடத்துங்கள் மக்கள் கூறும் வாக்குகளுக்கு கட்டுப்படுகின்றோம் என்று தைரியமாக வழிவிட்டு நிற்பது என்பதுவும் ஒருவகையில் பிரிந்து செல்லாமல் இருப்பதற்கான அபிபிராயங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதற்கான ஒரு உளவியல் செயன் முறைதான். இரண்டாம் உலகப் போர்வரைக்கும் உலகின் பெரும் பகுதியை தனது பிரிதாளும் கொள்கையினால் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த பிரித்தானிய சாம்ராஜயம் அதிலிருந்து கிடைத்த அனுபவங்களை இங்கு நன்கே பயன்படுத்தியே இருக்கின்றது என்றுதான் இதனைப் பார்க்க முடியும்.

ஆனாலும் ஐக்கிய ராஜ்ஜியத்தின் இந்த தேர்தல் பலப்பரீட்சை ஒருவகை அசட்டு துணிசசல்தான். இதனை பிரித்தானியா துணிந்து செய்து நின்றது. இதில் வெற்றியும்(?) கண்டது. இலங்கை போன்ற நாடுகளில் இது போன்ற தைரியமான செயற்பாட்டை நாங்கள் எதிர்பார்க்க முடியாது. இதுவும் இந்நாடுகளில் பிரிவினை என்ற கோஷம் வலுவடைந்து நிலைத்து நிற்பதற்கு ஒரு காரணமாக அமைகின்றது.

பிரிதானியாவில் ஆட்சியில் இருந்த மத்திய அரசிற்கும் ஸபெர்லாந்து மாநில அரசிற்கும் இடையில் கடந்த 30 வருடங்களாக அதிகாரப் பகிர்வு சம்மந்தாமாக நடைபெற்று வரும் இழுபறியும் இந்த பிரிந்து செல்லுதல் என்ற வாக்கெடுப்பிற்கு காரணமாக அமைந்தத்து எனலாம். மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தினால் வழங்கப்பட்ட விவசாயிகளுக்கான நிவாரண நிதியை பகிருவதல் ஸ்கொட்லாந்து மக்களுக்கு வழங்கப்பட்ட பாகுபாடே ஸ்கொட்லாந்து பிரிந்து செல்வதற்கான விருப்பு வாக்கெடுப்பை வேகப்படுத்தியதற்கு முக்கிய காரணம் அமைந்தது என்பதையும் இங்கு கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

ஸ்கொட்லாந்தின் இந்த பிரிந்து செல்வதற்கான செயற்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு இன்றை ஐக்கிய இராஜ்ஜியத்தின் உருவாக்க வரலாற்றை சற்று எடுத்துப் பார்ப்பது அவசியமாகின்றது. ஐக்கிய இராஜ்யம் நான்கு நாடுகளை தன்னகத்தே கொண்ட தேசம் ஆகும். பிரித்தானியா, ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து, வேல்ஸ் என்ற நாடுகளின் இணைப்பே ஐக்கிய இராஜ்யம் ஆகும். இவை 5ம் நூற்றாட்டிலிருந்து 15ம் நூற்றாண்டுவரை தனித் தனியாக இருந்தன, தமக்கிடையே யுத்தங்களும் செய்தன. தனித்தனியாக இருந்த இந்த நாடுகள் 14ம் நூற்றாண்டில் நடைபெற்ற பாரிய யுத்தத்தில் கிடைத்த பாடங்களின் அடிப்படையில் 1707 ஆண்டு இங்கிலாந்தும், ஸ்கொட்லாந்தும் இணைந்து ஐக்கிய இராஜ்ஜியம் என்று ஒரு தேசமாக மலர்ந்தன. இதனுடன் 1707ல் அயர்லாந்து இணைந்தது. ஆனால் 1922 ம் ஆண்டு இங்கிலாந்திலிருந்து அயர்லாந்தின் பெரும் பகுதி பிரிந்து சென்று அயர்லாந்து என்ற நாடு உருவானது. இதன் பின்பு இன்றுவரை இங்கிலாந்து, வட அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, வேல்ஸ் என்ற நாடுகளின் இணைப்பில் எழுந்து நிற்கும் தேசம்தான் ஐக்கிய இராஜ்யம் ஆகும். வழக்கத்தில் உலக மக்களால் பிரித்தானியா என்று அடையாளப்படுத்தப்படும் இந்த சாமராஜ்யத்தின் முழுமையான பெயர் இங்கிலாந்து, வட அயர்லாந்து ஐக்கிய ராஜ்யம் (United Kingdom of Great Britain and Northern Ireland.) ஆகும்.



ஐக்கிய இராஜ்யத்தின் இன்றைய வளர்ச்சி நிலைக்கு முதுகெலும்பாக முதன்மையாக நிற்பவர்கள் ஸ்கொட்லாந்துக்காரர்கள். இது உலக மக்களுக்கும் தெரிந்த வரலாறுதான். விவசாயத் தொழிலாக இருக்கட்டும் போர் வீரர்களாக இருக்கட்டும் இவர்களின் வியர்வையும் இரத்தமும் 'கிரேட் பிரிட்டன்' எனும் ஐக்கிய இராஜ்யமாக வளரச்சியடைந்ததற்கு முக்கிய காரணம் ஆகும். இதையொத்த செயற்பாடாளர்கள் வட அயர்லாந்துக்காரர்கள். ஆனால் இவ்விரு தேசிய இனத்தவரும் இந்த இராஜ்யத்தில் தாம் இரண்டாம்தர பிரஜைகள் என்ற உணர்வலைகளை ஏற்படுத்தும் விதத்தில் பிரித்தானியரால் நடாத்தப்பட்டு வந்தனர். இந்த உணர்வலைக்குள் தள்ளப்பட்ட வரலாற்று சம்பவங்கள் ஏராளம். இதனால் தான் 1970 களிலிருந்து 2005 ஆண்டு வரை வட அயர்லாந்து பிரிந்து செல்வதற்கான ஆயுதப் போராட்டமும் நடைபெற்றது. இன்று ஸ்கொட்லாந்தும் பிரிந்து செல்வதற்கு பிரயத்தனப்பட்டுக் கொள்கின்றது.

பிரிந்து செல்லுதல் என்ற ஸ்கொட்லாந்து தேசியவாதிகளின் பிரச்சாரப் போராட்டத்திற்கு அங்குள்ள பசுமைக்கட்சியினரும் இடதுசாரிகட்சியினரும் ஆதரவாக செயற்பட்டனர். மறு புறத்தில் பிரிந்து செல்வதற்கு எதிரான பிரச்சாரத்தில் பழமைவாத கட்சிகள் (குடியரசுக் கட்சி, வலதுசாரிகள்) ஈடுபட்டனர். பிரித்தானியாவின் மத்தியில் பலம்மிக்க கட்சியான குடியரசுக்கட்சியும், தொளிலாளர் கட்சியும் ஓரணியில் நின்று ஸ்கொட்லாந்து பிரிவதை எதிர்த்து நின்றன. இவர்களின் பிரச்சாரத்திற்கும் இது தொடர்பான செயற்பாட்டிற்கும் பல செல்வந்தர்கள், தொழில் அதிபர்கள் பெருந்தொகையான பணத்த அன்பழிப்பாவும் வழங்கினர் என்பதுவும் இங்கு கவனிக்க தக்கது. இது ஒருவகையில் இடதுசாரிகளுக்கும் வலதுசாரிகளுக்கும் இடையேயான தேர்தலாக தோற்றம் பெற்றிருந்தமையும் மறுக்க முடியாது. பிரித்தானியா போன்ற நாடுகளில் இன்னமும் இடதுசாரிகள் அடக்குமுறை ஆட்சியை ஏற்படுத்துவர் ஜனநாயகம் அற்ற செயற்பாடாளர்கள் என்ற பிரசாரம் சதாரண மக்கள் மத்தியில் எடுபடும் நிலைமையே அதிகம் இருப்பத்தனால் வலதுசாரிகளின் ஆதரவுக் கோஷமாகிய பிரிந்து செல்ல அனுமதிப்பதில்லை என்பது வெற்றியடைந்ததற்கு ஒரு காரணமாகவும் அமைகின்றது.

தேர்தல் முடிவுகளுக்கு அப்பால் 'பிரித்தானியா'வின் ஒரு அங்கமாக திகழும் ஸ்கொடலாந்து மக்களின், தாம் இரண்டாம் தர பிரஜைகளாக பாவிக்கப்படுகின்றோம் என்ற உணர்வலைகள் நீக்கப்படாத வரைக்கும் இந்த பிரிவினைவாதக் கோஷமும் இதற்கான போராட்டமும் மீண்டும் நிறு பூத்த நெருப்பாய் எதிர்காலத்திலும் தணன்றுகொண்டுதான் இருக்கும். இதில் வட அயர்லாந்தும் இணைந்து கொள்ளவே செய்யும். இவ் விருப்பு வாக்கெடுப்பு முடிவுகள் மறுவழமாக அமைந்திருந்தால் இதன் தாக்கம் பிர்தானியாவிற்குள் மட்டும் அல்லா அமெரிக்க அவுஜ்திரேலிய நாடுகளிலும் எதிரொலித்துத்தான் இருக்கும். ❍



P S RENOVATION
MOEN
Buy it for looks. Buy it for life.®
DELTA
see what Delta can do
Touch2O® Technology
RE-MODELING, RE-FACING
RE-DESIGN, FLOORING &
BASEMENT FINISHING
அனைத்து விதமான வீட்டுதிருத்த வேலைகளுக்கும், தரம் வாய்ந்த சமையலறை,
குளியலறை உபகரணங்களைப் பொருத்துவதற்கும் தள வேலைகளுக்கும்
CALL FOR FREE ESTIMATE
faucets from $100 installed
THANUSAN:
647-996-6491



Find your Dream Home with
Nano COMPUTER
• Residential
• Commercial
• Downtown Condos
• Investment Properties
• Lands for Sale
Call for Free Home Evaluation
HomeLife
HIGHER STANDARDS
HomeLife/Future
Realty Inc., Brokerage*
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Independently Owned and Operated
Raj Nadarajah
Nagendrarajah
Sales Representative
416-333-6115
nanohomes@gmail.com

எங்கள் திருத்தலம்

தமிழ் சைவப் பண்பாட்டில்

செல்வச்சந்நிதி

பேராசிரியர் கா. சிவத்தம்பி

தொண்டைமானாற்றிலுள்ள 'செல்வச்சந்நிதி' எனும் தலம் அதற்குரிய பக்திக் கவர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் பொழுது அதிகம் ஆராயப்படாத ஒரு தலமாகவேயுள்ளது.

இலங்கையின் சைவக்கோயில்கள் பற்றிய முக்கிய ஆராய்ச்சிகள் சமூக அதிகாரமுடையோரின் கோயில்களையே பெரிதும் சுற்றி நின்றுள்ளன. இது மனித இயல்பின்பால்பட்டதே.

ஒரு குறிப்பிட்ட கோயிலோடு தொடர்புடையவர்களின் சமூக அதிகாரம், உயரிடச் செல்வாக்கு என்பனவற்றைக் கொண்டே அக்கோயிலுக்கு வெகுஜனத் தொடர்பு ஊடகங்களான பத்திரிகை வானொலியிற் கிடைக்கும் முக்கியத்துவம் தீர்மானமாகின்றது.

செல்வச்சந்நிதி அத்தகைய உயர் செல்வாக்கு மட்டத்தினுள் வரவில்லை. அது பெரும்பான்மையும் அடிநிலை மக்களிடையேதான் பக்தி ஈர்ப்பினை கொண்டுள்ளது. இது மாத்திரமல்லாது சந்நிதியின் கோயிலொழுகு முறையில் தனிமனிதக் கொடைகள் பிரபல்யப்படுத்தப்படும் முறைமைகளோ அல்லது தனிமனித மேலாண்மை மேலோங்கத்தக்க ஒரு முகாமைச் சாத்தியப்பாடோ இல்லை. இது இக்கோயிலின் சமூகவியலடிப்படையில் முக்கியமான ஓர் அம்சமாகும்.

செல்வச்சந்நிதி பற்றிய விரிவான ஆய்வு யாழ்ப்பாணத்துத் தமிழ்ச்சைவ மரபின் சில முக்கிய இயல்புகளை - இதுவரை வற்புறுத்தப்படாத முக்கிய இயல்புகளை- வெளிக்கொணர உதவும்.

சந்நிதி ஆகம வழிபாட்டு முறைமையினைக் கொண்டதன்று. ஆகம வழிபாட்டிற் காணப்படும் பல அம்சங்கள் இன்று அங்கும் இடம்பெறத் தொடங்கியுள்ளனவெனினும் (உருத்திராபிஷேகம் போன்றவை) அடிப்படையில் அது தனக்கேயுரிய சில சிறப்பான வழிபாட்டு முறைகளைக் கொண்டதாகும்.

இச்சிறப்பு முறைமைகளில் ஆகம வழிபாட்டு முறைமை தமிழ்நாட்டிற்கு வருவதன் முன்னர் காணப்பட்ட சில பூர்வீகப் பண்புகளைக் காணலாம்.

இன்னொரு மட்டத்திற் பார்க்கும் பொழுது சந்நிதியில் நாட்டார் நிலை மத வழக்காறுகள் பலவற்றைக் காணலாம்.

தமிழ்ப்பண்பாட்டின் செந்நெறி முறைமையும் (Classical form) நாட்டார் நெறி முறைமையும் (FolK Form) முருக வணக்கத்தில் இணைந்து நிற்பது தெரிந்ததே. அத்துடன் வடமொழிக் கலப்பும் இவ்வழிபாட்டில் வந்து விட்டது.

அக் கலப்பினைத் திருமுருகாற்றுப்படையிலே காணலாம். செல்வச்சந்நிதி வழிபாட்டு முறைமையில் வடமொழிக் கலப்புக்கு முற்பட்ட நிலையினை இப்பொழுதும் பிரித்தறியக் கூடியதாகவுள்ளது.

சந்நிதி பற்றிய ஆய்வில் முக்கிய இடம்பெற வேண்டியது அதனைத் தமது மிக முக்கிய வழிபாட்டுத் தலமாகக் கொள்வோருடைய சமூகவியற் பண்புகளாகும்.

இவ்வேளையில் "அடியார்கள்" எனும் பதத்தை நான் இங்கு பிரயோகிக்க விரும்பவில்லை.

ஏனெனில் அடியார் எனும் இக்கருதுகோள் வைதிகப் பக்தி எழுச்சியுடன் வந்த ஒரு எண்ணக்கருவாகும்) இவர்களுக்கும் கோயில் பொறுப்பாளர்களுக்குமுள்ள உறவு பற்றி ஆராய்தல் வேண்டும். இக்கட்டத்திலேதான் இக்கோயிற் பூசகர்களின் தனித்துவமான பண்புகள் நன்கு தெரியவரும். இக்கோயிற் பூசகர்களின் அடிப்படையான அணுகுமுறை இங்கு முக்கியமாகும்.

இங்கு நடக்கும் பூசை முறைமையை நோக்கும் பொழுது இவர்கள் தங்களைக் "கும்பிடுபவர்களுள் முன் நிற்போர்" (first among the worshippers) ஆகக் கருதிக் கொண்டே கிரியைகளைச் செய்கின்றமை தெரியவரும்.

செல்வச் சந்நிதியின் பூசகர்களாக உள்ளவர்கள் தொண்டைமானாற்றைச் சேர்ந்த, முன்னொருகால் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த குடும்பத்தினர்.

இவர்கள் இப்பொழுது மச்சமாமிசம் உண்ணாத ஆசாரசீலராய் உள்ளனர். குறிப்பிட்ட அப் பரம்பரையின் ஆண் வழியினருக்குக் கோயில் உரிமை உண்டு.

அடுத்து சந்நிதியை தமது உயர் வழிபாட்டுத் தலமாக (முறைப்பாட்டுத் தலமாக, துயர்களை தலமாக) கொண்டு கும்பிடுபவர்களின் அடிப்படை மனநிலையும் சமூக உளவியலும் நின்று ஆராயப்படல் வேண்டும்.

அதாவது சந்நிதியிற் பெறப்படும் "மத அனுபவம்" (Religious Experience) யாது? அது மற்றைய வழிபாட்டிடங்களிற் காணப்படுவதிலிருந்து எவ்வகையில் வேறுபடுகின்றது? என்பன போன்றவற்றை ஆழமாக ஆராய்தல் வேண்டும்.

அப்பொழுது தான் சந்நிதியின் முக்கியத்துவம் புலனாகும். சந்நிதியிற் பெறப்படும் "அனுபவம்" சமூக நிலையுடன் எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளது என்பது தெளிவாக்கப்பட வேண்டும். சமூக உருவாக்கத்தை அறிய முனையும்பொழுது அச்சமூகத்தின் மத அனுபவம் பற்றிய ஆய்வும் முக்கியமாகின்றமை தெரிந்ததே.

செல்வச்சந்நிதி யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதற்கு மான கோயிலெனினும் அதன் பிரதானமான "ஈர்ப்பாளர் வட்டம்" அது இடம் பெற்றுள்ள தொண்டைமானாறும், கிழக்கே அம்பன், குடத்தனை, நாகர் கோவில், துன்னாலை, கரவெட்டி, பருத்தித்துறை, வதிரி, உடுப்பிட்டி, சக்கோட்டை, இன்பருட்டி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை ஆகிய கிராமங்களும் மேற்கே, பலாலி, மாதகல், மயிலிட்டி முதலான கிராமங்களும், தென் மேற்கே கதிரிப்பாய், இடைக்காடு, பத்தமேனி, அச்சுவேலி முதலான கிராமங்களுமாகும்.

இக்கட்டத்தில் ஏற்கனவே குறிப்பிடப்பெற்ற ஓர் உண்மையை வலியுறுத்தல் வேண்டும். சந்நிதியின் வழிபடுவோர் வட்டம் மேனாட்டு மயப்படுத்தப்படாத ஒரு வட்டமே.

இது பெரும்பான்மையும் அடிநிலைச் சமூக மட்டமேயாகும். மேனாட்டு மயப்பட்ட வளர்ச்சியையுடையவர்களும் இங்கு வரும் பொழுது மேனாட்டுமயப்பாட்டின்சின்னமானவிழுமியங்களையும், நடைமுறைகளையும் முதன்மைப்படுத்துவதில்லை.

கோயிலொழுகு முறையின் அடிப்படையான, ஆகம இறுக்கமற்ற, நெகிழ்ச்சியும் வழிபடுவோரின் மனநிலை நெகிழ்வும் இணையும் பொழுது, முற்றிலும் தனித்துவமான ஒரு அனுபவச் சூழல் இங்கு ஏற்படுகின்றது.

சந்நிதியின் சிறப்பம்சங்களாக நான்கினைக் குறிப்பிடலாம். முதலிரண்டைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டாயிற்று. அவையாவன.

1. இக்கோயிலின் சடங்கு முறைமைகள்

2. வழிபடுவோரின் மனப்பாங்கும் நடைமுறையும் - இவைபற்றி சில முக்கியமான அம்சங்களுண்டு.

இக்கோயிலின் சடங்கு முறைமை மிக முக்கியமானது. எப்பொழுதும் மதம் என்பது சடங்கும் அச் சடங்குக்கு அடிப்படையான ஐதீகமும் இவற்றின் பாலுள்ள நம்பிக்கையுமேயாகும். (Ritual, Myth and Faith) இம் மூன்றும் ஒரு குறிப்பிட்ட உலக நோக்கை வளர்க்கும். முதல் மூன்றுக்கும் சமூக அமைப்புக்கும் தொடர்புண்டு.

சந்நிதி கோயிலின் பூசைமுறை பிராமணிய முறையைச் சாராதது. அக்கோயிற் பூசையிலும் பல்வேறு சடங்குகளிலும் இக்கோயில் பற்றிய பல ஐதீகங்கள் அடிப்படையாய் அமைவதைக் காணலாம்.

உதாரணமாக பூசை முடிவில் பூசகர் மணி ஆகியவற்றை வைத்துத் தானே முதன் முதலிற் கும்பிடுவதை எடுத்துக் கூறலாம். இது இக்கோயிலின் தோற்றம் பற்றிய கதைகளோடு தொடர்புடைய ஒரு சடங்காகும்.

சந்நிதியின் ஐதீகங்களையும் சடங்குகளையும் அவதானிக்கும் பொழுது கதிர்காமத்திற்கும் சந்நிதிக்கும் கற்பிக்கப்பட்டுள்ள உறவுகள் தெரியவரும்.

கதிர்காமத் திருவிழாவுக்கு முதல் நாள் முருகன் இங்கிருந்து கதிர்காமஞ் செல்லுவதாகவும் அங்கு தீர்த்தம் முடிந்ததும் இங்கு வருவதாகவும் சொல்லப்படும் கிரியைகள் மிக முக்கியமானவையாகும்.

வழிபடுவோரின் மனப்பாங்கு நடைமுறையில் சந்நிதிக்கான நேர்த்திக்கடன்முறை மிக முக்கியமானதாகும்.

காவடி எடுத்தல், குழந்தைகளை விற்றுவாங்கல், மொட்டையடித்தல், மாவிளக்கு எரித்தல் ஆகியன உண்டு. இக்கோவிலின் முக்கிய நடைமுறைகளில் ஒன்று இங்கு நடைபெறும் அன்னதானமாகும்.

இக்கோயில் பற்றிய நேர்த்திக்கடன்களுள் அன்னதானமும் ஒன்று. இக்கோயிலுக்கு வரும் மரபுநிலை வழிபடுவோர் அன்னதானச் சோறு சாப்பிடுவதை வழிபாட்டில் ஓரம்சமாகவே கொள்வதுண்டு.

அன்னதானம் வணக்க முறையாகவே இங்கு தொழிற்படுகின்றது.

அன்னதானத்தின் சமூக பொருளாதார முக்கியத்து வத்தை நோக்குதல் வேண்டும். ஒரு நிலையில் இது 'குழுநிலை உணவுப் பகிர்' வினைக் (Communal meal) குறிக்கும்.

இன்னொரு மட்டத்தில் உபரிச் செல்வத்தைக் குழுமத்துக்குப் பயன்படும் முறையில் செலவு செய்வதையும் குறிக்கும்.(Communally Useful way of sharing the surplus)

மூன்றாவதாகக் குறிப்பிடப்பட வேண்டிய சந்நிதியின் சிறப்பம்சம் இங்கு காணப்படும் மடங்களாகும்.

திராநோய் தீர்க்கும் மருத்துவனாக சந்நிதியானைக் கொள்ளும் நம்பிக்கையும் அன்னதான நேர்த்திக்கடன் முறைமையும் இங்கு மடங்களின் தோற்றத்துக்கும் தொடர்ச்சிக்கும் காரணமாக அமைகின்றனவெனலாம்.




Western Jewellery
Finest Quality 22k Gold
Specialized in
Singapore and Dubai
பழைய நகைகள்
நியாயவிலைகளில்
பெற்றுக்கொள்ளப்படும்.
அசல் 22 கரட்
தங்க வைர நகைகளை
அதி நவீன டிசைன்களில்
உங்கள் எண்ணம் போல்
பெற்றுக்கொள்ளலாம்.
ஏழு நாட்களும்
திறந்திருக்கும்
நம்பிக்கை - நாணயம் - கைராசி
சர்வதேச துரித பணமாற்றுச் சேவை!
Tel: 416.335.9500, Cell: 416.627.5434
GTA Square Mall, 115-5215 Finch Ave. E,
Scarborough, On. M1S 0C2



சருமப் பாதுகாப்பு
Sun Burn
Dead cells, Black Heads, White Heads
(Dry Skin)
(Oily Skin)
(Dark Circles, Puffiness, Wrinkles)
Sensitive-Allergies
Free Samples available (Free Make Over Skin Care Classes and Hair Classes)
Men Skin care & Ladies Skin care
தலை முடி சம்மந்தமான பிரச்சனைகள்
எண்ணைக் கசிவானது
வரண்ட முடி
முடி உதிர்தல்
இள நரை
சொடுகு (Dandruff)
செம்படை
இயற்கையான மூலிகைகளால் தாயாரிக்கப்பட்டதும்
சரும பாதுகாப்பு பரிசோதனை செய்யப்பட்டதும்
Allergy பரிசோதனை செய்யப்பட்டதும்
பர்சோதனை செய்யப்பட்டதும் உலகத்தின்
5வது இடத்தைப் பெற்றிருக்கின்றது.



Student Tutoring Center - Opening
We povide high-quality educational assistance and learning experience for students!
One-On-One Tutoring Sessions & Group Tutoring Sessions
We are extending our tutorial services to students in the Greater Toronto Area, Brampton, Mississauga, Scarborough and Markham.
Tutoring is available in the following subjects:
Math
Science
Social Studies
English /French
Biology
Chemistry
Physics
Advanced Functions
Calculus &Vectors
Data Management
Computer Studies
Call: 647.868.6475



WAVES OF COLOUR ART STUDIO
UNLEASH YOUR INNER CREATIVITY
FOR MORE INFORMATION PLEASE CONTACT
KEERA RATNAM
647.706.8051
B-126, 3341 Markham Rd
(Blue Building)
Toronto, Ontario
STEELES AVE E
MIDDLEFIELD ROAD
MARKHAM ROAD
MCNICOLL AVE

பல்வேறு ஊர்களைச் சேர்ந்தவர்கள், பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்கள் மடங்களைக் கட்டி அவற்றின் நிருவாகத்துக்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

பூசகர் குடும்பங்களைத் தவிர இங்கு நிலையான ஒரு சனத்தொகை காணப்படுவதற்கும் மடங்களே காரணமாகும்.

தத்தம் குடும்பங்களிலிருந்து பிரிந்தவர்களும் பிரிக்கப்பட்டவர்களும் மடங்களைத் தமது வதிவிடமாகக் கொண்டிருந்தமை ஒரு முக்கியமான உண்மையாகும்.

மடங்களற்ற சந்நிதியைக் கற்பனை பண்ணக்கூட முடியாத அளவுக்கு மடங்கள் சந்நிதியின் ஓரம்சமாகவுள்ளன.

சந்நிதியின் மிக முக்கியமான, ஆனால் விதந்து காணப்படாத ஒரு சிறப்பம்சம், அது யோகியர் பலரின் தங்குமிடமாக இருப்பதேயாகும்.

கிராம வீதிகளில் காணப்படும் சாதாரண சாமியார் முதல் யோகசாதனைகளைப் புரியும் ஜேர்மன் சாமியார், ஆணைக்குட்டிச் சாமியார் வரை பல யோகியர் இங்கு காணப்பட்டனர்.

சந்நிதி கோயிலின் அன்றாடப் பூஜை முறைகளிற் பங்குகொள்ளாத இப் பெருயோகியர் பலர் செல்வச்சந்நிதி அளிக்கும் "சூழலை"த் தமக்கு ஏற்ற இடமாகக் கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்துச் சித்தர் பரம்பரைக்கும் சந்நிதிக்குமுள்ள தொடர்பினை ஆராய்தல் வேண்டும்.

செல்வச்சந்நிதியின் சிறப்பம்சங்களை ஆராய முனையும் பொழுதுதான் இதன் பெயரின் அசாதாரணத் தன்மை புலனாகின்றது.

தமிழ்ச்சைவ மரபில் பெரும்பாலும் கோயில்களின் பெயர்கள் இடத்தின் பெயரையும் தலமூர்த்தியின் பெயரையும் கொண்டிருக்கும். ஆனால் இங்கோ செல்வச்சந்நிதி என்று மாத்திரமே பெரிதும் வழங்கப்படுகிறது. "தொண்டைமானாற்றுச் செல்வச்சந்நிதி" என்னும் மரபும் இல்லையென்றே கூற வேண்டும். அது போல "சந்நிதி முருகன்" என்றும் விதந்தோதப் படுவதில்லை. "சந்நிதியான்" என்றே குறிப்பிடப்படுவதுண்டு. "ஆற்றங்கரையான்" எனும் மரபுண்டு என்பதை இங்கு குறிப்பிடல் வேண்டும்.

ஊர்ப்பெயரையும் உறையும் தெய்வத்தின் பெயரையும் குறிப்பிட வேண்டாத அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுள்ள "சந்நிதி" என்ற இப்பெயரின் கருத்தை அறிவது அவசியம். 'சந்நிதி' என்னும் சமஸ்கிருதச் சொல் சம்-நி- தி என நிற்பது இதன் கருத்து.

1. அண்மையில் இருப்பது, அண்மை நிலை

2. முன் நிற்றல்

என்பனவாகும். காலக்கிரமத்தில் தெய்வம், குரு, பெரியோர் முன்நிற்பதை 'சந்நிதி', 'சந்நிதானம்' என்பன குறித்தது. எனவே, 'சந்நிதி' என்பது முருகன் முன் நிற்றலைக் குறிக்கின்றன.

'செல்வச் சந்நிதியில்' செல்வம் என்ற அடைமொழி முருகனையே செல்வமாகவும், அவன் தருவனவற்றைச் செல்வமாகவும், அவனை செல்வத்தைப் பெறுவதற்கான வழியாகவும் கொள்ளும் அர்த்தங்களும் மனநிலைகளும் அதிலே தொனிக்கின்றன.

கோயில்களிற் "சந்நிதி"கள் உண்டு. இங்கு "சந்நிதி"யே கோயிலாகவுள்ளது. செல்வச்சந்நிதி ஓர் அசாதாரண பெயர். செல்வச்சந்நிதி ஓர் அசாதாரணமான கோயில்.

நன்றி:-யாழ்ப்பாணம் - சமூகம், பண்பாடு, கருத்துநிலை

காதல் பண்ணப் பழகலாமா?

ஒரு அனுபவஸ்தனின் அட்வைஸ்-4

சென்ற இதழில் எம் காதல் வாழ்வுக்கு வில்லனாக எமக்குள் நிற்கும் ஈகோவைப்பற்றிச் சொல்லியிருந்தேன். ஆணும் பெண்ணும் இருவகை உருப்படிகள், பார்வைக்கு இருவருமே மனிதர்கள்தானென்றாலும் அவர்களது மனங்கள் வேறு, சிந்திக்கும் விதம் வேறு, செயற்படும் விதம் வேறு, ஆணிடம் உள்ளவை பெண்ணிடமில்லை, பெண்ணிடமுள்ளவை ஆணிடமில்லை, இப்படியான வேறுபட்ட இருவர் சேர்ந்து குடும்பம் என்ற ஒன்றாக எப்படி மாற முடியும் என்று கேட்டு, அது முடியும் என்று சொல்லியிருந்தேன். நீங்களும் அப்பாடா, ஏதோ ஒரு மந்திரத்தைச் சொல்லித்தரப்போறார், அதை உச்சரித்ததும் கோபமெல்லாம் தீர்ந்து அப்பிடியே இருவரும் காதல்வயப்பட்டு ஒற்றுமையாகிவிடலாம் என்ற நப்பாசையுடன் வந்திருப்பீர்கள். மந்திரம் ஒன்றும் தேவையில்லை.

மந்திரம் ஏதுக்கடி குதம்பாய் மந்திரமேதுக்கடி
சத்தியமான தவத்தில் இருப்போர்க்கு
உத்தியம் ஏதுக்கடி குதம்பாய் உத்தியம் ஏதுக்கடி..?

என்ற குதப்பைச் சித்தரின் பாடலைப்போல் உயர்வுச்சிக்கல் (உத்தியம்) இல்லாதிந்தால், எந்த மந்திரமுமில்லாமல் சமாதானம் மலரும். சந்தோஷம் பெருகும். உயர்வுச் சிக்கல், தாழ்வுச் சிக்கல் என்பன எம்மை நிதானமின்றி அபரிமிதமாகச் செயற்பட வைக்கும். இந்தச் சிக்கல்கள் எல்லா மனிதர்களிடமும், இருந்தாலும் கணவன் மனைவியிடம், காதலன் காதலியிடம் குடிகொள்ளும்போது, காதலைக் குடிபெயர்ந்து விடுகிறது.

மனைவி படித்தவளாக இருந்தால் கணவனுக்கு தாழ்வுச் சிக்கல் வந்துவிடுகிறது. அது என்ன செய்யுமென்றால், மனைவி எப்போதும் தன்னைப் படிக்காதவனென்று மட்டம் தட்டுகிறாள் என்ற எண்ணத்தை தலையில் விதைத்து, அவளது ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும் அந்தத் திமிர் இருக்கிறதா என்று சதா உற்று அவதானித்துக்கொண்டிருக்கும் காவல் நாயாக அவன் மனதை மாற்றிவிடும். பிறகென்ன? சாதாரணமான பேச்சுவார்த்தையிலேயே நெருப்பு பக்கென்று பத்தி உன்மத்தம் பிடித்த சண்டையில் முடியும். அந்தச் சண்டையில் அடைந்த உச்சக் கோபத்தில் எம் தலையில் ஏறும் இரத்தம்தான் எம் தாழ்வுச் சிக்கலுக்கு ஆசுவாசம் தரும் மருந்தாகத் தோன்றும். அதனால் அடிக்கடி அந்த ரத்தம் மூளைக்கு ஏறவேண்டுமென்று உடல் நாடும். சண்டையைத் தேடும்.

“என்னப்பா, பேப்பரைப் படிச்சால் மடிச்சு வைச்சிட்டுப் போகலாந்தானே? நான் வேலையால வரும்வரை அப்பிடியே கிடக்குது” - என்று மனைவி சொல்லிவிட்டால், இவன் தலைக்குள் அதற்கு எத்தனை விதமான மொழிபெயர்ப்புகள் கணப்பொழுதுக்குள் ஓடி, அந்த இரத்தத்தை ஒரு மைக்ரேவேவ்-அவனைவிட வேகமாகச் சூடேற்றிக் கொதித்துக் கூச்சல்போட வைக்கும் என்று தெரியுமா? “நான் வேலையில்லாமல் பேப்பர் படிச்சுக்கொண்டிருக்கிறதாயும் அவள்தான் ஏதோ உத்தியோகம் பார்த்துக் குடும்பத்தை ஓட்டுறதாயும் உள்ளால சொல்லத்தான் உந்தக் கதை” - இப்பிடி ஒரு ஒருபக்கத்தால தெறித்தோடுற எண்ணத்துக்கு அவளிண்ட பக்கத்து நியாயம் கண்ணிலேயும் தெரியாது. பிறகுதான் நடக்கும் கூத்து, இந்த எதிர்நீச்சல் படத்து அடுத்தாத்து அம்புஜப் பாட்டுப்போல...

கணவன்: ஏட்டிக்குப் போட்டி பேசாதேடி பட்டு
மனைவி: பேசினா என்ன வெப்பேளா ஒரு குட்டு?
கணவன்: ஆத்திரம் வந்தா பொல்லாதவண்டி கிட்டு
மனைவி: என்னத்தை செய்வேள்?
கணவன்: சொன்னதை செய்வேன்
மனைவி: வேறென்ன செய்வேள்?
கணவன்: அடக்கி வெப்பேன்
மனைவி: அதுக்கும் மேலே?
குணவன்: பல்லை உடைப்பேன்
மனைவி: ம்ம்...அடுத்தாத்து அம்புஜத்தைப் பாத்தேளா...

இலங்கை, இந்தியாவாயிருந்தால் கன்னத்தைப் பதம்பாக்கும் கோபத்தை, கனடாவில் 911 நினைப்பு மூளையின் ஒரு மூலையில் உட்கார்ந்திருந்து தடுத்தாலும் எங்கள் ஆண்வர்க்கத்தாருக்கு வேறு எத்தினையோ மார்க்மிருக்கு ஒரு ஊழித் தாண்டவம் போடாமலே அவளிண்ட திமிருக்குப் பதிலடி கொடுக்க. சிலபேர் “சைலன்ட் கில்லிங்” என்ற நசுக்கிடாமல் வேலையைக் குடுக்கிற மெதேர்ட்டையும் கையாளுவர். கறண்ட் அடிச்சாப்போல ஷொக்கொண்டைக் கொடுத்துட்டு கொடுப்புச் சிரிப்புக் கலந்த ஒரு பார்வையாலே இந்தப் பதிலடி எதுக்கெண்டு அவளுக்கு தெரிய வைக்கிறதிலதான் அவனுக்கு உள்ளே ஒரு திருப்தி.

இதேபோல் உயர்வுச் சிக்கலும் ஒருத்தரை ஒருத்தர் உராய வைக்கும்.

“மின்சார கண்ணா என் மன்னா என் ஆணை கேட்டு
என் பின்னே வாராய் என் ஆசை ஓசை கேளாய்...”

என்ற படையப்பா பாடல்போல உயர்வுச்சிக்கல் வார்த்தைகளிலும் நடத்தையிலும் தொனித்தால் அங்கே மனங்கள் சேராது. ஆணுக்கும் அப்படித்தான். படித்திருந்தால் பெரிய உத்தியோகத்தில இருந்தால், மனைவி புத்தி சொல்லுறது பிடிக்காது. “எனக்குத் தெரியாதெண்டு சொல்ல வந்திட்டாளோ” என்ற அகங்காரந்தான் மேவி நிற்குமேயன்றி சொல்வதில் ஏதும் விடயம் உள்ளதா என்று புத்தி ஆராய்ந்து பார்க்காது. இந்தச் சிக்கல்கள் ஆணுக்குமுண்டு பெண்ணுக்குமுண்டு, ஆனாலும் இருவரும் அவற்றைப் பிரதிபலிப்பது வேறு வேறு விதமாக இருக்கும். எப்படி இருப்பினும் மொத்தத்தில் அவை விரிசலைத்தான் விளைவாக்கி வைக்கும்.

ஆண் சிந்திக்கும் பாங்கு வேறு பெண் சிந்திக்கும் பாங்கு வேறு என்று சொன்னேன். அந்த வேறுபாட்டை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதான் இருவரும் அந்த வேறுபாட்டை ஏற்று அதற்கமைய தம் உறவை புரிதலோடு உறுதியாக்கிக் கொள்ள முடியும்.

ஆணுக்கு ஒரேயொரு சிந்தனைப் பெட்டிதான் மூளையில் உண்டு. அவனது சிந்தனை ஒற்றைப் பனைமரம் போல. ஒரே திக்கில் நெடித்து உயர்ந்து வளர்வதே குறியாக இருக்கும். ஒரு நேரத்தில் ஒன்று மட்டும்தான் அவன் தலையில் ஓடிக்கொண்டிருக்கும்.. அதாவது, ஒரு விடயம் முக்கியமானதென்று எடுத்துக்கொண்டால் மூளை மற்ற எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்துவிட்டு அதிலேயே ஈடுபட்டுக்கொண்டிருக்கும். பெரும்பாலான சிந்தனைச் சக்தி அதைச்சுற்றியே வட்டமிட்டுக்கொண்டிருக்கும். மீதி விடயங்கள் இருந்தாலும் அவை பற்றி மேலோட்டமான கவனம்தான் அதற்கிருக்கும். இது ஆண் காலாகாலமாக புற உலகின் போட்டிக்கு மத்தியில் மற்றவரை முந்தி முன்னேறுவதற்காக தன் கவனத்தை ஒருமையப் படுத்திச் செயற்பட்டு வந்தாதால் ஏற்பட்டுள்ள சிந்தனை ஒழுங்கு. வேலையில் மட்டுமல்ல வீட்டிலும் அப்படித்தான் செயற்படுவான் - செயல் மட்டுமல்ல அவனது உணர்ச்சிகளும் அப்படித்தான்.

ஆனால் பெண் அப்படியல்ல. அவளுக்கு ஐந்தாறு சிந்தனைப்பெட்டி மூளையில் உண்டு. ஒரே நேரத்தில் ஒவ்வென்றும் ஒவ்வொன்றைச் சிந்தித்தபடியிருக்கும். அவளது சிந்தனைப் பாங்கு பல கிளைவிட்டு அகலப் படர்ந்து வளரும் ஆலமரம்போல செயற்படும். ஒரே நேரத்தில் பல விடயங்களையும் சிந்திப்பாள். பல விடயங்களில் சமகாலத்தில் ஈடுபட முடியும். சகல விடயத்திலும் ஏறத்தாள ஒரே அளவு கவனத்தை செலுத்த முடியும் அவளால். ஒன்றின் கவனம் மற்றதைச் சிதைக்காமலும் பார்த்துக்கொள்ள முடியும். அதோடு, கவனத்தின் முக்கியத்துவத்தை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றிச் செல்லவும் இவளால் முடியும்.

அதுதான் எங்கள் ஆபீஸ் ரிஷப்ஷனிஸ்டைப் பார்த்தாலே தெரியுமே. ஒற்றைக் காதில் ஆபீஸ் போன், மற்றக் காதில் செல்போன், கையில் பேனை, முன்னால் பதிவேடு, அருகே, கதைப் புத்தகம், அவற்றுக்கிடையே திறந்த மேக்கப் செட் - அதில் தெரியும் கண்ணாடியில் அடிக்கடி லிப்ஸ்டிக்கை சரிபார்த்துக்கொண்டே, வந்திருக்கும் விசிட்டரையும் எடைபார்த்து, அமரும்படி சைகை செய்து, “பிளீஸ் டேக் எ சீட்” என்று உதட்டுக்கரையால் புன்முறுவலை ரெடிமேடாய்க் கொட்டி ஒரு வார்த்தை சொல்லிவிட்டு, போனில் கதைப்பவருக்கும் “யெஸ் சேர்” போட்டுக்கொண்டு, செல்போனில், “யூ ஸ்டுப்பிட்” என்று செல்லச் சிணுங்கலோடு ஃபிரண்டைத் திட்டிக்கொண்டு, சொடுக்குப் பொழுதில் கோலை வீட்டுக்குச் சுவிச் பண்ணி, பிள்ளைக்கு, “வாட் செல்லம், ரீட் த கொஷ்யன் ஃ பெர்ஸ்ட்” என்று பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டு, மீண்டும் வந்திருப்பரிடம் “கேன் ஐ ஹெல்ப் யூ?” என்று கேட்கிறாளென்றால்... தலை சுத்தவில்லையா உங்களுக்கு. இதை மல்டி ட்டாஸ்க் பேர்ஸனாலிட்டி என்பர் - அது பெண்களுக்கு கைவரும் விடயம்.

“எத்தனை மலர்கள் தாவும் பட்டாம்பூச்சி...?
அது எத்தனையோ தாவுமடி அன்பு மீனாச்சி”

என்ற பாடல் வரி படத்தில் வேற அர்த்தத்திலிருந்தாலும் பெண்கள் மனதும் எல்லா விடயங்களிலும் இந்தப் பட்டாம்பூச்சிபோல் தாவிக்கொண்டே இருக்கும். ஒரு பூவே கதியென்று (ஒரு வேலையே கதியென்று) உட்கார்ந்துவிடுவதில்லை. அதேவேளை ஒன்றுக்குள் ஆழமாக இறங்கிவிடுவதுமில்லை. அப்படி இறங்கினாலும் விரைவில் சுதாகரித்துக்கொண்டு வெளியே வந்து அடுத்த விடயங்களில் சாதாரணமாக ஈடுபடக்கூடிய தன்மை அவர்களுக்குண்டு. வீட்டிலும், வீட்டை ஒழுங்குபடுத்துவது, தோட்டத்துப் பூக்களைப் பராரிப்பது, பிள்ளைகளைப் பராமரிப்பது, அவர்களுக்கு எந்த வேளைக்கு எந்தச் சட்டை போடுவது என்று ஆயத்தப்படுத்தி வைப்பது, தனது உடைகளை, அலங்காரப் பொருட்களை ரெடிபண்ணி வைப்பது, சமைப்பது, வீட்டுப் பொருட்கள் என்னென்ன வாங்க வேண்டுமென்று மனத் திட்டம் போட்டு, மறக்காமல் அடிக்கடி கணவனுக்குச் சொல்லிக்கொள்வது, அத்தோடு சேர்த்து கணவனையும் கவனித்துக்கொள்வது... இவ்வாறு பல விடயங்கள் அவளின் தலையில் ஓடிக்கொண்டே இருக்கும்.

இப்படியில்லாத கணவன் மீது மனைவிக்கு விசனம் வரும், ஒரு வேலையில் முழுதாக ஈடுபட விடமாட்டாளென்று மனைவி மீது கணவனுக்குக் கோபம் வரும். இதற்குக் காரணம் இந்த மாறுபட்ட சிந்தனைப் பாங்கை இருவரும் அறிந்து, அதற்கேற்ற புரிதலோடு ஒத்துழைக்காமையே.

எப்படி இதைச் சீர்செய்து... அடுத்த இதழில்!

☺ 😐 ☹


KEETH APPLIANCE SERVICES
Heating and cooling
Heating, Cooling, Gas Line Hook Ups, Hot Water Tanks,
Stove, Washer, Dryer, Humidifier, Air Cleaners
Service, Repair, Installation for All Models
All Your Appliance Repair Or New Appliance Installation Please Contact Us
குளிர் காலமோ இல்லை கோடைகாலமோ உங்கள் வீட்டில்
உள்ள அனைத்து உபகரணங்களையும் சரி பார்த்துக்
கொள்வதுடன் உங்களுக்குத் தேவையான புதிய
உபகரணங்களை மிக நம்பிக்கையுடன்
பொருத்திக்கொள்ளவும் எம்மை நாடுங்கள்.
KEITH
416 995 3938
chellaiahkeith@yahoo.com


PEEL
TAE-KWON-DO
"Independent studies show that martial arts can improve mental focus, Increase attention span and the ability to make better decisions"
1 WEEK Trial Special $10
GORE CENTRE
4525 Ebenezer Road, Unit 25
Brambton ON L6T 2K8
905 913 2571
170 Boviard Drive West. Unit 9
Brambton ON L7A 1A1
905 840 5268

நலம் தரும் முத்திரைகள்

உயர் இரத்த அழுத்தத்தை (High blood pressure) குணப்படுத்தும் விரல் முத்திரைகளைப் பற்றி அறிந்து கொள்வோம்.

பின்வரும் முத்திரைகளை இந்த நோய் இருப்பவர்கள் செய்யலாம். கொடுக்கப்பட்டுள்ள எல்லா முத்திரைகளையும் செய்யவேண்டிய அவசியமில்லை. இவற்றுள் ஒன்று அல்லது இரண்டு முத்திரைகளை தொடர்ந்து செய்யலாம்.

1) வருண முத்திரை
2) அபாண வாயு முத்திரை
3) அகாஷ முத்திரை
4) வாயு முத்திரை
5) ஞான முத்திரை (சயன் முத்திரை)
6) வடகரக் முத்திரை
7) கபகரக் முத்திரை

வருண முத்திரை




செய்முறை: சுண்டுவிரல் (கடைசிவிரல்) நுனிப் பகுதியால் பெருவிரலின் நுனிப் பகுதியை தொட வேண்டும். அதிக அழுத்தம் வேண்டாம். பிற மூன்று விரல்களும் நேராக இருக்கட்டும். சீரான மூச்சு இருக்கவேண்டும். இரண்டு கைகளிலும் ஒரே நேரத்தில் செய்யவும்.

பத்மாசனம் அல்லது சித்தாசனத்தில் இருந்து செய்யலாம். அப்படி இருக்க முடியாதவர்கள் தலையில் இருந்தும் செய்யலாம். முதுகு வளைவின்றி நேராக இருக்கவேண்டும்.

குறைந்த பட்சம் ஒரு நாளில் 24 நிமிடங்கள் செய்யலாம். மழைக் காலங்களிலும், மிகக் குளிராக நாட்களிலும் 10 அல்லது 15 நிமிடங்கள் செய்யவும். இந்த முத்திரையை செய்வதால் இரத்த ஓட்டம் சீராகும். இரத்த ஓட்டத்தில் உள்ள தடைகள் நீங்கும். இரத்தம் விருத்தியடையும். சளி, கபம் போன்றவை குறையும். நினைவாற்றல் பெருகும். இன்னும் பல நன்மைகள் இந்த முத்திரையை செய்வதால் கிடைக்கும்.

குளித்து முடித்தவுடன் இந்த முத்திரையை செய்யக்கூடாது. மழையில் நனைந்து விட்டு அல்லது பனியில் நடந்துவிட்டு உடனே இந்த முத்திரையைச் செய்யக்கூடாது.

அபான வாயு முத்திரை




செய்முறை: சுட்டு விரலை மடித்து பெருவிரலின் நுனிப்பகுதியை நடுவிரல் (3ஆவது விரல்) மோதிரவிரல் (4ஆவது விரல்) துனிப்பகுதிகளால் தொடவும். சுண்டுவிரல் (5ஆவது) நேராக நீட்டி இருக்கவேண்டும். இரண்டு கைகளிலும் ஒரே நேரத்தில் செய்யவும்.

பத்மாசனம் அல்லது சுகாசனத்தில் அமர்ந்து செய்யலாம். இப்படி அமர முடியாதவர்கள் நாற்காலியில் கால்கள் நிலத்தில் படும்படி அமர்ந்து செய்யலாம். 15 நிமிடங்கள் இந்த முத்திரையை தினமும் செய்யலாம். இந்த முத்திரை செய்வதால் இதயம் நன்கு வலுவடையும். இதய நோய்கள் (Cardiac ailments) உள்ளவர்கள் இந்த முத்திரையை தொடர்ந்து செய்துவரவேண்டும். உணவு சமிபாடு அடைவதற்கு இந்தமுத்திரை உதவும்.

ஆகாஷ முத்திரை
(ஆகாய முத்திரை)

ஆகாயம் என்பது எல்லையற்ற பிரபஞ்சத்தைக் குறிக்கும் ஒரு சொல்லாகவே அன்றாட வழக்கில் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால் பஞ்ச பூதங்களைப் பொறுத்தவரையில் ஆகாயம் "வெளி" (Space) என்பதைக் குறிக்கும். இது தவிர அதிர்வு (Vibration), ஓசை (Sound)

ஒன்றுமில்லாதது (சூன்யம்) ஆகிய வற்றைக் கூட ஆகாயம் எனும் பஞ்சபூதம் குறிக்கின்றது. வடமொழியில் இது ஆகாஷ் என்று குறிப்பிடப்படுகின்றது. நமது உடலில் உள்ள அனைத்து விதமான அதிர்வுகளும் ஓசைகளும் இந்த ஆகாயம் எனும் பூதத்தாலேயே ஆளப்படுகின்றது. உதாரணமாக: இதயம் துடிக்கும் போது எழும் "லப், டப்" என்ற ஓசை இரத்த குழாய்களின் உள்ளே இரத்தம் பாயும் போது எழுகின்ற ஓசை என்று பலவற்றை சொல்லலாம்.



செய்முறை: நடுவிரலின் நுனிப்பகுதியால் பெரு விரலின் நுனிப்பகுதியைத் தொடவேண்டும் அதிக அழுத்தம் வேண்டாம். பத்மாசனம், அல்லது அந்த ஆசனத்தைச் செய்யமுடியாதவர்கள் கால்கள் இரண்டும் தரையில் படும்படி இருக்க செய்யலாம். நிமிர்ந்து இருந்து செய்யவேண்டும். 15 நிமிடங்கள் வீதம் ஒரு நாளில் இரண்டு அல்லது மூன்று தரம் செய்யலாம். இந்த 15 நிமிடங்களை மூன்றாகப் பிரித்தும் செய்யலாம். நடந்து கொண்டோ, உணவு உண்ணும் போதோ இந்த முத்திரையைச் செய்யக்கூடாது.

இந்த முத்திரையை செய்வதாலும் பல நன்மைகளைப் பெறலாம். இதய நோய்கள் குணமாகும், எலும்புகள் உறுதியாகும், காதுநோய்கள் அகலும் இப்படி பல நன்மைகள் கிடைக்கும்.

வாயு முத்திரை



செய்முறை: சுட்டு விரலை (இரண்டாவது) பெருவிரலின் கடைசி வரியின்மேல் வைத்து பெரு விரலை அதன்மேல் வைக்கவும். மிதமான அழுத்தம் மட்டும் கொடுக்கவும். இரண்டு கைகளிலும் செய்யவும்.

அமரும் முறை: பத்மாசனம் அல்லது சுகாசனத்தில் அமர்ந்து செய்யவும். அல்லது கதிரையில் அமர்ந்தும் செய்யலாம்.

ஒரு நாளில் 15 நிமிடங்களிற்கு மேல் செய்யலாம். இம்முத்திரையைத் தொடர்ந்து செய்வதால் உயர் இரத்த அழுத்தம் உடையவர்கள் பயனடைவர்.

ஞான முத்திரை

ஞானமுத்திரைக்கு சின்முத்திரை, "சின்மய முத்திரை" என்றும் பெயர்களும் உண்டு. மனதையும் எண்ணங்களையும் இந்த முத்திரை பக்குவப்படுத்துகின்றது.



செய்முறை: பெருவிரலின் நுனிப்பகுதியை சுட்டுவிரலின் நுனிப்பகுதியில் தொடவேண்டும். லேசான அழுத்தம் கொடுக்கவும். பிற மூன்று விரல்களும் வளைவின்றி நேராக இருக்கவேண்டும். சுவாசம் சீராக இருக்கட்டும். இரண்டு கைகளிலும் ஒரே நேரத்தில் செய்யவேண்டும்.

இந்த முத்திரை பத்மாசனம், வஜ்ராசனதிலும் அமர்ந்து செய்யலாம். நாற்காலியில் அமர்ந்தும் செய்யலாம். பாதங்கள் தரையைத் தொட்டுக் கொண்டு இருப்பது அவசியம். ஒரு நாளில் 48 நிமிடங்கள் செய்யும் போதுதான் இதன் முழுமையான பலன்கள் கிடைக்கும்.

இந்த ஞான முத்திரை கல்வியில் பிரகாசிக்கவும் அதிக உதவியைக் கொடுக்கும்.

வடகரக் முத்திரை
(Vatakarak mudra)

இதுவும் உயர் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய ஒரு முத்திரையாகும்.

செய்முறை: பெருவிரலின் நுனிப்பகுதியை சுட்டுவிரல், நடுவிரலின் நுனிப்பகுதியால் தொடவேண்டும். மிதமான அழுத்தம் கொடுக்கவும் மற்ற இரண்டு விரல்களும் நீட்டியபடி இருக்கவேண்டும்.

பத்மாசனத்தில் அமர்ந்து அல்லது சாதாரணமாக தரையில் அமர்ந்து செய்யலாம். அல்லது நாற்காலியில் தரையில் கால்கள் படும்படி அமர்ந்து செய்யலாம். இந்த முத்திரை செய்வதால் இதயம் வலுவடையும். சீரான மூச்சு நடைபெறும். உடலுக்கு சக்தி ஏற்படும். இப்படிப் பல நன்மைகள் உண்டு.

ராகி சந்திரா துரைராஜா

கபகரக் முத்திரை


இந்த முத்திரையும் உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் முத்திரையாகும்.

செய்முறை: பெருவிரலின் நுனிப்பகுதியை மோதிரவிலினதும் சுண்டுவிரலினதும் (கடைசிவிரல்) நுனிப்பகுதியில் தொடவேண்டும். மிதமான அழுத்தம் கொடுக்கவும். மற்ற முத்திரைகள் செய்யும் போது அமரும் விதத்தில் அமர்ந்து செய்யவும். சீரான மூச்சு இருக்க வேண்டும். இதையும் 15 நிமிடங்கள் செய்யவும். ஒரே நேரத்தில் 15 நிமிடங்கள் செய்ய முடியாதவர்கள் பிரித்தும் செய்யலாம்.

தாழ் இரத்த (Low Blood Pressure) அழுத்தத்தை சமன் படுத்த உதவும் முத்திரைகளைப் பற்றி ஆராய்வோம்.

பிரிதுவி முத்திரை

இந்த முத்திரை நிலம் என்னும் பஞ்ச பூதத்தின் சக்தியை கூட்டி நெருப்பு, என்ற பஞ்ச பூதத்தின் சக்தியை குறைக்கின்றது. இப்படிச் செய்வதால் குறைந்த இரத்த அழுத்தத்தை சமன்படுத்திக் கொள்ளலாம். இந்த முத்திரையும் வழமையாக முத்திரைகள் செய்யும் நிலையில் செய்யலாம்.



செய்முறை: மோதிர விரலின் நுனிப்பகுதியால் பெருவிரலின் நுனிப்பகுதியை தொடவும். மிதமான அழுத்தம் கொடுக்கவும். சீரான மூச்சு இருக்கவேண்டும். ஒரு நாளில் 24 நிமிடங்கள் செய்யலாம். ஒரே நேரத்தில் செய்யாமல் மூன்று முறையாகப் பிரித்தும் செய்யலாம். தினமும் செய்ய வேண்டும். இதனால் ஏற்படும் பலன்கள் அதிகம் உடலின் சக்திநிலை அதிகரிக்கும். உடல் உறுதி அடையும். பொறுமை குணம் அதிகரிக்கும். நோய் எதிர்ப்பு திறன் அதிகரிக்கும். இப்படி பல நன்மைகள் கிடைக்கும்.

அடுத்த இதழில் நாம் வயிற்றுப் புண்ணுக்கு நிவாரணம் தரும் முத்திரை பற்றி நோக்குவோம்.




















SOLD





ஆண்மை நலமா?

பருமனைக் குறைக்க...

இன்றைய சூழலில் உடல் பருமன் ஒரு வகையான வியாதி மட்டுமல்ல எல்லா வகையான வியாதிகளுக்கும் அதுவே மூலக்காரணமாய் அமைகிறது.

டயட்டீசியன்கள் கொடுக்கும் "டயட் லிஸ்ட்"ஐ கையில் வைத்து கொண்டு சிலர், கிச்சனுக்கும், டைனிங் ஹாலுக்குமாக நடந்து கொண்டிருக்கின்றனர்.

இன்னும் பலர் எந்த பயிற்சியும் செய்யாமல், தொலைக்காட்சி விளம்பரங்களில் வரும் பவுடர் மாத்திரையை நம்பி தோற்றுப் போகின்றனர்.

அதற்குப் பதிலாக இயற்கை நமக்கு அளித்துள்ள உணவு முறையை பின்பற்றினாலே போதும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர்.

இதோ மருத்துவர்களின் டிப்ஸ்:

சாதம், இட்லி, தோசை உணவுகளை தவிர்த்து, தினமும் ஐந்து கப் காய்கறி அல்லது பழம் சாப்பிட வேண்டும். கீரை, பீன்ஸ், அவரைக்காய் போன்ற காய்கறிகளையும், புடலங்காய், பூசணி போன்ற கொடிவகைக் காய்கறிகளையும் உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும், கிழங்கு வகைகளை குறைத்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு பருவத்திற்கும் ஒரு பழத்தை இயற்கை நமக்கு அளித்துள்ளது. அவற்றை உண்ணலாம். ஆனால், மாம்பழம், பலாப்பழம் குறைந்த அளவு எடுத்துக் கொள்வது நல்லது.

இரவில் உணவுக்கு பின், தூங்க செல்வதற்கு முன், பால் அருந்துவதை தவிர்க்க வேண்டும். உணவில் தேங்காய் பயன்பாட்டை அறவே குறைக்க வேண்டும்.

பப்பாளிக் காயை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும். முள்ளங்கியை அதிகளவு சேர்த்துக் கொள்வதும் நல்லது.

இஞ்சியை இடித்து சாறு எடுத்து, அடுப்பில் கொதிக்க வைக்க வேண்டும். சாறு சற்று சுண்டியதும், தேன் விட்டு சிறிது நேரம் கழித்து இறக்கி, ஆற வைக்க வேண்டும்.

காலை உணவுக்கு முன் ஒரு கரண்டியும், மாலையில் ஒரு கரண்டியும் உட்கொண்டு வெந்நீர் அருந்தி வந்தால் 40 நாளில் தொப்பை இருந்த இடம் தெரியாது.

வாழைத் தண்டு சாறு, பூசணி சாறு, அருகம்புல் சாறு என மூன்றில் ஏதாவது ஒன்றை தினமும் குடித்து வந்தால் உடல் எடை குறையும்.

இதற்கிடையில் தினமும் காலையில் அல்லது மாலையில் அரை மணி நேரம் நடந்தால் போதும்.

அடிவயிற்றுக் கொழுப்பைக் கரைக்க...

இன்றைய இளைய தலைமுறையாகட்டும், பெரியவர்களாகட்டும் அவர்களுடைய எடையை, குறிப்பாக வயிற்றை குறைக்க படும் பாடுகளை சொல்லி மாளாது. இவ்வாறு வயிற்றுப்பகுதி பெரியதாக இருப்பதை அதை விட பெரிய குறையாக கருதுபவர்கள் பலரும் உண்டு.

இந்த குறையை தீர்க்க ஏதேனும் வழிமுறைகள் உள்ளனவா என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருந்தால் இதோ சில குறிப்புகள்.

சரியாக சாப்பிடுதல்

சரியான முறையில் சாப்பிட்டால் 80% கொழுப்பை நிச்சயம் குறைக்க முடியும். ஆரோக்கியமான மற்றும் சீரான உணவு முறையை பின்பற்றும் போது இதை நாம் சாதிக்க முடியும். தேவையான அளவு நுண் மற்றும் பெரும் ஊட்டச் சத்துக்களை சாப்பிட்டால் கொழுப்பை குறைக்க முடியும். இடை உணவுகள், துரித உணவுகள் ஆகிய கடைகளில் வாங்கும் உணவுகளை அறவே தவிர்த்தால் தடியான வயிறை தட்டையான வயிறாக மாற்ற முடியும். இயற்கையான காய்கறிகள் மற்றும் பழங்கள், வேக வைத்த உணவு வகைகளை தேர்ந்தெடுத்து உண்ணுங்கள்.

தண்ணீர்

தாகம், அயர்ச்சி, பசி ஆகியவற்றைப் பற்றி தெளிவாக உணராத சிலர் பசிக்கும் போது நிறைய சர்க்கரை கொண்ட உணவை உண்டு எடையை தங்களை அறியாமலேயே அதிகப்படுத்திக் கொள்கின்றனர் அல்லது கொழுப்புச்சத்து அதிகம் உள்ள உணவை பசியில் விரைந்து உண்கின்றனர். இது தவறு. எப்போதும் ஒரு தண்ணீர் பாட்டிலை கையில் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம். குறைந்தது 6 முதல் 8 டம்ப்ளர் தண்ணீராவது குடிக்க வேண்டும். ஆனால் இது உங்கள் எடை மற்றும் வாழ்க்கை முறையை சார்ந்த விஷயமாக அமைகின்றது. இதை கண்டறிந்து உங்களுக்கு தேவையான தண்ணீரின் அளவை கண்டறிந்து அதை தவறாமல் கடைபிடிக்க வேண்டும்.

உடற்பயிற்சி

பல மணி நேரம் உழைப்பு மற்றும் வெகு தூர ஓட்டப் பயிற்சி ஆகிய இரண்டும் தரும் பலன்களை விட சிறிது நேரம் கடினமான உடற்பயிற்சியில் ஈடுபடும் போது கொழுப்பு அதிகமாக குறையும். உதாரணமாக நீங்கள் திரெட் மில்லில் பயிற்சி மேற்கொள்ளும் போது அவ்வப்போது உங்கள் வேகத்தை கூட்டி சில வினாடிகள் அதை தொடர்ந்து பயிற்சி செய்த பின் மீண்டும் நமது பழைய வேகத்திற்கு திரும்பி வரும் போது சிறந்த அளவில் தொப்பை குறையும்.

சர்க்கரை (சீனி) வேண்டாம்

பொதுவாக நமக்கு கடைகளில் கிடைக்கும் சர்க்கரையை தவிர்ப்பதும் அல்லது குறைப்பதும் நல்லது. இதை தினமும் நமது உணவில் தவிர்த்தால் சிறந்தது. நாம் தினமும் உண்ணும் உணவில் சர்க்கரை நிறைய அளவு ஒளிந்திருக்கும். இதை உணர்ந்து, நாம் உண்ணும் உணவில் சாக்கரையை குறைப்பது நல்லது. இதற்கு பதிலாக தேன், பனங்கற்கண்டு மற்றும் அதிமதுர சாறு ஆகியவற்றை பயன்படுத்தலாம்.

உப்பு வேண்டாம்

உப்பை கண்டிப்பாக உணவில் சேர்த்து பயன்படுத்தும் இந்த காலத்தில் சோடியம் உப்பை தவிர, பொட்டாசியம் உப்பு, எலுமிச்சை உப்பு மற்றும் கடல் உப்பு ஆகியவை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இவற்றை வாங்கிப் பயன்படுத்தலாம். மிளகு மற்றும் இதர மூலிகைகளைப் பயன்படுத்துவதன் மூலம் உப்பு உட்கொள்ளுவதை தவிர்க்க முடியும்.

வைட்டமின் சீ

உடலில் உள்ள கொழுப்புகளை சக்தியாக மாற்றும் கார்னிடைன் என்ற பொருளை சுரப்பதற்கு உதவும் வைட்டமின் சி மிகவும் அவசியமானதாக உள்ளது. அது மட்டுமல்லாமல் மன அழுத்தத்தால் சுரக்கப்படும் கார்டிசாலையும் வைட்டமின் சி கட்டுப்படுத்துகிறது. இந்த கார்டிசால் தான் வயிற்று கொழுப்பு அதிகரிப்பதற்கு மிக முக்கிய காரணமாகும்.

கொழுப்பை வெட்டும் உணவுகள் (இலங்கை/இந்திய)

கொழுப்பை குறைப்பதற்கு இயற்கையான வழிகள் பலவும் உள்ளன. பூண்டு, வெங்காயம், இஞ்சி, சிவப்பு மிளகு, கோஸ், தக்காளி, மற்றும் இலவங்கப்பட்டை, கடுகு, கிராம்பு ஆகியவையும் கொழுப்பை கரைக்க உதவுகின்றன. சிறிது கிராம்பு, பச்சை பூண்டு மற்றும் ஒரு அங்குல அளவிற்கு இஞ்சி ஆகியவற்றை கலந்து தினமும் காலை சாப்பிட்டு வந்தால் கொழுப்பை நிச்சயம் கரைக்க முடியும். வெதுவெதுப்பான தண்ணீரில் கொஞ்சம் எலுமிச்சை சாறு மற்றும் தேனை கலந்து, காலையில் வெறும் வயிற்றில் அருந்துவதும் மிகப் பிரபலமான உடல் எடையை குறைக்கும் வழியாக பின்பற்றப்படுகின்றது. இது போன்று பல வழிகள் உண்டு.

தேவையான ஆரோக்கியமூட்டும் கொழுப்புச் சத்தை சேர்த்துக் கொள்ளுதல் கெட்ட அல்லது தேவையற்ற கொழுப்புக்களை குறைக்கும் முயற்சியில் நாம் நல்ல கொழுப்பு வகைகளை சேர்க்க முயல வேண்டும். வெண்ணெய், பழம், ஆலிவ், தேங்காய் ஆகிய பருப்பு வகைகள் நல்ல கொழுப்புகளை கொண்டவையாகும்.

காலை உணவு

காலை உணவை தவிர்ப்பது உடல் எடையை குறைக்க உதவும் என்று நிறைய மக்கள் தவறாக நினைப்பதுண்டு. இது உடல் எடையை குறைக்காமல், உடல் வீக்கமடைய காரணமாகிவிடுகிறது. இதனால் வயிறு உப்புசமடைவது அதிகரித்து, பசி அதிகமாவதால் வயிற்றுக் கொழுப்பு மிகவும் அதிகமாகிறது. ஆகவே அவ்வப்போது நாம் சிறிது சிறிதாக உண்ணும் போது நமது உடல் செரிமானத்தை கட்டுப்படுத்தி உடல் எடையை மேம்படுத்த முடிகிறது. ஆகையால் உணவின் அளவை குறைத்து உண்ணும் நேரங்களை அதிகப்படுத்தி ஆரோக்கியமாக உடலை உருவாக்கிக் கொள்ளுங்கள். உலர்ந்த பழங்கள், பழ வகைகள் மற்றும் பச்சை அல்லது வேக வைக்காத காய்கறிகள் ஆகியவற்றை உண்ணலாம்.

தூக்கம்

உடல் எடையை மேம்படுத்த தூக்கம் மிகவும் அவசியமான ஒன்றாகும். அனைவருக்கும் 6 முதல் 8 மணி நேர உறக்கம் தேவைப்படுகிறது. உறங்காமல்

இருப்பதும் உடல் எடையை கூட்டுவதாக உள்ளது. இத்தகைய எளிய வழிகளை பின்பற்றினால் வயிற்றுக் கொழுப்பை மட்டுமல்ல, முழு உடல் எடையையும் குறைத்து ஆரோக்கிய வாழ்வை வாழ முடியும். இதை முயற்சி செய்து வித்தியாசத்தை உணருங்கள்.

அசிடிட்டியை குணப்படுத்த...

"அசிடிட்டி" எனப்படும் வயிற்றில் ஏற்படும் அமில சுரப்பு பிரச்சனையால், அவதியுறுவோர் ஏராளம்..!

குறிப்பாக மசாலா அதிகம் சேர்க்கப்பட்ட உணவுகளை உண்ட பின்னர் இத்தகையோருக்கு நெஞ்செரிச்சல் போன்றவை ஏற்படுவது அதிகம்.

இவற்றை தடுப்பதற்கும், குணப்படுத்துவதற்கான எளிய வழிகள் இதோ!

பாட்டில்களில் அடைக்கப்பட்ட பானங்கள் மற்றும் காஃபின் பொருட்களை அறவே தவிர்த்துவிட்டு, அதற்கு பதிலாக மூலிகை தேனீர் அருந்தலாம். மேலும் தினமும் வெதுவெதுப்பான வெந்நீர் ஒரு டம்ளர் அருந்தலாம்.


தினசரி உணவில் வாழைப்பழம், தர்பூசணி, வெள்ளரி போன்றவற்றை கட்டாயம் சேர்த்துக்கொள்ளவேண்டும். இளநீர் அருந்தினால் இன்னமும் நல்லது. அது அமிலசுரப்பு பிரச்சனையை தீர்க்கும்.

தினமும் ஒரு டம்ளர் பால் அருந்துவதும் நல்லதுதான். இரவு உணவை நீங்கள் தூங்கப்போவதற்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரத்திற்கு முன்னதாகவே முடித்துவிடுங்கள்.

ஒவ்வொரு உணவு இடைவேளைக்கு இடையேயும் நீண்ட இடைவெளி விடுவதும் அமில பிரச்சனைக்கு மற்றொரு காரணமாக அமைந்துவிடுகிறது. எனவே கொஞ்சமே என்றாலும் அந்தந்த நேரத்தில் உணவை எடுத்துக்கொள்ளுங்கள்.

ஊறுகாய், கார சட்னி வகைகள், வினிகர் போன்றவற்றை கண்ணால் பார்க்காமல் இருப்பதே உசிதம்.

மைக்ரோவேவ் நல்லதா? கெட்டதா?



1864ஆம் ஆண்டு ஜேம்ஸ் கிளாக் மக்ஸ்வெல் என்பவரால் மின்காந்த அலை கதிரியக்கம் தத்துவமாக முன்மொழியப்பட்டது.

ஹென்றிக் ஹேட்ஸ் என்பவர் 1888 ஆம் ஆண்டு தனது ஆராய்ச்சிகளில் மின்காந்த அலைகளின் இருக்கையை உறுதிப்படுத்தி அதன் அலைகளை அளந்து காட்டினார். இவரின் பெயரே அலைகளின் குறியீடாக பயன்படுத்தப்படுகின்றது. (ஹேட்ஸ் Hz)

இனி விடயத்திற்கு வருவோம். இந்த காந்த அலைகளை மனிதன் கட்டுக்குள் வைத்து தனது தேவைகளிற்குப் பயன்படுத்தக் கற்றுக்கொண்டான்.

இந்தப் பயன்பாட்டின் பரிமாணங்களே அன்றைய மார்க்கோனி ரேடியோவி முதல் இன்றைய மைக்கிரோ வேவ் அவன் ஈறாக காதுகளில் குடிகொண்டுள்ள புளூ டூத் வரை.



கௌஷிகன்

உலகின் தோற்றம் முதல் கதிரியக்கமும் இயற்கை மின்காந்த அலைகளும் இருந்தே வந்தன.

உலகில் உயிரின் தோற்றமம் இவற்றை எல்லாம் இயற்கையாக அனுசரித்தே வந்தது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் விண்ணில் மிதக்கும் செய்மதிகள் முதல் ஒவ்வொருவரின் கைகளிலும் தவழும் அலை பேசிகள்வரை சக்தியூட்டப்பட்ட மின்காந்த அலைகளையே பயன்படுத்துகின்றன.

இவ்வுலகமே மின்காந்த அலைகளின் கதிர் வீச்வினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மைக்ரோ வேவ் அவண்களில் பயன்படுத்தப்படும் இவை ஓகானிக் கட்டமைப்புக்குள் ஊடுருவும்போது வெப்பத்தை உண்டு பண்ணக்கூடியவை. இது சக்தி கூடிய நிலை மின்காந்த அலை வீச்சு.

நாம் மின்காந்த அலைகளை அதிகமாகப் பயன்படுத்துவது இரண்டு இடங்களில்.

ஒன்று மைக்ரோ வேவ் அவண் மற்றது டப்லட்ஸ் மற்றும் அலை பேசிகளும் அவற்றுடன் கூடிய இதர பளூடூத் போன்ற உபகரணங்களும்.

இப்பொழுதுள்ள பிரச்சினையே இந்த மின் காந்த அலைகள் நல்லதா கெட்டதா? என்பதே.

தவிர்க்க முடியாதபடி அலைக்கற்றைகளின் பயன்பாட்டை இன்றியமையாததாக்கிய எமது வாழ்க்கை முடிந்தளவு அவற்றைத் தவிர்ப்பது நல்லது. குறிப்பாகச் சொல்லப்போனால் மைக்ரோ வேவ் அவணால் எமக்கு நேரடியாக பாதிப்புக்கள் இல்லாது போனாலும் அலைபேசி, புளூ டூத் போன்றவற்றின் கதிர்வீச்சிலிருந்து விலகியிருப்பதே நல்லது.

இவற்றில் பயன்படுத்தப்படும் கதிர்கள் சக்தி குறைவானதாக இருந்தாலும் நீண்டகால கதிர் வீச்சிற்குட்படும் போது அது எமது உடற்கலங்களை வியத்தமடையச் செய்கின்றது.

புளூடூத்தை தொடரச்சியாக பயன்படுத்துவது காதையும் அதனை அண்டிய தலையின் பகுதிகளையும் சூடாக்குகின்றது. இந்த சூடாதல் உடனடிப் பாதிப்புகளை ஏற்படுத்தாவிட்டாலும் காலப்போக்கில் அப்பகுதி உணர்வற்ற நிலையை அடையக் கூடிய வாய்ப்புண்டு.

அலைபேசியை இடுப்பில் தொங்க விடுவது சிறுநீரகத்தையும் மேல்சட்டைப் பையில் வைப்பது இதயத்தையும் நீண்ட காலப்போக்கில் பாதிக்கக்கூடியன.

குறிப்பாக ஆண்கள் வாகனமோட்டும் போது தமது கால்களுக்கிடையில் அலைபேசியை வைப்பதைத் தவிர்க்கவேண்டும். இது விதைகளையும், விந்தையும் பாதிப்புக்குள்ளாக்கக் கூடியது.

முட்டை வெள்ளைக்கருவை மைக்ரோ வேவ் அவணில் வைத்தால் அது அவிந்த முட்டைபோல் வரும் இது வெப்பக்கதிரியக்கத்தால் புரதத்தில் உண்டாகும் மாறுதலே. இதே தாக்கம் எமது கண்களின் விழித்திரையிலும் ஏனைய அங்கங்களின் புரதக் கூறுகளிலும் இக் கதிரியக்கத்தினால் ஏற்படக்கூடும் சாத்தியம் உண்டு என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

எனவே, இயன்றளவு மின் காந்த அலை வீச்சிலிருந்து விலகியிருப்பது நல்லது.



ஒருத்தன் வழக்கம் போல நைட் தூங்கப்போனான். கனவுல,புகை மண்டலம், நல்லா தடிச்ச மீசை வச்ச ஒருத்தர் வந்து, "நான் தான் எம தர்மன் ... இன்னில இருந்து உனக்கு 10 வருஷத்துக்கு சாவே இல்ல என்ன வேணா பண்ணிக்க போ" ன்னாரு.

இவனும் அத நம்பி டெஸ்ட் பண்ணலாம்னு லாரி முன்னாடி நிக்க ஆக்ஸிடெண்ட் ஆகி செத்து எமலோகம் போய் கோபமா நீதி கேட்டான்.

"இப்டி மோசம் பண்ணிட்டியே எமதர்மா..?"

எமதர்மன் சொன்னான், "ஸாரிப்பா மாசக்கடைசி ... டார்கெட் ரீச் பண்ணனும்ல".

ஒரு அப்பாவும், 4 வயது மகனும் அவர்களுடைய புதிய காரை துடைத்துக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிறுவன் ஒரு சிறிய கல்லை எடுத்து காரின் கதவு பக்கத்தில் சுரண்டி கொண்டிருந்தான். சத்தத்தை கேட்ட அப்பாவுக்கு கோபம் தலைகேறியது...



கடுப்பில் மகனுடைய கையை பிடித்து, நான்கு முறை உள்ளங்கையில் விளாசிவிட்டார். அப்பொழுதுதான் கவனித்தார் அவர் அடித்தது ஸ்பேனரை கொண்டு என்பதை. வலியில் துடித்த மகனை மருத்துவ மனைக்கு தூக்கி கொண்டு ஓடினார்

பல எலும்புகள் முறிந்துவிட்டதால்.. இனி விரல்களை குணமாக்கமுடியாது என்று மருத்துவர்கள் கைவிரித்தனர்.

மகன் வலி நிறைந்த கண்களுடன் அப்பாவை பார்த்து "அப்பா.. என்னோட விரல்ளுங்க திரும்ப வளர்ந்துடும் இல்லப்பா?" என்று கேட்டவுடன், கண்ணீருடன் மவுனமாக வெளியே வந்தார்.

வெளியில் நின்றிருந்த காரை பல தடவைகள் எட்டி, எட்டி உதைத்தார். கண்ணீருடன் தலையில் கையை வைத்துகொண்டு காரின் முன்பு உக்கார்ந்துவிட்டார்

அப்பொழுதுதான் அந்த கீரல்களை கவனித்தார் என்ன எழுதியிருகிறது என்று.. அந்த வாசகம் "ஐ லவ் யூ டாட்".

மனிதர்களை பயன்படுத்துகிறோம், பொருட்களை நேசிக்கிறோம்...


எப்பொழுதுதான் மனிதனை நேசித்து, பொருட்களை பயன்படுத்த போகின்றோமோ..

ஒரு செல்வந்தர் இருந்தார். ஒரு நாள் அவர் தன் தோட்டத்தில் விளைந்த வாழைக்குலை ஒன்றை பணியாளிடம் கொடுத்துக் கோவிலில் கொடுக்கச் சொன்னார்.

ஏழைப் பணியாள் எடுத்துச் செல்லும் வழியில் அவனுக்கு அதிகப் பசியெடுக்கவே அக்குலையிலிருந்து இரண்டு பழங்களைப் பிய்த்துச் சாப்பிட்டு விட்டான்..



மீதிப் பழங்களை கோவிலில் கொடுத்தான். அன்றிரவு செல்வந்தர் ஒரு கனவு கண்டார். கனவில் இறைவன் வந்து நீ எனக்குக் கொடுத்த இரண்டு பழங்களை நான் சாப்பிட்டேன் ருசியாக இருந்தது என்றான்.



செல்வந்தனுக்கு மிகக் கோபம் வந்தது. ஒரு குலை பழம் கொடுத்திருக்க இரண்டு மட்டுமே இறைவனுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. மீதி என்னவாயிற்று எனக் கோபப்பட்டான்.

மறு நாள் காலை அந்தப் பணியாளைக் கூப்பிட்டு விசாரித்தான்.

அவன் இரண்டு பழங்களைப் பசியினால் தான் சாப்பிட்டதை ஒப்புக் கொண்டு, மீதிக் குலையைக் கோவிலில் கொடுத்து விட்டதைச் சொன்னான். செல்வந்தனுக்குப் புரிந்தது. அந்த ஏழை சாப்பிட்ட பழம் மட்டுமே இறைவனைச் சென்று அடைந்திருக்கிறது என்று.

ஒரு வரை நீண்ட நாட்களாக காணவில்லை. அவர் கொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று கருதிய போலீஸார், சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தினர். வழக்கு விசாரணைக்கு வந்தது.

குற்றம் சாட்டப்பட்டவரின் வக்கீல் எழுந்து, "மைலார்ட்! இவர் யாரைக் கொலை செய்தார் என்று குற்றம் சாட்டப்பட்டதோ, அவரே இன்னும் ஐந்து நிமிடத்தில் இதே நீதிமன்றத்தின் கதவு வழியே உள்ளே வரப் போகிறார். நீங்கள் அதைப் பார்த்த பின்பு, இவர் குற்றமற்றவர் என்பதை உணர்வீர்கள்" என்று கூறி அமர்ந்துவிட்டார்.

நீதிபதி உட்பட எல்லோரும் நீதிமன்றக் கதவையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். 5 நிமிடம், 10 நிமிடம் கழிந்தது. ஒருவரும் வரவேயில்லை. இப்போது வழக்கறிஞர் எழுந்தார்.

"மைலார்ட்! நீங்கள் உட்பட யாருமே காணாமல் போனவர், கொலைதான் செய்யப்பட்டவர் என்பதை முழுமையாக நம்பவில்லை. அதனால்தான் எல்லோரும் வாசலையே பார்த்துக் கொண்டிருந்தீர்கள். எனவே, உங்களுக்கு இருக்கும் சந்தேகத்தின் பலனை குற்றம் சாட்டப்பட்டவருக்கு அளித்து, அவரை விடுதலை செய்ய வேண்டும்" என்று கூறிவிட்டு கம்பீரமாக அமர்ந்தார்.

பிற்பகலில் நீதிபதி தீர்ப்பை வாசித்தார். குற்றவாளிக்கு ஆயுள்தண்டனை அளித்தார். வக்கீல் எழுந்து, "எப்படி மைலார்ட்?" என்று கேட்டார்.

அதற்கு நீதிபதி சொன்னார், "அந்த பத்து நிமிடமும் நான் வாசலைப் பார்த்தது உண்மைதான். ஆனால், ஒருதடவை கூட குற்றம் சாட்டப்பட்டவர் வாசலைப் பார்க்கவில்லை."





குட்டிக் குட்டிக் கதை(டு)கள்

தொகுப்பு:
சின்ன சிவா

ஒரு வழியில் கௌதமபுத்தர் நடந்து சென்றார்.. அப்போது எதிரே வந்த ஒருவன் மிகுந்த கோபத்துடன் புத்தர் முகத்தில் காறி எச்சிலை துப்பினான்.. தன் மேல்துண்டால் துடைத்து விட்டு.. "இன்னும் எதாவது சொல்ல விரும்புகிறாயா..?" என்றார் புத்தர். அருகில் நின்ற ஆனந்தாவுக்கு கோபம் வந்தது. புத்தர் ஆனந்தாவை பார்த்து சொன்னார் "ஆனந்தா.. இவர் ஏதோ சொல்ல விரும்புகிறார்.. ஆனால் அவருக்கு வார்த்தைகள் இல்லாததால் இந்த செயலை செய்து விட்டார்.. வார்த்தைகள் பலவீனமானவை இவர் என்ன செய்ய முடியும்..?" என்று கூறிவிட்டு சென்று விட்டார்.

துப்பியவனுக்கு அன்று முழுவதும் குற்றஉணர்வால் நித்திரையே வரவில்லை. அடுத்த நாள் காலை புத்தரை தேடியலைந்து கண்டு அவரது காலில் விழுந்து அழுதான்.. அப்போதும் புத்தர் ஆனந்தாவை பார்த்து சென்னார்.. "இன்றும் இவர் ஏதோ சொல்ல விரும்புகிறார் ஆனந்தா..! ஆனால் வார்த்தைகள் பலவீனமானதால் இச்செயலை செய்துவிட்டார்..!" என்றார். அவன் எழுந்து கேட்டான் "நான் துப்பிய போது நீங்கள் ஏன் திருப்பி ஒரு வார்த்தைகூட ஏசவில்லை..?" என்று. அப்போது புத்தர் அழகான பதில் சொன்னார்.. "நீ எண்ணியது போல் நடக்க நான் என்ன உன் அடிமையா.. ?"

இதோ எங்கள் சினிமா!

– திரை விலக்குபவர் பாஸ்கி ரி ராஜ் –

விடயத்தில் நேராகக் குதித்துவிடுகிறேன். Buddy – ஆம் கூட்டாளி என்ற சினிமாக்கூறு பற்றி இம்முறை பார்ப்போமெனத் தெரிவித்திருந்தேன். என்ன கவலையென்றால் அந்தத் தோழன் என்ற அம்சம் என்ன செயற்பாட்டைச் செய்கிறது என்று உதாரணம் காட்டக்கூடிய திரைப்படங்கள் இம்முறை காணக் கிடைக்கவில்லை. பிறகு வரும். பார்க்கலாம். சரி. Buddy பற்றிப் பார்ப்போம். இப்போ. நம்ம கதாநாயகனே தன்னைப் பற்றி புகழ்ந்து சொன்னால் எப்படியிருக்கும்? ரெம்பப் பீத்திக்கிறார் என்றிருக்கும் இல்லையா? அதைச் செய்யும் பிரகிருதிதான் இந்த Buddy. அந்தாள் வெறும் புகழ்பாட மட்டுமல்ல. கதாநாயகனின் வேதனையை. இக்கட்டுக்களை. கடந்துவந்த பாதையை. நல்லியல்புகளை. குணாம்சங்களை. இலட்சியத்தை. மறைத்து வைத்திருக்கும் ஒரு இரகசியத்தை... என்று கதாநாயகன் வாயால் சொல்ல முடியாத பல விடயங்களை எமக்கு சொல்லும் வேலையை செய்வான். (அல்லது செய்வாள்). எமக்கு மட்டுமல்ல. திரைப்படத்திலுள்ள வேறொரு முக்கிய பாத்திரத்துக்கும் உதாரணமாக காதலிக்கும் இவற்றை எடுத்துரைத்து கதாநாயகனைப் புரிந்து கொள்ள வைப்பான்(ள்). இந்த Buddy யின் வேலையை அதற்கான ஒரு பாத்திரம் படத்தில் இருந்து செய்யும். இல்லையேல் வேறு பாத்திரங்கள்கூட அவ் வேலையையும் சேர்த்துச் செய்யலாம். கதாநாயகனின் தாய். காதலிக்கு அவனின் செயலுக்கான காரணத்தை எடுத்துக்கூறுவாளானால் அங்கே அவள் Buddyயே! காதலியேகூட Buddy யாகலாம். (காதலியின் பங்கு பற்றி - Love Interest – சென்ற இதழில் சொல்லிவிட்டேன்.) நமது தமிழ்ப் படங்களில் பெரும்பாலும் கொமேடியனை Buddy யாகப் பயன்படுத்துவர். அதனால் Buddy என்பது கொமேடியனே என்று நாம் தப்பாக விளங்கிக்கொண்டிருக்கிறோம். அப்போ கொமேடியன் ஏதுக்கடி தோழி..? அதை அடுத்தமுறை பார்ப்போமா. இப்போ படத்துக்குப் போபோமா? எல்லோரும் வெய்டிங்க!

திரிஷம்

நெறியாள்கை: ஜித்து ஜோசெப்

நடிப்பு: மோகன்லால், மீனா, அன்ஷிபா,

கெமரா: சுஜித் வாசுதேவ்

இசை: அநில் ஜோசன், விநு தோமஸ்

மலையாளப்படம் - கமல்ஹாசன் அதை "பாபநாசம்" என்ற பெயரில் தமிழில் ரீமேக் செய்வதால் அந்தக் காரணத்தை வைத்தாவது ஒருமுறை இப் படம்பற்றி நாமும் பார்த்துவிடுவோம். மலையாளம் தமிழுக்கு நெருங்கிய மொழி. ஆங்கிலப் படங்கள் பார்த்துப் புரிந்துகொள்ளும்போது இதைப் புரிந்து கொள்ள முடியாதென்பதல்ல. என்ன, எங்கள் தமிழ் ஹீரோக்களை அங்கு காண முடியாதென்பதால் ஹீரோ முகம்தேடிப் படம்பார்க்கும் நாம் தியட்டர் சென்று பார்ப்பதில்லையென்றாலும் சீடி வாங்கிப் பார்க்கவும் பெரும்பாலும் நினைப்பதில்லை. ஆனால், மலையாளத்தில் தரமான பல படங்கள், சத்தியஜித்ரே போன்ற உலகத் தரத்திலான டைரக்டர்கள், இயற்கையாக நடிக்கும் நடிகர்கள் என்று ஒரு தரமான சினிமா உலகமே உண்டு. (பாலான படங்களுக்கும் மலையாளம் பேமஸ்தான் - அது ஏன் உங்களுக்கு?)

சரி, இப்போ திரிஷம். மலையாளத்தில் மட்டுமல்ல, இந்திய திரையுலகையே ஒரு உலுக்கு உலுக்கி, படம் என்றால் இதுதான் என்று அடித்துச் சொல்லிவிட்டுப்போன படம். அப்படி என்ன அதில்..? கதை இதுதான். 4ம் வகுப்பு படித்த சாதாரணமான, கைக்கும் வாய்க்கும் என்ற கட்டுப்பட்டியான வாழ்க்கை நடத்தும் ஒருவனின் வாழ்வில் பூதகரமாக நுழைந்துவிடுகிறது முழுக் குடும்பத்தையும் சிறைக்குள் தள்ளக்கூடிய எதிர்பாராதொரு சிக்கல். மகளின் குளியலறைக் கோலத்தை திருட்டுத்தனமாக செல் போனில் படமெடுத்து, அவளை பிளைக்மெயில் பண்ணி தன் உடலிச்சைக்கு பலியாக்க முனைகிறான், - அப்போது தாய் குறுக்கிடவே, விவஸ்தை இல்லாமல் "அப்போ நீ வா" என்கிறான் - ஒரு பொலிஸ் உயரதிகாரியின் ஆசை மகன். இதைக் கேட்டு, கையில் கிடைத்த தடியால் மகள் ஓங்கி அடித்த அடியில் இறந்துவிடுகிறான். இப்போ என்ன செய்வது? திகைக்கிறார்கள். தாயும் மகளுமாக பிணத்தை மறைக்கிறார்கள் - சின்ன மகளின் கண்ணில் படாதவாறு மறைக்கத் தெண்டித்தும் முடியவில்லை. இப்போதான் தந்தை அனைத்தையும் தன் பொறுப்பில் எடுக்கிறார். எப்பாடுபட்டாவது எவரும் சிறை செல்லாது செய்யவேண்டும். 4ம் வகுப்பே படித்த, வெறும் சினிமா பார்த்துப் பார்த்தே பொலிஸ் எப்படி விசாரிக்கும் என்பதை கிரகித்துக்கொண்ட அவன், எப்படி புத்திக்கூர்மையைப் பயன்படுத்தி நடந்ததை மறைக்கிறான் என்பதே கதை. இங்கு புத்திக்கூர்மை மட்டுமல்ல, இதற்காக தன்னையும் தன் சின்ன மகள் உட்பட முழுக் குடும்பத்தையும் எப்படித் தயாராக்குகிறான் என்பதுதான் இங்கு எம்மை உறைந்துபோய் நிற்க வைக்கிறது.



"பாபநாசம்" ரீமேக்

பொலிஸ் விசாரணையின் கடைக்கோடி நிலையிலும் தாங்கும் சக்தி பெற்றிருக்க அந்த அப்பாவிக் குடும்பத்துக்கு எப்படித் தெம்பளிக்கிறான், தானும் தன் மனைவி பிள்ளைகள் படும் சித்திரவதைகளைக் கடைசிவரை தாங்கி, தன் குடும்பத்தைக் காக்கிறான் என்பதுதான் இப் படம் தரும் அனுபவம்.

இப் படத்தின் சினிமா மொழிபற்றி சொல்லியாகவேண்டும். ஒன்று எளிமை. உடை, வீடு, மேக்கப் போன்றவற்றில் இயற்கைத்தனம். கெமராவில், கிளாமரில்லை திரிலர் படத்துக்கேற்ற இருள்மை படிந்த படப்பிடிப்பு. எம் தமிழ்ப்படங்களுக்கு நல்ல உதாரணம் தருவது படத்தின் எடிட்டிங்தான். தேவையற்ற எந்தக் காட்சி நீட்சியும் இல்லை. நறுக்கென, படத்திற்குத் தேவையான அளவு செதுக்கப்பட்ட காட்சிகள். உதாரணத்துக்கு, குளத்தில் தள்ளப்படுகிறது கார். அதைப் பொலீஸ் மீட்டெடுக்கும் காட்சியாக, ஒரு கிறேன் அப்படியே குளத்திலிருந்து காரை கழுகுத்தூக்காய் தூக்கி, வானளாவ உயர்ந்து திரும்பி தரையில் கொணர்ந்து சேர்க்கும் சினிமாத்தனக் காட்சி இல்லவே இல்லை. கார் ஏற்கெனவே மீட்கப்பட்டதாக கிறேனருகில் நிற்கிறது அவ்வளவுதான். இதுபோலவே, தன்னை பிளைக்மெயில் செய்தற்காக மகள் அழுகிறாள். அடுத்த கட்டத்தில் அவள் அவனைச் சந்திக்கிறாள். பின்னாலிருந்து தாய் வெளிப்படுகிறாள். - இந்தக் காட்சிக் கோர்வையே போதும், தாயிடம் மகள் நடந்த கதையைச் சொல்லி, அவர்கள் இருவரும் அவனைச் சந்திக்க வந்த ஒரு படலத்தை சொல்லாமலே புரியவைக்க. இந்தவகையில் பல அநாவசியங்களைத் தவிர்த்து விறுவிறுப்பூட்டும் படமாக்கல் திறமைகளை நாம் காணலாம்.

மோகன்லாலின், கதாபாத்திரமாகவே ஆகிவிட்ட அச்சொட்டான நடிப்பு அவரது படத்துக்கு பலத்த தூணாக இருப்பதோடு, இப் படத்தை ரீமேக் செய்யும் கமலஹாசன் தனது "ஹீரோ" படிமத்தை உடைத்து இதை எப்படி சாத்தியமாக்கப் போகிறார் என்ற சவாலை அவருக்கு ஏற்படுத்தியுள்ளது.

திரைப்படத்துடன் பார்வையாளர்களைக் கட்டிவைக்கும் இரு கயிறுகள் உண்டு. ஒன்று Curiosity – அதாவது ஆர்வம் மற்றயது Concern – அக்கறை. இந்தப் படம் Concern என்ற வகையை மிக உச்சமான அளவு பயன்படுத்தியுள்ளது. நீங்களே பாருங்களேன், அந்தக் குடும்பம் மீதான அக்கறைதானே உங்களைப் படத்தோடு ஒன்றவைக்கிறது அவர்கள் ஒரு கொலையே செய்த பிறகும்! அதற்கு மிகப் பொருத்தமாக கதை நகர்த்தல் முறையான Dramatic Irony என்ற, - நடந்தது என்ன என்று எமக்கு முன்கூட்டியே தெரியவைத்து கதையை நகர்துகின்ற - முறையைப் பயன்படுத்தியிருக்கிறார் டைரக்டர். இந்த டெக்நிகல் பதங்கள் பற்றி கவலைப்படாதீர்கள். இதுபற்றியெல்லாம் இன்னொரு நாள் நிச்சயம் சொல்லுவேன். அடுத்தபடம் செல்லலாமா?

இரும்புக் குதிரை

நெறியாள்கை: யுவராஜ்
நடிப்பு: அதர்வா, பிரிய ஆனந்து, ஜெகன், தேவதரசினி, ராய் லட்சுமி
கெமரா: குருதேவ், கோபி
இசை: ஜி.வி. பிரகாஷ்

பைக் ரேஸைக் கைவிட்டிருந்த ஒருவனை மீண்டும் பைக் ஓட்டத்துக்கு முன்வரவைக்கும் கதை. இப்படி கைவிட்டிருந்த விடயத்தை திரும்ப மேற்கொள்ளும் கதைகள் பல. கைவிட வைத்த அந்த சம்பவத்தின் தாக்கத்தின் ஆழமும், மீண்டும் அதை மேற்கொள்ள வைக்கும் வலுவான காரணிகளும் அதற்கான சூழ்நிலையும் தான் இத்தகைய படங்களின் பலம். இரும்புக் குதிரை, அப்படியொன்றும் இரும்பாக இல்லை. இங்கே கதை இப்படிப் போகிறது. தந்தையின் மரணத்தால் பைக் ரேசைக் கைவிட்டு, பிட்சா டெலிவரிக்கான ஸ்லோ பைக் ஓடுகிறார் ஹீரோ (பதிலாக அவர் பைக்கையே தொட அஞ்சுபவராக்கியிருந்தால் சற்று கொன்ட்ராஸ்டாயிருந்திருக்கும்.) மகனோடு பயணம்செய்து பைக் அக்சிடென்டில் இந்தத் தந்தை மரணித்ததுதான் அவனைத் தாக்கியிருப்பதாக தாயின் வாயால் செல்வதற்கு மேலதிகமாக ஒரு ஷெ ாட்டில் அக் காட்சி வந்து போவது மட்டும்தான் இங்கு இதற்கான எஸ்டாபிளிஷ்ட்மென்ட். (இவ்விடத்தில் தாய் டீரனைல யாக செயற்படுகிறாள் - அதைப் பாருங்கள்!) ஆனால் அந்தத் தந்தைக்கும் மகனுக்குமான அத்தனை நெருக்கமான பிணைப்பு இங்கே சித்திரிக்கப்படாததால் அது மனதில் அழுத்தம் பெறவில்லை. தொடர்ந்து காதல்! அதுதான் அவனை முன்னர் பைக் ரேஸில் வென்ற பைக்கை மீண்டும் எடுக்க வைக்கிறது. தந்தையின் மரணத்தின் தாக்கத்தைத் தாண்டி பைக்கை எடுக்க வைக்குமளவுக்கு உந்துவதற்கு என்னதான் அந்தக் காதலில் அழுத்தம் உள்ளதென்பது படத்தில் புரியவே இல்லை. பைக்கை வாங்க வைப்பது, படத்தின் கிளைமெக்ஸ்/க்காக வலிந்து ஏற்படுத்திய ஒரு விடயமாகவே தோன்றுகிறது. பைக்கை அவன் முன்னர் வென்றது எவ்வாறென்ற கதையும், இறுதியில் சினேகிதி மூலம் சொல்லப்படுகிறது. (இங்கே பாருங்கள் சினேகிதி Buddyயாக வேலைசெய்வதை!) அது ஒரு முரட்டுத்தமான பைக்ஓட்ட வீரனுடனான போட்டிக்கு வழி வகுக்கிறது. அந்த இறுதிநேரம் மிக விறுவிறுப்பாக அமைந்தது. ஆனால் அந்த விறுவிறுப்பு படத்தில் வேறெங்குமில்லை. இந்த இறுதிநேர டுவிஸ்டுக்காக படம், எதுவுமே இல்லாமல் ஓடிக்கொண்டிருந்தது. ஒரு பைக் ரேஸ் தொடர்பான படத்தை எப்படி எடுப்பது என்ற ஐடியாவே இல்லாமல் நோகாத காதலை வைத்தே சமாளித்துவிட முனைந்தது வீண் முயற்சி!



அமரகாவியம்

நெறியாள்கை: ஜீவா ஷங்கர்
கெமரா: ஜீவா ஷங்கர்
நடிப்பு: சத்தியா, மியா
இசை: ஜிப்ரான்



இரு காதலர்கள் பிரிக்கப்படும்போது ஏற்படும் வலி - அதன் தீர்வு மரணம். இந்த தீமில் இயங்கும் இத் திரைப்படம் பெயரிலுள்ள இலக்கியத் தன்மைக்கு ஏற்றாற்போல் கெமராவில் சித்திரமாகத் தீட்டப்பட்டாலும், கதையிகூட பிசிறல் இல்லாவிட்டாலும் ஏதோ ஒன்று தப்பாகியுள்ளது. என்னவென்று சொல்கிறேன். கதையை முதலில் பார்ப்போம். தாய் இரண்டாவது திருமணம் செய்ததால் தந்தையை ஆழ்மனதில் மிஸ்பண்ணும் ஒரு பையன். தன் நண்பனின் காதலுக்கு தூதுபோன அவனை வலிந்து காதலிக்கும் ஒருத்தி- அதனால் ஒருவித குற்ற உணர்வு வேறு. தனிமையில் காதல்செய்யச் சென்றவிடத்தே பொலிஸில் வசமாக மாட்டிக்கொள்ள, இரு குடும்பத்திற்கும் விடயம் தெரிய, மன்னிப்புக் கேட்கச் சென்ற இடத்தில் காதலியின் தந்தையுடன் மோதல். அதற்குப் பழிவாங்கும் செயலில் வீடு தீப்பற்றுகிறது. (இது பிரச்சினையை முற்ற வைப்பதற்கான வலிந்த சம்பவங்களாகவே தோன்றுகிறது.) பின்னர் கோட்டுக்குச் செல்கிறது பிணக்கு. இதன் பின் தண்டனையிலிருந்து விடுவிப்பதற்காக அவனை புத்தி சுவாதீனமானவன் என்று காட்ட, அவனும் அவ்வாறே மாறிச் செல்கிறான். காதலியைப் பிரித்து மறைத்து வைப்பது அவனுள் மூர்க்கத்தை அதிகரிக்கிறது. நண்பனும் தருணம் பார்த்து அவளின் கடிதத்தை மறைத்துவிட, இறுதியில் அவளைத் தேடிக் கண்டுபிடித்தபோது, அவளது பார்வையிலும் அவன்மேல் அச்சம் தெரிய, சந்தேகம் கொண்டு பெற்றாரின் முன்வைத்தே அவன் "நீ என்னைக் காதலிக்கிறாயா இல்லையா" என்று கேட்க, சூழ்நிலை கருதி அவள் இல்லையென்றுவிடுகிறாள். இடிந்துபோகிறான் அவன். மறுநாள் அவன் விருப்பப்படியே அவனைத் திருமணம் செய்யும் முடிவுடன் அவள் செல்ல, அவனோ அவளைக் கொன்றுவிடுகிறான். இந்த அதிர்ச்சியான முடிவு படத்தைத் தூக்கி நிறுத்தி வைத்தாலும் அது வீழ்ந்ததற்கு காரணம் என்னவென்றால் "கெரக்டர் ஆர்க்"கை (மாறிச்செல்லும் கரெக்டரின் படிநிலை மாற்றத்தை) சரியாகச் செதுக்காததுதான். அவனின் காதலை முன்னிறுத்துவதா மனநிலைப் பிறழ்வை முன்னிறுத்துவதா என்ற குழப்பம்தான். சரியாகச் சொன்னால் இது காதல் காவியமா இல்லை மனப் பிறழ்ச்சியின் சித்திரமா என்ற மயக்கம். இறுதியில் இப் படத்தின் வகை, காதல்வகையா அல்லது திறிலர் வகையா என்ற மிரட்சி! இங்கு Buddy? ஓரளவு அந்தப் பணியைச் செய்வது கதாநாயகனின் தந்தைதான். ஆனால் அது தேவையில்லை, கதாநாயகனே தன்னைப்பற்றிச் சொல்லிவிடுகிறான். ம்.. சற்றுக் கவனமெடுத்திருந்தால் நெஞ்சில் உறையக்கூடிய படம், வீணே தோற்றதுதான் வருத்தம்.

புலிவால்

நெறியாள்கை: ஜி. மாரிமுத்து
நடிப்பு: விமல், பிரசன்னா, அனானியா, இனியா, திவ்யா, சூரி, தம்பி ராமையா
கெமரா: போஜன் கே. தினேஷ்
இசை: என். ஆர். ரகுநாதன்

பணக்காரப் பையன் ஒருவன் தவறவிட்ட செல்போனை எடுத்த கடை ஊழியன் ஒருவன் செல்போனைத் திரும்பக் கொடுப்பதற்குள் நடக்கும் கதை. செல்போனிலுள்ள காதலியுடனான பாலியல் காட்சிதான் படத்தின் பிரச்சினை. அப்படி ஒன்று இருப்பதே தெரியாமல், அந்த செல்போனைப் பெறுவதற்காக பணக்காரப் பையன் தலைகீழாய் நிற்பதை சாதகமாக்கிக் கொண்டு தன் சின்னச் சின்ன கோபதாபங்களை அவனைக்கொண்டு தீர்த்தபடி விளையாடுகிறான் இவன். இறுதியில் அந்த செல்போனை சார்ஜ் செய்யக் கொடுத்த கடைக்காரன் அந்தக் காட்சிகளை யூ-டியூபில் ஏற்றிவிட, அவளோ தற்கொலை செய்வதற்காய் கழுத்தை அறுத்துக்கொள்கிறாள். பணக்காரப் பையன் கொலைவெறியுடன் புறப்படுகிறான். பயங்கரமாகிறது பிரச்சினை. இதுவரைக்கும் இப் படம் ஓகே! பெரிய கதையளக்காமல் ஒரு செல்போனுக்குள் பொடி வைத்து டென்ஷனை நகைச்சுவையோடு பின்னி கிளீனாக செல்கிறது கதை. ஆனால் எப்படி முடிப்பது என்பதில் செய்துகொண்ட சமாதானம் ஒட்டாமல் நிற்கிறது. என்ன, இவ்வளவு பில்டப் செய்துவிட்டு இருவரும் திடுதிடுப்பென சமாதானமாகிப் போவதுதான் சொதப்புகிறது. வில்லனுக்கும் ஹீரோவுக்கும் எதிர்மறையான வாழ்க்கைத் தரங்களைக் கொடுப்பதில் எடுத்த கவனம், அவர்களின் குணசித்திர வேறுபாட்டில் காட்டப்படவில்லை. இருவரும் பார்வைக்கு சாதுவானவர்களாகவே தென்படுகிறார்கள். சரி, இங்கே அந்த டீரனைல உள்ளதா? இல்லை இங்கே கூட்டாளி வெறும் கொமெடியனாக மட்டும்தான் செயற்படுகிறான்.



Video Audio advertisements

வீடியோ ஓடியோ விளம்பரங்கள்!


We make quality advertisements that slip into the minds of the audience!

உங்கள் தேவைக்கேற்ப, மனங்கவரும் கதையம்சம்கொண்ட தரமான
வீடியோ ஓடியோ விளம்பரங்களைத் தயாரிக்க எம்மை நாடுங்கள்!
"விளம்பரமா இது..... ஒரே நொய் நொய், காது புளிக்குது!" என்று கூறாமல்,
"இதெல்லோ விளம்பரம், கேட்டுக்கொண்டே இருக்கலாம்!"
என்று ஒருவரை நினைக்க வைத்தால்...
அதுதான் உங்கள் வெற்றி!
எங்களை நாடுங்கள்... உங்களை வெல்லவைப்போம்!



Video Editing & Postproduction

வீடியோ எடிட்டிங் அண்ட் போஸ்ட் புரடக்ஷன்



Send us your video footages. We'll take care of the rest and return you the finished product in a short time.

உங்கள் திருமண, பிறந்தநாள் மற்றும் அனைத்து வைபவங்களது வீடியோக்களையும்
துரித கதியில் எடிட் பண்ணி, கலர் கரெக்ஷன் செய்து, கிரபிக் வேர்க்ஸ்ஸுடன்
இசைப் பின்னணியிட்டு முழுமைப்படுத்தித் தர எங்களை நாடுங்கள்!

Photo Works

Send us your photos and let us work on it.
We can do for you fhe following jobs
Color correction, Desiging, Printing, Laminating & Albums.



Baskey films & Creations Inc.

(647) 863 6434 baskeyfilms@gmail.com

We do subcontracts

சித்தன்.. சினிமா!

ரெயிலர்

உலக சினிமா உலக சினிமா என்டு எங்க பார்த்தாலும் கதை. இதென்ன மண்ணாங்கட்டி உலக சினிமா, ஒரு கை பார்ப்பம் என்டு இறங்கியிட்டன். சீரியல் பார்த்து, சிவாசி, எம்.சி.ஆர், எங்கள் சூப்பர் ரசனியைப் பார்த்துப் பழகிய எனக்கு உலக சினிமா இனிக்குமா? தேத்தண்ணி குடிச்சு வளர்ந்த மனசு கபிச்சுனோவைத் தாங்காது. என்டாலும் விடுறதாயில்லை. வாசலைத் திறந்தால் எங்கட சினிமாவையும் காக்கா முட்டையையும் கதைக்கிறவை முன்னுக்கு நிக்கினம். இவையைத் தாண்டி உலக சினிமா கதைக்க முடியாது. இவையைப் பற்றி கதைக்க எனக்கு தகுதி காணாது. பெரிய பெரிய விமர்சகர்கள் இருக்கினம். அவையோடை விட்டு விடுவம். இணையம், முகம், தளம், களம் என்டு தேடியதிலை கிடைத்த சிலதை சித்தன் போக்கில் பிதற்றுகிறேன். நேரமிருந்தால் ஒரு எட்டு எட்டிப் பாருங்கோ. இணையத்தை தட்டினால் எங்கை இருக்கு என்டு ஈசியாய் கண்டுபிடிச்சிடலாம். முகவரியற்ற இந்த சித்தனுக்கு முகவரி தருகின்ற முகவரிக்காரருக்கு முதல் வணக்கம். எம்.சி.ஆர் படத்துக்கு வளசரவாக்கத்திலை பூசணிக்காய் உடைச்சு, சாணித்தண்ணி தெளித்தது இப்பவும் படம் பார்க்க முதல் ஞாபகத்தில வந்து தொலையுது.

La Sorpresa



இது ஒரு ஸ்பானிய படம். ஒரு பெண் இரண்டு ஆண்களை விரும்புகின்றார். நீண்ட நாட்களின் பின்னர் வீடு திரும்பும் கணவன் வீட்டை வந்து பார்த்தால் மனைவி தனது முன்னால் கணவனுடன் உள்ளார். மனைவிக்கோ இருவரையும் விட விருப்பமில்லை. பிறகென்ன படம் எப்படி முடியும் என கற்பனை பண்ணிப்பாருங்கோ. மிக விரைவில் ஒரு தமிழ்ப் படமாக பார்க்கலாம். இது ஒரு மெக்சிக்கோ நாட்டுப் படம்.

http://www.amazon.com/Sorpresa-Luis-Fernando-Pena-duele/dp/B000ND91OU

HIDDEN HALF (மறைக்கப்பட்ட மறுபாதி)



சிறையில் மரணத்தை எதிர் நோக்கி காத்திருக்கும் பெண்ணை விசாரிக்க ஒரு நீதிபதி புறப்படுகின்றார். அவர் செல்லவதற்கு ஆயத்தங்களை மேற்கொண்டிருந்த போது அவரது உடுப்புக்களின் மேல் அவரது மனைவி ஒரு கடிதத்தை வைக்கின்றார். ஹோட்டல் அறையில் குளித்த பின்னர் தனது உடுப்புக்களை எடுத்த போது கடிதம் தெரிகின்றது.

"அன்புடையவரே, இக் கடிதம் உங்களுக்கு ஆச்சரியத்தை கொடுக்கலாம். நீங்கள் ஒரு பெண்மனியை விசாரிக்கவுள்ளீர்கள். அப் பெண்மணிக்கு நீதி தவறிழைக்கக் கூடாது. அப் பழி என் அன்புக்குரியவருக்கு வந்துவிடக் கூடாது. அதனால் நீங்கள் அறிந்திராத எனது கதையை கூறுகின்றேன். இதனைப் படித்த பின் நீங்கள் என்னை வெறுக்கலாம். ஆனால் எனக்கு உங்கள் மீதான அன்பும் மரியாதையும் அவ்வாறே இருக்கும். எனது விருப்பம் அப் பெண்ணுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதே" இவ்வாறு அக் கடிதம் தொடர்கின்றது. அதன் பின்னர் மனைவி தனது வாழ்க்கையை தொடர்ந்து கடிதத்தில கூறுகின்றார்.

1978ல் ஷாவின் ஆட்சிக்கு எதிராக ஈரானில் புரட்சி வெடிக்கின்றது. அப்போது பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்த நீதிபதியின் மனைவியும் தலைமறைவாகின்றாள். தஞ்சம் கொடுத்த இலக்கிய சஞ்சிகை ஆசிரியர் இவரையடைய முற்படுகின்றார். மறுப்புத் தெரிவித்து எதிர்த்து வீட்டை விட்டு வெளியேறுகின்றார். இப்போதும் இலக்கிய சஞ்சிகை ஆசிரியருக்கு நீதிபதியின் மனைவியின் மேல் ஒரு கண் உண்டு.

இதனைக் இக் கடிதத்தில் நீதிபதியின் மனைவி கூறுகின்றார். ஈரானில் நீதிபதியின் தீர்ப்பே இறுதியானது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பக்கத்து நியாயங்கள் கேட்கப்படுவதில்லை. மனைவியின் கடித்ததை வாசித்த பின்னர் மரணத்தை எதிர் நோக்கிய பெண்ணிடம் "உமது கதையைக் கூறும்" எனக் கூறிவிட்டு பதிலுக்காக காத்துக் கொண்டிருக்கின்றார். "நான் மிகவும் கஸ்ரமான குடும்பத்தில் பிறந்தேன்..." என பதில் ஆரம்பமாவதுடன் படமுடிவடைகின்றது. முகமறியா பெண்ணின் வலியை எங்கோ வாழும் ஒரு பெண் உணர்ந்துள்ளார். இப் படத்தை இயக்கியிருப்பவர் Tahmineh Milani.

12 YEARS A SLAVE

(12 வருட அடிமை)



ஒஸ்காரையே கலக்கிய படம். கறுப்பின மக்கள் அடிமைகளாக அமெரிக்காவில் விற்கப்பட்ட காலத்து படம். சொலமன் நோத்யப் என்ற கறுப்பினத்தவர் சுதந்திரமாக தனது குடும்பத்துடன் வாழ்ந்து வருகின்றார். வோசிங்டனுக்கு இசைக் கலைஞராக 1841ல் வந்த போது ஒரு கும்பல் இவரை கட்டாயப்படுத்தி அடிமையாக விற்றுவிடுகின்றனர். அடிமை வாழ்வில் இவர் கண்டதெல்லாம். அடி, உதை, சித்திரவதை. குதம்பைச் சித்தர் பாடியது போல் "தாவரமில்லை தனக்கொரு வீடில்லை தேவாரம் ஏதுக்கடி" என்றது போல் சொலமனின் வாழ்க்கை மாறிவிட்டது. 12 வருடங்களின் பின்னர் சொலமன் அடிமையாய் இருந்த "மு"விடம் ஒரு கனடியர் வேலை பார்க்க வருகின்றார். எழுதப் படிக்கத் தெரியாத சொலமனின் நிலையை விளக்கி சொலமனின் குடும்பத்துக்கும் அதிகாரிகளுக்கும் கடிதமெழுதுகின்றார். அதன் பின்னரே சொலமனின் குடும்பத்துக்கே இவர் உயிருடன் இருப்பது தெரியவருகின்றது. இதன் பிறகென்ன, எல்லாம் சுபம். சொலமன் பின்னர் தனது கறுப்பின மக்களையே விற்றதாக ஒரு குற்றச்சாட்டு வெள்ளை இனத்தவரால் சுமத்தப்பட்டுள்ளது. எப்பவும் இப்படி நடப்பது சகஜமாகிவிட்டது



Aparajita Tumi (Undefeated) The unvanquished'

யாரை யார் வெல்வது?
வடிவு கொண்ட பெண்ணை மற்றொருவன் நத்தினால்
விடுவனோ அவனை முன்னம் வெட்டவேணும் என்பனே

இது என் முன்னோர் சிவவாக்கியச் சித்தர் பாடியது. எங்க பத்மபிரியா நடித்த படமும் இது தான். அமெரிக்காவில் வாழும் பத்மபிரியாவுக்கு வாய் கொஞ்சம் அதிகம். எல்லோருடனும் சண்டை. இதனால் கணவன் மனைவிக்குள் சண்டை. இவர்களது குடும்ப நண்பர்கள் ரொனோஜோய் உசோசி தம்பதியினர். பத்மபிரியா இவர்களையும் விட்டு வைக்கவில்லை. உசோசியை திட்டி விடுகின்றார். உசோசியின் கணவன் நெடுக வேலை என்டு திரியிற பாவி. பத்மபிரியாவின் கணவன் பிரதீப் உசோசிக்கு ஆறுதல் சொல்ல போகின்றார். காதல் தொத்திவிடுகின்றது. இதைக் கண்டு பத்மபிரியா பிள்ளைகளோடை பிரிந்து போய்விடுகின்றார். சன்பிரான்சிஸ்கோவிற்கு வேலை தேடி வரும் பத்மபிரியா தனது முன்னாள் காதலன் பிரதீப்பைச் சந்திக்கின்றார். இவ் வேளையில் பிரதீப்பிற்கு மூளையில் ஒரு கட்டி வளர்கின்றது எனத் தெரியவருகின்றது. பத்மபிரியா அருகில் இருந்து அவரைக் கவனிக்கின்றார். உசோசி-பிரதீப் காதல் உசோசியின் கணவருக்குத் தெரிய வர என்ன நடைபெற்றது? பத்மபிரியா தனது முதல் காதலுடன் இணைந்தாரா? அல்லது சித்தர் தொடர்ந்து பாடியது போல் பத்மபிரியாவின் கணவருக்கு என்ன நடந்தது? படத்தை பார்த்தால் தெரியும். இப் படம் தமிழுக்கு ஏன் வரவில்லை என்று தெரியவில்லை. நானும் தேடிக் கொண்டிருக்கிறன். அருந்திராய் சவுத்திரி இயக்கியுள்ள இப் படம் அமெரிக்காவில் நான் வாழ்ந்தாலும் நான் இந்தியன் தான் என்றதை அடிச்சுச் சொல்கின்றது.

கிரிக்கட்

Group A

TeamsMat	Won	Lost	Tied	N/R	Pts	Net	RR	For	Against
Kolkata Knight Riders	3	3	0	0	0	12	+0.344	465/58.1	459/60.0
Chennai Super Kings	4	2	1	0	1	10	+0.945	554/60.0	489/59.0
Lahore Lions	3	1	1	0	1	6	+0.255	315/40.0	301/39.3
Perth Scorchers	3	1	2	0	0	4	-0.277	458/60.0	472/59.4
Dolphins	3	0	3	0	0	0	-1.183	500/60.0	571/60.0

Group B

TeamsMat	Won	Lost	Tied	N/R	Pts	Net	RR	For	Against
Kings XI Punjab	3	3	0	0	0	12	+2.518	539/57.2	413/60.0
Hobart Hurricanes	4	3	1	0	0	12	+1.193	625/77.2	535/77.4
Cape Cobras	3	1	2	0	0	4	-0.939	402/47.2	437/46.2
Northern Districts	3	1	2	0	0	4	-3.655	264/47.2	437/47.2
Barbados Tridents	3	0	3	0	0	0	-0.403	461/60.0	469/58.0

ஆறாவது இருபது ஓவர்கள் சாம்பியன்ஸ் லீக் கிரிக்கெட் போட்டிகள் இந்தியாவில் செப்டம்பர் 13 ஆம் திகதி ஆரம்பமானது. ஐரோப்பிய நாடுகளில் உள்ள கால்பந்து கிளப் அணிகளுக்கிடையே நடைபெறும் யுஇஎப்ஏ சாம்பியன்ஸ் லீக் போட்டி சர்வதேச அளவில் புகழ்பெற்றது. அதே பாணியில் கிரிக்கெட்டில் உள்நாட்டில் 20 ஓவர் போட்டியில் சாதித்த அணிகள் வெளிநாடுகளில் வலுவாக உள்ள அணிகளுடன் மோதுவதே சாம்பியன்ஸ் லீக் போட்டி.

இந்தியாவில் ஐபிஎல் போட்டி பெரும் வரவேற்பை பெற்றதை அடுத்து சாம்பியன்ஸ் லீக் போட்டி அறிமுகப்படுத்தப்பட்டது. 2008-ம் ஆண்டில் முதல்முறை யாக சாம்பியன்ஸ் லீக் நடத்த திட்டமிடப் பட்டது. எனினும் மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து அந்த முயற்சி கைவிடப்பட்டது. இதையடுத்து 2009-ம் ஆண்டு முதல்முறையாக சாம்பியன்ஸ் லீக் போட்டி நடத்தப்பட்டது. இப்போது 6-வது ஆண்டாக போட்டி நடைபெறவுள்ளது.

இதுவரை நடைபெற்ற 5 சாம்பியன் லீக் போட்டிகளில் மும்பை இண்டியன்ஸ் இருமுறை சாம்பியன் பட்டம் வென்றுள் ளது. சென்னை சூப்பர் கிங்ஸ், நியூசவுத் வேல்ஸ் புளூ, சிட்னி சிக்ஸர் ஆகிய அணிகள் தலா ஒருமுறை சாம்பியனா கியுள்ளன. இந்தியா, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த அணிகள் தவிர பிற அணிகள் சாம்பியன் ஆனதில்லை. 2009, 2011, 2013 ஆகிய ஆண்டுகள் இந்தியாவிலும், 2010, 2012 ஆகிய ஆண்டுகளில் தென்னாப்பிரிக்காவிலும் சாம்பியன்ஸ் லீக் நடைபெற்றது. இப்போது தொடர்ந்து 2-வது ஆண்டாக இந்தியாவில் போட்டி நடைபெறவுள்ளது.

இன்று வரை நடந்த ஆட்ட முடிவுகளில்படி மூன்று இந்திய அணிகளும் ஒரு ஆவுஸ்திரேலிய அணியும் அரை இறுதிபோட்டிகளில் பங்குபற்றவே அதிகவாய்புகள் உள்ளன.

அக்டோபர் இரண்டாம் திகதி அரையிறுதி ஆட்டங்கள் ஹைதராபாத்திலும் நாலாம் திகதி இறுதி ஆட்டம் பெங்களூர் சின்னசாமி ஸ்டேடியத்திலும் நடைபெறவுள்ளது .

ஆசிய விளையாட்டு விழா



ஆசிய விளையாட்டு விழாவின் 17ஆவது அத்தியாயம் தென் கொரியாவின் இன்சொன் நகரில் அமைந்துள்ள பிரதான விளையாட்டரங்கில் கோலாகல தொடக்க விழா வைபவத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடக்க விழாவில் சம்பிரதாயபூர்வ நிகழ்வுகளுடன் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டுள்ளன.

நாடுகளின் அணிவகுப்பு, ஆசிய விளையாட்டு விழா கொடியேற்றம், ஆசிய விளையாட்டுத் தீபம் ஏற்றல், வீர, வீராங்கனைகள், மத்தியஸ்தர்கள் ஆகியோரின் சார்பிலான சத்தியப் பிரமாணங்கள் என்பன ஆரம்ப விழா வைபவத்துடன் பின்னிப் பிணைந்த நிகழ்வுகளாகும்.

இப் போட்டிகளில் ஆசிய ஒலிம்பிக் பேரவையில் அங்கம் வகிக்கும் 45 நாடுகளைச் சேர்ந்த சுமார் 13000 வீர, வீராங்கனைகள் பங்குபற்றவுள்ளனர்.

இவ் வருட ஆசிய விளையாட்டு விழாவில் 36 வகையான விளையாட்டுப் போட்டிகளில் 439 நிகழ்ச்சிகளுக்கான தங்கப் பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

1986 சோல், 2002 பூசான் ஆகிய ஆசிய விளையாட்டு விழாக்களைத் தொடர்ந்து மூன்றாவது தடவையாக தனது சொந்த மண்ணில் (இன்சொன்) ஆசிய விளையாட்டு விழாவை அரங்கேற்றும் தென் கொரியா தங்கப் பதக்க வேட்டையில் இறங்க கங்கணம் பூண்டுள்ளது. எவ்வாறாயினும் ஆசிய விளையாட்டுத்துறையில் ஆதிக்கம் செலுத்திவரும் சீனாவை தென் கொரியா நெருங்குவது கடினமானபோதிலும் பதக்கங்கள் நிலையில் இரண்டாம் இடத்தைப் பெறுவதற்கு முயற்சிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ் விளையாட்டு விழாவை முன்னிட்டு இன்சொன் நகரம் விழாக்கோலம் பூண்டுள்ளது.

ஆசிய விளையாட்டு விழாவில் பங்குபற்றும் நாடுகளின் வீர, வீராங்கனைகள் விளையாட்டுக் கிராமத்தில் ஒன்று கூடியுள்ளதுடன் அவர்கள் மைதானங்களுக்கு சென்று பயிற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். 16 தினங்கள் நீடிக்கும் ஆசிய விளையாட்டு விழாவில் இலங்கை சார்பாக 80 வீர, வீராங்கனைகள் 9 வகையான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றவுள்ளனர்.

ஒலிம்பிக்ஸ் போன்ற பிரமாண்ட தடகள விளையாட்டுகளை வாழ்வில் ஒருமுறை என்றாலும் நேரே பார்க்க நினைத்து அதற்கான பணவசதியோ அல்லது சந்தர்ப்பமோ கிடைக்காமல் இருப்பவர்கள் அடுத்தவருடம் ரோறோண்டோவில் நடைபெறஇருக்கும் pan-am தடகள விளையாட்டுபோட்டிகளை கண்டுரசிக்காலம். எந்த ஒரு விளையாட்டு நிகழ்வும் எமக்கு நேரில் விளையாட்டுவீரர்கள் சூழவலம் வர மக்களின் ஆரவார ஒலியுடன் மைதானத்தில் இருக்கும் போது பார்க்கும் சுகமே தனி.

Pan-Am விளையாட்டுகள் அமெரிக்க கண்டத்திற்குள் இருக்கும் நாடுகளுக்கு இடையில் நடைபெறும் விளையாட்டுபோட்டியாகும். 17 வது PAN-AM விளையாட்டு போட்டி அமேரிக்கா, கனடா, பிரேசில் ஆர்ஜென்டினா மெக்சிக்கோ, கியூபா உட்பட மொத்தம் நாற்பத்தியொருநாடுகளுக்கிடையில் 36 பிரிவுகளில் 365 போட்டிகள் நடைபெறஇருக்கின்றது. பலராலும் விரும்பப்படும் ஓட்டபந்தயங்கள், நீச்சல், பாஸ்கெட்பால், உதைபந்து, குத்துசண்டை, படகு பந்தயம் அனைத்தும் இதில் அடக்கம். மொத்தம் 6058 விளையாட்டு வீரர்கள் இதில் பங்குபற்றி எம்மை மகிழ்ச்சியில் திளைக்க வைக்க இருக்கின்றார்கள் .

அடுத்த வருடம் July 10 திகதி TORONTO ROGERS CENTRE தொடக்க நிகழ்வுடன் ஆரம்பமாகி TORONTO, HAMILTON, MARKHAM போன்ற நகரங்களில் வெவ்வேறு மைதானங்களில் JULY 26 வரை விளையாட்டுகள் நடைபெறவுள்ளது.

இதற்கான மொத்த செலவு 1.4 பில்லியன் கனேடிய டொலர்கள் என கணக்கிட்டிருக்கின்றார்கள். பெரும்பாலான விளையாட்டுக்களை C$45 டிக்கெட் வாங்கிபார்த்துவிடலாம், ஆரம்ப நிகழ்வும் முதல் நிரை ஆசனங்களும் C$ 100, பிரத்தியேக ஆசனங்கள் C$350 வரை விற்பனை செய்கின்றார்கள் .

எம்மவர்கள் இந்த PAN–AM விளையாட்டு போட்டிகளை பார்ப்பதன் மூலம் அல்லது வோலண்டியர்களாக பங்கு பற்றுவதன் மூலம் நாங்களும் ஒரு கனேடியர்களாக உணர்வது மாத்திரமல்ல புலம்பெயர்ந்து வந்த எம்மை இவ்வளவு சந்தோசமாக வைத்திருக்கும் கனடாவிற்கு நன்றி செலுத்துவதுமாக அமையும்.

PAN–AM விளையாட்டுபோட்டிகள் நடைபெறும் காலத்தில் பகுதி நேர வேலைசெய்யவும் உதவியாளர்களாகவும் பங்குபற்ற www.toronto2015.org என்ற இணைப்பிற்கு போய் விண்ணப்பிக்கவும்.

அடுத்த வருட கோடை விடுமுறை விளையாட்டு, வியாபாரம், உல்லாச பயணிகள் என்று டொராண்டோ நகரம் எங்கும் மக்கள் வெள்ளத்தால் களை கட்டபோவதுநிச்சயம் ..



பெரா நைட்

பேராதனைப் பல்கலைக்கழக பழைய மாணவர்களின் இரண்டாவது "பெரா நைட்" நிகழ்ச்சி செப்டெம்பர் 20ம் திகதி ஸ்காபுரோ வின்சன் சேர்ச்சில் பாடசாலை அரங்கில் திரு. சந்திரகாந் தலைமையில் நிகழ்ந்தது. முழுக்க முழுக்க பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களே இந் நிகழ்ச்சிக்குத் தேவையான நிதியுதவி மற்றும் அனுசரணை வழங்கி ஏற்பாடுகளைச் செய்திருந்ததுடன் அவர்களே இசை நிகழ்ச்சி, நாடகம் என முழு நிகழ்ச்சியையும் நடத்தியமை இங்கு சிறப்பம்சமாகும். கன்டீன்கூட இவர்களாலேயே நடத்தப்பட்டது. முன்னாள் பேராதனை மாணவராக இருந்த காலசூரி ஆ. சிவநேசச்செல்வன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந் நிகழ்ச்சிகளை வழங்க அவுஸ்ரேலியா, அமெரிக்கா ஆகிய பிறநாடுகளிலிருந்தும் நிழ்ச்சியின் பங்குதாரிகள் வருகை தந்து சிறப்பித்திருந்தனர்.

இசை நிகழ்ச்சிக்கு அவுஸ்ரேலியாவிலிருந்து வந்திருந்த என்.எஸ். டேவிட் கீபோட் வாசிக்க, அமெரிக்காவிலிருந்து வந்திருந்தவர்களான எஸ். ஜெயசிங்கம் மிருதங்கமும் ராம் சேகர் கிட்டாரும் வாசிக்க என். சிவகுமார் நிகழ்ச்சித் தொகுப்பாளராக செயலாற்றினார். கனடாவைச் சேர்ந்த நிரஞ்சன் தபேலாவும், எஸ். சுகந்தன் எஸ். ஹெளஷி ஆகியோர் கிட்டாரும் வாசித்தனர். ரி. ரமேஷ், வி. சுமதி, பி. கார்த்தி, ஜே. ஜெயகுமார், எஸ்.ஷிருதிகா ஆகியோர் பாடினார்கள்.

புதையல் என்ற ராஜ்குமாரின் குறியீட்டு நாடகத்தில் அவருடன் எஸ். அன்டனி, கில்லி செல்லையா, எஸ். சுரேந்திரன், பி. பிருதிவிராஜ், சிறீகாந்தன், பிரபா ஆகியோர் நடித்தார்கள்.

எதிர்கால நிகழ்ச்சிகளில் பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் அல்லது அவர்களது பிள்ளைகள் பங்குபெற்ற விரும்பின் chandrakantha69@yahoo.com ற்கு தொடர்புகொள்ளும்படி அமைப்பாளர் கோரியுள்ளார்.

இவ்விதழிலிருந்து ஆரம்பமாகிறது ஏபல் ராஜ்* தரும் நகைச்சுவைத் தொடர்!

வருத்தப்படாத வயோதிபர் சங்கம்

கனகண்ணையும் கண்மணியக்காவும் நல்ல சோடிதான். ஆனாலும் கண்மணியக்காவிண்ட ஸ்டைலுக்கு கனகண்ண கொஞ்சமாவது கோப்பிரேட் பண்ண வேணுமோ இல்லையோ. அப்ப அவ திட்டிறது ஞாயந்தானே...

இஞ்சரமப்பா! இஞ்சரமப்பா! என்று கத்திக் கத்திக் கூப்பிடக் கூப்பிட கண்மணியக்கா "கோச்" பாக்கையும் கமக்கட்டுக்க இறுக்கிக்கொண்டு திரும்பிக் கூடப் பார்க்காமல் போனது கனகண்ணைக்குப் பயங்கர ஆத்திரம். இரா சுப்பர் மாக்கட்டுக்கு முன்னால் சனிக்கிழமை பட்டப்பகல் பெருவாரிய அடக்கி நிக்கிற வாகனங்களுக்கும் சனத்துக்குமிடையில தன்னை இவள் சங்கேனப்படுத்திப் போட்டாள் என்று பொருமிக்கொண்டார்.

இடது கையிலே இருந்த ரெட் ஒனியன் பாக்கையும் பாசுமதி றைஸ் பாக்கையும் விட அவரது மனம் அதிகமாய்க் கனத்தது. விறு விறு வென்று கடந்து போய் பசஞ்சர் சீட்டிலே ஏறின கண்மணியக்கா பாரத்தோட வந்த கனகண்ணையை கண்கொண்டும் பார்க்கவில்லை. வாறனடி உனக்கு என்றபடி உச்சக் கொதியில் வானுக்குக் கிட்டப் போன கனகண்ணை திடீரெண்டு நைன் வண் வண், நைன் வண் வண் என்று வாய்க்குள் முனுமுனுத்தபடி அடங்கிப்போய் பின் சீட்டில் ஏறிக்கொண்டார்.

கண்மணியக்கா கோபிக்கிற அளவுக்கு கனகண்ணை பெரிதாக ஒன்றும்செய்து விடவில்லை. கண்மணியக்கா ஹாண்ட பாக்கில கைவிட்டுக் காசில்லை என்று சொல்லேக்க இரா சுபபர மாக்கட் கவுண்டரிலை க்யூவில நிண்ட சனத்துக்க வைச்சு "பேஸ் புக் எக்கவுண்டில கொஞ்சம் எடுக்க ஏலாதோ" என்று தனது அறிவுக்கெட்டின படி கேட்டுவிட்டார். அவருக்குத் தெரிந்ததெல்லாம். அவ்வளவு தான் ஆனால் கண்மணியக்கவுக்கு பெருத்த அவமானமாய்ப் போச்சு. ஊரில எப்படியிருந்தாலும் கனடா வந்து ஆறு மாதத்திலேயே கண்மணிக்கா மிச்சம் அட்வான்ஸ் ஆகியிருந்தா. கொம்பியூட்டரில ஸ்கைப்பை ஓண் பண்ணி ஜெர்மனி, பிரான்ஸ், லண்டன் என்று தனது உறவுகளோட கதைக்கிறதிலயிருந்து பேஸ்புக்கில லைக் பண்ணுறது வரை கண்மணியக்கா வெல் அட்வான்ஸ். எப்போ இந்த வின்டர் முடியும் என்று பார்த்துக்கொண்டிருந்தவ ஸ்பிறிங் வந்தகையோட கப்பிறியும் டீசேட்டும் போட்டுக்கொண்டு கக்கத்துக்கை கோச் பாக்கையும் இறுக்கிப் பிடித்துக்கொண்டு ஐபோனைக் காதில வச்சு கதைச்சுக்கொண்டு இரா சுப்பர் மாக்கெட் பார்க்கங் லொட்டிலையும் உள்ளுக்குள்ளேயும் நடந்து திரியிறது ஒரே அலாதிதான். கனகண்ணைதான் பாவம். அவராலே அந்த வன்னி மண்ணையும் போர்ச்சூழலிலே கூட தான் வாழந்த சுதந்திர வாழ்வையும் மறக்க முடியவில்லை. கனகண்ணை கடின உழைப்பாளி. சின்ன வயதில சரியாக் கஷ்டப்பட்டு வளர்ந்தாலும் தனது கடின உழைப்பாலே உயர்ந்து இரண்டு மிசின் வைச்சு சேத்துழவு, புழுதியுழவுவெண்டு இரவு கலா அடிச்சு ஊருக்குள்ளே உயர்ந்தவர். சிறிமா காலத்தில் அரசாங்கம் குடுத்த உடையார்கட்டுக் காணியிலே பெரும்போகம், சிறுபோகம் எண்டு உழைச்சு அங்கங்க காணி வேண்டி தன்ர அஞ்சு பிள்ளையளுக்கும் எழுதி வைச்சவர். தன்ர கடமையெல்லா் முடிச்சுப் போட்டு பின்னேரமளவில் வந்து குளிச்சு முழுகிப்போட்டு சந்தியில துடியன்ர கடைக்குப் போய்விட்டு வாறன் எண்டு சொல்லி வெளிக்கிட்டால் வீட்டில தெரியும். அடுத்ததென்ன வெண்டு.

துடியன் கடையில பின்பக்கமாகப் போய் ஒரு ஷொட் அடி அடிச்சுப்போட்டு பின்னால கட்டின கையில சார்து நுனையையும் பிடிச்சுக்கொண்டு கனகண்ணை செருமிய படி நடந்து வந்தால் வீட்டில மயான அதிதி நிலவும்.

கனகண்ணையும் கண்மணி யக்காவையும் இணைச்சது சோவியத் யூனியனில இருந்த தலைவர் நிக்கித்தா குருச்சேவ். அதெப்பிடியெண்டு நீங்கள் கேட்கிறது விளங்குது. சமாதான சுகவாழ்வு எண்டு சொல்லி திட்டங்களை அவை அறிமுகப்படுத்தினதோட இலங்கையில சிறிமா அரசு கொண்டு வந்த ஐந்தாண்டுத் திட்டமும் சுதேவைப் பூர்த்தியற்றின வேலைத்திட்டங்களும் தான் கனகண்ணையின் கலியாணத்துக்கான மூலகாரணம்.



ஊரிரை சைமனுடைய பேக்கரியில இளந்தாரியாக வேலை செய்யிற நேரத்தில ஒரு றாத்தல் பாணுக்கு கியூவில நிண்ட சனத்துக்க கண்மணிக்காவுக்கு மட்டும் இரண்டு றாத்தல் பாண் குடுத்து மடக்கிப்போட்ட சிங்கன் தான் கனகண்ண. ஒரு சாதிக்குள்ளேயே றொண்டு சாதியெண்டு ரெண்டு குடும்பங்களும் எதிர்த்த நேரத்தில வெளிக்கிடடி விசுவமடுவுக்கு நாடகம் பார்த்துப் போட்டு கண்மணியக்காவை கூட்டிக்கொண்டு விசுவமடுவுக்கே வந்து விட்டார். கனகண்ண. நுளம்புக்கடி, பாம்புக்கடி யெண்டு யாழ்ப்பாணத்தார் சாதாரணமாக வந்து வாழ விரும்பாத வன்னி மண்ணிலே வந்தேறிய துணிஞ்ச யாழ்ப்பாணத்தாருக்குள்ளே ஒருவர் இவர். கனகண்ண வன்னிக்கு வரும்போதே ராமனோடு காடு புகுந்த சீதையாக தானும் சேர்ந்து வந்தவரதான் கண்மணியக்கா.

கனகண்ணைக்கு தான் தொட்டுக்கும்பிட வன்னி மண்ணையும் தட்டித்தாலாட்டிய அந்தக் காற்றையும் விட்டுவிட்டுக் கனடா வர விரும்பமேயில்லை. கண்மணியக்காவுடையதொந்தரவுதாங்காமல்தான்வெளிக்கிட்டவர். வந்திறங்கியதில் இருந்து திரும்பிப்போகப்போறன் எண்டு பிடியாயப் பிடிச்சுக்கொண்டிருக்கிறார். அப்பிடிப் பிடிவாதம் பிடிக்கிறதுக்கரிய பல காரணங்களும் உண்டு . உடன் கள்ளு இல்லை. துடியன்ர கடையடியில நிண்டு சொட் உன்று அடிச்சுப் போட்டு சுருட்டு பத்திக்கொண்டே தன்ர நட்புகளோட உலக உலா செய்யிற வாய்ப்பில்லை. கந்தப்பு, மாஸ்டர் இல்லை. கு.மு.குமராசாமியார் இல்லை. வேட்டையில்லை. கள்ளில அவித்த கணவாயில்லை. அவருடைய கணக்கில இங்கே ஒண்டுமேயில்லை. கனடா ஒரு நாடேயில்லை. முக்கியமாக கண்மணியக்காவில கண்டபடி கைவைக்க ஏலாதபடி நைன் வண் வண் என்று சொல்லிப் பயமுறுத்தி வைச்சிருக்கறிங்கள் பிள்ளையள்.

இன்றைக்கு பேஸ்புக் எக்கவுண்டில காசெடுக்கிற கதையைச் சொல்லிப் புதுசாக ஒரு பொறியைக் கிளப்பியிருக்கிறார். கனகண்ணைக்கு கொஞ்ச நஞ்சமெண்டாலும் மனதுக்கு இதமளிக்கிற இடங்கள் ரெண்டு . ஒன்று ஜி.ரி. ஏ. மோலிலே இருக்கிற கீ றோஸ் கேட்டரிங்குக்கு முன்னால போட்டிருக்கிற வாங்கும் மேசையும் அவ்வப்போது அதில வந்திருந்து குமார் போட்டுக் குடுக்கிற ரீயைக் குடிச்சபடி துடியன் கடையடியை இரை மீட்பார். கனகண்ண. ரெண்டாவது அயலண்டையில இருக்கிற இவரைப் போலவே ஸ்பொன்சரில வந்து பேஸ்மெண்டில உடம்பில சுவெட்டரும் காலில சொக்சுமா வலம் வருகிற கொஞ்ச சீனியஸ் சேர்ந்து ஏற்படுத்தயிருக்கிற சங்கம். அதற்குப் பெயர் வருத்தப்படாத வயோதிபர் சங்கம். இது கனகண்ணையே வைச்ச பெயர்தான்.

வான் இலே பின் சீட்டில் அமர்ந்தபடி அன்று பின்னேரம் நடக்க இருக்கிற வருத்தப்படாத வயோதிபர் சங்க்க கூட்டத்தில் நடக்கவிருக்கிற நிர்வாகிகள் தெரிவு பக்கம் மனதைத் திருப்பினார் கனகண்ணை. மனதிலே புதுப் புறப்போசல் ஒண்டையும் பியான் பண்ணிக்கொண்டிருந்தார்.

அதே நேரம் கண்மணியக்கா ஒரு வித்தியாசமான கதித் திட்டமொன்றை மனதிலே ஓடவிட்டுக்கொண்டிருந்தார். வாற மாதம் வருகிற கனகண்ணையட பேத்டேக்கு சேப்பிறைஸ் பாட்டி. அதவிட முக்கியம் காலம வெள்ளணை மூத்தவளோட சேந்து கனகண்ணையட கண்ணக் கட்டிப்போட்டு சேப்பிறைசாக புவ்யு மோலில கொண்டுபோய் அங்க இருக்கிற 'பக் டூ த பியூட்டி' அழகு நிலையத்துக்குக் கொண்டு போய் சேப்பிறைசாக பெடிக்குயர் - மனிக்குயர் பண்ணுறதுதான் அது.

கண்மணியக்காவட திட்டத்தில அடுத்த லெவலுக்குப் போய் ஹைலெட்ஸ் எண்டும் இயர் பியர்சிங் எண்டும் போறத்துக்கு இந்தத் திட்டம் சரிவரவேணும்.

தொடரும்..

நம்மவர் பக்கம்

தமிழ்மொழி கற்றலில் படிமுறை முயற்சி பாடநூல் – பயிற்சிப் புத்தகங்கள்



இன்று வயதுக்கு ஒரு வகுப்பு என்று இல்லாது குறிப்பிட்ட தரத்தை விருத்தி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில்தான் சிங்கப்பூர், மலேசியா போன்ற புலம்பெயர்ந்து காலனித்துவ காலம் முதல் வேரூன்றித் தமிழர் வாழும் நாடுகளில் “அரும்பு”, “மருதம்”, “நெய்தல்” போன்ற பல பெயர்களில் தமிழ் கற்பிக்கும் பாடநூல்களைப் பயிற்சிகளை அடங்கி அந்த அந்த நாட்டுச் சூழல்களை உள்ளடக்கமாகவும் கொண்ட தமிழ்ப்பாடநூல்கள் ஆக்கப்பட்டுள்ளன. அவை படிமுறையில் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றை மகாநாடுகளில் சென்று அறிந்த சித்தம் அழகியான் சுப்பிரமணியம்

முனைவர் பார்வதி கந்தசாமி

“படிமுறைத்தமிழ்” 1 இலிருந்து 6 வரை பாடநூல், பயிற்சிநூல் இரண்டையும் தயாரித்து கனடாவில் வெளியிட்டுள்ளார். இந்நூற்றொடர் படிகளில் நாங்கள் ஏறிக் கொண்டு போய் உச்சியை அடையும் முயற்சி கைகூடும் என்ற யுத்தியைக் கையாண்டு செய்யப்பட்டுள்ளது.

படிமுறைத் தமிழ் 1 இலிருந்து 6 வரை படிப்படியாக தமிழைக் கற்பிக்கவும், கற்கவும் ஏதுவாக அமைகின்றது. அழகிய பல்நிற அட்டைப்படங்கள், இனிய சிறுவர்கள் ஆச்சரியம், மகிழ்ச்சி, வியப்பு குதூகல உணர்வுகளைக் காட்டும் முன் அட்டைகள். சிறுவர்களைக் கவரக்கூடிய வகையில் அமைந்துள்ளன. மேல்நிலை வகுப்பு மாணவருக்கு அவை வேறு வடிவில் அமைந்திருந்தால் அவர்களையும் அது கவரும். படிமுறை 1 இல் எளிமையிலிருந்து சிக்கலுக்குச் செல்வோம் என மாணவரை இலகுபட எழுதக்கற்க வைக்க ட, ப, ம என தொடங்கிச் சிக்கல் நோக்கிச் செல்வது இன்றைய மாணவரின் கணினி பயிற்சிக்குப் பொருந்துகிறது. எழுத்துக்களுக்கு அடி நாதம் ஒலி. அந்த ஒலிகளை எழுத்துக்களில் பொருத்திக் காட்டும்போக்கு மாணவரைக் கற்கும் பொருந்திக் காட்டும்போக்கு மாணவரைக் கற்கும் உள்ளுணர்வுக்கும் கணித முறையிலான உள்ளுடனை வெளிஉருவத்துக்கு காட்டும் வகையில் க என்ற எழுத்து க்அ என்றலை ஒலிகள் இணைவால் “க”ஏற்பட்ட தனி வடிவமாக படி ஆக்கம் செய்யக்கூடியதாக (உதாரணம்: ப்+அ=“ப”) ஏற்படுத்திக் காட்டியமை சிறப்பாக அவதானிக்கப்படலாம். “குறில் - நெடில்” எனக்கூறாது அவற்றை ஆசிரியர்கள் ஒலி எழுப்பிக்காட்டி பயிற்றுவித்தால் மாணவர் இலகுவாக நீட்சிகள், குறுக்கங்களை மாத்திரம் இணைக்கவேண்டும் என்ற “மொழிக்” கோட்பாட்டைக் கற்றுவிடுவர். பின்னர் ஆசிரியருக்கு மாணவர் சிரமம் கொடுக்காது கற்றுவிடக் கூடியதாக படிமுறை-1 அமைந்திருப்பதைக் காணலாம்.

மாணவர் சூழலுக்கு ஏற்ற சொற்களை அறிமுகப்படுத்தி இருப்பதை அவதானிக்கலாம்.

ஒவ்வொரு படிமுறைத்தமிழிலும் உட்புற முதற்பக்கம் தமிழர் வாழ்வியல், சூழலியல் அம்சங்களில் முனைப்புற்று நிற்கும் படங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. விடுகதைகள், பழமொழிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இவை மாணவருக்குப் புதிராக இருக்கும். தமிழர் பண்பாட்டுப் பனுவல்களில் மிகுந்த அக்கறை காட்டப்பட்டுள்ளன. இலக்கணப் பயிற்சி வர்ணம் தீட்டிய எழுத்துக்களால் காட்டி இலகுபடுத்தல் உத்தி கையாளப்பட்டுள்ளது. ஆங்கிலச்சொற்கள், வாக்கியங்களைக் கொடுத்து தமிழ்ச்சொற்கள் வாக்கியங்கள் கேட்கப்படுதல் தமிழை இரண்டாம் மொழியாகப் படிக்கும் கனடா, ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஆபிரிக்கா, மொறிசியஸ் போன்ற நாடுகளுக்குத் தேவையானது.

அத்துடன் கணினியில் தமிழ் கற்பிக்கும் முயற்சிகளும் மிகவும் வேண்டப்படுவது. மொழிப்பயிற்சிக் கூடங்களில் இவை பாவனையில் இருக்கவேண்டியது முக்கியமானது. இத்துறையை விருத்தி செய்ய பலமான தளம் இராசரத்தினத்திடம் உண்டு. அதைப் பயன்படுத்தி தமிழ் கற்றலை மேலோங்கச் செய்ய வேண்டும்.

மகாவம்சம் ஒரு மீளாய்வு – நூல் வெளியீடு

திரு. தம்பு கந்தையா எழுதிய “மகாவம்சம் ஒரு மீளாய்வு” என்ற நூல் வெளியீட்டு விழா படைப்பாளிகள் கழகத்தின் ஆதரவில் அதன் தலைவர் திரு. நக்கீரன் தங்கவேலு அவர்களின் தலைமையில் செப்டம்பர் 19ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை ஸ்காபுறோ சிவிக் சென்ரர் மண்டபத்தில் நடைபெற்றது.

வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொள்வதற்காக தமிழகத்திலிருந்து வந்திருந்த பச்சையப்பன் கல்லூரியின் முன்னாள் தலைவர் முனைவர் பாலசுப்பிரமணியம் வருகை தந்திருந்தார்.

முகவரி பிரதம ஆசிரியர் திரு.சிவநேசச்செல்வர் அறிமுக உரையும், முனைவர் திருமதி கௌசல்யா சுப்பிரமணியன் வாழ்த்துரையும், பேராசிரியர் சந்திரகாந்தன் வெளியீட்டுரையும், முனைவர் பாலசுப்பிரமணியன் ஆய்வுரையும் வழங்கினார்கள்.



கண்டிச் சீமையிலே – நூல் வெளியீடு



சுகவாழ்வு சஞ்சிகை ஆசிரியர் சட்டத்தரணி இரா. சடகோபன் எழுதி வீரகேசரி நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள கண்டிச் சீமையிலே என்ற இலங்கையின் கோப்பிக்கால வலாற்று ஆவண நூலின் வெளியீட்டு விழா மலைநாட்டு எழுத்தாளர் மன்றத் தலைவர் தெளிவத்தை ஜோசப் அவர்களின் தலைமையில் செப்டெம்பர் 14 ஆம் திகதி வெள்ளவத்தை கொழும்பு தமிழ் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

மலையக தமிழ் மக்கள் இலங்கையின் கோப்பித்தோட்டங்களில் தொழில் புரிவதற்காக 1820களில் முதன் முறையாக அழைத்து வரப்பட்டதையும் அதன் பின் வந்த 7 தசாப்த காலங்களில் அவர்கள் எவ்வாறு இந்நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பி வியர்வையையும் இரத்தத்தையும் இறுதியில் உயிரையும் அர்ப்பணித்தார்கள் என்பதை பதிவு செய்யும் ஒரு வரலாற்று ஆவணமாக இந்நூல் அமைகிறது.

'சரசோதிமாலை' - நூல் வெளியீடு

பலவேசத் தேவன்.

சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளை சார்பில் அவர்தம் பிறந்தநாளன்று சென்னையிலுள்ள "உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்" வெளியிட்ட ஒரு நூல் - நூலின் பெயர் "சரசோதிமாலை - ஒரு சமூகப் பண்பாட்டுப் பார்வை". தென்னிலங்கை மன்னன் பராக்கிரமபாகுவின் ஆக்கினைப்படி "போசராசப் பண்டிதர்" ஆக்கிய "சரசோதிமாலை" என்கிற நூல்குறித்த ஓர் அருமையான விவரணையை கனடாவைச் சேர்ந்த கலாநிதி.பால.சிவகடாட்சம் நூலாகத் தொகுத்ததைத்தான் அன்றைக்கு வெளியிட்டார்கள்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குனர் விசயராகவன் தொடக்க உரையில் சிறப்பாகவே சிறியதாகவே பேசி, கலாநிதி.பால. சிவகடாசத்திற்கு உரையாற்ற வழிகொடுத்தார்.

சரியாக ஒருமணி நேரம்! திரையில் காண்பிக்கப்பட்ட ஒளித்தொகுப்புகளுடன்கூடிய நேர்த்தியான பேச்சு சிவகடாட்சம் அவர்களுடையது! தமிழன் புலமை காட்டிய "காலக் கணிதம்" என்கிற முறையை சான்றுகளுடன் எளிமையாக விவரித்தார். "பிள்ளை பெற்றவுடன் தமிழன் செய்கிற முதல்வேலை நாள் நட்சத்திரம் கிழமை குறித்து ஜாதகம் எழுதுவதுதான்" என்று மார்கோபோலோ எழுதியிருப்பதை சுட்டிக் காட்டியவர், சகுனம் பார்ப்பதையும், ஜாதகம் எழுதுவதையும் தொடர்ந்துசெய்கிற தமிழன், "காலக் கணிதத்தை"க் காற்றில் விட்டுவிட்ட கதையைக் கொஞ்சம் கவலையோடுதான் சொன்னார்.

ஈழமண்ணில் தமிழில் வெளியிடப்பட்ட முதல் இரு நூல்களும் சோதிடம் சார்ந்தவை என்கிற ஒரு தகவலும் அவரது உரையிலிருந்து கிட்டியது. கிபி 1178இல் திருக்கோட்டிநம்பி எழுதிய "சூடாமணி உள்ளமுடையான்" - கிபி 1310ஆம் ஆண்டின் "சரசோதிமாலை".

சோதிடம் மட்டுமல்லாது மருத்துவம் குறித்தும், குறிப்பாக மகப்பெறு அறுவை சிகிச்சை குறித்தும் சீனத்தில் தமிழ் உள்ளிட்ட மொழிகளில் எழுதப்பட்ட மும்மொழி சாசனக் கல்வெட்டு குறித்தும் சரசோதிமாலை பகர்ந்திருக்கிற விடயங்களை அவர் கூறும்போது சுவையாக இருந்தது.

விழா முடிந்து வீடுவந்து சேர்ந்த கையோடு செய்த முதல்வேலை, "சரசோதிமாலை"குறித்த அந்தப் புத்தகத்தை முழுமூச்சில் வாசித்ததும், அதேவேகத்தில் "முகவரி"க்காக இந்த எழுத்துகளை எழுதிமுடித்ததும்தான்!

முதலில், நூலாசிரியர் பால.சிவகடாட்சம்பற்றிக் குறிப்பிட்டாகவேண்டும். தாவரம், விவசாயம், மண், புழுக்கள் என்று முழுக்கமுழுக்க இவற்றையே பயின்று பட்டம் பெற்றவர். இவரது முன்னோர் மருத்துவத் தொழில் புரிந்ததால் அதில் நாட்டம் இருந்ததும் வியப்பல்ல. அதன்பொருட்டு வாகட நூல்களைப் படித்துப் பார்க்கிற வாய்ப்பும், தமிழன்னை இவரை ஒரு பிள்ளையாகத் தழுவிக்கொண்ட நிமித்தமும் தமிழர்க்குக் கிட்டிய பேறுதான்!

ஒரு பேச்சுவாக்கில், "காலக்கணிதத்தில் தமிழர் சிறந்தவர். அதுகுறித்து ஆய்வுகள் முறையாகச் செய்யப்படவே இல்லை!" என்று தமிழறிஞர் கார்த்திகேசு சிவத்தம்பி இவரிடம் தன் ஆற்றாமையைக் கொட்ட, உடனே களமிறங்கி, ஆய்வுப்பணிகளுள் தம்மை முழுமையாக நுழைத்துக்கொண்டு, பல செய்திகளையும், ஆதாரங்களையும் திரட்டி, கல்வெட்டுகளை ஆராய்ந்து, இந்தப் புத்தகத்தை "பல்லாண்டு முயற்சி"யாக செய்துமுடித்திருக்கிறார் சிவகடாட்சம் அவர்கள்.

சங்கத் தமிழ் நூல்களிலும், அதன்பின்னர் வந்த தமிழ் நூல்களிலும் ஒன்பது கோள்கள், பன்னிரு இராசிகள் காணப்படும் செய்திகளைப் பட்டியலிடுகிறது இந்தப் புத்தகம். அறிவியலை "மட்டுமே" அடித்தளமாகக் கொண்டு உருவான காலக்கணிதம், அதில் மதம் கால் பதித்தபிறகு எவ்வாறு அதன் போக்கிற்குத் திரிந்தது என்றும் குறிப்பிடுகிறது. இதனால்தான் அறிவியல் அறிஞர்களின் கவனத்தை இது ஈர்க்காமல் போயிருக்கக்கூடும் என்பது ஆசிரியரின் ஆதங்கம்.

சித்திரைதான் தமிழ்மாதங்களுள் முதல்மாதம் என்றும் நிறுவியிருக்கிறார்.

"மகத்திற் புக்கதோர் சனி" என்கிறார் சுந்தரர். "அருக்கன் முதற்கோள் அனைத்தும்..." என்கிறார் திருஞான சம்பந்தர். சந்திரன் ரோகிணி நட்சத்திரத்தோடு கூடும் நாளே கலியாணஞ் செய்ய சரியான நாள் என்கிறதாம் புறநானூறும், சிலம்பும். இதுபோன்ற எடுத்துக்காட்டுகள் காலக் கணிதத்தில் நாம் கொண்ட ஆழ்ந்த அறிவை நிறுவுகின்றன. வாஸ்துவையும் விட்டுவைக்கவில்லை. மனைவகுக்கும் நெறிகள் என்கிறதாம் "நெடுநல்வாடை".

எதையும் விடுங்கள், சீனாவுக்கு இது ரஷ்யாவுக்கு இது இலங்கைக்கு அது இந்தியத்துக்கு எது என்று நாடுகளுக்கென்று இராசிகள் இருக்கின்றனவாம்! அதிலும் "நம்ம ஆளுங்க" செய்த இடைச்செருகல்களை சிவகடாட்சனார் கண்டுபிடித்தும் எழுதிவிட்டார்.

சுபாசுப்படலம், ஏர் மங்கியப் படலம், தெய்வ விரதப் படலம் என்று அழகாகத் தொகுக்கப்பட்டிருக்கிற சரசோதி மாலையை சமூகப் பண்பாட்டுப் பார்வையோடு - காலக்கணிதம், நாள்கள், சடங்குகள், விவசாயம், வாஸ்து, மருத்துவம் என்று பிரிவுகளாக விளக்குவதோடல்லாமல், அந்த நூலையொத்த மற்ற சோதிடத் தமிழ் நூல்கள் குறித்த தகவல்களையும் இணைத்து ஆக்கபூர்வமான ஒரு திரட்டாக வெளிக்கொணர்ந்திருக்கிறார் சிவகடாட்சம்.

தமிழ்ப் பற்றாளர்களுக்கும், தமிழ் ஆய்வு மாணவர்களுக்கும் மிகமிகச் சிறந்த வழிகாட்டியாக இருக்கப் போகும் இந்த நூலை எங்கள் தமிழ்நாட்டின் "தமிழ்த் தேசிய" அரசியல்வாதிகள் சிலபேருக்கு பிறந்தநாள் பரிசாக வழங்கலாமென்றிருக்கிறேன்!







திலீபன் நினைவுநாள் அனுஷ்டிப்பு

இந்திய அமைதிப் படையினரிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1987 செப்டெம்பர் 15ஆம் திகதி உண்ணாவிரதம் ஆரம்பித்து 1987ஆம் ஆண்டு செப்டெம்பர் 26ஆம் திகதி உயிர்துறந்த விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் திலீபன் (பார்த்திபன் இராசையா) அவர்களது நினைவு தினம் புலம் தமிழர்கள் வாழும் உலகின் பல்வேறு பாகங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது. ஈழ விடுதலைப் போராட்டத்தில் அஹிம்சைவழியில் தன் கோரிக்கையை முன்னிறுத்தி மரணித்த முதலாவது போராளியென்ற வகையில் இவர் போற்றப்படுகிறார்



டாக்டர் ரஜனி திராணகம

இக்கட்டான காலகட்டத்தில் யாழ் மருத்துவ கல்லூரியில் விரிவுரையாளராகச் செயலாற்றியபோது 1989 செப்டம்பர் 21ம் திகதி கொலையுண்ட டாக்டர் ரஜனி திராணகம நினைவுதினம், யாழ்ப்பாணத்தில் கடந்த செப்டெம்பர் 20, 2014ல் ட்ரிம்மர் மண்டபம்த்தில் அனுக்ஷ்டிக்கப்பட்டது. அத்தோடு அன்று மாலை வீரசிங்கம் மண்டபத்தில் கலாசார நிகழ்ச்சிகளும் நிகழ்ந்தன. மறுநாள் 21ம் திகதி யாழ் பொது நூலகத்தில் கருத்தரங்கும் நடைபெற்றது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இவர் மேற்கொண்ட பதிவுகள் "முறிந்த பனை" எனும் நூலில் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பால் வெளியிடப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தொழிற்சங்கப் போராளி பாலாதம்பு



பிரபல தொழிற் சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான பாலா தம்பு கடந்த மாதம் தனது 92 வது வயதில் அவர் காலமானார். இலங்கையில் இடதுசாரிகளின் மக்கள் போராட்டங்களுக்கும் தொழிலாளர் எழுச்சிக்கும் நீண்ட வரலாறுண்டு. சண்முகதாசன் தலைமையிலான மாவோயிசக் கம்யூனிஸ்ட் கட்சியே முதல் முதலாக ஆயுதம் தாங்கிய மக்கள் எழுச்சிக்குத் தலைமை தாங்கிற்று. அவ்வேளையில் தமிழரசுக் கட்சி ஆயுத எழுச்சியை அடக்குமாறு பேரினவாத அரசைக் கோரியது. இதன் மறுபக்கத்தில் பாலா தம்பு ரொஸ்கியவாதியாகத் திகழ்ந்தார்.

பல்கலைக்கழகத்தில் படிக்கும் போதே இடதுசாரிக் கொள்கையில் இவர் ஈர்க்கப்பட்டார். இக்காலகட்டத்தில் ஆங்கிலேயரின் ஆட்சிக்கு எதிராக போராட்டம் நடத்திய இடதுசாரித் தலைவர்கள் என். எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா, பிலிப் குணவர்தன ஆகியோருடன் இணைந்தார்.

1947 ஆம் ஆண்டு அரச ஊழியர் நடத்திய வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டமைக்காக இவர் அரசுப் பணியில் இருந்து நீக்கப்பட்டார். அதன் பிறகு இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தில் இணைந்து 1948 பெப்ரவரியில் அதன் செயலாளர் ஆனார்.

1928 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வர்த்தக ஊழியர் சங்கம், பாலா தம்பு செயலாளராக ஆன பின்னர் லங்கா சமசமாஜக் கட்சியின் செல்வாக்குக்குள் வந்தது. இக்கட்சி நான்காம் அனைத்துலக அமைப்பின் உறுப்பினராக இருந்தது. 1963 ஆம் ஆண்டில், கொழும்பு துறைமுகத்தில் வேலை நிறுத்தம் ஒன்றை தலைமை தாங்கி நடத்தினார். இது பின்னர் நாடு தழுவிய பொது வேலை நிறுத்தமாக உருவெடுத்தது.

1964 ஆம் ஆண்டில் லங்கா சமசமாஜக் கட்சி நான்காம் அனைத்துலகத்தில் இருந்து விலகி அன்றைய சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசில் இணைந்ததை அடுத்து, பாலா தம்பு அக்கட்சியில் இருந்து விலகி, இங்கை புரட்சிகர சமசமாசக் கட்சியின் தலைவரானார்.

1960 மார்ச், 1960 ஜ/லை, 1965 ஆண்டுகளில் நடைபெற்ற இலங்கை பாராளுமன்ற தேர்தல்களில் மத்திய கொழும்பு தேர்தல் தொகுதியில் போட்டியிட்டார். பாலா தம்பு இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் செயலாளராகத் தொடர்ந்து பணியாற்றி வந்தார். உழைக்கும் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு அவ்வப்போது நிர்வாகங்களுடனும், அரசுடனும் பேச்சுக்களில் ஈடுபட்டு தீர்வு கண்டார்.



முதியோர் நலன் பற்றிய இந்தப் பகுதிக்குக் கிடைத்த மிகுந்த வரவேற்பு காரணமாக இப் பகுதியில் தரப்படும் முதியோருக்கான தகவல்களுக்கு அப்பால், மேலும் சில பலனுள்ள அம்சங்களை எதிர்காலத்தில் சேர்த்துக்கொள்ளத் திட்டமிட்டு வருகிறோம். அவ்வகையில் எவ்வாறான விடயங்களை நீங்கள் விரும்புகிறீர்கள் என்ற ஆலோசனைகளை எமக்கு எழுதி அனுப்பினால் அவற்றை ஆராய்ந்து உள்ளடக்கிக்கொள்ளக்கூடியதாக இருக்கும். அண்மையில் "பொக்ஸ் குறோவ் முதியோர் சங்க"த்தின் அன்பான அழைப்பிற்கிணங்க அவர்களுடன் நிகழ்த்திய கலந்துரையாடல் பயனுள்ளதாக அமைந்ததாக வாழ்த்தியிருந்தார்கள். நன்றி. தொடர்ந்து நாம் எம் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்வோம்.

முதியோர் ஆரோக்கியமும் உடல் நலமும்

இதுவரை முகவரியின் முதியோர் பக்கத்தில் முதியோருக்கான பொருளாதார உதவிகள் குறித்த விடயங்களைப் பார்த்திருந்தோம். அடுத்து நாம் முதியோர் ஆரோக்கியம் பற்றிய விடயத்தில் பயனுள்ள தகவல்களை இங்கே தருகிறோம்.

பொதுவான தகவல்: 911

கனடாவில் 911 என்ற தொலைபேசி இலக்கத்தின் பயன்பாடு பற்றி நீங்கள் ஏற்கெனவே தெரிந்துகொண்டிருப்பீர்கள். ஆபத்தான அல்லது உடனடிநடவடிக்கைகள் எடுக்கவேண்டிய நிலையில் நீங்கள் நாடவேண்டிய இலக்கம் இது. அதாவது, திருட்டு, விபத்து, தாக்குதல், தகறாறு போன்றவற்றுக்கு பொலிஸாரை அழைப்பதற்கோ, அல்லது உடல்நிலை மோசமானால் உடனடி மருத்துவ உதவிக்காகவோ, உதாரணத்திற்கு வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் அம்புலன்ஸ்ஸை அழைப்பதற்கோ இந்த இலக்கத்தை நீங்கள் நாடலாம். பலர் இவ் இலக்கம் பொலிஸாருடன் மட்டுமே தொடர்புடையதெனக் கருதி அழைக்க அஞ்சுவதால், உரிய நேரத்தில் உதவி பெறத் தவறி, மோசமான விளைவுக்குள்ளாக நேருகிறது. எனவே, அத் தப்பபிப்பிராயத்தை நீக்கி, உங்களுக்கு எவ்வகை ஆபத்து நேர்ந்தாலும் உடனடியாக இவ் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

டெலி ஹெல்த் ஒன்டாரியோ (Tele-health Ontario)

தொலைபேசி: 1-866-797-0000 TTY: 1-866-797-0007 இணையம்: www.ontario.ca/ru2

டெலி ஹெல்த் என்பது தொலைபேசி மூலம் உங்கள் ஆரோக்கியத்துக்கான வழிவகைகளைத் தேடிக்கொள்ள உதவும்பொருட்டு அமைக்கப்பட்ட, வாரத்தின் 7 நாட்களும் 24 மணி நேரமும் உங்களுக்கு உதவக்கூடிய ஒரு இலவச சேவை. இந் நிலையத்தை நீங்கள் தொடர்பு கொண்டதும் உங்கள் ஆரோக்கியம் பற்றிய தகவல்களை வழங்கக்கூடிய ஒரு பதிவுசெய்யப்பட்ட தாதி உங்களுடன் பேசுவார். அவர் உங்களிடம் சில கேள்விளைக் கேட்டு, உங்கள் தேவையை அறிந்து, உங்களுக்கு உதவக்கூடிய பின்வரும் வழிவகைகளை மேற்கொள்வார். ஆவரால் கையாளக்கூடிய விடயமானால் உங்கள் சுய பராமரிப்புக்குரிய அறிவுரைகளை அவரே வழங்குவார். அது அவருக்கு அப்பாற்பட்டதாக இருப்பின் உங்களை ஓர் ஆரோக்கிய சேவை வழங்குவர் ஒருவருடம் பரிந்துரைத்து, அவரிடம் அனுப்பிவைக்க உதவுவார். அல்லது உங்களுக்கு அருகேயுள்ள சமூக மூலவள நிலையம் ஒன்றிற்கு சிபாரிசு செய்வார்.

உங்களுக்கு ஆங்கிலம் அல்லது பிரஞ்சு மொழி தெரிந்திருந்தால் நேரடியாக தொலைபேசி மூலம் நீங்கள் அவர்களின் ஆலோசனையைப் பெறலாம். இல்லையேல், மேலே தரப்பட்ட வுவுனு இலக்கத்துடன் தொடர்பு கொண்டு மொழிபெயர்ப்பு உதவியுடன் இச் சேவையை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். செவிப்புலன் குறைந்தவர்கள், பேசுவதற்கு சிரமப்படுபவர்கள்கூட இந்த இலக்கத்தில் உதவி பெறலாம்.

சமூக பராமரிப்பு தொடர்பு நிலையம் - Community care Access Centre (CCAC)

தொலைபேசி: 310-2222 (310 CCAC) இணையம்: www.310CCAC.ca

சிசிஏசி என்ற இந்த நிறுவனங்கள் உங்களுக்கான வீட்டுப் பராமரிப்பு அல்லது சமூகப் பராமரிப்பை ஏற்பாடு செய்துகொள்வதற்கு நீங்கள் இலகுவாக அணுகுவதற்காக அமைக்கப்பட்ட இலாபநோக்கற்ற உள்ளூர் முகவர் நிலையங்களாகும். இவற்றால், உங்கள் சொந்த வீட்டிலேயே உங்களால் முடிந்தளவு காலம்வரை சுயாதீனமாக வாழ உதவ முடியும். இந் நிலையத்தால் இவ்வகையில் உங்களுக்கு உங்கள் வீட்டில் வழங்கக்கூடிய உதவிப் பணிகள் சிலவற்றை இங்கே சுட்டிக்காட்டுகிறேன்.

உங்கள் பிரத்தியேக பிரச்சினைகளுக்கு உதவும் கேஸ் மனேஜர்

உங்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்கும் தாதியர் பணி

உங்களைக் குளிப்பாட்டுதல், உடையணிவித்தல் போன்ற தனிப்பட்ட உதவிகளுக்கான உதவியாளரின் பணி

பிஸியோதிரபி எனும் உடலியக்க சிகிச்சை வழங்கும் நிபுணரின் பணி

உங்கள் நாளாந்த நடமாட்டத்துக்கும் அசைவுகளுக்குமான சிகிச்சையான ஒக்கிபேஷனல் தெரபி வழங்கும் பணி,

உங்கள் உடலாரோக்கியத்துக்குகந்த சத்துணவு ஆலோசனை

வீட்டினுள்ளே பயன்படுத்தக்கூடிய மருத்துவப் பாவனைப் பொருட்கள், கருவிகள் போன்றவற்றைத் தந்து ஒழுங்கமைத்து உதவுதல்

சமூக சேவை,

போன்ற பல சேவைகளை அவர்களால் உங்கள் வீட்டிலேயே கிடைக்கக்கூடியவாறு ஏற்பாடு செய்ய முடியும்.

இப்படியாக வீட்டினுள் கிடைக்கக்கூடிய சேவைகள் மட்டுமன்றி, வேறு பல உள்ளூர் சமூக சேவைகள் பற்றி உங்களது கேஸ் மனேஜர் உங்களுக்கோ அல்லது உங்களைப் பராமரிப்பவருக்கோ எடுத்துக்கூறி உதவி செய்வார்.

அத்தோடு நீங்கள் நீண்டகால பராமரிப்பு இல்லம் ஒன்றில் அனுமதிபெற விரும்பினால் அதற்காக நாடவேண்டிய ஒரேயொரு இடமும் இந்த சிசிஏசி தான். இவ் இல்லங்களுக்கு நீங்கள் நேரடியாக விண்ணப்பிக்க முடியாதாகையால் இதற்கான ஏற்பாடுகளை நீங்கள் உங்கள் கேஸ் மனேஜரின் மூலமே நாட வேண்டும். அவர் உங்களுக்கு நீண்டகால பராமரிப்பு இல்லங்கள், பராமரிக்கும் வசதி கொண்ட வதிவிடங்கள், இளைப்பாறியோர் இல்லங்கள் போன்ற வேறு மாற்று வதிவிட வசதிகள் பற்றியும் உங்கள் பொருளாதாரத்துக்கு ஏற்ற தெரிவுகள் பற்றியும் உங்களுக்கு ஆலோசனை வழங்குவார். அவர் நீங்கள் ஒரு நீண்டகால பராமரிப்பு இல்லத்தில் அனுமதி பெறுதவதற்கான உங்கள் தகமைகளை மதிப்பீடு செய்து அதற்கான விண்ணப்ப செய்முறைகளிலும் உங்களுக்கு உதவுவார்.

ஓர் உடல் நலப் பராமரிப்பாளரைக் கண்டறியும் வழிவகைகள்:

Healthcare Connect உடல்நல பராமரிப்புக்கான தொடர்புத் திட்டம்

தொலைபேசி: 1-800-445-1822 இணையம்: www.ontario.ca/healthcareconnect

ஹெல்த் கெயர் கனெக்ட் எனும் இத் திட்டமானது, குடும்ப ஆரோக்கிய பராமரிப்பு வழங்குநர்களைக் கொண்டிராதவர்களுக்கு புதிய நோயாளர்களை ஏற்றுக்கொள்ளும் வைத்தியர்களையும் தாதி மருத்துவர்களையும் சிபாரிசு செய்யும் திட்டமாகும். இவர்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் உங்களுக்கான உடல் நலப் பராமரிப்பாளரை நீங்கள் ஏற்பாடு செய்துகொள்ளலாம்.

Healtcare Option உடல்நல பராமரிப்பு தெரிவுகள்

தொலைபேசி: 1-866-330-6206 இணையம்: www.ontario.ca/healthcareoptions

ஹெல்த் கெயர் ஒப்ஷன் எனும் இத் தகவல் மூலமானது, உங்கள் சமூகத்தில் உடனடியாக உடல்நலப் பராமரிப்பினை எங்கு பெற முடியும் என்பதைச் சொல்லும் தகவல் மையமாகும். இம் மையம் நீங்கள் நாடக்கூடிய உடனடி பராமரிப்பு நிலையங்கள், அப்பொயின்ட்மென் வைக்காது நேரடியாகச் செல்லக்கூடிய வோக் இன் கிளினிக்குகள், அலுவலக நேரத்துக்குப் பின்னரும் இயங்கக்கூடிய ஆஃப்டர் அவேர்ஸ் கிளினிக்குகள், சிகிச்சை நிலையங்கள், தாதி மருத்துவர் தலைமையில் இயங்கும் சிகிச்சை நிலையங்கள், குடும்பநலக் குழுக்கள், மற்றும் சமூகநல நிலையங்கள் உட்பட ஆரம்ப பராமரிப்பு மூலங்களின் விபரங்களை உங்களுக்கு வழங்கும்.

Doctor Search வைத்தியர் தேடல் இணையம்: www.opso.on.ca/docsearch

டொக்டர் சேர்ச் எனும் இச் சேவை, ஒன்டாரியோ மாகாணத்தின் வைத்தியர்கள் பற்றிய தகவலை வழங்கும் ஓர் இலவச சேவையாகும்.

வார்டன் வூட்ஸ் சமூக நிலைய முதியோர் இலவச சேவைகள்

தமிழ் முதியவர்களுக்கான பின்வரும் நிகழ்வுகள் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறுகின்றன

வாராந்திர அமர்வுகள் மற்றும் தகவல், கருத்துக்களம்

முதியவருக்கான உடற்பயிற்சிகள்

(யோகாசனம் தாய்ச்சி போன்றவை)

கலாச்சார மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகள் (நாடகம், நடனம், இசை, கலை, கைவினை முதலியன)

நட்பு வட்டம் மற்றும் தகவல் சேவைகள்

ஊட்டச்சத்து கல்வி மற்றும் ஆலோசனை

சுற்றுலாக்கள்

ESL இலவச ஆங்கில வகுப்புகள்

இடம் -Warden Woods Community Centre
74 Firvalley Court, Scarborough (Warden/St.Clair)
(From Warden Subway take the ttc bus # 69A Warden South)
நேரம் - மதியம் 1 முதல் மாலை 5 மணிவரை
தமிழில் தொடர்பு கொள்ள: மைதிலி (416) 694-1138 Ext-155
இலவச சிற்றுண்டிகளும் TTC டோக்கன்களும் வழுங்கப்படும்

Boxgrove Seniors Community

பொக்ஸ் குரோவ் முதியோஉ நலன்புரிச்சங்கம் - Boxgrove Seniors Community Wellness Club. இச்சங்கம் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் மாலை 5.30 மணிக்கு மாலினி பரராசசிங்கம் அவர்களின் பயிற்றுதலுடன் யோகாசன வகுப்பொன்றை 7651 Ninth Line இல் உள்ள சனசமூக நிலையத்தில் நடாத்த ஆரம்பித்துள்ளது. அதன் ஆரம்ப நிகழ்வில் கவுன்சிலர் லோகன் கணபதி அவ்கள் வருகை தந்து உரையாற்றினார்.

எவ்வயதினரென்றாலும் இவ்வகுப்பில் கலந்து தமது ஆரோக்கியத்தை மேம்படுத்திக்கொள்ளலாம்.



வார்டன் வூட்ஸ் சமூக நிலைய நிகழ்வுகள்







உண்ணாது நோற்பார் பெரியர் - பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்

குறள்-160

அயலார் தம்மைப் பற்றிக் கூறும் கொடுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்பவருக்கு பட்டினி கிடந்து தவம் புரியும் துறவிகள் கூட ஈடாகமாட்டார்கள்


Mayas Furniture
living as you like it
BUSINESS HOURS
TUESDAY - SUNDAY
10.00 A.M - 9.00 P.M
UPTO
50%
OFF
FURNITURE HOT SALE
EURO TOP QUEEN SIZE MATTRESS
REGULAR
$600
NOW
$299
FREE BOX
NO TAX
3PC BONDED LEATHER - 5 PCS RECLAINER
SOFA WITH CUP HOLDER WITH ROCKER CHAIR
NO TAX
REG. $1699
$999
SPIN BAR STOOL-SOLID WOOD
$69
ORTHOPEDIC MATTRESS
Size Mattress
Single $119.99
Double $179.99
Queen $199.99
NO TAX
8PC QUEEN BEDROOM SET
REG. $1299
$699
NO TAX
SPIN BAR STOOL-SOLID WOOD
$69
HIGH DENSITY HARD MATTRESS
8"
Size Mattress
Single $229.99
Double $299.99
Queen $349.99
FREE BOX
NO TAX
3PC SOFA SET (Available in Bonded leather)
NO TAX
REG. $699
$399
$39
5PC PUB TABLE SET
REG. $449
$249
9PC PUB TABLE SET
REG. $999
$699
5PC PUB TABLE SET
REG. $699
$449
BUNK BED TWIN/SINGLE
$389
BUNK BED SINGLE
$199
BUNK BED SINGLE
$699
DINING TABLE - 7 PCS
$599
BEDROOM SET QUEEN - 8 PCS
$999
BEDROOM SET QUEEN - 8 PCS
$999
Tel : 416-669-1214 Bus : 647-346-9388 (24 Hours Service)
2950 Kennedy Road, Unit # 9,8 & 7, Scarborough, Ontario M1V 1T1
Kennedy & Finch (North of Finch, left side First Plaza)
Steeles Ave E.
McNicoll Ave
Finch Ave E.
Sheppard Ave
Hwy 401
Birchmount Rd.
Kennedy Rd.
Midland Ave
N